بسم الله الرحمن الرحيم

مَوْعِظَةُ الْـمُتَّقِينَ

مِنْ كَلَامِ رَبِّ الْعَالَـمِينَ وَقَوْلِ سَيِّدِ الْـمُرْسَلِينَ ﷺ

تأليف عمر شريف عبد السلام

குர்ஆன், ஸுன்னாவிலிருந்து இறையச்சமுள்ளவர்களுக்கு

நல்லுபதேசம்

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

دار الهدى
DARUL HUDA

ABOUT THIS BOOK

NAME OF THE BOOK : ***NALLUBATHESAM***

NAME IN ENGLISH : BEAUTIFUL ADVOICE FOR PIOUS

NAME IN ARABIC : موعظة المتقين

SUBJECT : ADVOICE

AUTHOR : OMAR SHERIFF ABDUS SALAM

LANGUAGE : TAMIL

D.O. PUBLICATION : JUL 2021

EDITION : 1st

TOTAL PAGES : 308

COPIES : 2000

REF. NO. : DH-TML 2076

PRINTED BY : PATEL GRAPHICS, CHENNAI - 6.

DARUL HUDA

QUALITY ISLAMIC BOOK PUBLISHERS

211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai 600001.

Phone : +91 44 25247866, | darulhuda.chennai@gmail.com

Mobile : +91 98401 74121 | www.darulhuda.net

பொருளடக்கம்

****

بسم الله الرحمن الرحيم

பதிப்புரை

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அல்லாஹ்வின் தூதர் மீது இன்னும் அந்த தூதரின் குடும்பத்தார் மீதும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் நிலவட்டும்!

நாம் நமது உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது போன்று நமது உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். உள்ளத்தின் ஆரோக்கியம் இறை அச்சம், இறை நினைவு, நல்லெண்ணம், நற்குணம் ஆகியவற்றில் இருக்கிறது.

நாம் வளர்க்கும் செடி கொடிகளுக்கு, தாவரங்களுக்கு நீர் பாய்ச்சுவது அவசியாமாக இருப்பது போன்று நமது உள்ளத்தை பசுமையாக வைத்திருப்பதற்கு நல்லுபதேசம் என்ற நீரை அதற்கு நாம் பாய்ச்ச வேண்டும்.

உபதேசங்களை செவியுறாத எந்த உள்ளமும் தக்வாவுடன் இருக்க முடியாது. அதில் இறை நினைவு நீடித்து இருக்காது. அந்த உள்ளம் காய்ந்து விடும். அதில் ஷைத்தானிய ஆதிக்கம் தலை தூக்கிவிடும். ஆகவே, சொர்க்கத்தையும் நரகத்தையும் மறுமையையும் இந்த உள்ளத்திற்கு நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வின் பயத்தை உண்டாக்கக்கூடிய அறிவுரைகளை அதிகம் அதிகம் செவிமடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த உள்ளம் அல்லாஹ்வின் நினைவில், மறுமை நினைவில் இருக்கும். அத்தகைய உள்ளத்தை பெற்ற உடல் வணக்க வழிபாட்டில் இன்பத்தை உணரும். பாவங்களை கண்டு பயப்படும்.

உலக இன்பங்களில் தன்னை பறிகொடுத்து விடாமல், மறுமையை மறந்துவிடாமல் இந்த உலகத்தில் தான் படைக்கப்பட்ட நோக்கத்தில் சதா திளைத்திருக்கும்.

அந்த அடிப்படையில் எனக்கும் என் மார்க்க சகோதர, சகோதரிகளுக்கும் நல்ல நினைவூட்டலாக, நல்லுபதேசமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல தொடர்களாக எழுதிய கட்டுரைகளை இறையச்சமுள்ளவர்களுக்கு குர்ஆன், ஸுன்னாவில்லிருந்து நல்லுபதேசம் என்ற தலைப்பில் நூலாக வெளியிடுகிறோம். இதன் மூலம் எல்லா முஸ்லிம்களும் எல்லாக் காலத்திலும் நற்பலன் அடைய வேண்டும் என்பது நமது நோக்கம். அல்லாஹ் எங்கள் நோக்கத்தை ஏற்றுக் கொள்வானாக! இந்த நூல் மூலமாகவும் தாருல் ஹுதாவின் மற்ற நூல்கள் மூலமாகவும் மறுமை நாள் வரை வருகின்ற எல்லா மக்களும் பயன்பெறும்படி அல்லாஹ் அருள் புரிவானாக! எங்களை மன்னித்து எங்களின் இந்த சிறு உழைப்பை ஏற்றுக் கொள்வானாக! தாருல் ஹுதாவிற்கு உதவிய, உதவுகின்ற எல்லா முஸ்லிம்களுக்கும் அல்லாஹ் சிறந்த நற்கூலியை தருவானாக! அமீன். தாருல் ஹுதாவின் பணியாளர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி தருவானாக! அமீன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே!

மார்க்கப் பணியாளன்

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

2/12/1442 - 12/7/2021

****

தாருல் ஹுதா
அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

தாருல் ஹுதா அறிமுகத்தின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவையையும் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹுதஆலா கூறுகிறான் : இறை நம்பிக்கையுடைய ஆண்களும், இறை நம்பிக்கையுடைய பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப்பிடித்து, (மார்க்க வரி) ஜகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகையோருக்கு வெகு விரைவில் அல்லாஹ் அருள்புரிவான். (அல்குர்ஆன் 9 : 71)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்: (நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் மனிதர்களைச் சிறந்ததின் பக்கம்

அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில்

இருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 3 : 104)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால்

தனது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும்.
(ஸஹீஹுல் புகாரி)

மேலும் நபி ﷺ கூறுகிறார்கள்: இறைநம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசங்கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஓர் உடலைப் போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன.
(ஸஹீஹுல் புகாரி)

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழிகாட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழிகளுக்கிணங்க சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் தாருல் ஹுதா.

பணிகளும் தொண்டுகளும் :

அழைத்தல் :

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி இறைத் தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதித் தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபி மொழியும் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதற்கிணங்க இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும், அதன் உயர்வுகளை விளங்கச் செய்வதும் தாருல் ஹுதாவின் தலையாயப் பணியாகும்.

கற்பித்தல் :

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

நூல் வெளியிடுதல் :

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூல்களை தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது சிறப்புப் பணியாகும்.

உதவுதல் :

அல்லாஹு தஆலாதான் அனைவரின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுபவன் ஆவான். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ், தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும். இவ்வுன்னதப் பணிக்காக பைத்துல்மால் (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச்

சிந்தனையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று தேவையுடையோருக்கு உதவுதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

மேற்கூறிய பணிகளைத் தவிர, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதச் சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூக புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை

அல்லாஹ்வுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும் தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்கு பெறவும் அழைக்கிறோம்.

பேராற்றலுடைய அல்லாஹ்விடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!!

உங்களால் முடிந்த உதவிகளை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி தந்துதவுங்கள்.

நன்மையான காரியங்களில் எவற்றை நீங்கள் உங்களுக்காக (மரணம் வருவதற்கு) முன்னதாகவே செய்து கொள்கிறீர்களோ அவற்றை அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெறுவீர்கள். (அல்குர்ஆன் 73 : 20)

அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 1

இறையன்புக்காக உயிர் ஒரு பொருட்டல்ல! சான்றோரின் இறையன்புக்கு முன் நாம் எம்மாத்திரம்!

அல்லாஹ்தான் அன்பை படைத்தவன். அந்த அன்பு இல்லை என்றால் இந்த உலகத்தில் எதுவும் இனிக்காது.

அன்பு தேனைவிட இனிமையானதும், தென்றலைவிட இதமானதும் ஆகும்.

அன்பு ஒரு மருந்தாகும். காயப்பட்டவருக்குத்தான் மருந்தின் அருமை தெரியும்.

அன்பு ஒரு ஆறுதல் ஆகும். உள்ளம் உடைந்தவர்களுக்குத்தான் ஆறுதலின் அருமை புரியும்.

அன்பு ஒரு பெரும் செல்வமாகும். அது கிடைக்காதவர்தான் அதன் மதிப்பை உணர்வார்.

ஈமானும் அன்போடு கலக்க வேண்டும். அமலும் அன்போடு கலக்க வேண்டும். ஈமானிலும் அமலிலும் இறையன்பின் உணர்வுகள் ஓயாத அலைகளாய் அடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

பயந்தும் வணங்க வேண்டும். பயந்தே வணங்கி கொண்டு இருந்தால் உனக்குள் ரப்பு மீது மதிப்பும் மரியாதையும் இருக்கும். ஆனால்

அவனை நெருங்க மாட்டாய். பயத்தோடு அன்பை கலந்து வணங்கினால் அவனை நீ நெருங்கிவிடுவாய். வெறும் அன்போடு மட்டும் வணங்கிவிடாதே! அப்போது துணிவு கொண்டுவிடுவாய். அது உன்னை மமதைக்கு இழுத்துவிடும். அன்போடு பயத்தையும் கலந்து வணங்கு! நேரான பாதையில் நிலைத்து நிற்பாய்!

உன் தந்தையை நேசித்து, அவர் மீது அன்பு வைத்துப் பார்....

உன் தாயை நேசித்து, அவள் மீது அன்பு வைத்துப் பார்....

உன் சகோதர, சகோதரிகளை நேசித்து, அவர்கள் மீது அன்பு வைத்துப் பார்....

உன் மனைவியை நேசித்து, அவள் மீது அன்பு வைத்துப் பார்...

உன் பிள்ளைகளை நேசித்து, அவர்கள் மீது அன்பு வைத்துப் பார்....

உன் இரத்த உறவுகளை நேசித்து, அவர்கள் மீது அன்பு வைத்துப் பார்...

உன் நல்ல நண்பனை மார்க்கத்திற்காக நேசித்து, அவன் மீது அன்பு வைத்துப் பார்....

எத்தனையோ விலங்குகள் கூட அன்புக்கு அடிமையாகி விடுகின்றன. தமது குணத்தையே மாற்றி விடுகின்றன.

சரி!!! நாம் இறை அன்புக்கு வருவோம். அதுதான் நமது வாழ்வின் நோக்கம், அதுதான் நமது உள்ளத்தின் தேடல், அதுதான் நமது பிறப்பின் இலட்சியம், அதுதான் நமது அமல்களின் குறிக்கோள்.

அந்த அன்பு கிடைக்க வேண்டும். அதுதான் முதலும் இறுதியும் ஆகும். அதுதான் முழுமையானதும் நிரந்தரமானதும் ஆகும். அதுதான் முற்றிலும் பரிசுத்தமானதும் உறுதியானதும்

உண்மையானதும் ஆகும்.

அந்த அன்பில் யாருக்கு எந்தளவு கிடைக்கப் பெறுமோ அவர் அந்தளவு ஞானத்தையும் ஈமானையும் கிடைக்கப் பெறுவார்.

தனது பிள்ளை யூஸுஃபை நேசித்து அவர் மீதுள்ள அன்பால்அவரை பிரிந்து அழுத யாகூப் நபி ﷺ அவர்கள் அதை விட சொல்லால் வர்ணிக்க முடியாத அளவு அல்லாஹ்வின் மீது அன்பு வைத்திருந்தார்கள். பிள்ளையின் அன்பு அல்லாஹ்வின் அன்பை மிகைக்கவில்லை, ஏன், இந்த அன்பு அந்த அன்பை நெருங்கக்கூட முடியாது. ஆகவேதான் அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையும் மன உறுதியும் அவர்களில் எள்ளளவும் குறையவில்லை. அழுது அழுது கண்கள் குருடாகிவிட்டபோதிலும் ஏன் இப்படி செய்தாய் என்று ரப்பை அவர்கள் கேள்வி கேட்கவில்லை; அவனை கோபித்துக் கொள்ளவில்லை; அவன் மீது அதிருப்தி படவில்லை; அவனை வணங்குவதில் குறை செய்ய வில்லை; அவனை நினைப்பதைவிட்டும் அவர்களது மனம் திசை திரும்பவில்லை; அவனை புகழ்வதில் ஒருபோதும் அவர்கள் பின் வாங்கியதில்லை. இதுதான் ஒரு தீர்க்கதரிசியின் பண்பட்ட உள்ளம். இந்த உள்ளம் அவர்களுக்கு ரப்பினால் அருளப்பட்ட பெரும் அருட்கொடையாகும்.

யாகூப் நபி ﷺ அவர்களின் மேன்மையை அல்லாஹ் கூறுவதை கேளுங்கள்!

﴿وَاذْكُرْ عِبَادَنَا إِبْرَاهِيمَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ أُولِي الْأَيْدِي وَالْأَبْصَارِ (٤٥) إِنَّا أَخْلَصْنَاهُمْ بِخَالِصَةٍ ذِكْرَى الدَّارِ(٤٦) وَإِنَّهُمْ عِنْدَنَا لَمِنَ الْمُصْطَفَيْنَ الْأَخْيَارِ(٤٧)﴾

பொருள் : (நபியே! நம் அடியார்கள் இப்ராஹீம், இஸ்ஹாக், யஅகூபையும் நினைத்துப் பார்ப்பீராக. இவர்கள்

கொடையாளிகளாகவும், அகப்பார்வை உடையவர்களாகவும் இருந்தார்கள். மறுமையை (மக்களுக்கு) எந்நேரமும் ஞாபகமூட்டுவதற்காக அவர்களை நாம் பிரத்யேகப்படுத்தினோம். அவர்கள், நம்மிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லடியார்களில் உள்ளவர்களாகவே இருந்தனர். (அல்குர்ஆன் 38 : 45- 47)

வளமோடு வாழ்ந்துவிட்டு, திடீரென்று நோய் நொடியால் அவதிப்பட்டு, சொத்து சுகத்தை இழந்து, ஆட்சி அதிகாரத்தை இழந்து, பிள்ளைக் குட்டிகளை இழந்து பதினெட்டு ஆண்டுகள் அவதிப்பட்ட அய்யூப் நபி ﷺ அவர்களை நினைத்துப் பாருங்கள்! அவர் அவதிப்பட அவதிப்பட அவரின் உள்ளம் எப்படி இருந்தது... அவரின் மனம் ரப்புடைய உறவில் என்ன நிலையில் இருந்தது......

இறுதி வேதம் மகா மகத்துவமும் கீர்த்தியும் மிக்க அல்குர்ஆனில்நாம் அவரை நினைவு கூரவேண்டும் என்று நமக்கு ரப்பு சொல்வதை புரிந்துபாருங்கள்!

﴿وَاذْكُرْ عَبْدَنَا أَيُّوبَ إِذْ نَادَىٰ رَبَّهُ أَنِّي مَسَّنِيَ الشَّيْطَانُ بِنُصْبٍ وَعَذَابٍ
(٤١)ارْكُضْ بِرِجْلِكَ هَٰذَا مُغْتَسَلٌ بَارِدٌ وَشَرَابٌ(٤٢)وَوَهَبْنَا لَهُ أَهْلَهُ
وَمِثْلَهُمْ مَعَهُمْ رَحْمَةً مِنَّا وَذِكْرَىٰ لِأُولِي الْأَلْبَابِ(٤٧) وَخُذْ بِيَدِكَ ضِغْثًا
فَاضْرِبْ بِهِ وَلَا تَحْنَثْ إِنَّا وَجَدْنَاهُ صَابِرًا نِعْمَ الْعَبْدُ إِنَّهُ أَوَّابٌ (٤٤)﴾

பொருள் : (நபியே!) நம் அடியார் ஐயூபை நினைத்துப் பார்ப்பீராக. அவர் தன் இறைவனிடம் பிரார்த்தனை செய்தபொழுது "நிச்சயமாக எனக்கு ஷைத்தான் துன்பத்தையும் வேதனையையும் கொடுத்து விட்டான்" (என்று கூறினார்.) (அதற்கு நாம்)"உமது காலை(ப் பூமியில்) தட்டுவீராக" (என்று கூறினோம். அவர் தட்டவே ஓர் ஊற்று உதித் தோடியது. அவரை நோக்கி) "இதோ குளிப்பதற்கான குளிர்ந்த நீர். (இதுவே உமது) பானமுமாகும்" (என்று கூறினோம்.

அதனால் அவருடைய நோய்கள் குணமாகி விட்டன.) பின்னர், நம் அருளாகவும் அறிவுடையவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காகவும் நாம் அவருக்கு(ப் பிரிந்திருந்த) அவருடைய குடும்பத்தாரையும் அவர்கள் போன்றவர்களையும் அவர்களுடன் கொடுத்து அருள் புரிந்தோம். "ஒரு பிடி (புல்) கத்தையை எடுத்து, அதைக்கொண்டு (உமது மனைவியை) அடிப்பீராக. நீர் உமது சத்தியத்தை முறிக்க வேண்டியதில்லை" (என்று கூறினோம்.) நிச்சயமாக நாம், அவரை மிக்க பொறுமை உடையவராகவே கண்டோம். அவர் மிக்க நல்லடியார். நிச்சயமாக அவர் (ஒவ்வொரு விஷயத்திலும் நம்மை) நோக்கினவராகவே இருந்தார். (அல்குர்ஆன் 38 : 41-44)

இன்று நம்மில் ஒருவர் புலம்புவதைப் போல் புலம்பினார்களா? இல்லையே! பொறுமை, சகிப்பு... பொறுமை, சகிப்பு, இறை துதி, இறை வணக்கம்... இதுதான் அவர்களின் அடையாள குணமாக இருந்தது. ஆகவேதானே அந்த மகா மகத்துவமிக்க ரப்பு தஆலா அவரை சிறந்த அடியார் என்று புகழ்கிறான். அவரின் பொறுமையை நபிமார்களுக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் உதாரணமாக எடுத்துக் கூறுகின்றான்.

சரி, அய்யூப் நபியின் அந்த பொறுமைக்குப் பின்னால் இறை அன்பு என்ற வலிமையான உந்து சக்தி இருந்தது. அந்த அன்பின் சுகம் அவர்களுக்கு இழப்பை இழப்பாக காட்டவில்லை. வலியை வலியாக காட்டவில்லை. அதற்கெல்லாம் அப்பால் அவர்கள் ஒரு சுகத்தை, இன்பத்தை அனுபவித்தார்கள். அந்த இன்பம் வலியை மிகைத்து இருந்தது. தான் யாரை நேசிக்கின்றோமோ, யார் மீது அன்பு வைத்து அவனது அன்புக்காக ஏங்குகின்றோமோ அவன் இந்த சோதனைகளை எல்லாம் நம்மை உண்மையாளரா அல்லது போலியானவரா என்று சோதிப்பதற்காக செய்கின்றான் என்பதை புரிந்துகொண்டதால் அவர்களால் இந்தளவு பொறுமையாக இருக்க முடிந்தது. இதுதான் தீர்க்கதரிசிகளின் ஆழமான அன்பும் உயர்வான ஞானமும் ஆகும்.

உலக இன்பங்களும், உலக ஆட்சி அதிகாரமும், உலகின் பேராட்சியும், பறவை, ஜின், மிருகம் என பலவற்றை கட்டி ஆண்ட சுலைமான் நபி ﷺ அவர்களின் உள்ளத்தில் இந்த அன்பு அவை அனைத்தின் அன்பை விட அதிகமாக இருந்தது. ஆகவேதான் இவற்றை கொடுத்து தன்னை கண்ணியப்படுத்திய ரப்பை ஒரு நொடி மறக்க இவை காரணமாக இருந்ததால் அவற்றை எல்லாம் தியாகம் செய்ய அவர்கள் துணிந்துவிட்டார்கள். இத்தகைய சுலைமானைத்தான் ரப்பு புகழ்ந்து நமக்கு முன்னால் தன் வேதத்தில் உயர்வுப்படுத்துகின்றான்.

﴿وَلَقَدْ آتَيْنَا دَاوُودَ وَسُلَيْمَانَ عِلْمًا ۖ وَقَالَا الْحَمْدُ لِلَّهِ الَّذِي فَضَّلَنَا عَلَىٰ كَثِيرٍ مِنْ عِبَادِهِ الْمُؤْمِنِينَ﴾

பொருள் : தாவூதுக்கும், ஸுலைமானுக்கும் நிச்சயமாக நாம் (இம்மை மறுமையில் பயனளிக்கக்கூடிய) கல்வியைக் கொடுத்தோம். அதற்கு அவ்விருவரும், " புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தமானவை. அவன்தான் நம்பிக்கை கொண்ட தன் நல்லடியார்களில் பலரைவிட எங்களை மேன்மையாக்கி வைத்தான்" என்று கூறி (நன்றி செலுத்தி)னார்கள். (அல்குர்ஆன் 27 : 15)

﴿فَتَبَسَّمَ ضَاحِكًا مِنْ قَوْلِهَا وَقَالَ رَبِّ أَوْزِعْنِي أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ الَّتِي أَنْعَمْتَ عَلَيَّ وَعَلَىٰ وَالِدَيَّ وَأَنْ أَعْمَلَ صَالِحًا تَرْضَاهُ وَأَدْخِلْنِي بِرَحْمَتِكَ فِي عِبَادِكَ الصَّالِحِينَ﴾

பொருள் : அதன் சொல்லைக் கேள்வியுற்று ஸுலைமான் சிரித்தவராக புன்னகைப் பூத்தார். மேலும், " என் இறைவனே! நீ என் மீதும், என் தாய் தந்தை மீதும் புரிந்த உன் அருள்களுக்கு உனக்கு நான் நன்றி செலுத்த நீ எனக்கு அருள் புரிவாயாக! உனக்குத் திருப்தியளிக்கக்கூடிய நற்செயல்களையும் நான் செய்ய(க்கூடிய

பாக்கியத்தை எனக்கு) அருள் புரிந்து, உன் கருணையைக் கொண்டு உன் நல்லடியார்களுடனும் என்னைச் சேர்த்து விடுவாயாக!" என்று பிரார்த்தனை செய்தார். (அல்குர்ஆன் 27 : 19)

﴾وَوَهَبْنَا لِدَاوُودَ سُلَيْمَانَ نِعْمَ الْعَبْدُ إِنَّهُ أَوَّابٌ﴿

பொருள் : தாவூதுக்கு, ஸுலைமானை நாம் மகனாகத் தந்தருள் புரிந்தோம். அவர் மிக நல்லடியார். மெய்யாகவே அவர் (ஒவ்வொரு விஷயத்திலும்) நம்மையே நோக்கி நின்றார். (அல்குர்ஆன் 38 : 30)

இறைத் தூதர்கள்தான் நமது முன்மாதிரிகள். அவர்களும் அவர்களின்

வழியில் வாழ்ந்த நல்லோரும்தான் நமது சான்றோர் ஆவார்கள். அவர்களிடம் இந்த இறை அன்பு ஆழ்கடலாக இருந்தது.

இறை அன்புதான் அந்த நல்லோரின் இரா தூக்கத்தைப் பறித்தது. அவர்களின் செல்வத்தை ஏழை எளியோருக்கு வாரி வழங்கும்படி அவர்களை மாற்றியது.

இறை அன்பின் சுகத்தை உணர்ந்ததால்,குறைஷிகளின் கொடுமைகளும் தனது இனத்தாரின் இன்னல்களும் தாயிஃபின் துன்பமும் ஹிஜ்ரத்தின் வேதனையும் உஹுதுடைய படுகாயமும் தபூக் உடைய பசி பட்டினியும் அந்த பயணத்தின் நீண்ட நடையும் இன்னும் வாழ்நாளெல்லாம் தான் அனுபவித்த துக்கமும் துயரமும் நமது நபி ﷺ அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை!! இறைவா! உன் அன்பு.... உன் அன்பு... உன் பொருத்தம்.... உன் பொருத்தம்... இதுதான் அவர்களின் தேடலாகவும் வேண்டுதளாகவும் இருந்தது.

தங்களது நபி ﷺ காட்டிய அதே வழியில் வாழ்க்கை எல்லாம் போராடியவர்கள்தான் நபித்தோழர்கள். அல்லாஹ்வின் அன்புக்காக அவர்கள் செய்த தியாகங்களில் நாம் எதையாவது செய்ய

முடியுமா?! அவர்களின் எத்தனை ஆயிரம் பேர் தமது உயிரை அர்ப்பணம் செய்தார்கள். மார்க்கத்திற்கு தேவைப்படும்போதெல்லாம் தமது செல்வத்தை வாரி வழங்கினார்கள். அவர்களில் பலர் உடல் ஊனமுற்றார்கள். கணவனை இழந்த சஹாபிய பெண்களை நினைத்துப் பாருங்கள்! தந்தையை இழந்த பிள்ளைகளை நினைத்துப் பாருங்கள்! மதீனாவில் பிறந்து இறைப்பாதையில் பயணித்து எங்கோ உயிர்நீத்த உத்தம தோழர்களை நினைத்துப் பாருங்கள்! அல்லாஹ் அவர்களை பொருந்தி கொள்வானாக! அவனைக் கொண்டு பொருந்தியவர்களாக அவர்களை ஆக்குவானாக!

ஸஹாபாக்களைப் பற்றி அல்லாஹு தஆலா கூறும் ஒரு வசனத்தைகேளுங்கள்! பிறகு நாம் பாடத்திற்குள் செல்வோம்.

﴿مُحَمَّدٌ رَسُولُ اللهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ فِي وُجُوهِهِمْ مِنْ أَثَرِ السُّجُودِ ذَٰلِكَ مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ وَمَثَلُهُمْ فِي الْإِنْجِيلِ كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَآزَرَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوَىٰ عَلَىٰ سُوقِهِ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ الْكُفَّارَ وَعَدَ اللهُ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ مِنْهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا﴾

பொருள் : முஹம்மது அல்லாஹ்வுடைய திருத்தூதராவார்கள். (அவரும்) அவருடன் இருப்பவர்களும் நிராகரிப்பவர்கள் விஷயத்தில் கண்டிப்பானவர்களாகவும் தங்களுக்குள் மிக்க அன்புடையவர்களாகவும் இருப்பார்கள். குனிந்து சிரம் பணிந்துவணங்குபவர்களாக அவர்களை நீர் காண்பீர். அல்லாஹ்வின் அருளையும், அவனுடைய திருப்பொருத்தத்தையும் (எந்த நேரமும்) விரும்பியவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய

அடையாளமாவது: அவர்களுடைய முகங்களில் சிரம் பணி(ந்து வணங்கு)வதின் அடையாளம் இருக்கும். இதுவே தவ்றாத் (என்னும் வேதத்)தில் உள்ள அவர்களின் வர்ணிப்பு. இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமாவது: ஒரு பயிரை ஒத்திருக்கிறது. அப்பயிர் (பசுமையாகி, வளர்ந்து) உறுதிப்படுகிறது. பின்னர், அது தடித்துக் கனமாகிறது. பின்னர், விவசாயிகளுக்கு ஆச்சரியம் கொடுக்கும் விதத்தில் (வளர்ந்து,) அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கிறது. இவர்களைக் கொண்டு நிராகரிப்பவர்களுக்குக் கோபமூட்டும் பொருட்டு (அந்த நம்பிக்கையாளர்களை படிப்படியாக அபிவிருத்திக்குக் கொண்டுவருகிறான். அவர்களில் எவர்கள் நம்பிக்கைகொண்டு நற்செயல்கள் செய்கிறார்களோ, அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களித்திருக்கிறான். (அல்குர்ஆன் 48 : 29)

வாருங்கள் இப்போது நமது ரப்பின் பேச்சும் நமது தூதரின் கூற்றும் இந்த இறை அன்பை எப்படி விவரிக்கின்றன என்று படிப்போம்..

அதை உணர்வோம்... அதை நமது உள்ளத்தில் ஆழமாக வேரூன்ற வைப்போம்... வானளாவ உயர்த்திக்கொண்டே போவோம்... இன் ஷா அல்லாஹ்...

﴿وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبًّا لِلَّهِ﴾

பொருள் : எனினும், இறை நம்பிக்கையாளர்கள் (இவர்களைவிட) அதிகமாக அல்லாஹ்வை நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 2 : 165)

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا مَنْ يَرْتَدَّ مِنْكُمْ عَنْ دِينِهِ فَسَوْفَ يَأْتِي اللَّهُ بِقَوْمٍ يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُ﴾

பொருள் : நம்பிக்கையாளர்களே! உங்களில் எவரேனும் தங்கள்

மார்க்கத்தில் இருந்து மாறிவிட்டால் (அதனால் அல்லாஹ்வுக்கு நஷ்டமொன்றுமில்லை. உங்களைப் போக்கி) வேறு மக்களை அல்லாஹ் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான்; அவர்களும் அவனை நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 5 : 54)

﴿وَإِلَى رَبِّكَ فَارْغَبْ﴾

பொருள் : மேலும், (துன்பத்திலும் இன்பத்திலும்) உமது இறைவனையே நீர் ஆசைப்பட்டு அவனை நோக்கி நிற்பீராக! (அல்குர்ஆன் 94 : 8)

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: " ثَلاَثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلاَوَةَ الإِيمَانِ: أَنْ يَكُونَ اللهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا، وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لاَ يُحِبُّهُ إِلَّا لِلّٰهِ وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: யாரிடம் மூன்று தன்மைகள் இருக்குமோ அவர் ஈமானின் இனிப்பான சுவையை உணர்வார். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் அவ்விருவர் அல்லாதவர்களைவிட அவருக்கு மிக அன்பிற்குரியவர்களாக இருக்க வேண்டும். எந்த மனிதர் மீது அவர் அன்பு வைத்தாலும் அல்லாஹ்விற்காகவே தவிர அவர் மீது

அன்பு வைக்கக் கூடாது. குஃப்ர் - நிராகரிப்பில் மீண்டுவிடுவதை அவர் வெறுக்க வேண்டும் அவர் நெருப்பில் போடப்படுவதை வெறுப்பது போன்று.[1]

மேற்கூறபட்ட இறைவசனங்கள் மற்றும் நபிமொழியின் படிப்பினைகள் :

1. ஈமானின் பண்புகளில் மிகவும் முக்கியமான ஒன்று அல்லாஹ்வை

1. அறிவிப்பாளர்: அனஸ்�, நூல்: புகாரி, எண்: ١٦.

நேசிப்பதும் அவன் மீது அன்பு வைப்பதும் ஆகும்.

2. உண்மை நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பதில் உறுதியானவர்களாக இருப்பார்கள்.

3. அவனுடைய அன்புக்கு நிகராக எதையும் யாரையும் அவர்கள்ஆக்க மாட்டார்கள்.

4. அவர்களின் உள்ளத்தில் உள்ள இறை அன்பு மிகவும் உண்மையாகவும் ஆழமாகவும் இருக்கும். அது சந்தர்ப்பவாத அன்பாக இருக்காது.

5. வாழ்க்கையில் மாறி மாறி வரும் சுக துக்கங்களால், இன்ப துன்பங்களால், வறுமை அல்லது செல்வ செழிப்பால் அந்த இறை அன்பில் குறைவு ஏற்படாது. மாறாக அவர்களின் உள்ளத்தில் உள்ள இறையன்பு ஒவ்வொரு நொடியிலும் கூடிக்கொண்டே போகும்.

6. அல்லாஹ்வை உண்மையான ரப்பு என்று அறிந்துகொண்ட அவர்கள் அவனை நேசிப்பதில் முன்னுக்கு சென்றுகொண்டே இருப்பார்கள். அதில் ஒருபோதும் பின் வாங்குதல் என்பதே அவர்களிடம் இருக்காது.

7. இறை அன்பும் அதை அதிகப்படுத்துகின்ற நல்லமல்களும் அவர்களின் வாழ்க்கையின் அடையாளமாக இருக்கும். அன்பு உள்ளத்தில் ஒளியாகவும் வசந்தமாகவும் இருக்கும். வழிபடுதலும் கீழ்ப்படிதலும் மார்க்கப்பற்றும் பேணுதலும் அவர்களின் இறையன்புக்கு வாழ்க்கையில் அடையாளமாக சுடர்விடும்.

8. அல்லாஹ்வை விட்டு பிரிவதை அல்லது அவனை மறப்பதை அல்லது அவனது மார்க்கத்தை மீறுவதை அவர்களால் தாங்க முடியாது.

9. உடலில் உள்ள ரோமங்கள் அளவு உயிர் இருந்து அது ஒவ்வொன்றாக அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டாலும்

அவர்களின் இறையன்பில் குறைவு வராது. அது கூடத்தான் செய்யும்.

10. ரம்பத்தால் அறுக்கபப்டுவதோ, இரும்பு பற்களை கொண்ட சீப்புகளால் வகுந்து கிழிக்கப்படுவதோ அவர்களின் இறையன்பை ஆட்டம் காண வைக்காது. மரணத்தையும் மரண துன்புறுத்தலையும் காண காண அவர்களின் ஈமானும் இறையன்பும் மிக மிக உறுதியாகி உயர்ந்துகொண்டே போகும். ஃபிர்அவ்னின் மனைவியையும், யாசீன் சூராவின் தோழர் ஹபீப் நஜ்ஜாரையும், நெருப்பு அகழியில் கொல்லப்பட்ட அஸ்ஹாபுல் உக்தூத் முஃமின்களையும், மூசா நபிக்கு எதிராக சூனியம் செய்ய வந்த சூனியக்காரர்களையும் நினைவு கூர்வோமாக! எப்படி படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால், அவர்கள் ஈமானை விட்டு விலகவில்லை. ஈமானில் பலவீனப்படவில்லை. அல்லாஹ்வே எங்களை ஏன் இப்படி சோதிக்கிறாய் என்று ஆட்சேபிக்கவில்லை. ஈமான் கொண்டுவிட்டு, பிறகு இப்படி அவதியும் துன்பமும் படுகிறோமே என்று அவர்கள் அணுவளவு கூட கைசேதப்படவில்லை. இந்த உலகம் எப்படியும் முடியத்தான் போகிறது. நிரந்தர வாழ்க்கையான மறுமையில் அல்லாஹ்வின் அருகில் இருக்க வேண்டும் என்ற அந்த அன்பினால் அனைத்து கஷ்டங்களையும் அவர்கள் தாங்கிக் கொண்டார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்தி கொள்ளட்டும்!!

11. அல்லாஹ்வை அறிந்து நம்பிக்கை கொண்டவர்கள் அவனல்லாத ஒன்றை அவனை நேசிப்பது போன்று நேசிக்கவே மாட்டார்கள். அவன் மீது வைத்த அன்பை வேறு யார் மீதும் அவர்கள் வைக்க மாட்டார்கள். அவனுக்கு நிகராக இவ்வுலகில் எதையும் அவர்கள் விரும்ப மாட்டார்கள். அவனுடைய அன்பில் குறுக்கீடு செய்யும் எதையும் அவர்கள் தூக்கி எறிந்துவிடுவார்கள். அது பெற்றெடுத்த பெற்றோராக இருக்கட்டும், இரத்த உறவுகளாக இருக்கட்டும், நண்பர்களாக இருக்கட்டும், உலக செல்வங்களாக இருக்கட்டும், நாடு, வீடு எதுவாகவும் இருக்கட்டும் முதலிலும் இறுதியிலும் அல்லாஹ்வின் அன்புமட்டுமே. அதற்கு பிறகு, அதற்கு இடையூறாக

இல்லை என்றால்தான் மற்றதெல்லாம். இதுதான் அவர்களின் பண்பாக இருக்கும். இதுதான் அவர்களின் நிலைப்பாடாக இருக்கும்.

12. உலகின் ஆட்சி அதிகாரம், வசதி என எதுவானாலும் அது அல்லாஹ்வின் அன்பை குறைக்காமல் இருக்க அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். எதை வேண்டுமானாலும் அல்லாஹ்வின் அன்புக்காக தியாகம் செய்துவிடுவார்கள். வேறு எதற்காகவும் அல்லாஹ்வின் அன்பை தியாகம் செய்ய மாட்டார்கள்.

13. அல்லாஹ் தமக்கு கொடுத்ததைக் கொண்டு அவர்கள் அல்லாஹ்வின் அன்பை அளக்க மாட்டார்கள். அதாவது, செல்வம், வசதி, கண்ணியம், இன்னும் இன்பமான வாழ்க்கையை அல்லாஹ் கொடுத்தால் அவன் எங்களை நேசிக்கிறான், எனவே நாங்களும் அவனை நேசிப்போம். அவன் எங்களுக்கு வறுமை, துன்பம், நெருக்கடியான வாழ்க்கையை கொடுத்தால் அவன் எங்களை நேசிக்கவில்லை என்று பொருள். எனவே நாங்களும் அவனை நேசிக்க மாட்டோம் என்பது அவர்களின் நிலைப்பாடாக இருக்காது. அல்லாஹ்வை அறிந்துகொண்டு அகப்பார்வை பெற்ற அவர்கள் உலகத்தை ஒரு பொருட்டாகவே கருத மாட்டார்கள். இந்த உலகில் அவர்களின் பார்வையில் மதிப்புமிக்க ஒன்று இருந்தால் அது அல்லாஹ்வின் மார்க்கம்தான். அதுதான் அல்லாஹ்வின் அன்பை நாம் அடைவதற்கும் அதில் உயர்வதற்கும் நீடித்து இருப்பதற்கும் உண்டான ஒரே பாதை என்பதை உணர்ந்து, புரிந்து அந்த மார்க்கத்தை உறுதியாக பற்றிப் பிடித்து அதிலேயே வாழ்ந்து அதிலேயே மரணிக்க வேண்டும் எனபதுதான் அவர்களின் இலட்சியம், கொள்கை, இன்னும் குறிக்கோளாக இருக்கும். இதைத்தான் இஃத்திஸாம் **اعتصام** என்று கூறப்படும். அந்த இஃத்திஸாமை உபதேசிக்கின்ற சில வசனங்களையும் அவற்றின் பொருளையும் பார்ப்போம்.

அன்பு ஆழமாக இன்னும் உறுதியாக இருக்கின்ற அளவுக்கு இந்த இஃத்திஸாமும் உறுதியாக, ஆழமாக இருக்கும். இறையன்பில்

ஏற்படும் குறைவு இந்த இஃத்திஸாமை பாதிக்கும். அல்லாஹ் பாதுகாப்பானாக!! ஆமீன்!!

அல்லாஹ் கூறுவதை கேளுங்கள்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ(١٠٢) وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا﴾

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்பட வேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். மேலும், நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய (வேதம் என்னும்) கயிற்றை பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.(அல்குர்ஆன் 3 : 102, 103)

﴿وَمَنْ يَعْتَصِمْ بِاللَّهِ فَقَدْ هُدِيَ إِلَىٰ صِرَاطٍ مُسْتَقِيمٍ﴾

பொருள் : ஆகவே, எவர் அல்லாஹ்வை (அவனது மார்க்கத்தை) பலமாகப் பற்றிக் கொள்கிறாரோ அவர் நிச்சயமாக நேரான பாதையில் செலுத்தப்பட்டு விட்டார். (அல்குர்ஆன் 3 : 101)

﴿إِلَّا الَّذِينَ تَابُوا وَأَصْلَحُوا وَاعْتَصَمُوا بِاللَّهِ وَأَخْلَصُوا دِينَهُمْ لِلَّهِ فَأُولَٰئِكَ مَعَ الْمُؤْمِنِينَ وَسَوْفَ يُؤْتِ اللَّهُ الْمُؤْمِنِينَ أَجْرًا عَظِيمًا (١٤٦)﴾

பொருள் : எனினும் எவர்கள் (தங்கள் பாவத்திற்காக கைசேதப்பட்டு அதிலிருந்து) விலகி, நற்செயல்களையும் செய்து, அல்லாஹ்வை (அவனுடைய கட்டளைகளை) உறுதியாகப் பிடித்துக் கொண்டு, தங்கள் மார்க்கத்தை அல்லாஹ்வுக்காகக் கலப்பற்றதாகவும் ஆக்கி வைக்கிறார்களோ அவர்கள் உண்மை நம்பிக்கையாளர்களுடன்தான்) இருப்பார்கள். உண்மை நம்பிக்கையாளர்களுக்கு (மறுமையில்)

அல்லாஹ் மகத்தான (நற்)கூலியை கொடுப்பான்.

(அல்குர்ஆன் 4 : 146)

﴿يَاأَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُمْ بُرْهَانٌ مِنْ رَبِّكُمْ وَأَنْزَلْنَا إِلَيْكُمْ نُورًا مُبِينًا (١٧٤) فَأَمَّا الَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَاعْتَصَمُوا بِهِ فَسَيُدْخِلُهُمْ فِي رَحْمَةٍ مِنْهُ وَفَضْلٍ وَيَهْدِيهِمْ إِلَيْهِ صِرَاطًا مُسْتَقِيمًا (١٧٥)﴾

பொருள் : மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து (போதுமான) அத்தாட்சியாளர் நிச்சயமாக உங்களிடம் வந்துவிட்டார். (அவருடன்) மிகத்தெளிவான (வேதமென்னும்) ஒளியை நாம் உங்களுக்கு இறக்கியிருக்கிறோம். ஆகவே, எவர்கள் அல்லாஹ்வை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அ(ந்த வேதத்)தைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்கிறார்களோ அவர்களை அவன் தன் அன்பிலும், அருளிலும் செலுத்தி விடுகிறான். தன்னிடம் வருவதற்குரிய நேரான வழியிலும் அவர்களைச் செலுத்துகிறான்.

(அல்குர்ஆன் 4 : 174, 175)

﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا وَاعْبُدُوا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ (٧٧) وَجَاهِدُوا فِي اللَّهِ حَقَّ جِهَادِهِ هُوَ اجْتَبَاكُمْ وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِي الدِّينِ مِنْ حَرَجٍ مِلَّةَ أَبِيكُمْ إِبْرَاهِيمَ هُوَ سَمَّاكُمُ الْمُسْلِمِينَ مِنْ قَبْلُ وَفِي هَٰذَا لِيَكُونَ الرَّسُولُ شَهِيدًا عَلَيْكُمْ وَتَكُونُوا شُهَدَاءَ عَلَى النَّاسِ فَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَاعْتَصِمُوا بِاللَّهِ هُوَ مَوْلَاكُمْ فَنِعْمَ الْمَوْلَىٰ وَنِعْمَ النَّصِيرُ (٧٨)﴾

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் குனிந்து சிரம் பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். (மார்க்கத்திற்கும் மக்களுக்கும்)

நன்மையே செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம். (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் முயற்சிக்க வேண்டியவாறு முயற்சியுங்கள். அவனே உங்களைத் தேர்ந்தெடுத்(து மேன்மையாக்கி வைத்)திருக்கிறான். இந்த மார்க்கத்தில் அல்லாஹ் உங்களுக்கு ஒரு சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. இது உங்கள் பிதாவாகிய இப்றாஹீமுடைய மார்க்கமாகும். அவன்தான் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டான். இ(வ்வேதத்)திலும் (அவ்வாறே உங்களுக்குப் பெயர் கூறப்பட்டுள்ளது. இதற்கு) நம் இத்தூதரே உங்களுக்குச் சாட்சியாக இருக்கிறார். நீங்கள் மற்ற மனிதர்களுக்கு சாட்சியாக இருங்கள். ஆகவே, தொழுகையை கடைப்பிடியுங்கள்; ஜகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அவன்தான் உங்கள் பாதுகாவலன் (பொறுப்பாளன். அவனே சிறந்த பாதுகாவலன்; சிறந்த உதவியாளன் ஆவான்.
(அல்குர்ஆன் 22 : 77, 78)

மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்களை பலமுறை படித்து ஆழ்ந்து, சிந்தித்துப் பாருங்கள்! இறை அன்பும் மார்க்கப்பற்றின் உண்மை நிலையும் புரியவரும்.

வெறும் வாயால் பேசிவிட்டு, இதைப் பற்றி உணராமல்இருப்பவர்கள், இறை அன்புக்காக கடின முயற்சி செய்யாமல் உலக தேடலில் அலையும் என்னைப் போன்றவர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்கு உரியது! அல்லாஹ்வே கருணை காட்டு!!! இறட்சித்துக்கொள்!

மேலும் ஒரு நபிமொழியையும் அதன் படிப்பினைகளையும் சுருக்கமாக பார்த்துவிட்டு இந்த அமர்வை நிறைவு செய்வோமாக!

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ أنه سَمِعَ النَّبِيَّ ﷺ يَقُولُ يَوْمَ خَيْبَرَ لَأُعْطِيَنَّ الرَّايَةَ

رَجُلًا يَفْتَحُ اللهُ عَلَىٰ يَدَيْهِ (يُحِبُّ اللهَ وَرَسُولَهُ، وَيُحِبُّهُ اللهُ وَرَسُولُهُ) فَقَامُوا يَرْجُونَ لِذَٰلِكَ أَيُّهُمْ يُعْطَىٰ فَغَدَوْا وَكُلُّهُمْ يَرْجُو أَنْ يُعْطَىٰ فَقَالَ أَيْنَ عَلِيٌّ فَقِيلَ يَشْتَكِي عَيْنَيْهِ فَأَمَرَ فَدُعِيَ لَهُ فَبَصَقَ فِي عَيْنَيْهِ فَبَرَأَ مَكَانَهُ حَتَّىٰ كَأَنَّهُ لَمْ يَكُنْ بِهِ شَيْءٌ فَقَالَ نُقَاتِلُهُمْ حَتَّىٰ يَكُونُوا مِثْلَنَا فَقَالَ عَلَىٰ رِسْلِكَ حَتَّىٰ تَنْزِلَ بِسَاحَتِهِمْ ثُمَّ ادْعُهُمْ إِلَى الإِسْلَامِ وَأَخْبِرْهُمْ بِمَا يَجِبُ عَلَيْهِمْ فَوَاللهِ لَأَنْ يُهْدَىٰ بِكَ رَجُلٌ وَاحِدٌ خَيْرٌ لَكَ مِنْ حُمْرِ النَّعَمِ

பொருள் : கைபர் போர் அன்று நபி ﷺ அவர்கள், நான் (நாளைய தினம்) ஒருவரிடம் கொடியை கொடுப்பேன். அல்லாஹ் அவரின் கரங்களால் வெற்றி கொடுப்பான் (அவர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிப்பார். அல்லாஹ்வும் அவனது தூதரும் அவரை நேசிப்பார்கள்) என்று கூறினார்கள். அங்கிருந்த எல்லோரும் அவர்களில் யாருக்கு அந்த கொடி கொடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு சபையிலிருந்து எழுந்து சென்றார்கள். நாளை காலையில் அவர்களில் ஒவ்வொருவரும் அந்த கொடி தனக்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற ஆதரவில் அங்கு வந்து குழுமினார்கள். நபி ﷺ அவர்கள், அலி எங்கே என்று கேட்டார்கள். அவருக்கு கண் வலியாக இருக்கின்றது என்று பதில் கூறப்பட்டது. ஆனால், நபி ﷺ அவர்கள் அவரை அழைத்து வரும்படி கட்டளையிட அவர் நபியவர்களிடம் அழைத்து வரப்பட்டார். நபி ﷺ அவர்கள் அவரின் கண்களில் உமிழ்ந்தார்கள். அதே இடத்தில் அவர் நிவாரணம் பெற்றார். அவருக்கு முன்பு வலி எதுவுமே இல்லாதது போன்று ஆகிவிட்டது. பிறகு, அவர்கள் (-அந்த யூதர்கள்) நம்மைப் போன்று மாறும்வரை நாங்கள் அவர்களிடம் போர் செய்ய வேண்டுமா என்று அலி ￼ கேட்டார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நீர் நிதானமாக சென்று அவர்களின் பூமியில் தங்குவீராக!

பிறகு, அவர்களை இஸ்லாமின் பக்கம் அழைப்பீராக! அவர்கள் மீது என்ன கடமை என்பதை அவர்களுக்கு நீ அறிவிப்பு செய்வீராக! உம் மூலமாக ஒருவருக்கு நேர்வழி கிடைப்பது சிவந்த ஒட்டகைகளை (நீ கிடைக்கப் பெற்று, பிறகு அவற்றை நீ அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்வதை) விட உனக்கு மேலானதாகும்.[2]

இந்த ஹதீஸில் இருந்து கிடைக்கின்ற படிப்பினைகள்:

1. நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போருக்கு செல்வதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு போரிலும் கலந்துகொள்ள அவர்கள் ஆசைப்பட்டார்கள். போரில் தானும் வாளேந்தி சண்டை செய்வார்கள். கோழைத்தனத்தை விட்டு நபி ﷺ பாதுகாப்புத் தேடியுள்ளார்கள்.

2. நபி ﷺ அவர்கள் முக்கியமான பொறுப்புக்கு விசேஷமாக சிலரை தேர்ந்தெடுப்பார்கள்.

3. நபி ﷺ அவர்களின் முன்னறிவிப்பு அல்லாஹ்வின் வஹ்யின் படி கூறப்படுகின்றது.

4. அவர்களின் முன்னறிவிப்புகளில் எதுவும் மாற்றமாக நிகழ்ந்ததில்லை, இனியும் நிகழாது.

5. எல்லா நபித்தோழர்களுக்கும் இந்த சிறப்பு பொதுவாக இருந்தாலும் அலி அவர்களுக்கு இந்த சிறப்பு மிக மிக விசேஷமாக இருந்தது.

6. போரில் முன் வரிசையில் கொடியை ஏந்தி சண்டை செய்வதில்உயிருக்கு ஆபத்து இருந்தாலும் நபி ﷺ அவர்கள் கூறிய சிறப்பை அடைவதற்கு தோழர்கள் உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருந்தார்கள். உயிரைவிட அல்லாஹ்வின் அன்புதான் அவர்களுக்கு மிகப் பெரியதாக இருந்தது. ஆகவேதான் ஒவ்வொருவரும் அந்த கொடியை பெற ஆர்வப்பட்டு முன்னுக்கு

2. அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்னு ஸஃது, நூல்: புகாரி, எண்: 2942, 4210, 3009. முஸ்லிம், எண்: 2406

வந்தார்கள்.

7. நபி ﷺ அவர்களின் துஆ மற்றும் எச்சில் மூலமாக வெளிப்பட்ட முஃஜிஸா - அற்புதம் இங்கு தெளிவாகின்றது. நபி ﷺ அவர்களிடமிருந்து இதுபோன்று பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

8. தனக்கு கண் வலி இருந்தும் நபி ﷺ அவர்கள் தன்னை அழைத்தவுடன் வலியை காரணம் காட்டாமல் உடனே அலி رضي الله عنه அவர்கள் நபியின் அழைப்பை ஏற்று வந்துவிட்டதில் நபியவர்களுக்கு கீழ்ப்படிவதில் அலி رضي الله عنه அவர்கள் எந்தளவு முனைப்போடு இருந்தார்கள் என்பதை விளங்க முடிகிறது.

9. இஸ்லாமிய மார்க்கத்தில் போரின் நோக்கம் உயிர்களை கொல்வது அல்லது நாடுகளை கைப்பற்றுவது அல்ல. மாறாக, இஸ்லாமின் பக்கம் அழைப்பது, மக்களை பாதுகாப்பது, நீதத்தை நிலை நாட்டுவதாகும்.

10. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறுகின்ற காரியம் எவ்வளவு பெரிய கஷ்டமானதாக இருந்தாலும் அதை செய்வதற்கு அந்த தோழர்கள் தயாராக இருந்தார்கள். அந்த வழியில் எந்த தியாகத்தையும் அவர்கள் செய்ய தயங்கவில்லை. காரணம் அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் இருந்த அன்புதான். அந்த அன்புக்காக அளவில்லாமல் அர்ப்பணம் செய்யப்படும் என்பது உண்மை. அல்லாஹ் மிக அறிந்தவன்

மேற்கூறப்பட்ட படிப்பினைகளை முன்வைத்து நாம் நம்மை சுய பரிசோதனை செய்வோமாக!

அல்லாஹ்வே! நாங்கள் உன்னையும் உன் நபியையும் நபியின் தோழர்களையும் நேசிக்கின்றோம்.! எங்களிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக! உனது அன்பை எங்கள் உள்ளத்தில் அதிகப்படுத்துவாயாக! உன் அன்பும் ஈமானும் எங்கள் உள்ளத்தில் இருக்கின்ற நிலையில் எங்களை உயிர் கைப்பற்றுவாயாக! உன் அன்பை எங்களுக்கு ருசிக்க வைப்பாயாக! உன் அன்பில், உன்

நினைவில் எங்களை திளைக்க வைப்பாயாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 2

உள்ளம் வணங்கட்டும்!

உடலால் மட்டும் அல்லாஹ்வை வணங்கினால் போதாது. உள்ளமும் அல்லாஹ்வை வணங்க வேண்டும்.

உள்ளத்தின் இபாதத் - வணக்கம் என்ன?

உள்ளத்தின் இபாதத்துகள் அதிகம் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் அல்லாஹ்வின் மீது அன்பு, பாசம், நேசம் வைப்பதும் அதை அதிகப்படுத்திக்கொண்டே இருப்பதும்!

ஆம், உள்ளம் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும். அவன் மீது அன்பு வைக்க வேண்டும். அவனுக்கு நெருக்கமாக இருக்க ஆசைப்பட வேண்டும். அவனைப் பயப்பட வேண்டும். அவனை அஞ்ச வேண்டும். அவனை விட்டு விலகுவதை வெறுக்க வேண்டும்.

அவன் மீது அன்பு அதிகரிக்க அதிகரிக்க உள்ளம் அவனோடு தனிமையில் இருக்க ஆசைப்படும். அந்த தனிமையில் உடல் அவனை நின்று, குனிந்து, சிரம் தாழ்த்தி வணங்கும். நாவு அவனது வேதத்தை ஓதும், அவன் புகழை துதிக்கும். உள்ளமோ அவனது ஆசையால், அன்பால், அச்சத்தால் துடிதுடிக்க ஆரம்பித்து விடும். பிறகு, கண்களோ தம் பங்குக்கு கண்ணீரை தாரை தாரையாக பொழிய தொடங்கிவிடும்.

அல்லாஹ் தனக்கு செய்த அருட்கொடைகளை அந்த உள்ளம் நினைக்கும். பிறகு, தனது குறைவான நன்றியை நினைத்து வருந்தும். தனது ரப்புக்கு செய்த பாவத்தை எண்ணி வெட்கி தலை குனியும். தனது பாவங்களை அல்லாஹ் மறைத்து, மன்னிப்பதை போற்றி அவனை அதிகமதிகம் துதித்துக் கொண்டே இருக்கும், புகழ்ந்து கொண்டே இருக்கும், பாவமன்னிப்பு தேடிக் கொண்டே இருக்கும்.

தன் ரப்பு அவனை வணங்க தனக்கு செய்த அருளை நினைத்து அவன் மீது அன்பு அதற்கு இன்னும் அதிகரிக்கும்.

அர்ஷின் அதிபதியாகிய அல்லாஹ்வின் அன்பை உணராத உள்ளம் அவனது மார்க்கத்தை எப்படி புரிய முடியும்? அல்லது மறுமையை எப்படி அது உறுதிகொள்ள முடியும்? அல்லது சொர்க்கத்தை எப்படி ஆசைப்பட முடியும்?

உலகத்தில் ஒரு சொர்க்கம் இருக்கின்றதென்றால், அது- உள்ளம் அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பதும், அதை உணர்வதும், அவனை நினைப்பதும், பிறகு அந்த அன்பால் அழுவதும்தான்.

﴿وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبًّا لله﴾

பொருள் : இறை நம்பிக்கையாளர்கள் அதிகமாக அல்லாஹ்வை நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 2 : 165)

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ قَالَ جَاءَ رَجُلٌ إِلَى رَسُولِ اللهِ ﷺ فَقَالَ يَا رَسُولَ اللهِ مَتَى السَّاعَةُ قَالَ وَمَا أَعْدَدْتَ لِلسَّاعَةِ قَالَ حُبَّ اللهِ وَرَسُولِهِ قَالَ فَإِنَّكَ مَعَ مَنْ أَحْبَبْتَ قَالَ أَنَسٌ فَمَا فَرِحْنَا بَعْدَ الْإِسْلَامِ فَرَحًا أَشَدَّ مِنْ قَوْلِ النَّبِيِّ ﷺ فَإِنَّكَ مَعَ مَنْ أَحْبَبْتَ قَالَ أَنَسٌ فَأَنَا أُحِبُّ اللهَ وَرَسُولَهُ وَأَبَا بَكْرٍ وَعُمَرَ فَأَرْجُو أَنْ أَكُونَ مَعَهُمْ وَإِنْ لَمْ أَعْمَلْ بِأَعْمَالِهِمْ

ஒருவர் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்தார். அவர் கேட்டார், ரஸூலுல்லாஹ்வே! மறுமை நாள் எப்போது வரும்? ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கேட்டார்கள், மறுமை நாளுக்காக நீர் என்ன தயார் செய்து வைத்திருகின்றீர்! அவர் கூறினார், அல்லாஹ்வின் அன்பையும் அவனது ரஸூல் உடைய அன்பையும். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நீ அன்புவைத்தவர்களுடன் நீ இருப்ப்பாய். அனஸ் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாமிற்கு பிறகு, நபி ﷺ அவர்களின் நிச்சயமாக நீ அன்புவைத்தவர்களுடன் நீ இருப்பாய் என்ற கூற்றை விட அதிகமான மகிழ்ச்சியை நாங்கள் அடைந்ததில்லை. மேலும் அனஸ் ﷺ கூறுகிறார்கள்: நான் அல்லாஹ்வின் மீதும் இன்னும், அவனது ரஸூல், இன்னும் அபூ பக்ர் ﷺ, இன்னும் உமர் ﷺ மீதும் அன்பு வைக்கிறேன். ஆகவே, நான் அவர்களுடன் இருப்பேன் என்று ஆதரவு வைக்கின்றேன், அவர்களின் அமல்களை நான் செய்யவில்லை என்றாலும் சரியே (-அவர்கள் அளவுக்கு என்னிடம் அதிக அமல்கள் இல்லை என்றாலும் சரியே!.[3]

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ ثَلاَثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلاَوَةَ الإِيمَانِ أَنْ يَكُونَ اللهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لاَ يُحِبُّهُ إِلَّا لِلّٰهِ وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: யாரிடம் மூன்று தன்மைகள் இருக்குமோ அவர் ஈமானின் இனிப்பான சுவையை உணர்வார். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் அவ்விருவர் அல்லாதவர்களைவிட அவருக்கு மிக அன்பிற்குரியவர்களாக இருக்க வேண்டும். எந்த மனிதர் மீது அவர் அன்பு வைத்தாலும் அல்லாஹ்விற்காகவே தவிர அவர் மீது அன்பு வைக்கக் கூடாது. குஃப்ர் - நிராகரிப்பில் மீண்டுவிடுவதை அவர் வெறுக்க வேண்டும் அவர் நெருப்பில் போடப்படுவதை

3. அறிவிப்பாளர்: அனஸ் ▯, நூல்: முஸ்லிம், 2639

வெறுப்பது போன்று.[4]

படிப்பினைகள்

அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பது இது நாம் விரும்பினால் செய்யலாம், இல்லையென்றால் விட்டு விடலாம் என்ற விஷயம் இல்லை.

ஈமான் இல்லை என்றால் சொர்க்கம் செல்ல முடியாது. அல்லாஹ்வின் மீது அன்பு இல்லை என்றால் ஈமான் இல்லை. பிறகு எப்படி, அல்லாஹ்வை நேசிக்காதவர் சொர்க்கம் செல்ல முடியும்?

ஈமானின் சுவையை உணர்வதே அன்பு இருந்தால்தான் முடியும்.

நமது சான்றோர் ஈமானை ஏற்றபோது அதன் சுவையையும் சேர்த்தே உணர்ந்தார்கள். காரணம் ஈமானால் அவர்கள் அல்லாஹ்வை அறிந்தார்கள். அல்லாஹ்வை அறிந்தவுடன் அவன் மீது அன்பு அவர்களின் உள்ளங்களில் காட்டு வெள்ளத்தைப் போன்று கட்டுக்கடங்கமால் ஓட தொடங்கியது, புயல் காற்றைப் போன்று வீசியது. அந்த அன்பு உள்ளத்தில் வற்றாத ஊற்றாக பீறிட்டுக் கொண்டே இருந்தது.

இன்று, நமக்கு அமல்களில் ஏன் அதிக ஆர்வம் வருவதில்லை, அல்லாஹ்வை வணங்குவதில் சிரமம் எடுக்க மனம் ஏன் நாடுவதில்லை.

மேல் மினிக்கியாக வணக்கக வழிபாடுகளை செய்துவிட்டு, இபாதத்துகளில் நுனிப்புல் மேய்ந்துவிட்டு திருப்தி அடைத்து விடுகிறோமே. ஏன்?

ஓர் அடியான் அவனது உள்ளத்தில் உள்ள அன்பின் அளவுதான் அல்லாஹ்வை வணங்குவான்.

4. அறிவிப்பாளர்: அனஸ் ?, நூல்: புகாரி, எண்: 16.

அல்லாஹ் மீது அதிகம் அதிகம் அன்புள்ளவர்கள்தான் அவனை வணங்குவதில் கவனமாக இருப்பார்கள். அதற்கு அதிக நேரம் கொடுப்பார்கள்.

அல்லாஹ்வின் மீதுள்ள அன்புதான் அது உள்ளவர்களுக்கு மிகப்பெரிய ஈமானிய வலிமையை கொடுக்கின்றது. அதன் மூலம் அவர்கள் இபாதத்துகளை சிரமம் எடுத்து அதிகம் அதிகம் செய்ய ஆற்றல் பெறுகிறார்கள். மேலும் பாவங்களை எதிர்ப்பதிலும் நஃப்ஸ் இன்னும் ஷைத்தானிடம் போராடுவதிலும் அந்த அன்புதான் அவர்களுக்கு ஆன்மிக பலத்தை தருகிறது.

அந்த அன்பு பெற்றவர்கள் அல்லாஹ் விரும்புவதை இயற்கையாக விரும்புவார்கள். இன்னும், அல்லாஹ் வெறுப்பதை வெறுப்பார்கள்.

அந்த அன்பு அவர்களை இவ்வுலக இன்பங்களில் மனதை பறிக்கொடுக்க விடாது. அவர்களை நன்மையின் பக்கம் துரத்திக்கொண்டே இருக்கும். அமல்களின் பக்கம், பாவமன்னிப்பின் பக்கம், வணக்க வழிபாட்டின் பக்கம், இறை பொறுத்த நிறைந்த நல்லறங்களின் பக்கம் விரட்டிக் கொண்டே இருக்கும். இரவின் தூக்கத்தை கலைத்துவிடும். அந்த அன்பு அவர்களை தங்கள் ரப்புக்கு முன்னால் நின்று வணங்க வைக்கும், இறைஞ்ச வைக்கும், அழ வைக்கும்.

இப்படியாக ஒரு காலம் வரும் அந்த உள்ளம் அல்லாஹ்வை சந்திக்க ஆசைப்படும். அல்லாஹ்வும் அவனை சந்திக்க ஆசைப்படுவான்.

பிறகு, சொர்க்கத்தில் அல்லாஹ்வின் திருமுகத்தை காணும்போது அந்த அன்பு ஒரு நிலையை அடையும். அப்போது அந்த உள்ளத்திற்கு அல்லாஹ் பல உண்மைகளை புரிய வைப்பான்.

அல்லாஹ்வே! உன் அன்புக்கு எங்களை ஏற்றுக்கொள்! உன்னை விட்டு எங்களை விரட்டி விடாதே! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 3

நபி ﷺ அவர்கள் மீது அன்பு வைப்பது

இந்த உலகத்தில் ஓர் உண்மை முஃமினுக்கு அல்லாஹ்விற்கு அடுத்தபடியாக அவன் அனுப்பிய அவனுடைய தூதரை விட யாரும் அன்பிற்குரியாக இருக்க முடியுமோ!

அவரின் அன்பு இந்த ஈமானுக்கு உரம் அல்லவோ!

அவரின் அன்பு முஃமினின் மார்க்க பற்றுக்கு அதை பசுமையாக வைத்திருக்கும் நீரல்லவோ!

அந்த தூதரை நேசிக்காமல் அல்லாஹ்வை யார் நெருங்க முடியும்!?

அந்த தூதருக்காக தன் உயிரையும் உடலையும் செல்வத்தையும் குடும்பத்தையும் அர்ப்பணம் செய்வேன் என்ற எண்ணம் இல்லாதவர் முஃமினாக ஆகத்தான் முடியுமா?

அந்த தூதரின் அன்பும் பொருத்தமும் வேண்டி பிரார்த்திப்பது ஓர் இறைவனக்கமாயிற்றே!

அந்த தூதரை நேசிக்க நேசிக்க இந்த உள்ளத்திற்கு கிடைக்கும் இன்பம்தான் எத்துனை! எத்துனை!

அவரைப் பார்த்தால்தான் அன்பு வருமா? நேசம் பிறக்குமா?

இல்லை!! இல்லவே இல்லை!

திரு வேதம் அல்குர்ஆனில் கூறப்பட்ட முஹம்மது, அஹ்மது என்ற அவரின் பெயரை கேட்டாலே இந்த உள்ளத்தில் அவர் மீது அன்பின் ஊற்று பெருக்கெடுக்காதோ!

இறுதியாக வந்தாலும் அவர்தான் அகிலங்களின் இறைவனிடம் கண்ணியத்திலும் அவனது அன்பிலும் முதலாமவர் ஆவார்.

தனது தூதர்களுக்கெல்லாம் அவரை இமாமா ஆக்கி அழகுப் பார்த்தான் அந்த அர்ஷின் அதிபதி.

தனக்கு அருகில் அவரை வரவழைத்துப் பேசி, அவருக்கு அனபளிப்பு செய்து மகிழ்ந்தான் அந்த அர்ஹமுர் ராஹிமீன்!

அவர் கேட்டதையெல்லாம் அவன் வழங்கினான்! எவருக்கும் அளிக்காத கண்ணியத்தை இவ்வுலகில் அவருக்கு மட்டும் விசேஷமாக வழங்கினான்.

மறுமையிலோ அவருக்காக பல பதவிகளை அவன் ஏற்பாடு செய்து, அவரின் வருகைக்காக அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். மறுமையில் தன்னிடம் முதலாவதாக பேசி, பிறகு படைப்பினங்களுக்காக சிபாரிசு செய்ய அவன் தேர்ந்தெடுத்த ஒரே தூதர் அவர்தான்.

அவரை கண்ணியப்படுத்தி, அவருக்கு ஆறுதல் வழங்கி நூற்றுக் கணக்கான வசனங்களை அவன் இறக்கிக் கொண்டே இருந்தான்.

தன்னை தன் ராப்புக்காக உண்மையாக முழுமையாக அர்ப்பணித்த உன்னத தூதர் அவர். நாமும் அவரை நேசிக்க வேண்டும்! அவர் மீது அன்பு வைக்க வேண்டும்! அவர் மீது நாம் வைக்கும் அன்பை அல்லாஹ் ஏற்று நமக்கு அவரின் சிபாரிசை அல்லாஹ் நமக்கு மறுமையில் தர வேண்டும் என்று அல்லாஹ்விடம் நாம் ஆதரவும் வைக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿النَّبِيُّ أَوْلَى بِالْمُؤْمِنِينَ مِنْ أَنْفُسِهِمْ وَأَزْوَاجُهُ أُمَّهَاتُهُمْ﴾

பொருள் : நம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட (நம் தூதரான) நபிதான் மிக்க பிரதானமானவர். அவருடைய மனைவிகளோ அந்நம்பிக்கையாளர்களுக்குத் தாய்மார்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 33 : 6)

﴿وَاللَّهُ وَرَسُولُهُ أَحَقُّ أَنْ يُرْضُوهُ إِنْ كَانُوا مُؤْمِنِينَ﴾

பொருள் : அவர்கள் மெய்யாகவே நம்பிக்கையாளர்களாயிருந்தால், அவர்கள் திருப்திப்படுத்த அல்லாஹ்வும், அவனுடைய தூதரும்தான் மிகவும் தகுதியுடையவர்கள். (அல்குர்ஆன் 9 : 62)

﴿إِنَّا أَرْسَلْنَاكَ شَاهِدًا وَمُبَشِّرًا وَنَذِيرًا (٨) لِتُؤْمِنُوا بِاللَّهِ وَرَسُولِهِ
وَتُعَزِّرُوهُ وَتُوَقِّرُوهُ وَتُسَبِّحُوهُ بُكْرَةً وَأَصِيلًا (٩)﴾

பொருள் : (நபியே!) நிச்சயமாக நாம் உம்மை (நம்பிக்கையாளர்களின் ஈமானைப் பற்றி) சாட்சி கூறுபவராகவும், (அவர்களுக்கு) நற்செய்தி கூறுபவராகவும், (பாவிகளுக்கு) அச்சமூட்டி எச்சரிப்பவராகவும் அனுப்பி வைத்தோம். ஆகவே, (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நம்பிக்கை கொண்டு, அவருக்கு உதவி புரிந்து, அவரை கண்ணியப்படுத்தி வைத்து, காலையிலும் மாலையிலும் அவனை துதி செய்து வாருங்கள். (அல்குர்ஆன் 48 : 8, 9)

﴿وَالضُّحَىٰ (١) وَاللَّيْلِ إِذَا سَجَىٰ (٢) مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلَىٰ (٣)
وَلَلْآخِرَةُ خَيْرٌ لَكَ مِنَ الْأُولَىٰ (٤) وَلَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضَىٰ (٥)﴾

பொருள் : காலைப்பொழுதின் மீது சத்தியமாக! மறைத்துக் கொள்ளும் (இருண்ட) இரவின் மீது சத்தியமாக! (நபியே!) உமது இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை; (உம்மை) வெறுக்கவுமில்லை. (ஒவ்வொரு நாளும் உமது) பிந்திய நிலைமை, முந்திய நிலைமையை விட நிச்சயமாக மிக்க மேலானதாக இருக்கிறது. உமது இறைவன் மேலும் (பல உயர் பதவிகளை) உமக்கு அளிப்பான். (அவற்றைக் கொண்டு) நீர் திருப்தியடைவீர். (அல்குர்ஆன் 93 : 1 - 5)

﴿أَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ (١) وَوَضَعْنَا عَنْكَ وِزْرَكَ (٢) الَّذِي أَنْقَضَ ظَهْرَكَ (٣) وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ (٤)﴾

பொருள் : (நபியே!) உமது உள்ளத்தை நாம் உமக்கு விரிவாக்கவில்லையா? உமது சுமையையும் உம்மைவிட்டும் நாம் இறக்கிவிட்டோம். அது, உமது இடுப்பையே முறித்துக் கொண்டிருந்தது. உமது கீர்த்தியையும் நாம் உயர்த்தினோம். (அல்குர்ஆன் 94 : 1 - 4)

عَنْ أَنَسٍ ﷺ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ لاَ يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّىٰ أَكُونَ أَحَبَّ إِلَيْهِ مِنْ وَالِدِهِ وَوَلَدِهِ وَالنَّاسِ أَجْمَعِينَ

பொருள் : நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் நான் அவருக்கு அவருடைய தந்தை, இன்னும், அவரின் பிள்ளைள், இன்னும் மக்கள் அனைவரையும்விட அதிகம் அன்புள்ளவராக ஆகின்றவரை அவர் முஃமினாக ஆகமாட்டார்.[5]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ وَلَيَأْتِيَنَّ عَلَىٰ أَحَدِكُمْ زَمَانٌ لَأَنْ يَرَانِي أَحَبُّ إِلَيْهِ مِنْ أَنْ يَكُونَ لَهُ مِثْلُ أَهْلِهِ وَمَالِهِ

5. அறிவிப்பாளர்: அனஸ் ﷺ , நூல்: புகாரி, எண்: 15

பொருள் : நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவருக்கும் ஒரு காலம் நிச்சயமாக வரும். அப்போது அவர் என்னை பார்ப்பது அவருக்கு அவருடைய குடும்பம், அவருடயை செல்வம் போன்று இன்னும் இருப்பதைவிட மிக விருப்பமாக இருக்கும்.[6]

عَنْ عَبْدَ اللهِ بْنَ هِشَامٍ رضي الله عنه قَالَ كُنَّا مَعَ النَّبِيِّ ﷺ وَهُوَ آخِذٌ بِيَدِ عُمَرَ بْنِ الخَطَّابِ فَقَالَ لَهُ عُمَرُ يَا رَسُولَ اللهِ لَأَنْتَ أَحَبُّ إِلَيَّ مِنْ كُلِّ شَيْءٍ إِلَّا مِنْ نَفْسِي فَقَالَ النَّبِيُّ ﷺ لاَ وَالَّذِي نَفْسِي بِيَدِهِ حَتَّىٰ أَكُونَ أَحَبَّ إِلَيْكَ مِنْ نَفْسِكَ فَقَالَ لَهُ عُمَرُ فَإِنَّهُ الآنَ وَاللهِ لَأَنْتَ أَحَبُّ إِلَيَّ مِنْ نَفْسِي فَقَالَ النَّبِيُّ ﷺ الآنَ يَا عُمَرُ

பொருள் : நாங்கள் நபி ﷺ அவர்களுடன் இருந்தோம். நபி ﷺ அவர்கள் உமர் இப்னுல் கத்தாபின் கரத்தைப் பிடித்திருந்தார்கள். அப்போது நபியைப் பார்த்து உமர் கூறினார், ரஸூலுல்லாஹ்வே நிச்சயமாக நீங்கள் எனக்கு என்னைத் தவிர மற்ற எல்லாவற்றையும் விட மிகவும் அன்பிற்குரியவர் ஆவீர்கள். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள், இல்லை. என் உயிர் எவன் கையில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக நான் உமக்கு உமது உயிரைவிட அன்பிற்குரியவராக ஆகின்றவரை (நீர் முஃமினாக ஆகமுடியாது. அதற்கு நபியை நோக்கி உமர் கூறினார், நிச்சயமாக இப்போது (அது நடக்கப் போகிறது. அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் எனக்கு என் உயிரைவிட அன்பிற்குரியவர். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள், இப்போதுதான் உமரே! (நீங்கள் முழுமையான முஃமினாக ஆகினீர்.[7]

படிப்பினைகள்

6. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: புகாரி, எண்: 3589
7. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு ஹிஷாம் رضي الله عنه , நூல்: புகாரி, எண்: 6632

முன்பு நாம் கூறியதுபோல் நபியின் கண்ணியத்தையும் மதிப்பையும் விவரிக்கின்ற பல நூறு குர்ஆன் வசனங்கள் இருக்கின்றன. ஹதீஸ்களோ கண்டிப்பாக பல ஆயிரங்கள் இருக்கும்.

சரி, விஷயத்திற்கு வருவோம். அந்த நபி ﷺ அவர்கள் நமக்கு என்ன செய்தார்கள்? நாம் ஏன் அவர்களை நமது உயிரைவிட நேசிக்கவேண்டும், பிரியப்பட வேண்டும்?

காரணம் 1: அவர்கள்தான் அல்லாஹ்விற்கு மிக மிக பிரியமானவர்கள். எனவே, நாமும் அவர்களைத்தான் எல்லோரையும் விட அதிகம் அதிகம் நேசிக்க வேண்டும், அவர்கள் மீது அன்பு வைக்க வேண்டும்.

காரணம் 2: அவர்களை நேசிப்பது அல்லாஹ்வை நேசிப்பதில் ஒரு பகுதியாகும்.

காரணம் 3: அவர்களை நேசித்தால்தான் ஈமான் முழுமையாகும், ஈமான் எற்றுக்கொள்ளபப்டும்.

காரணம் 4: அவர்களை நேசிப்பது அல்லாஹ்வின் கட்டளையாகும்.

காரணம் 5: அவர்களை நேசிப்பதால் மனத்தூய்மையும், மார்க்கத்தை பின்பற்றும் ஆர்வமும், மார்க்கத்தில் உறுதியும், சுன்னத்துகளை பின்பற்றி நடப்பதில் பிடிப்பும் பேணுதலும் அதிகரிக்கும். எந்தளவு அந்த நபி ﷺ அவர்கள் மீது அன்பு வைப்போமோ, அந்த நபி ﷺ அவர்களை நேசிப்போமோ இவை அதிமாகி கொண்டே போகும். எந்தளவு அன்பு குறையுமோ அந்தளவு அந்த தன்மைகளும் குறைந்து கொண்டே போகும்.

சரி அவர்களைப் பற்றி கொஞ்சம் சொல்வோம்.

இருளில் இருந்த உலக மக்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தூதர் அவர்.

மிருகத்தனமான, அரக்கத்தனமான குணங்களில் இருந்த மனித

குலத்திற்கு கருணை, அன்பு, பாசம், ஜீவ காருண்யம் போன்ற மா பெரும் நற்குனங்க்களை போதித்து அவர்களை மனித புனிதர்களாக மாற்றினார் அந்த இறைத்தூதர்.

எல்லாமே கடவுள், எதுவும் கடவுள், கண்டதும் கடவுள், காணாததும் கடவுள், மனிதனும் கடவுள், மிருகமும் கடவுள், இப்படி படைத்த இறைவனை அறியாமல் இருந்த பிரபஞ்ச மாந்தர்களை அவர்களின் உண்மையான இறைவனின் பக்கம் வழிகாட்டி, அவனை எப்படி வணங்க வேண்டும் என்று போதித்தவர்கள் அந்த நபி ﷺ அவர்கள். ஏக இறைவனின் மார்க்கத்திற்காக தன் உயிர், குடும்பம் என அனைத்தையும் அர்ப்பணம் செய்து முன்னுதாரணமாக வாழ்ந்தவர்கள் அவர்கள் அந்த நபி ﷺ அல்லாஹ்வின் மார்க்கம் அல்லாஹ்வின் அடியார்களுக்கு கிடைத்து, அல்லாஹ்வின் கோபத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் அவர்கள் தப்பிக்க வேண்டும் என்பதற்காக அந்த நபி ﷺ செய்த தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும்எழுதுவதற்கு பக்கங்கள் போதாது.

எனது உம்மத் - எனது சமுதாயம் - எனது மக்கள் என்று நம்மீது அவர்களுக்கு இருந்த கவலை, அக்கறை, பற்று, பாசம் வேறு எந்த தலைவரிடமும் இருக்கவில்லை. இருக்கவும் முடியாது.

குணம், பண்பு, பழக்க வழக்கம், இறை நம்பிக்கை, இறை அச்சம், இறை வழிபாடு, மனத்தூய்மை, மார்க்கப் பற்று, வீரம், கொடைத்தன்மை, வாரி வழங்கும் வள்ளல் குணம், பணிவு, அடக்கம், அமைதி, தனது உம்மத்தின் மீது கருணை, இறக்கம், பாசம், வசீகரமான அழகு, முழுமைப் பெற்ற உடல் என அனைத்திலும் நிகரற்ற ஒருவராக திகழ்ந்த அந்த நபியை நேசிக்காமல் யாரும் இருக்கத்தான் முடியுமா!?

நபி ﷺ அவர்களின் வாழ்நாளில் அவர்களின் கொடிய எதிரியாக இருந்த எத்தனையோ நபர்கள் அந்த நபி ﷺ அவர்களை அறிந்த போது, அவர்களை புரிந்த போது, அவர்களை நேரில் பார்த்தபோது அவர்களின் உற்ற நேசர்களாக மாறினார்கள்.

பிறகு, நபியின் மீது குறை கூறுவதற்காக ஏதும் கிடைக்காதா என்ற தேடலில் அந்த நபியின் வரலாற்றை படித்த பரம எதிரிகள் பலர் மனம் மாறி, திருந்தி அவர்களின் நேசர்களாக மாறிய வரலாறு நூறல்ல, ஆயிரமல்ல!! எத்தனை எத்தனையோ! அல்லாஹ் அறிந்தவன்.

அல்லாஹ்வின் அடியார்களே! வாருங்கள் நாமும் அந்த நபியை நேசிப்போம், அவர்கள் மீது அன்பு வைப்போம்!! ஈமானிய உலகத்தில் வாழ்வோம்!! அல்லாஹ்வை நெருங்குவோம்!

****

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللهِ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 4

சொர்க்கலோக வாழ்க்கையில் மனதை பறி கொடுப்போம்!

சொர்க்கம் நாம்தேடவேண்டிய ஓர் இல்லம். நமக்கு அங்கே அமைதியும் நிம்மதியும் உண்டு. நோயற்ற வாழ்க்கை, இன்பங்கள் குறையாத வாழ்க்கை, வாலிபம் வயோதிகமாக மாறாத வாழ்க்கை, துக்கமும் துயரமும் எட்டிப் பார்க்காத வாழ்க்கை, பஞ்சமும் பட்டினியும், நோயும் பிணியும் அண்டாத வாழ்க்கை அந்த சொர்க்கத்தில் நிரந்தரமாக உண்டு.

அது யாருக்கு கிடைக்கும். யார் அல்லாஹ்வின் பொருத்தம் கிடைக்க போராடினார்களோ அவர்களுக்கு கிடைக்கும்!

அமல்தான் அந்த சொர்க்கத்தின் விலை. இவ்வுலகத்தின் பரம ஏழையும் இராஜலோக வாழ்கையை என்றென்றும் அனுபவிக்கப்போகும் அந்த சொர்க்கத்தின் விலை அல்லாஹ்வும் அவனது ரஸூலும் நமக்கு கற்பித்து கொடுத்த நல்லமல்கள்தான். உயர் பதவிகளை அடைய எத்தனையோ நல்லமல்களை நமது மார்க்கம் நமக்கு கற்பித்து கொடுத்திருக்கிறது.

மலையளவு தர்மம் செய்தவனுக்கும் சொர்க்கம் உண்டு. தன்னிடம் இருந்த ஒரு பேரீத்த பழத்தின் பாதியை தர்மம் செய்தவனுக்கும்

சொர்க்கம் உண்டு. எதுவுமே கொடுப்பதற்கு இல்லையா அல்லாஹ்வை புகழ்! உனக்கு சொர்க்கம் உண்டு. அவனை நினைவு கூரு! உனக்கு சொர்க்கம் உண்டு. நல்லதை பேசு! உனக்கு சொர்க்கம் உண்டு! அல்லாஹ்வின் பாதையில் போரிடு! உனக்கு சொர்க்கம் உண்டு. இரவில் எழுந்து வணங்கு! உனக்கு சொர்க்கம் உண்டு.

பெற்றோரை பேணு! உனக்கு சொர்க்கம் உண்டு. பிள்ளையை அழகிய ஒழுக்கத்தோடு வளர்! உனக்கு சொர்க்கம் உண்டு. அடிமையை உரிமையிடு! உனக்கு சொர்க்கம் உண்டு. ஏழைக்கு உணவளி! உனக்கு சொர்க்கம் உண்டு. கடனை மன்னித்துவிடு! உனக்கு சொர்க்கம் உண்டு. ஜீவகாருண்யம் காட்டு! உனக்கு சொர்க்கம் உண்டு.

இறையில்லத்தை நாடி செல்! உனக்கு சொர்க்கம் உண்டு. பிறர் இன்னல்களை போக்கு! உனக்கு சொர்க்கம் உண்டு. நபியை நேசி, நல்லவர்களை நேசி! உனக்கு சொர்க்கம் உண்டு. பொறுமையாக இரு! உனக்கு சொர்க்கம் உண்டு. பணிவாக இரு! உனக்கு சொர்க்கம் உண்டு. நல்ல பண்போடு பழகு! உனக்கு சொர்க்கம் உண்டு.

தர்க்கத்தை விடு! உனக்கு சொர்க்கம் உண்டு! பொய்யை தவிர்த்துவிடு! உனக்கு சொர்க்கம் உண்டு. ஒழுக்கமாய் வாழ்! உனக்கு சொர்க்கம் உண்டு. உள்ளதைக் கொண்டு நிறைவாக வாழ்! உனக்கு சொர்க்கம் உண்டு. உறவோடு உறவாடி வாழ்! உனக்கு சொர்க்கம் உண்டு.

நேர்மையாய், நீதமாய் இரு! உனக்கு சொர்க்கம் உண்டு. எல்லோருக்கும் நன்றி செய்து பழகு! உனக்கு சொர்க்கம் உண்டு. உண்மை பேசு! உனக்கு சொர்க்கம் உண்டு. உன்னை புறக்கணித்தாலும், உனக்கு துன்பம் தந்தாலும் நீ நன்மை செய்! உனக்கு சொர்க்கம் உண்டு. நல்லதை ஏவு! தீமையை தடு! உனக்கு சொர்க்கம் உண்டு.

அல்லாஹ் உனக்கு கொடுத்தால், நன்றி செலுத்து! உனக்கு சொர்க்கம் உண்டு. அவன் உனக்கு கொடுக்கவில்லை என்றால் பொறுமையாக இரு! உனக்கு சொர்க்கம் உண்டு. நல்லதை நாடு! உனக்கு சொர்க்கம்

உண்டு. நல்லதை செய்! உனக்கு சொர்க்கம் உண்டு.

குர்ஆனை ஓது! உனக்கு சொர்க்கம் உண்டு. உன் நபியின் கல்வியை தேடு! உனக்கு சொர்க்கம் உண்டு. உனது மார்க்கத்தை கற்றுக்கொள்! உனக்கு சொர்க்கம் உண்டு. கற்றதன்படி அமல் செய் உனக்கு சொர்க்கம் உண்டு. விருந்தாளியை கண்ணியம் செய்! உனக்கு சொர்க்கம் உண்டு. கற்பை பாதுகாத்துக்கொள்! உனக்கு சொர்க்கம் உண்டு. நோன்பு வை! உனக்கு சொர்க்கம் உண்டு. உன்னால் முடிந்த நன்மைகளை உன் ரப்பின் பொருத்தத்தை நாடி செய்துகொண்டே இரு! உனக்கு சொர்க்கம் உண்டு.

இரவு, பகல் என்று பார்க்காதே! காலை மாலை என்று பார்க்காதே! வெயில் குளிர் என்று பார்க்காதே! ஓடு! ஓடு! உனது ரப்பு உனக்கு கட்டியிருக்கும் உன் சொர்க்கத்தை தேடி ஓடு! ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அமல் உண்டு. அதனால் நீ காலத்தை எதிர்பார்த்து இருக்க வேண்டியதில்லை. உன் நிலை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். சொர்க்கம் உனக்கருகில் இருக்கிறது. தூரமாக இல்லை. நீ ஏழை என்று துவண்டுவிடாதே! நீ இல்லாதவன் என்று சலித்துக் கொல்லாதே! நீ ஊனமானவன் என்று உட்கார்ந்துவிடாதே! இந்த உம்மத்தில் பல முன்னோடி கல்விமான்கள் கண் தெரியாதவர்கள்.

உன் ரப்பை நீ பார்க்க வேண்டுமா? அப்படிஎன்றால் நீ சொர்க்கம் செல்ல வேண்டும். நீ சொர்க்கம் செல்ல வேண்டுமா? அப்படியென்றால் நீ உன் ரப்பை திருப்திபடுத்த வேண்டும். அப்படியென்றால் நீ அவனது கட்டளைகளை பின்பற்றி வாழ வேண்டும். அவனது நபிக்கு நீ கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

உனது மார்க்கம் இஸ்லாம். அதை நீ ஏற்றிருப்பதுபோல் அதன் வழிகாட்ட்லைகளை நீ பின்பற்றி நட! உனக்கு சொர்க்கம் உண்டு. இஸ்லாமிய மார்க்கத்தில் முதலில் கடமைகளை சரிவர செய்! பிறகு முடிந்தளவு உபரியான நன்மைகளை செய்! உனது ரப்புக்கு நெருக்கமாகிவிடுவாய். உயர்ந்த சொர்க்கத்தில், உன்னதமான

இருப்பிடத்தில், உன் ரப்புக்கு அருகில் நீ வீற்றிருப்பாய்.

உன் ரஹ்மான் கூறுவதை கேள்!

﴿إِنَّ الْمُتَّقِينَ فِي جَنَّاتٍ وَنَهَرٍ (٥٤) فِي مَقْعَدِ صِدْقٍ عِنْدَ مَلِيكٍ مُقْتَدِرٍ (٥٥)﴾

பொருள் : நிச்சயமாக இறையச்சமுடையவர்கள் சொர்க்கங்களிலும், (அதிலுள்ள) நீரருவிகளின் சமீபத்திலும் இருப்பார்கள்.அது மெய்யாகவே மிக்க கண்ணியமுள்ள இருப்பிடம்; அது மிக்க சக்திவாய்ந்த பேரரசனிடம் இருக்கிறது. (அல்குர்ஆன் 54 : 54, 55)

வானளாவிய சொர்க்கம் உனக்கு உண்டு. அதை நோக்கி வா என அழைக்கும் உன் ரப்பின் கலாமை ஒதிப்பார்!

﴿سَابِقُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَاءِ وَالْأَرْضِ أُعِدَّتْ لِلَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرُسُلِهِ ذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ (٢١)﴾

பொருள் : ஆகவே, (மனிதர்களே!) நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பை நோக்கியும், சொர்க்கத்தை நோக்கியும் முந்திச் செல்லுங்கள். அச்சொர்க்கத்தின் விசாலமோ வானம், பூமியின் விசாலத்தைப்போல் இருக்கிறது. அது அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நம்பிக்கை கொண்டவர்களுக்காகவே தயார்படுத்தப்பட்டிருக்கிறது. இது அல்லாஹ்வுடைய அருளாகும். இதை அவன் விரும்பியவர்களுக்கே கொடுக்கிறான். அல்லாஹ் மகத்தான அருளாளன்! (அல்குர்ஆன் 57 : 21)

﴿فَهُوَ فِي عِيشَةٍ رَاضِيَةٍ (٢١) فِي جَنَّةٍ عَالِيَةٍ (٢٢) قُطُوفُهَا دَانِيَةٌ (٢٣)

﴿كُلُوا وَاشْرَبُوا هَنِيئًا بِمَا أَسْلَفْتُمْ فِي الْأَيَّامِ الْخَالِيَةِ (٢٤)﴾

பொருள் : ஆகவே, அவர் திருப்தியான (சுகபோக) வாழ்க்கையில், மேலான சொர்க்கத்தில் இருப்பார். அதன் கனிகள் (இவர்கள், படுத்திருந்தாலும் உட்கார்ந்திருந்தாலும், நின்று கொண்டிருந்தாலும், எந்நிலைமையிலும் கைக்கு எட்டக்கூடியதாக இவர்களை) நெருங்கி இருக்கும். (இவர்களை நோக்கி) "சென்ற நாள்களில் நீங்கள் சேகரித்து வைத்திருந்த (நன்மையான)வற்றின் காரணமாக, மிக்க தாராளமாக இவற்றைப் புசியுங்கள்! அருந்துங்கள்" (என்று கூறப்படும்.
(அல்குர்ஆன் 69 : 21 - 24)

சொர்க்கத்தின் அருமையையும் அதன் மேன்மையையும் புரிந்து கொள்ள உனது தூதர் கூறிய அமுத மொழிகளை கொஞ்சம் படித்து, உணர்ந்து பார். உன் உள்ளத்தில் அதன் தேடல் வரும். அமல்களில் ஆர்வம் வரும். உன் அலட்சியம் குறையும். உன் ஆசை அதிகரிக்கும். அதன் மதிப்பை அறிய அறிய அதை அடைய அயராது உழைப்பாய்.

عَنْ أَنَسٍ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ غَدْوَةٌ فِي سَبِيلِ اللَّهِ أَوْ رَوْحَةٌ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا فِيهَا وَلَقَابُ قَوْسِ أَحَدِكُمْ أَوْ مَوْضِعُ قَدَمٍ مِنَ الْجَنَّةِ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا فِيهَا وَلَوْ أَنَّ امْرَأَةً مِنْ نِسَاءِ أَهْلِ الْجَنَّةِ اطَّلَعَتْ إِلَى الْأَرْضِ لَأَضَاءَتْ مَا بَيْنَهُمَا وَلَمَلَأَتْ مَا بَيْنَهُمَا رِيحًا وَلَنَصِيفُهَا يَعْنِي الْخِمَارَ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا فِيهَا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் பாதையில் காலையில் செல்வது, அல்லது மாலையில் செல்வது உலகம் இன்னும் உலகத்தில் உள்ள அனைத்தையும்விட மிக சிறந்ததாகும். சொர்கத்தில் உங்களில் ஒருவருடைய வில்லின் கைப்பிடியிலிருந்து அதன் முனைவரை

உள்ள இடம் அல்லது ஒரு கால் பாதம் அளவுள்ள இடம் உலகம் இன்னும் உலகத்தில் உள்ள அனைத்தையும்விட மிக சிறந்ததாகும். சொர்க்கவாசிகளின் மனைவிகளில் ஒருத்தி இவ்வுலகத்தை எட்டிப் பார்த்தால் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் அனைத்தையும் பிரகாசமாக ஆக்கி விடுவாள். இன்னும், அவை இரண்டுக்கும் இடையில் உள்ள அனைத்தையும் நறுமணத்தால் நிரப்பி விடுவாள். இன்னும், அவளின் துப்பட்டா உலகம் இன்னும் உலகத்தில் உள்ள அனைத்தையும்விட மிக சிறந்ததாகும்.[8]

عَنْ أَبِي سَعِيدٍ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ إِنَّ فِي الجَنَّةِ لَشَجَرَةً يَسِيرُ الرَّاكِبُ الجَوَادَ المُضَمَّرَ السَّرِيعَ مِائَةَ عَامٍ مَا يَقْطَعُهَا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக சொர்க்கத்தில் ஒரு மரம் இருக்கின்றது. இளைத்த, வேகமாக விரைந்து ஓடுகின்ற குதிரையில் பயணிப்பவர் நூறு ஆண்டுகள் பயணித்தாலும் அதை சுற்றி முடித்திருக்க மாட்டார்.[9]

عَنْ أَبِي سَعِيدٍ الخُدْرِيِّ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ إِنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَىٰ يَقُولُ لِأَهْلِ الجَنَّةِ يَا أَهْلَ الجَنَّةِ فَيَقُولُونَ لَبَّيْكَ رَبَّنَا وَسَعْدَيْكَ فَيَقُولُ هَلْ رَضِيتُمْ فَيَقُولُونَ وَمَا لَنَا لاَ نَرْضَىٰ وَقَدْ أَعْطَيْتَنَا مَا لَمْ تُعْطِ أَحَدًا مِنْ خَلْقِكَ فَيَقُولُ أَنَا أُعْطِيكُمْ أَفْضَلَ مِنْ ذَٰلِكَ قَالُوا يَا رَبِّ وَأَيُّ شَيْءٍ أَفْضَلُ مِنْ ذَٰلِكَ فَيَقُولُ أُحِلُّ عَلَيْكُمْ رِضْوَانِي فَلاَ أَسْخَطُ عَلَيْكُمْ بَعْدَهُ أَبَدًا

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹு தபாரக வதஆலா சொர்க்க வாசிகளை நோக்கி, சொர்க்க வாசிகளே! என்று கூறுவான். அவர்கள் எங்கள் இறைவா! உனக்கு முன்னால்

8. அறிவிப்பாளர்: அனஸ் ﵁, நூல்: புகாரி, எண்: 6568
9. அறிவிப்பாளர்: அபூ சயீது ﵁, நூல்: புகாரி, எண்: 6553

நாங்கள் ஆஜராகி இருக்கின்றோம், உன் அழைப்புக்கு பதில் தந்தோம் என்று கூறுவார்கள். நீங்கள் திருப்தி அடைந்தீர்களா என்று அவன் கேட்பான். உணது படைப்பில் ஒருவருக்கும் கொடுக்காததை நீ எங்களுக்கு கொடுத்துவிட்டாயே, அப்படி இருக்க நாங்கள் திருப்தி அடையாமல் இருக்க எங்களுக்கு என்ன குறை இருக்கின்றது? என்று அவர்கள் கூறுவார்கள். இதைவிட சிறந்ததை நான் உங்களுக்கு கொடுக்கப் போகிறேன் என்று அவன் கூறுவான். இதைவிட சிறந்தது எது என்று அவர்கள் கேட்பார்கள். நான் எனது திருப்தியை, மகிழ்ச்சியை உங்கள் மீது இறக்கப்போகிறேன். ஆகவே, இனி ஒருபோதும் உங்கள் மீதி நான் அதிருப்தி அடைய மாட்டேன் என்று அவன் கூறுவான்.[10]

عَنْ عَبْدِ اللهِ بْنِ قَيْسٍ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِنَّ فِي الْجَنَّةِ خَيْمَةً مِنْ لُؤْلُؤَةٍ مُجَوَّفَةٍ عَرْضُهَا سِتُّونَ مِيلًا فِي كُلِّ زَاوِيَةٍ مِنْهَا أَهْلٌ مَا يَرَوْنَ الآخَرِينَ يَطُوفُ عَلَيْهِمُ الْمُؤْمِنُونَ وَجَنَّتَانِ مِنْ فِضَّةٍ آنِيَتُهُمَا وَمَا فِيهِمَا وَجَنَّتَانِ مِنْ كَذَا آنِيَتُهُمَا وَمَا فِيهِمَا وَمَا بَيْنَ الْقَوْمِ وَبَيْنَ أَنْ يَنْظُرُوا إِلَىٰ رَبِّهِمْ إِلَّا رِدَاءُ الكِبْرِ عَلَىٰ وَجْهِهِ فِي جَنَّةِ عَدْنٍ.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக சொர்க்கத்தில் உள் பகுதி விசாலமான முத்துவினால் ஆன ஒரு கூடாரம் இருக்கும். அந்த கூடாரத்தின் அகலம் அறுபது மைல்கள் இருக்கும். அதன் ஒவ்வரு மூலையிலும் மனைவிகள் இருப்பார்கள். ஒருவர் மற்றவரை பார்க்க மாட்டார்கள். முஃமின் அவர்களிடம் சென்று இன்புற்று வருவார். இன்னும் இரண்டு சொர்க்கங்கள் அவருக்கு இருக்கும். அவற்றின் பாத்திரங்களும் மற்ற எல்லா பொருள்களும் வெள்ளியினால் ஆகி இருக்கும். இன்னும் இரண்டு சொர்க்கங்கள் அவருக்கு இருக்கும். அவற்றின் பாத்திரங்களும் அவற்றில் உள்ள

10. அறிவிப்பாளர்: ஆபு சயீது அல்குத்ரி ﷺ நூல்: புகாரி, எண்: 6549

மற்ற பொருள்களும் இதிலிருந்து (தங்கத்திலிருந்து) ஆகி இருக்கும். அந்த மக்களுக்கும் அவர்கள் தங்கள் ரப்பை அத்ன் சொர்க்கத்தில் பார்ப்பதற்கும் நடுவில் அல்லாஹ்வின் முகத்தின் முன் இருக்கின்ற ரிதாவுல் கிப்ர் ஐ த்தவிர வேறொன்றும் இருக்காது. ரிதாவுல் கிப்ர் - அல்லாஹ்வின் பெருமையின் திரை.[11]

படிப்பினைகள்

உலக பொருள்களை கொண்டு பெருமைப்படுபவர்கள் கொஞ்சம் இந்த சொர்க்க இன்பங்களை சிந்தித்து பார்க்கட்டும்! அப்படி அவன் சிந்தித்து பார்த்தால் இந்த உலக செல்வங்களைக் கொண்டு அவன் பெருமை அடிக்க மாட்டன். இவ்வுலகில் வறுமையில் வாடி வாழ்க்கையில் ஒவ்வொரு திசையிலும் அல்லல்படுகின்ற வறியவரும் இந்த சொர்க்கத்த்தின் மட்டில்லா மகிழ்ச்சியை நினைத்து பார்க்கட்டும்! அப்படி அவன் நினைத்துப் பார்த்தால் இந்த உலகத்தின் சிரமங்களை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள மாட்டான்.

அந்த சொர்க்கத்தின் எந்த ஒரு பொருளையும் இந்த உலகத்தின் பொருள்களோடு ஒப்பிட முடியுமா? முழு உலகமும் கிடைப்பதைவிட மேலானது சொர்க்கத்தில் ஒரு சின்ன இடம் கிடைப்பது. ஏனெனில் அங்கு கவலையில்லாத, நோயில்லாத, இன்பங்கள் முடிவுறாத, வயோதிகம் வராத, அழிவில்லாத ஒரு வாழ்க்கை எல்லா விதமான பேரின்பங்களுடன் கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக அல்லாஹ்வின் பொருத்தமும் அவனின் திரு முக தரிசனமும் அங்குதான் கிடைக்கும். ஆகவே,

لِمِثْلِ هَٰذَا فَلْيَعْمَلِ الْعَامِلُونَ (٦١)

பொருள்: அமல் செய்பவர்கள் இதுபோன்றதை அடையப்பெறுவதற்காக அமல் செய்யட்டும். (அல்குர்ஆன் 37 : 61)

11. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு கைஸ் ﷺ நூல்: புகாரி, எண்: 4879

என்று அல்லாஹ் கூறியதற்கு ஏற்ப நாம் அந்த சொர்க்கத்திற்காக அமல் செய்வோமாக! உலக வாழ்வில் மூழ்கி சொர்க்கத்தை மறந்துவிட வேண்டாம்.

****

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 5

நரகம்

அல்லாஹ் பாவிகளுக்காக தயார் செய்து வைத்துள்ள மகா விசாலமான, படு பயங்கரமான வேதனைகள், மிகக் கொடிய தண்டனைகள் நிறைந்த ஒரு சிறைச்சாலைதான் நரகம் என்பது.

அதன் ஆழம், அகலம், அதில் உள்ள வேதனைகளின் வகைகள், தண்டனையின் தன்மைகள் எல்லாம் மனித கற்பனைக்கு அப்பாற்பட்டவை ஆகும். அதை உருவாக்கிய இறைவன் தனது வேதத்தில் கூறியதை வைத்து ஓரளவு நாம் அதை கற்பனை செய்து பார்க்கலாம். அவ்வளவுதான். உண்மை நிலை அல்லாஹ்விற்கு மட்டுமே தெரியும்.

இணைவைத்தவர்களும் நிராகரிப்பாளர்களும் நயவஞ்சகர்களும் அதில் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள். அவர்களுக்கு மன்னிப்பு என்பதே கிடையாது. அவர்கள் அதில் இருந்து வெளியேற முடியவே முடியாது. அதன் கதவுகள் அவர்கள் மீது சாத்தப்பட்டுவிடும். நாளுக்கு நாள் புதுவகையான வேதனைகளை அவர்கள் சுவைக்க வேண்டியது வரும்.

கத்தினாலும் கதறினாலும் அங்கே பலனில்லை. கூச்சலிட்டாலும் சரி, அழுதாலும் சரி, அங்கே யாரும் உதவ முன்வர மாட்டார்கள். தங்கள்

ரப்பிடம் அவர்களுக்கு பேச வாய்ப்பே இருக்காது. நிராசைதான் அவர்களுக்கு மிஞ்சும்.

பெரும் பாவிகளின் நிலையும் மிக பரிதாபம்தான். அவர்களிடம் நன்மைகள் அறவே இல்லை என்றால், அல்லது சிபாரிசு ஏதும் கிடக்கவில்லை என்றால், அல்லது அல்லாஹ்வின் மன்னிப்பு கிட்டவில்லை என்றால் நரகத்தில் தள்ளப்பட வேண்டிய நிலை வந்துவிடும். எவ்வளவு காலம் அங்கு தங்குவார்கள் என்பதை அல்லாஹ்தான் நன்கறிந்தவன். நரகத்தில் எரிந்து கரிகட்டையாய் ஆகிவிடுவார்கள். எவ்வளவு காலம் அங்கே வேதனையை சுவைக்க வேண்யது வருமோ! பிறகு அல்லாஹ்வின் நாட்டபட்டி நரகில் இருந்து வெளியேற்றப்பட்டு ஜஹன்னமி என்ற பெயரோடு சொர்க்கம் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿هَٰذَا وَإِنَّ لِلطَّاغِينَ لَشَرَّ مَآبٍ (٥٥) جَهَنَّمَ يَصْلَوْنَهَا فَبِئْسَ الْمِهَادُ (٥٦) هَٰذَا فَلْيَذُوقُوهُ حَمِيمٌ وَغَسَّاقٌ (٥٧) وَآخَرُ مِنْ شَكْلِهِ أَزْوَاجٌ (٥٨)﴾

பொருள் : வழிகெட்டவர்களின் தங்கும் இடம் நிச்சயமாக மகா தீயது. அது நரகம்தான். அதில்தான் அவர்கள் புகுவார்கள். அது தங்குமிடங்களில் மகா கெட்டது. (அவர்களை நோக்கி,) இதோ! கொதித்த நீரும், சீழ் சலமும்! அதை நீங்கள் சுவைத்துப் பாருங்கள் (என்று கூறப்படும். இதைப் போன்ற (துன்பம் நிறைந்த) விதவிதமான வேறு (வேதனைகளு)ம் உண்டு. (அல்குர்ஆன் 38 : 55 - 58)

عَنْ قَتَادَةَ حَدَّثَنَا ﷺ أَنَسُ بْنُ مَالِكٍ ﷺ أَنَّ رَجُلًا قَالَ يَا رَسُولَ اللهِ كَيْفَ يُحْشَرُ الْكَافِرُ عَلَىٰ وَجْهِهِ يَوْمَ الْقِيَامَةِ قَالَ أَلَيْسَ الَّذِي أَمْشَاهُ عَلَىٰ رِجْلَيْهِ فِي الدُّنْيَا قَادِرًا عَلَىٰ أَنْ يُمْشِيَهُ عَلَىٰ وَجْهِهِ يَوْمَ الْقِيَامَةِ. قَالَ قَتَادَةُ

بَلَىٰ وَعِزَّةِ رَبِّنَا

பொருள் : ஒரு மனிதர் கேட்டார், அல்லாஹ்வின் தூதரே! காஃபிர் மறுமை நாளில் எப்படி அவனது முகத்தின் மீது எழுப்பப்படுவான்? ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கேட்டார்கள், உலகத்தில் அவனை அவனுடைய இரண்டு கால்கள் மீது நடக்கவைத்தவன் மறுமையில் அவனுடைய முகத்தின் மீது அவனை நடக்கவைப்பதற்கு ஆற்றல் உள்ளவனாக இல்லையா? இதன் அறிவிப்பாளர் கதாதா கூறினார்: ஏன் இல்லை. எங்கள் இறைவனின் கண்ணியத்தின் மீது சத்தியமாக அவன் அதற்கு ஆற்றல் உள்ளவன்தான்.[12]

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ يُؤْتَى بِأَنْعَمِ أَهْلِ الدُّنْيَا مِنْ أَهْلِ النَّارِ يَوْمَ الْقِيَامَةِ فَيُصْبَغُ فِي النَّارِ صَبْغَةً ثُمَّ يُقَالُ يَا ابْنَ آدَمَ هَلْ رَأَيْتَ خَيْرًا قَطُّ هَلْ مَرَّ بِكَ نَعِيمٌ قَطُّ فَيَقُولُ لَا وَاللهِ يَا رَبِّ وَيُؤْتَى بِأَشَدِّ النَّاسِ بُؤْسًا فِي الدُّنْيَا مِنْ أَهْلِ الْجَنَّةِ فَيُصْبَغُ صَبْغَةً فِي الْجَنَّةِ فَيُقَالُ لَهُ يَا ابْنَ آدَمَ هَلْ رَأَيْتَ بُؤْسًا قَطُّ هَلْ مَرَّ بِكَ شِدَّةٌ قَطُّ فَيَقُولُ لَا وَاللهِ يَا رَبِّ مَا مَرَّ بِي بُؤْسٌ قَطُّ وَلَا رَأَيْتُ شِدَّةً قَطُّ.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: இவ்வுலகில் மிக சுகவாசியாக இருந்த ஒருவனை மறுமையில் கொண்டு வரப்படும். அவன் நரக வாசிகளில் ஒருவனாக இருப்பான். அவனை நரகத்தில் ஒரு முறை முக்கி எடுக்கப்படும். பிறகு அவனிடம் கேட்கப்படும், ஆதமின் மகனே! நீ ஏதும் நன்மையை உலகத்தில் பார்த்திருக்கிறாயா?. நீ இன்பம் எதையும் சுவைத்திருக்கின்றாயா?. அவன் கூறுவான்: என் இறைவா! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இல்லவே இல்லை.

பிறகு, உலகத்தில் மிக துன்பப்பட்ட ஒருவரை கொண்டுவரப்படும்.

12. அறிவிப்பாளர்: அனஸ் رضي الله عنه, நூல்: முஸ்லிம், எண்: 2806.

அவர் சொர்க்க வாசிகளில் ஒருவராக இருப்பார். அவரை சொர்க்கத்தில் ஒரு முறை முக்கி எடுக்கபப்டும். பிறகு, அவரிடம் கேட்கப்படும்: நீ துன்பத்தை பார்த்திருக்கின்றாயா? உனக்கு ஏதும் கஷ்டம் வந்திருக்கின்றதா? அவர் கூறுவார்: என் இறைவா! அல்லாஹ்வின் மீது சத்தியமாக இல்லவே இல்லை. எனக்கு துன்பம் ஏதும் வந்ததில்லை. நான் கஷ்டம் எதையும் பார்த்ததில்லை.[13]

عَنْ ابْنِ عَبَّاسٍ ﵄ قَالَ قَرَأَ رَسُولُ اللهِ ﷺ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ وَلَوْ أَنَّ قَطْرَةً مِنْ الزَّقُّومِ قَطَرَتْ فِي الْأَرْضِ لَأَفْسَدَتْ عَلَىٰ أَهْلِ الدُّنْيَا مَعِيشَتَهُمْ، فَكَيْفَ بِمَنْ لَيْسَ لَهُ طَعَامٌ غَيْرُهُ.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ﴾

என்ற வசனத்தை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் ஓதினார்கள்.

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

பிறகு கூறினார்கள்: சக்கூமிலிருந்து ஒரு சொட்டு பூமியில் சொட்டினால் உலக மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையை அது நாசமாக்கி விடும். (சிந்தித்து பாருங்கள்: நரகவாசிகளில்) எவனுக்கு அதைத் தவிர வேறு உணவு இருக்காதோ அவனுடைய நிலை எப்படி இருக்கும்?![14]

13. அறிவிப்பாளர்: அனஸ் ﵁, நூல்: முஸ்லிம், எண்: 2807.
14. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ﵄, நூல்: இப்னு மாஜா, எண்: 4325.

படிப்பினைகள்

நரகவாசி மறுமையில் எழுப்பப்ப்படும்போதே கேவலப்படுத்தப் படுகின்றான். இவ்வுலகில் எவ்வளவு கண்ணியவானாக, மதிப்பு மிக்கவனாக, அரசனாக, மந்திரியாக வாழ்ந்திருந்தாலும் சரி மறுமையில் அவனுக்கு கேவலமும் வேதனையும்தான் மிஞ்சும். ஒரு நொடி வேதனையில் உலக இன்பங்களையும் சுக போகங்களையும் களியாட்டங்களையும் மறந்துவிடுவான் என்றால் அதுவே அவனுக்கு நிரந்தர தங்குமிடமாக மாறிவிடுமே! அந்தோ பரிதாபம்! அந்தோ கைசேதம்!

சக்கூமில் ஒரு சொட்டே உலகத்தை பாழாக்கிவிடும் என்றால் அதன் கொடூரத்தை என்னவென்று சொல்வது!

அந்த நரகத்தை நினைத்துவிட்டால் போதும் உலகில் மனிதன் பாவம் செய்ய துணியமாட்டான். நன்மைகளை அலட்சியம் செய்ய மாட்டான். எந்த வணக்கமும் இறை சட்டமும் அவனுக்கு சிரமமாக தோன்றாது. அல்லாஹ்வின் கட்டளையிலிருந்து அவனை எதுவும் தடுத்து விடாது. ஆனால், அதை நினைப்பவர்கள் மிகக் குறைவு!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 6

மறுமையை மறக்க வேண்டாம்!.

மனிதன் மிகப்பெரிய மறதியாளன். இதை மறந்து, அதை மறந்து பலர் தன்னையே மறந்து விடுகிறார்கள். தாம் ஏன் படைக்கப்பட்டோம், இந்த உலகத்திற்கு ஏன் அனுப்பப்பட்டோம் என்பதை மறந்துவிட்டு உலகமே கதி என்று, கடலில் மூழ்கிய கப்பலைப் போல் இந்த மாய உலகில் மூழ்கிவிடுகின்றனர்.

உலக மோகத்தில் சிக்கி, சிற்றின்பத்தைத் தேடி, அற்ப செல்வத்திற்கு அலைந்து பலர் மறுமையை மறந்த நிலையில் வாழ்ந்துகொண்டு இருக்கும் போதுதான் அவர்களின் மரணம் அவர்களை இரையை கொத்திசெல்லும் பருந்தைப் போல் தூக்கி சென்று விடுகிறது.

மறதி சில விஷயங்களில் இருக்கத்தான் வேண்டும். மறதி இல்லை என்றால் வாழ்க்கையில் இன்பம் இருக்காது. ஆனால், அந்த மறதி மனிதனுக்கு மறுமை விஷயத்தில் இருக்கக் கூடாது. அது மிக ஆபத்தானது.

மறுமையை மறந்த மனிதன் இறைக் கட்டளைகளை மதிக்க மாட்டான்; நன்மைகள் செய்வதில் ஆர்வம் கொள்ள மாட்டான்; பாவங்கள் செய்வதை விட்டு திருந்த மாட்டான்; அநியாயம் செய்வதில் இருந்து விலக மாட்டான். நான் நான் என்று பெருமையின் உச்சியில்,

ஆணவத்தின் சிகரத்தில் தொங்கி கொண்டே இருப்பான்.

சொர்க்க வாழ்க்கையை ஆசைப்பட வேண்டிய மனிதன் மறுமையை மறந்த காரணத்தால் உலகத்திலேயே அந்த வாழ்க்கையை தேடி அலைகிறான்.

சுகமான வாழ்க்கை, இன்பமான வாழ்க்கை, வசதியான வாழ்க்கை, வளமான வாழ்கை, ஆடம்பரமான வாழ்க்கை, மனம்போன வாழ்க்கை, என இவ்வுலக வாழ்க்கையை கட்டி அமைக்கப் பார்க்கிறான். அந்தோ பரிதாபம்!! வாலிபம் வயோதிகமாக மாறுகிறது. உடல் உறுப்புகள் அதன் வலிமையை இழக்கின்றன. முடிகள் நரைக்கின்றன. இப்படியாக மரண அறிகுறிகள் ஒன்றன் பின் ஒன்றாக அவனை சந்திக்க வருகின்றன. ஆனால் அவனோ மறுமை மறந்த காரணத்தால் உலகத்தில் பிசியாக இருக்கின்றான். இப்படியாக ஒரு தருணத்தில் அவன் தனது அறைக் கதவை தாழிடும்போது மலக்குல் மவ்த்தும் அதற்குள் நுழைந்துவிடுவார். அவனோ நாளைக்கான திட்டங்களை கற்பனை செய்துகொண்டே படுக்கைக்கு செல்ல மலக்குல் மவ்த்தோ அவனது படுக்கையை ஜனாஸா சந்தூக் பெட்டியாக மாற்றிவிட்டு யாருக்கும் தெரியாமல் நுழைந்தவர் யாருக்கும் தெரியாமலேயே சென்றுவிடுகிறார்.

நான் சொல்ல வருவது புரிந்ததா, இல்லையா! அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் புரியவைப்பானாக!

மறுமையை மறந்ததால் நரகத்தின் பயம் போய்விட்டது; விசாரணை நாளின் அச்சம் எடுபட்டுவிட்டது; அமல்களின் ஏடுகள் வலது கையிலா அல்லது இடது கையிலா, பாலத்தை கடப்போமா அல்லது இடறி விழுவோமோ, நபியின் சிபாரிசு கிடைக்குமா அல்லது விரட்டப்படுவோமா, வலதுபக்கம் நிற்க வைக்கப்படுவோமா அல்லது இடது பக்கம் தள்ளப்படுவோமா, முகம் வெண்மையாக பிரகாசிக்குமா அல்லது கருமையாகவும் நீல நிறமாகவும் மாறி அதை கருமையும் இழிவும் கவ்விக்கொள்ளுமா, அமல்கள் எற்றுக்கொள்ளப்படுமா

அல்லது நிராகரிக்கப்படுமா என்று மறுமையை குறித்து பயப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சனைகள் இருக்க உலக பிரச்சனைகளையே நாம் பயந்து கொண்டிருக்கின்றோம்.

நல்லமல்களில் முந்த வேண்டிய மனிதர்கள் மறுமையை மறந்த காரணத்தால் உலக வாழ்க்கையிலும் அதன் செல்வத்திலும் போட்டி பொறாமை கொண்டு இவ்வுலக செல்வத்தில் ஒருவர் மற்றவரை மிஞ்சப் பார்க்கின்றனர். மறுமைக்கான அமல்களில் வேகமாக விரைந்து செல்ல வேண்டிய மனிதர்கள் உலக தேடலில் மிக விரைவாக செல்கிறனர். நடந்தது போய், மாடு, ஒட்டகம், குதிரை வாகனம் போய், பேருந்து, ரயில் வாகனம் வந்தது. பிறகு போய் விமானம் வந்துவிட்டது. அதன் வேகம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. ஆனால், தான் இறுதியாக எதை நோக்கி போகப்போகிறோம் என்பதை மறந்துவிட்டதால் உலக செல்வமும் அதன் வசதிகளும் எவ்வளவு கிடைத்தாலும் போதுமென்ற மனம் அவனுக்குள் வருவதில்லை. அல்லாஹ் தனக்கு விதித்தைக் கொண்டு திருப்தியடைந்து, சொர்க்க பதவிகளுக்கு ஆசைப்பட்டு அதிகம் அதிகம் நல்லமல்களை செய்யாமல் செல்வத்தை அதிகம் அதிகம் சேர்ப்பதிலேயே மூழ்கிக்கிடக்கின்றான். எப்போதும் பயணம் சென்றால் வீட்டாரிடம் சொல்லிவிட்டு போகும் இவன் இந்த பயணத்தில் யாரிடமும் சொல்லாமல் திடீரென்று போய்விடுகிறான்.... அந்தோ பரிதாபம்!!!

அவன் சேர்த்த சொத்துகள் இருக்கும். ஆனால், அவன் இருக்க மாட்டான். அவன் கட்டிய வீடுகள் இருக்கும். ஆனால், அவன் இருக்க மாட்டான். அவனது ஆசை மாளிகைகள் இருக்கும். ஆனால், அவன் இருக்க மாட்டான். அவனது பிள்ளைக் குட்டிகள் இருப்பார்கள். ஆனால், அவன் இருக்க மாட்டான். அவன் வாங்கிய பொருள்கள் இருக்கும். ஆனால், அவன் இருக்க மாட்டான். அந்தோ பரிதாபம்!

மறுமையை மறந்ததால் பாலைவனத்தில் திசை தெரியாமல் சிக்கித்தவிக்கும் பயணியைப் போல் உலக மோகத்தில் சிக்கி தவிக்கின்றான் மனிதன்.

மறுமையை மறப்பது ஒரு பெரிய நோய். அந்த நோய் பிடித்தவன் நிரந்தரமாக துன்பப்படுவான். இங்கு அல்ல. மறுமை வாழ்க்கையில் நரகப் படுகுழியில். ஆம், அதுதான் மறுமையை மறந்தவர்களின் இறுதி தங்குமிடம்; அவர்களுக்காக ரப்பு ஏற்பாடு செய்து வைத்திருக்கும் நெருப்பு இல்லம். இங்கே இவ்வுளவு வசதியாக வாழ்ந்தவன் அங்கு என்ன பாடுப்பட போகின்றானோ!! அந்தோ பரிதாபம்!!

சரி.. வாருங்கள்... மறுமையை நினைவூட்டும் சில வசனங்களையும் நபியின் பொன்மொழிகளையும் பார்ப்போம்!!

﴿وَمَا هَٰذِهِ الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا لَهْوٌ وَلَعِبٌ وَإِنَّ الدَّارَ الْآخِرَةَ لَهِيَ الْحَيَوَانُ لَوْ كَانُوا يَعْلَمُونَ﴾

பொருள் : இவ்வுலக வாழ்க்கை வீண் விளையாட்டும், வேடிக்கையுமே தவிர வேறொன்றும் இல்லை. மேலும் மறுமையின் வாழ்க்கைதான் நிச்சயமாக நிலையான வாழ்க்கை ஆகும். இதை அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே! (அல்குர்ஆன் 29 : 64)

﴿وَابْتَغِ فِيمَا آتَاكَ اللَّهُ الدَّارَ الْآخِرَةَ وَلَا تَنْسَ نَصِيبَكَ مِنَ الدُّنْيَا وَأَحْسِنْ كَمَا أَحْسَنَ اللَّهُ إِلَيْكَ وَلَا تَبْغِ الْفَسَادَ فِي الْأَرْضِ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْمُفْسِدِينَ (٧٧)﴾

பொருள் : உன்னிடம் இருக்கும் பொருள்களை எல்லாம் அல்லாஹ்வே உனக்குக் கொடுத்தான். ஆகவே) அல்லாஹ் உனக்கு கொடுத்திருப்பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக்கொள்.

இம்மையில் (தானம் செய்து நீ தேடிக் கொண்டதுதான்) உன் பாகம் என்பதை நீ மறந்துவிடாதே! அல்லாஹ் உனக்கு(க் கொடுத்து) உதவி செய்தவாறு அதை(க் கொண்டு பிறருக்கு) நீயும் (தானம் செய்து) உதவி செய். பூமியில் நீ விஷமம் செய்ய விரும்பாதே! ஏனென்றால், விஷமிகளை நிச்சயமாக அல்லாஹ் விரும்புவதில்லை" என்றும் கூறினார்கள். (அல்குர்ஆன் 28 : 77)

﴿وَمَا الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا لَعِبٌ وَلَهْوٌ وَلَلدَّارُ الْآخِرَةُ خَيْرٌ لِلَّذِينَ يَتَّقُونَ أَفَلَا تَعْقِلُونَ﴾

பொருள் : இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும் கேளிக்கையுமே தவிர வேறில்லை! எனினும் இறையச்சமுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமையின் வாழ்க்கையே மிக மேலானது. (இவ்வளவுகூட) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? (அல்குர்ஆன்6 : 32)

﴿مَنْ كَانَ يُرِيدُ الْحَيَاةَ الدُّنْيَا وَزِينَتَهَا نُوَفِّ إِلَيْهِمْ أَعْمَالَهُمْ فِيهَا وَهُمْ فِيهَا لَا يُبْخَسُونَ (١٥) أُولَٰئِكَ الَّذِينَ لَيْسَ لَهُمْ فِي الْآخِرَةِ إِلَّا النَّارُ وَحَبِطَ مَا صَنَعُوا فِيهَا وَبَاطِلٌ مَا كَانُوا يَعْمَلُونَ (١٦)﴾

பொருள் : எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டும்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பலனை இவ்வுலகத்திலேயே நாம் முழுமையாகக் கொடுத்து விடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள். எனினும், மறுமையிலோ இவர்களுக்கு (நரக) நெருப்பைத் தவிர வேறொன்று மில்லை; அவர்கள் செய்தவை அனைத்தும் இங்கு அழிந்து விட்டன. அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே. (அல்குர்ஆன் 11 : 15, 16)

﴿ذَٰلِكَ بِأَنَّهُمُ اسْتَحَبُّوا الْحَيَاةَ الدُّنْيَا عَلَى الْآخِرَةِ وَأَنَّ اللَّهَ لَا يَهْدِي الْقَوْمَ الْكَافِرِينَ (١٠٧) أُولَٰئِكَ الَّذِينَ طَبَعَ اللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَسَمْعِهِمْ وَأَبْصَارِهِمْ وَأُولَٰئِكَ هُمُ الْغَافِلُونَ (١٠٨) لَا جَرَمَ أَنَّهُمْ فِي الْآخِرَةِ هُمُ الْخَاسِرُونَ (١٠٩)﴾

பொருள் : ஏனென்றால், நிச்சயமாக இவர்கள் மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையின் மீதுதான் நேசம் கொண்டார்கள். நிச்சயமாக, நிராகரிக்கின்ற (இத்தகைய) மக்களை அல்லாஹ் நேரான வழியில் செலுத்தமாட்டான். இவர்களின் இதயங்கள் மீதும், காதுகள் மீதும், கண்கள் மீதும் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். இவர்கள்தான் (தங்கள் தீய முடிவை) உணர்ந்து கொள்ளாதவர்கள். மறுமையில் முற்றிலும் நஷ்டமடைபவர்கள் இவர்கள்தான் என்பதில் ஒரு ஐயமுமில்லை. (அல்குர்ஆன் 16 : 107 - 109)

﴿وَعْدَ اللَّهِ لَا يُخْلِفُ اللَّهُ وَعْدَهُ وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ (٦) يَعْلَمُونَ ظَاهِرًا مِنَ الْحَيَاةِ الدُّنْيَا وَهُمْ عَنِ الْآخِرَةِ هُمْ غَافِلُونَ (٧)﴾

பொருள் : (இது) அல்லாஹ்வுடைய வாக்குறுதியாகும். அல்லாஹ் தன் வாக்குறுதியில் தவறுவதில்லை. எனினும், மனிதரில் பெரும்பாலானவர்கள் (இதை) அறியமாட்டார்கள். அவர்கள், இவ்வுலக வாழ்க்கையிலுள்ள வெளிப்படையான விஷயங்களை அறி(ந்து கவனிக்)கின்றனர். ஆனால், அவர்கள் மறுமையைப் பற்றி முற்றிலும் பராமுகமாயிருக்கின்றனர். (அல்குர்ஆன் 30 : 6, 7)

நபிமொழிகள் :

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنْهُ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ حُجِبَتِ النَّارُ بِالشَّهَوَاتِ

وَحُجِبَتِ الجَنَّةُ بِالْمَكَارِهِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நரகம் சரீர ஆசைகளால் திரையிடப்பட்டுள்ளது. சொர்க்கம் மனதுக்கு பிடிக்காத (அல்லது செய்வதற்கு சிரமமான) காரியங்களால் திரையிடப்பட்டுள்ளது.[15]

عَنْ عَبْدِ اللهِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الجَنَّةُ أَقْرَبُ إِلَىٰ أَحَدِكُمْ مِنْ شِرَاكِ نَعْلِهِ وَالنَّارُ مِثْلُ ذَٰلِكَ

நபி அவர்கள் ﷺ கூறினார்கள்: சொர்க்கம் உங்களில் ஒருவருக்கு அவரின் செருப்புடைய பட்டியைவிட மிக அருகில் உள்ளது. இன்னும் நரகமும் அதுபோன்றுதான் உள்ளது.[16]

عَنْ أُسَامَةَ رضي الله عنه عَنِ النَّبِيِّ ﷺ قَالَ قُمْتُ عَلَىٰ بَابِ الجَنَّةِ فَكَانَ عَامَّةُ مَنْ دَخَلَهَا المَسَاكِينَ وَأَصْحَابُ الجَدِّ مَحْبُوسُونَ غَيْرَ أَنَّ أَصْحَابَ النَّارِ قَدْ أُمِرَ بِهِمْ إِلَى النَّارِ وَقُمْتُ عَلَىٰ بَابِ النَّارِ فَإِذَا عَامَّةُ مَنْ دَخَلَهَا النِّسَاءُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நான் சொர்க்கத்தின் வாசலில் நின்று பார்த்தேன். அதில் நுழைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மிஸ்கீன் - ஏழைகளாக இருந்தார்கள். செல்வந்தர்கள் (விசாரணைக்காக) தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். என்றாலும் நரக வாசிகளை நரகத்தில் தள்ளும்படி கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. இன்னும், நான் நரகத்தின் வாசலில் நின்று பார்த்தேன். அதில் நுழைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருந்தார்கள்.[17]

படிப்பினைகள்

15. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: புகாரி, எண்: 6487
16. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﷺ, நூல்: புகாரி, எண்: 6488
17. அறிவிப்பாளர்: உஸாமா ﷺ, நூல்: புகாரி, எண்: 6547

1. ஓர் ஏழை மறுமையிலும் சிரமப்படக்கூடிய வறியவராக இருக்கமாட்டார் அவர் முஃமினாக இருந்தால்.

2. ஒரு செல்வந்தர் நல்ல முஃமினாக இல்லையென்றால் அவரது இவ்வுலக செல்வம் மறுமையில் அவனை நரகத்திலிருந்து காப்பாற்றாது.

3. ஏழை, செல்வந்தர் யாரும் இவ்வுலகில் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. அப்படி என்றால் இருவரும் தத்தமது மறுமையை நினைத்து அமல்களில் கவனம் செலுத்தி வாழட்டும்.

4. ஏழை தனது ஏழ்மையை நினைத்து துவண்டு விட வேண்டாம். செல்வந்தர் தனது செல்வத்தைக் கொண்டு தற்பெருமை பேசவும் வேண்டாம்.

5. ஏழைகள் வறுமையில் பொறுமையாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் விதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

6. செல்வந்தர் தனது செல்வத்தை நல்ல வழிகளில் தர்மங்கள் செய்து அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைய முயற்சிக்க வேண்டும்.

7. தீய, ஹராமான ஆசைகள் நரகத்திற்கான பாதையாகும். மனதுக்கு சிரமமாக இருந்தாலும் இறைக்கட்டளையை நிறைவேற்றி வாழ்வது சொர்க்கப் பாதையில் பயனிப்பதாகும்.

8. இவ்வுலகிலும் ஏழையாக இருந்துவிட்டு, நல்ல அமல்கள் இல்லாமல் மறுமைக்கு வந்தவன் மிகப் பெரிய துர்ப்பாக்கியவான் ஆவான்.

9. சொர்க்கமும் நரகமும் நீ செய்யும் அமல்களுக்குப் பின்னால் மறைந்துள்ளன, அவ்வளவுதான்.

10. நீ இங்கிருந்து மறுமைக்கு செல்லும் முன் அங்கு உன் தங்குமிடத்தை முடிவு செய்துகொள்!

11. நல்லதை செய்து, உன்னை வெற்றியாளனாக ஆக்கிக்கொள்! பாவம் செய்து நரகத்தை உனக்கு தேடிக்கொண்டுவிட்டு உன்னைப் படைத்த ரப்பை குறை சொல்லாதே!!

12. ஆசைகள் உன்னை அழைக்கும்போது கொழுந்துவிட்டு எரியும் நரகத்தை நினைத்துக் கொள்!

13. அமல்கள் சிரமமாக தோன்றும் போதும் மனம் அதைவிட தூண்டும்போதும் சொர்க்கத்தை நினைவில் கொண்டுவா!

14. செல்வத்தை சேர்ப்பது குற்றமல்ல. அதை சேர்க்கும் முறை ஆகுமானதாக இருக்க வேண்டும். அதை செலவு செய்யும் முறை அனுமதிக்கப்பட்ட வழியாக இருக்க வேண்டும். பிறகு மறுமையில் துல்லியமாக கணக்கு கொடுக்க வேண்டும். அதன் பின்னர்தான் சொர்க்கம்.

15. உலகத்தின் மீது அழிவு எழுதப்பட்டு விட்டது. மறுமையின் மீது நிரந்தரம் எழுதப்பட்டு விட்டது.

16. வலையில் உள்ள இரையை நம்பி, அதை உண்ண சென்று, பிறகு சிக்கி தவிக்கும் வேட்டையைப் போல் மயக்கும் உலக ஆசையை சுவைக்க சென்று மறுமையில் இறை தண்டனையில் சிக்கிக் கொள்ளாதே!

17. இவ்வுலகத்தின் கேவலமும் நஷ்டமும் உன்னை அச்சுறுத்தி விட வேண்டாம். மறுமையின் கேவலமும் நஷ்டமும்தான் நிரந்தமானதாகும். நீ எதை தவிர்க்கப் போகிறாய் என்பதை முடிவு செய்து கொள்!

18. பெண்களே! உங்களை கவனமாக பேணிக்கொள்ளுங்கள்! ஷைத்தான் உங்களையும் கெடுத்து விட வேண்டாம்! உங்களைக் கொண்டு பல ஆண்களையும் வழி கெடுத்து விடவேண்டாம்.

19. கேளிக்கையில் மயங்கியவன் மதியற்றவன் ஆவான்.

அப்படித்தான் உலக இன்பத்தில் மூழ்கி மறுமையை மறந்தவர்கள் புத்தியற்ற வீணர்கள் ஆவார்கள்.

20. உலகத்தை அறிவது அறிவல்ல. மறுமையை அறிவதுதான் அறிவு.

அல்லாஹ்வே! எங்களுக்கு நல்லறிவை தா! மயக்கும் மாய உலகில் சிக்கி மறுமையை மறந்த பாவிகளில் எங்களை ஆக்கிவிடாதே! எங்கள் உலக வாழ்க்கையையும் மறுமை வாழ்க்கையையும் சீர்ப்படுத்து! மறுமையில் வெற்றி பெற்ற நல்லோரில் எங்களை ஆக்கிவைப்பாயாக!! மறுமையின் நஷ்டத்திலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 7

பாவம்

அல்லாஹ் நம்மை நாம் அவனை அறிந்து, அவனை வணங்குவதற்காக படைத்திருக்கின்றான். அவன் பல கட்டளைகளை நமக்கு கொடுத்திருக்கின்றான். அவனை பலவகையான வணக்க வழிபாடுகளைக் கொண்டு வணங்க வேண்டும் என்று நம்மை ஏவியிருக்கின்றான்.

இன்னும், நமது ஆன்மாவை பாழாக்கக்கூடிய, நமது இம்மை, மறுமை வாழ்கையை நாசமாக்கக்கூடிய, மனித குலத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய காரியங்களை விட்டு நாம் விலகி இருக்கும்படி நம்மை அவன் ஏவியிருக்கின்றான்.

இவற்றைத்தான் பாவம், குற்றம், தவறு, அநியாயம், மாறு செய்வது என்று கூறப்படுகின்றது. கடமையாக்கப்பட்ட வணக்க வழிபாடுகளை விடுவதும் தடுக்கப்பட்ட செயல்களை செய்வதும் பாவம், குற்றமாகும்.

அல்லாஹு தஆலா, இன்னும் அவனது தூதரின் கட்டளைக்கு கீழ்ப்படிவது நன்மையாகும். அதை மீறுவதும், அவர்கள் தடுத்ததை செய்வதும் பாவமாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿بَلَىٰ مَنْ كَسَبَ سَيِّئَةً وَأَحَاطَتْ بِهِ خَطِيئَتُهُ فَأُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ هُمْ فِيهَا خَالِدُونَ﴾

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

பொருள் : அவ்வாறன்று! எவர்கள் பாவத்தையே சம்பாதித்துக் கொண்டிருந்து, அவர்களுடைய பாவம் அவர்களை சூழ்ந்து கொண்டதோ அவர்கள் (யாராக இருப்பினும்) நரகவாசிகளே! அதில்தான் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவார்கள்.

(அல்குர்ஆன் 2 : 81)

عَنْ عَائِشَةَ ﵂قَالَتْ قَالَ لِي النبي ﷺ إِيَّاكِ وَمُحَقَّرَاتِ الْأَعْمَالِ فَإِنَّ لَهَا مِنْ اللهِ طَالِبًا

நபி ﷺ அவர்கள் எனக்கு கூறினார்கள்: அற்பமாக கருதப்படுகின்ற (பாவமான) செயல்களைப் பற்றி நான் உன்னை எச்சரிக்கின்றேன். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ்விடம் அதற்கும் கேள்வி கணக்கு உண்டு.[18]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِنَّ الْمُؤْمِنَ إِذَا أَذْنَبَ كَانَتْ نُكْتَةٌ سَوْدَاءُ فِي قَلْبِهِ فَإِنْ تَابَ وَنَزَعَ وَاسْتَغْفَرَ صُقِلَ قَلْبُهُ فَإِنْ زَادَ زَادَتْ فَذَٰلِكَ الرَّانُ الَّذِي ذَكَرَهُ اللهُ فِي كِتَابِهِ ﴿كَلَّا بَلْ رَانَ عَلَىٰ قُلُوبِهِمْ مَا كَانُوا يَكْسِبُونَ﴾

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நிசச்யமாக முஃமின் - நம்பிக்கையாளர் பாவம் செய்துவிட்டால் அவருடைய உள்ளத்தில்

18. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: இப்னு மாஜா, எண்: 4243, ஹதீஸ் ஸஹீஹ் - அல்பானி

ஒரு கருப்பு அடையாளம் ஆகிவிடுகின்றது. அவர் திருந்தி, அந்த பாவத்திலிருந்து விலகி, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடினால் அவருடைய உள்ளம் சுத்தம் செய்யப்பட்டு பளபளப்பாக ஆக்கப்பட்டு விடுகின்றது. அவர் (பாவத்தை) அதிகப்படுத்தினால் அந்த கருப்பு அடையாளமும் அதிகமாகிவிடுகின்றது. அதுதான் அல்லாஹ் தனது வேதத்தில் கூறிய ரான் - ஆகும்.

﴿كَلَّا بَلْ رَانَ عَلَى قُلُوبِهِمْ مَا كَانُوا يَكْسِبُونَ﴾

பொருள் : நிச்சயமாக அவ்வாறல்ல. அவர்கள் செய்து கொண்டிருந்த தீய செயல்களே அவர்களின் உள்ளங்கள் மீது (துருவாகப் படிந்து) மூடிக் கொண்டன. (அல்குர்ஆன் 83 : 14)

ரான் என்றால் மூடிவிடுவது, துரு அல்லது அழுக்கு ஒரு பொருள் மீது முழுமையாக படர்ந்துவிடுவது ஆகும்.[19]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ سُئِلَ النَّبِيُّ ﷺ مَا أَكْثَرُ مَا يُدْخِلُ الْجَنَّةَ قَالَ التَّقْوَىٰ وَحُسْنُ الْخُلُقِ وَسُئِلَ مَا أَكْثَرُ مَا يُدْخِلُ النَّارَ قَالَ الْأَجْوَفَانِ الْفَمُ وَالْفَرْجُ

நபி ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது: (மனிதனை) சொர்க்கத்தில் அதிகம் பிரவேசிக்க செய்கின்ற அமல் எது? நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: தக்வா - இறையச்சமும் நற்குணமும் ஆகும். இன்னும் அவர்களிடம் கேட்கப்பட்டது: (மனிதனை) நரகத்தில் அதிகம் பிரவேசிக்க செய்கின்ற அமல் எது? நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: இரண்டு அஜ்வஃப் அதாவது, வாயும் மர்மஸ்த்தானமும் ஆகும்.[20]

படிப்பினைகள்

மனிதனின் அற்ப ஆசை அவனை பாவத்தில் தள்ளிவிடுகின்றது.

19. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ , நூல்: இப்னு மாஜா, எண்: 4244 , ஹசன் - அல்பானி.
20. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: இப்னு மாஜா, எண்: 4246, தரம்: ஹசன் - அல்பானி.

அல்லது அலட்சியம், அல்லது அறியாமை அவனை பாவத்தில் மூழ்கடித்து விடுகின்றது. ஒரு முறை பாவம் செய்துவிட்டால் உடனே உள்ளத்தில் பயம் வர வேண்டும், மறுமையை நினைக்க வேண்டும், அந்த பாவத்தை விட வேண்டும்.

இந்த உலகில் மரணம் இன்றி யாரால் வாழ முடியும்!? அப்படி இருக்க அங்கே ஒவ்வொரு செயலுக்கும் நாம் பதில் சொல்லியாக வேண்டும். எல்லாம் பதியப்பட்டு இருக்கும்.

ஒருவன் ஒரு சில பாவங்களை செய்துவிட்டால் அல்லாஹ் அவனை உடனே தண்டித்து விட மாட்டான். அல்லது அவனை மறுமையில் நரகத்தில் தள்ளிவிட மாட்டான். அந்த மனிதனின் மற்ற நன்மைகளை வைத்து அந்த சில பாவங்களை அல்லாஹ் மன்னிக்க பார்ப்பான்.

ஆனால், ஒருவன் வாழ் நாளெல்லாம் பாவமே செய்து கொண்டிருந்து, அவனது உள்ளம் ஈமானை இழந்து இருந்தால் அவன் எப்படி ஈடேற்றம் பெற முடியும்? அல்லது அல்லாஹ்வின் மன்னிப்பின் வாசல்களை எல்லாம் அந்த மனிதன் அடைத்துவிட்டிருந்தால் அவன் எப்படி சொர்க்கம் பிரவேசிக்க முடியும்?

சின்ன பாவம் என்று நாம் எதையும் செய்ய துணிந்து விடக்கூடாது. சின்ன பாவம்தான் பெரும் பாவத்தின் வாசலாகும். அல்லது அதன் பக்கம் இழுத்து செல்கின்ற பாதையாகும்.

சொல்வார்கள்: காட்டுத்தீயின் ஆரம்பம் சிறு நெருப்புப் பொறியாகத்தான் இருக்கும்.

ஆகவே, சிறு பாவங்களையும் செய்யக்கூடாது என்று நாம் உறுதியாக இருந்தால்தான் பெரும் பாவங்களை விட்டும் எளிதாக தப்பிக்க முடியும். இல்லையென்றால் பெரும் ஏரியில் பாசிபடிந்த படியில் காலை வைத்து வழுக்கி விழுந்து மாண்டவனைப் போல் ஆகிவிடும் நிலைமை. அல்லாஹ் பாது காப்பானாக! ஆமீன்.

நமது உறுப்புகளில் இரண்டை நாம் மிக கவனமாக பாதுகாக்க வேண்டும். அவைதான் வாயும் மர்மஸ்த்தானமும். அந்த இரண்டின் குற்றம் எப்போதும் மிக பயங்கரமானதாக இருக்கும்.

சிலரின் சொல் அவர்களின் தலைக்கே ஆபத்தாகிவிடும்.

சரீர இச்சையை அனுமதிக்கப்படாத வழிகளில் தீர்த்துக்கொள்ள சென்றவர்கள் யாரும் இம்மையின் கேவலத்தில் இருந்தும் மறுமையின் தண்டனையில் இருந்தும் தப்பிக்க முடியாது. அது - சரீர இச்சையை ஹராமான வழிகளில் தீர்த்துக்கொள்வது - உடலுக்கும் உயிருக்கும் மான மரியாதைக்கும் மறுமை வாழ்க்கைக்கும் நாசத்தை விளைவித்துவிடும். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்.

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 8

அழிந்துபோகும் வாழ்வில் ஆசைக்கு அளவில்லை! நாமாக நமது உள்ளத்தை அடக்க வில்லை என்றால் அது அடங்காது.

கடலின் ஆழத்தை யாரும் அளந்ததில்லை; வானத்தின் எல்லைகளை எவரும் கண்டதில்லை; காற்று எங்கு போய் நிற்கிறது என்று நீயும் நானும் பார்த்ததில்லை. இப்படித்தான் மனிதனின் மனதில் உள்ள ஆசைகளை வேறு யாரும் அறிந்துகொண்டதில்லை அல்லாஹ்வைத் தவிர.

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆசையின் ஒரு கோபுரம் கட்டப்பட்டிருக்கும். அது மண் கோபுரமா அல்லது காங்கிரட் கோபுரமா என்பது படைத்தவனுக்கு மட்டுமே வெளிச்சம்.

குழந்தையாக தொட்டிலில் இருக்கும்போது இறங்கி தவழ ஆசை. தவழும்போது நாலுகால் நடை நடக்க ஆசை. பிறகு இரண்டு காலில் எழுந்து நடக்க ஆசை. பிறகு, ஓட ஆசை. பிறகு, ஓட்ட ஆசை. பிறகு பறக்க ஆசை. இப்படியாக ஆசை வளர்ந்துகொண்டே போகிறது.

சில ரூபாய் விளையாட்டு பொருள் மீது இருந்த ஆசை, பிறகு

வளர்ந்து வளர்ந்து அண்ணார்ந்து பார்த்தால் கண்ணுக்கு தெரியாத அளவு சென்று விட்டிருக்கிறது.

ஏழைக்கு செல்வந்தனாக ஆக வேண்டும் என்ற ஆசை.

செல்வந்தவனுக்கு பெரிய செல்வந்தனாக ஆக வேண்டும் என்ற ஆசை.

பெரிய செல்வந்தனுக்கு எல்லோரிலும் நான்தான் பெரிய பணக்காரனாக ஆக வேண்டும் என்ற ஆசை.

ஒரு கவுன்சிலருக்கு எம் எல் ஏ ஆக வேண்டும் என்று ஆசை.

பிறகு எம் எல் ஏ ஆகிவிட்டால் எம் பி ஆக வேண்டும் என்று ஆசை.

பிறகு மினிஸ்டர் ஆக வேண்டும் என்று ஆசை. பிறகு சி எம் ஆக வேண்டும் என்று ஆசை. பிறகு பி எம் ஆக வேண்டும் என்று ஆசை.

ஆண்களுக்கு ஒருவிதமான ஆசை. பெண்களுக்கு ஒருவிதமான ஆசை. காற்றிலே பறக்கும் பட்டத்தைப் போல் எப்போதும் நமது ஆசை கற்பனை வானிலே பறந்துகொண்டே இருக்கிறது. அது கீழே இறங்குவதே இல்லை. கண் விழித்திருக்கும் போதும் ஆசை. கனவிலும் ஆசை.

இந்த ஆசையை எந்த கூண்டிலும் அடைக்க முடியாது போல்தான் தோன்றுகிறது. அல்லது அதற்கு கைவிலங்கு மாட்டி எந்த சிறைச் சாலையிலும் உள்ளே தள்ளி பூட்ட முடியாது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

வீட்டுக்குள் இருந்தால் வெளியே செல்ல வேண்டும் என்று ஆசை. வெளியில் இருந்தால் வீட்டுக்கு வர வேண்டும் என்று ஆசை. அங்கும் இங்கும் சுற்ற வேண்டும் என்று ஆசை. சுற்றினால் பிறகு

ஒய்வு எடுக்க வேண்டும் என்று ஆசை.

இப்படி ஆசைக்கு அடிமைத்தனம் செய்தே இந்த மனிதன் மண்ணுக்குள் சென்றுவிடுகின்றான். படைத்த இறைவனுக்கு அடிமைத்தனம் செய்ய வேண்டிய இந்த மனிதன் அழிவில் தள்ளும் ஆசைக்கு அடிமைத்தனம் செய்கிறான்.

உயர்பதவிகளை கொடுக்க காத்திருக்கும் ரப்புக்கு பணியாமல் கேவலத்தின் படு பாதாளத்தில் தள்ளும் மண்ணாய்போன ஆசைக்கு பணிந்துகொண்டு இருக்கின்றான் இந்த மனிதன்.

மறுமையின் நிரந்தர வாழ்க்கையில் உண்மையான சுகபோக வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அமல்களை செய்வதற்கு இவ்வுலகில் மனிதன் அனுப்பபட்டான்.

இவ்வுலகில் ஆசைப்படுவதற்காக அல்ல, பிறகு ஆசைக்குப் பின்னால் அலைவதற்காக அல்ல மனிதன் அனுப்பபட்டது.

ஆசையின் துளி நிறைவேறுவதற்குள் ஆயுள் முடிந்துவிடும். ஆசைகள் பலவிதம் என்று பண்பட்ட உள்ளம் உள்ளோர் கூறுகிறார்கள்: நிறைவேறாத ஆசை, ஆபத்தான ஆசை, அழிவில் தள்ளும் ஆசை, கேவலப்படுத்தும் ஆசை, அசிங்கப்படுத்தும் ஆசை, ஆனவமூட்டும் ஆசை, பகட்டு ஆசை, வீண் பெருமை அடிக்க ஆசை, தற்புகழ்ச்சி செய்துகொள்ள ஆசை, எல்லாமே எனக்கு என்ற ஆசை, நானே பெரியன் என்ற ஆசை, பிறரை அழிக்க வேண்டும் என்ற ஆசை, தன்னை எதிர்ப்பவர்களை நிர்மூலமாக்க வேண்டும் என்ற ஆசை, கட்டி ஆள வேண்டும் என்ற ஆசை, மரணமே இல்லாமல் என்றும் இவ்வுலகில் வாழ வேண்டும் என்ற ஆசை....

ஆம்,,, மறுமையை அறியாதவர்கள் அல்லது அதை நம்பாதவர்கள் இப்படித்தான் உலகில் வாழ்வார்கள், இவ்வுலகில் அவர்கள் இவ்வாறுதான் ஆசைப்படுவார்கள்.

அல்லாஹ்வையும் நிரந்தரமான மறுமை வாழ்க்கையையும் அறிந்த முஃமின்கள் ஆசைப்படுவது ஒன்றே ஒன்றைத்தான். ஆம், அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டவர்களாக, அவனை வணங்கியவர்களாக வாழ்ந்து மரணித்து மறுமையில் அவனை சொர்க்கத்தில் சந்திக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

இதுதான் உயர்ந்த ஆசை, உண்மையான ஆசை, வெற்றிக்கு வழிவகுக்கும் ஆசை! மனிதன் படவேண்டிய ஆசை இந்த ஆசைதான்.

இந்த ஆசையில் ஒரு மாபெரும் சுகம் உள்ளது. இந்த ஆசை ஏழை, பணக்காரன், சாமானியன், அரசன், சிறுவன், வாலிபன், வயோதிகன், ஆண், பெண் என யார் வேண்டுமானாலும் இந்த ஆசையை ஆசைப்படலாம். எல்லோருக்கும் இந்த ஆசை வெற்றியைத் தரும். இதைத் தேடத் தேட உள்ளம் ஒளி பெறும், மனம் அமைதி பெறும், ஆன்மா சுத்தமடையும், வானவர்கள் இவனை சுற்றி உலா வருவார்கள். இறை நெருக்கம் உண்டாகும். இவன் இறைவனை நேசித்து நேசித்து அந்த நேசத்தை இறைவன் ஏற்றுக்கொண்டு அவன் இவனை நேசித்துவிடுகின்றான். இருபக்கமும் நேசம் ஏற்பட்ட பின் இந்த ஆன்மா அவனைக் காண துடிக்கும், அவனை சந்திக்க ஏங்கும். அப்போது இறை அழைப்பு வரும்,

﴿يَاأَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ (٢٧) ارْجِعِي إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَرْضِيَّةً (٢٨)
فَادْخُلِي فِي عِبَادِي (٢٩) وَادْخُلِي جَنَّتِي (٣٠)﴾

பொருள் : அமைதி பெற்ற ஆன்மாவே உன் ரப்பிடம் திரும்பு! நீ அவனைக் கொண்டு திருப்தி அடைந்தாய். அவனும் உன்னைக் கொண்டு திருப்தி அடைந்தான். என் அடியார்களில் சேர்ந்துகொள்! என் சொர்க்கத்தில் நுழைந்துகொள்!

(அல்குர்ஆன்: 89 : 27, 28, 29, 30)

இந்த நிலை ஏற்பட வேண்டும் என்றால் நீ ஆசைப்படுவதை ஆசைப்படாமல் உன் இறைவன் ஆசைப்படுவதை ஆசைப்படு!! பிறகு உன் ஆசையை அவனே நிறைவேற்றுவான்.

வாருங்கள் இந்த ஆசை குறித்து அல்குர்ஆனும் அல்ஹதீஸும் உபதேசிப்பதை செவியுற்று உள்ளத்தை வசந்தமாக்குவோம். பிறகு அவற்றின் படிப்பினைகளைப் பார்ப்போம் இன் ஷா அல்லாஹ்!

முதல் வசனம், அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿إِنَّ الَّذِينَ لَا يَرْجُونَ لِقَاءَنَا وَرَضُوا بِالْحَيَاةِ الدُّنْيَا وَاطْمَأَنُّوا بِهَا وَالَّذِينَ هُمْ عَنْ آيَاتِنَا غَافِلُونَ أُولَٰئِكَ مَأْوَاهُمُ النَّارُ بِمَا كَانُوا يَكْسِبُونَ﴾

பொருள் : நிச்சயமாக எவர்கள் நம்மைச் சந்திப்பதை (ஒரு சிறிதும்) நம்பாது இவ்வுலக வாழ்க்கையை விரும்பி, அதைக் கொண்டு திருப்தியடைந்து (அதிலேயே மூழ்கி) விட்டார்களோ அவர்களும், இன்னும் எவர்கள் நம் வசனங்களை (புறக்கணித்து) விட்டுப் பராமுகமாக இருக்கின்றனரோ அவர்களும், (ஆகிய) இவர்கள் எல்லோரும் செய்து கொண்டிருந்த (தீய)வற்றின் காரணமாக இவர்களுடைய தங்குமிடம் நரகம்தான். (அல்குர்ஆன் 10 : 7, 8)

படிப்பினைகள்

இந்த வசனத்தின் அறிவுரைகள்

1. கடவுளை நம்புகிறேன் என்று யார் கூறினாலும் அவர் மறுமையில் அவனது சந்திப்பை நம்பவில்லை என்றால் அவர் கடவுளையே நம்பவில்லை என்றுதான் பொருள்.

2. மறுமை வாழ்க்கையை யார் மறந்தாலும் அவர் அடுத்த கணமே உலக மோகத்தில் மூழ்கி சாக வேண்டியதுதான்.

3. உலக மோகம் யாரின் அறிவை மழுங்க வைத்துவிட்டதோ அவர்களுக்கு இறை உபதேசங்கள் பலனளிக்காது. உபதேசம் செய்யப்பட்டாலும் அவர்கள் அதற்கு செவிகொடுத்து கேட்க மாட்டார்கள். அலட்சியம் செய்வார்கள். அவர்களுக்கு அதன் மீது நம்பிக்கை வராது. இறுதியாக மரணம் தொண்டைக் குழியை அடையும்போது உலகம் மறைந்து மறுமை தெரிய ஆரம்பிக்கும். அப்போது கைசேதப்படுவான். ஆனால், அது அவனுக்கு பலனளிக்காது.

4. உலக மோகம் ஒரு பெரும் போதை ஆகும். உலகத்தைக் கொண்டு மகிழ்ச்சி, அதைக் கொண்டு திருப்தி அப்படி என்றால் என்ன? நீ விரும்பியது, நீ ஆசைப்பட்டது உனக்கு கிடைத்தால் உனக்கு மகிழ்ச்சி உண்டாகும், அப்படித்தானே? முதலில் மனிதன் உலகத்தை ஆசைப்படுகிறான். அதன் மீது தீராத மோகம் கொள்கிறான். அது எப்போது அவனுக்கு கைக்கு கிடைத்துவிடுகிறதோ உடனே அவனுக்குள் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. பிறகு அவனுக்குள் ஒரு திருப்தி உண்டாகிறது. தன்னை பெரும் பாக்கியம் பெற்றவனாக கருத ஆரம்பித்துவிடுகிறான். உலக வசதி இல்லாதவர்களை அபாக்கியவான்களாக அவன் பார்க்கிறான். இவன் தனக்கு முன்னால் செத்து மடிந்த செல்வந்தர்களின் கதைகளை கேட்டதில்லை போலும். தந்தையின் சொத்தை பெற்ற மகன், அரசனின் அரியாசனத்தில் அமர்ந்த இளவரசன் இப்படி எல்லோரும் மரணத்தையும் மறுமையையும் மறந்துவிடுவது ஒரு விசித்திரமாக இருக்கிறது. ஆனால், அதுதான் உண்மை.

5.ரப்புடைய சந்திப்பில் நம்பிக்கை இல்லை, உலக மோகம், சதா அதைப் பற்றியே சிந்தனை, இறை உபதேங்களை புறக்கணிப்பது இப்படிப்பட்ட பண்புகளை உடையவர்கள் மறுமையில் தங்கப்போவது நரகம் என்ற அக்னி குண்டத்தில்தான். அங்கே அவர்களுக்கு விசேஷமான கவனிப்பு உண்டு!? பலவிதமான விருந்தோம்பல் உண்டு!? வகை வகையான உபசரிப்புகள் உண்டு!? கவனிப்பு செமையாக இருக்கும்!?

தான் சம்பாதித்த செல்வம், பேர், புகழ், ஆட்சி எல்லாம் பலனற்று போய் விகார உருவம் பெற்று, தொண்டையில் சிக்கிக்கொள்ளும் கள்ளி மர உணவும், துரு நாற்றம் வீசும் கொதிக்கும் சீழ் சலமும், சம்பட்டி அடிகளும், கடின உஷ்ணமிக்க கொதி நீரின் குளியலும், விஷ ஜந்துகளின் கடியும் தாரினால் செய்யப்பட்ட ஆடைகளும் நெருப்பு போர்வைகளும் அணிவிக்கப்பட்டு கவுரவிக்கப்படுவார்கள். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

இரண்டாவது வசனம்:

﴿ذَرْهُمْ يَأْكُلُوا وَيَتَمَتَّعُوا وَيُلْهِهِمُ الْأَمَلُ فَسَوْفَ يَعْلَمُونَ﴾

பொருள் : (நபியே!) அவர்கள் (நன்கு) புசித்துக்கொண்டும், (தங்கள் இஷ்டப்படி) சுகம் அனுபவித்துக் கொண்டும் இருக்க (தற்சமயம்) நீர் அவர்களை விட்டுவிடுவீராக! அவர்களுடைய (வீண்) ஆசைகள் (மறுமையை அவர்களுக்கு) மறக்கடித்து விட்டன. இதன் (பலனை) பின்னர் அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள். (அல்குர்ஆன் 15 : 3)

படிப்பினைகள்

1. மறுமையை ஏற்காத பாவிகள் உண்பதையும் உடுப்பதையும் உலக சுகத்தை அனுபவிப்பதையும் தவிர வேறு எதையும் அறிய மாட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு செய்ய வேண்டிய உபதேசங்களை செய்துவிட்டு பிறகு அவர்களை அவர்களின் போக்கில் விட்டுவிட வேண்டியதுதான். இந்த உலகத்தைவிட்டு அவர்கள் பிரியும் நேரம் வரும்போது அவர்களுக்கு உண்மைகள் புரியவரும். அப்போது என் இறைவா எனக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடு, நான் தர்மம் செய்துவிடுகிறேன், தொழுதுவிடுகிறேன், நல்லமல்கள் செய்துவிடுகிறேன் என்று கதறுவான். மலக்குகள் அவனது முகத்திலும் முதுகிலும் அடித்து உயிர் வாங்கிக்கொண்டு செல்வார்கள்.

2. மறுமையை நம்பாதமக்களை கெடுத்தது அவர்களின் ஆசைகள்தான்.

அவர்கள் ஆசைகளுக்கு அடிமையானார்கள். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என எல்லா ஆசைகளும் அவர்களை சூழ்ந்து கொண்டன. அவர்களை இவ்வுலக சிந்தனையிலேயே அவை சிக்க வைத்தன. வா வா என்று மயக்கி உள்ளே இழுத்து சுரண்டும் சூதாட்டத்தைப் போல் இவ்வுலக ஆசை அவனை மயக்கி அறுத்துவிட்டது. புல்லை காட்டி ஆட்டை கூப்பிட்டு பிறகு அதை அறுத்து துண்டுபோடும் கசாப்புகாரன் மாதிரிதான் இந்த ஆசைகள். ஆகவே, உன் ஆசை உன்னை கிழக்கில் போக சொன்னால் நீ மேற்கில் செல்! அது உன்னை மேற்கில் போக சொன்னால் நீ கிழக்கில் செல்! இல்லை என்றால் உன் கதி அவ்வளவுதான்.

மூன்றாவது வசனம்:

﴿يَاأَيُّهَا النَّاسُ إِنَّ وَعْدَ اللهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَلَا يَغُرَّنَّكُمْ بِاللهِ الْغَرُورُ﴾

பொருள் : மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதாகும். ஆகவே, இவ்வுலக வாழ்க்கை மெய்யாகவே உங்களை மயக்கிவிட வேண்டாம். (ஷைத்தானாகிய) மாயக்காரனும் அல்லாஹ்வைப் பற்றி உங்களை மயக்கிவிட வேண்டாம். (அல்குர்ஆன் 35 : 5)

படிப்பினைகள்

1. தான் சொர்க்கத்திற்காக படைத்த மக்களை அல்லாஹ் அழைக்கின்றான். அவர்களுக்கு அறிவுரை கூறுவதற்காக அவர்களை அவன் கூப்பிடுகின்றான்.

2. உண்மையானவர் அழைத்தால் பதில் தருவதுதான் புத்திசாலித்தனம்.

3. அழைத்த அல்லாஹ்வும் உண்மையானவன், அவனது

வாக்கும் உண்மையானது. ஆகவே, அவனையும் அதையும் நம்புங்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும், புரியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அங்கேதான் தப்பு செய்கிறீர்கள். உங்களுக்கு மேல் உள்ள ரப்புக்குதான் எல்லாம் தெரியும். அவன் சொல்வதை கேட்டால் உங்களுக்கு ஈடேற்றம் உண்டு. இல்லை என்றால் எழுதி வைத்துக்கொள்ளுங்கள் உங்கள் கெட்ட முடிவை உங்கள் கைகளால்.

4. அவன் நமக்கு கூறிய அறிவுரை என்ன? அவன் நமக்கு செய்த எச்சரிக்கை என்ன? ஆம், அதுதான் மாயக்கார உலகமும் மாயக்கார ஷைத்தானும் நம்மை மயக்கிவிட வேண்டாம் என்பது. என்னே அழகான அழைப்பு, மக்களே! என்று!! என்னே தெளிவான எச்சரிக்கை!! உங்களை இவர்கள் மயக்கிவிட வேண்டாம் என்று.

5. மது கிண்ணத்திலும் விபச்சாரியின் ஆட்டத்திலும் மனதை தொலைத்தவன் பிறகு விழித்துப் பார்க்கும்போது உடுத்திய துணிக் கூட இருக்காது!! சொன்னால் புரியாது. பட்டால்தான் தெரியும்.

ஹதீஸ்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ قَلْبُ الشَّيْخِ شَابٌّ فِي حُبِّ اثْنَتَيْنِ فِي حُبِّ الْحَيَاةِ وَكَثْرَةِ الْمَالِ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: வயோதிகரின்உள்ளம் இரு விஷயங்களை விரும்புவதில் வாலிபமாகவே இருக்கின்றது. அதிகம் உயிர் வாழ்வதை விரும்புவதிலும் அதிகமான செல்வத்தை விரும்புவதிலும் அது வாலிபமாகவே இருக்கின்றது.[21]

عَنْ أَنَسٍ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ يَهْرَمُ ابْنُ آدَمَ وَيَشِبُّ مِنْهُ اثْنَتَانِ

21. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: இப்னு மாஜா, எண்: 4233, புகாரி, எண்: 6420, முஸ்லிம், எண்: 1046.

الْحِرْصُ عَلَى الْمَالِ وَالْحِرْصُ عَلَى الْعُمُرِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதன் வயோதிகம் அடைகின்றான். ஆனால், செல்வத்தின் மீது பேராசைப்படுவது, இன்னும், வாழ்க்கையின் மீது பேராசைப்படுவது ஆகிய இந்த இரண்டு விஷயங்கள் அவனுக்குள் அப்போதுதான் வாலிபமடைகின்றன. (அதாவது, நன்கு வலிமை அடைகின்றன.)[22]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ لَوْ أَنَّ لِابْنِ آدَمَ وَادِيَيْنِ مِنْ مَالٍ لَأَحَبَّ أَنْ يَكُونَ مَعَهُمَا ثَالِثٌ وَلَا يَمْلَأُ نَفْسَهُ إِلَّا التُّرَابُ وَيَتُوبُ اللهُ عَلَى مَنْ تَابَ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதனுக்கு செல்வத்தின் இரண்டு பள்ளத்தாக்குகள் இருந்தால் அந்த இரண்டுடன் மூன்றாவது ஒன்று தனக்கு இருக்க வேண்டும் என்று அவன் விரும்புவான். அவனின் மனதை - ஆசையை மண்ணைத் தவிர எதுவும் நிரப்ப முடியாது. யார் திருந்த முயற்சிக்கின்றார்களோ அல்லாஹ் அவர்களை திருத்தி விடுகின்றான்.

(யார் உலக ஆசைகளை விட்டு அல்லாஹ்வின் மீது நாட்டம் கொண்டு நல்லமல்களில் ஆர்வம் காட்டுவாரோ அல்லாஹ்வும் அவருக்கு அந்த வாய்ப்பை கொடுத்து அவனை ஏற்றுக் கொள்வான்.)

(பள்ளத்தாக்கு: இரண்டு மலைகளுக்கு இடையில் உள்ள பெருவெளி.[23]

படிப்பினைகள்

மூன்று ஹதீஸ்களும் உபதேசிப்பது என்ன? அதிக நாள் வாழ

22. அறிவிப்பாளர்: அனஸ் رضي الله عنه, நூல்: இப்னு மாஜா, எண்: 4234, முஸ்லிம், எண்: 1047.
23. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: இப்னு மாஜா, 4235, புகாரி, எண்: 6439, முஸ்லிம், எண்: 1048

வேண்டும் என்ற ஆசை, பொருளாசை... இந்த இரண்டு ஆசைகளைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

வாலிபம் முடிந்து வயோதிகத்தின் முதல் படி நாற்பது வயதை மனிதன் எட்டும்போது அவனது ஆசை அவனுக்குள் அதன் வாலிபத்தின் முதல் பருவத்தில் நுழைகிறது. இவன் வயோதிகனாக ஆக, ஆக, அவனது ஆசை வலிமையான வாலிபத்தை அடைகிறது. காசு பணத்தை சேர்க்க வேண்டும், சொத்துக்களை குவிக்க வேண்டும், செல்வத்தை சேமிக்க வேண்டும் என்று அவனுக்குள் பேராசை வளர்ந்துகொண்டே போகிறது. பிறகு, காசும் பணமும் உலக சுகமும் தனக்கு கிடைத்தவுடன் அதில் வாழ வேண்டும், அவற்றை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை அவனுக்குள் தலை தூக்குகிறது. எவ்வளவு நாள் வாழ வேண்டும், எவ்வளவு அனுபவிக்க வேண்டும் என்று கேட்டால் ஆயிரம் ஆண்டுகள் கிடைத்தால் கூட குறைவுதான் என்று சொல்லும் அளவு அவனது மனம் உலகத்தில் மூழ்கி இருக்கும்.

எத்தனை ஆயிரம் ஆண்டுகளை கடந்து இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த உலகம் பார்க்காத செல்வந்தர்களா? அல்லது சுகபோகிகளா? யார் மிஞ்சினார்கள் இந்த உலகில், இவர்கள் மட்டும் மிஞ்சிவிட? யார் தங்கினார்கள் இந்த உலகில் இவர்கள் மட்டும் தங்கிவிட? யாருக்கு நிரந்தரம் இந்த உலகில், இவர்களுக்கு மட்டும் நிரந்தரமா?

உன்னை நீ திருத்த வில்லை என்றால், உலக ஆசையிலிருந்து உன்னை நீ விடுவித்துக் கொள்ள வில்லை என்றால் உன்னை இந்த உலகாசை அழித்துவிடும்! உன்னை நீ இந்த உலகாசையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வில்லை என்றால் அது உன்னை கொல்வது நிச்சயம்.

நீ அதை விட்டு உன் ரப்பிடம் ஓடி வந்துவிடு! அவன் உன்னை அணைத்துக் கொள்வான்; அவன் உன்னை அரவணைத்துக்

கொள்வான்; அவன் உன்னை காப்பாற்றிக் கொள்வான்.

உலக செல்வத்தில் கொஞ்சத்தைக் கொண்டும் உனக்கு கிடைத்ததைக் கொண்டும் நீ திருப்தி அடைந்துவிடு!!! போதும் என்று கூறி மன நிறைவு கொள்!! உன் உள்ளம் அமைதி பெறும். பிறகு அதன் ரப்பை அது தேட ஆரம்பிக்கும். அவனது அன்பை அடைய வழிகளை ஆராய ஆரம்பிக்கும். அதன் உள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக ஒளி பெறும். உலகத்தின் யதார்த்தம் புரிய வரும். ஆசாபாசங்களை விட்டு விலகி உள்ளம் வணக்க வழிபாட்டில், ரப்புடன் தனிமையை செலவிடுவதில், அவனுடன் பேசுவதில் அவனுக்கு முன்னால் நின்று குனிந்து பணிந்து துதித்து நேரம் கழிப்பதில் சுகம் காண ஆரம்பிக்கும்; அமைதியை உணர தொடங்கும். பிறகு அந்த ஆன்மா இவ்வுலகில் வாழ்ந்தாலும் மறுமையில்தான் சுற்றிக்கொண்டே இருக்கும். மறுமையைத்தான் அது சிந்தித்துக் கொண்டிருக்கும். சொர்க்க இன்பங்களை ஆசைப்பட்டு நரக துன்பங்களை அஞ்சி அதன் மனம் உலகத்தை விட்டு எப்போதும் விலகியே இருக்கும். அவர்கள் மக்களோடு இருப்பார்கள். ஆனால், மறுமையை குறித்த பயம் அவர்களை மற்ற மக்களை விட்டு பிரித்து அடையாளப்படுத்தும். தொழுகையை நேரம் தவறாமல் தொழுது, ஸகாத்தை சரியாக கொடுத்து வருவார்கள். ஹலாலான வருவாய்தான் அவர்களுக்கு அவர்களின் தேடலாக இருக்கும் அது குறைவாக, சிரமமாக இருந்தாலும் சரி. ஹராமான வருவாய் அவர்களுக்கு வெறுப்பாக இருக்கும் அது இலகுவாகவும் அதிகமாகவும் இருந்தாலும் சரி.

ரப்பை விட்டு கொஞ்ச நேரம் கூட அவர்களால் பிரிய முடியாது. அவர்களின் உள்ளம் தங்கள் ரப்பின் இல்லத்தில் தொங்கி கொண்டு இருக்கும். அவன் அழைப்பதற்கு முன்பே அவன் இல்லத்தில் அவனுக்காக அவர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள். அவனுக்காக பசித்து தாகித்து இருப்பதிலும் அவனுக்காக உயிர் தியாகம் செய்வதிலும் அவர்களுக்கு அலாதியான பிரியம் இருந்துகொண்டே இருக்கும்.

அவர்களின் நாவு அவனை சதா நினைத்துக் கொண்டே இருக்கும். அவன் அருள்களை எண்ணி எண்ணி அவனை புகழ்ந்து கொண்டே இருக்கும். அவனது பெருமைகளை பேசிக்கொண்டே இருக்கும். உடல் உணவை தேடுவதை விட அவர்களின் உள்ளம் திக்ரை தேடிக்கொண்டே இருக்கும். அவர்களது நாவும் திக்ர் செய்யும்; அவர்களின் உள்ளமும் திக்ரு செய்யும். அதுதான் முழுமையான திக்ர். அப்போதுதான் அவர்களை அவர்களின் ரப்பு உயர்ந்த வானலோக கூட்டத்திடம் நினைவு கூர்ந்து பேசி புகழ்ந்து அவர்களின் பாவமன்னிப்புக்கு அவர்களை சாட்சியாக்குகின்றான். அவர்களின் வருகைக்காக அவன் காத்துக் கொண்டு இருப்பான். அவர்கள் உலகாசையை விட்டு விலகி அவன் பக்கம் நெருங்க நெருங்க அவன் அவர்களிடம் அதிகமாக நெருங்கி வருகிறான். தனது வானவர் ரூஹுல் குதுஸ் இடம் அவர்களைப் பற்றி நான் அவர்களை நேசிக்கின்றேன், எனவே நீரும் நேசிப்பீராக! என்று ஆணை பிறப்பிக்கின்றான். பிறகு அவர் மற்ற மலக்குகளிடம் அதை கூறி அவர்களும் அவர்களை நேசிக்க தூண்டுகிறார்.

ஆகா!! என்னே பாக்கியம்!! அகிலத்தின் அதிபதி, நிகரற்ற இறைவன், அகிலங்களின் இரட்சகன் தேடுகின்ற உள்ளம் ஒருவருக்கு கிடைக்கப் பெற்றால், வேறு என்ன வேண்டும்!!!

இதை உணர்ந்து புரிந்ததால்தான் நமது நபி ﷺ அவர்கள் தனது ரப்பிடம் உலக வாழ்க்கையை வேண்டி பிரார்த்தனை செய்தது இல்லை. உமர் அவர்கள் ஒரு நாள் நபி அவர்கள் ஈத்தம் பாயில் படுத்து அதன் கோரைகள் அவர்களின் பொன் மேனியில் வடுவுகளை ஏற்படுத்தி இருந்ததை பார்த்து விட்டு, அல்லாஹ்வின் தூதரே! உங்கள் ரப்பிடம் துஆ கேட்க மாட்டீர்களா? அல்லாஹ் உங்களுக்கு உலக வாழ்க்கையில் வசதியை கொடுப்பானே! ரோமர்கள்

எல்லாம் வசதியாக வாழ்கிறார்களே என்று கூறியதுபோது நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உமரே! அவர்களுக்கு உலக வாழ்கையில்

சுகம் கொடுக்கப்பட்டுவிட்டது. அது நமக்கு மறுமைக்காக தாமப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியே வாழ்ந்து இவ்வுலகை துறந்தார் நமது உயிரினும் மேலான நமது நபி ﷺ அவர்கள்!!

இரண்டு நாளைக்கு ஒருநாள்தான் உண்ண உணவு! ஒரு நாளில் இரு வேலைகளில் ஒரு வேலைதான் உண்ண உணவு! உடுத்த முழுமையான ஆடை இல்லை. வசிக்க பளிங்கு வீடுகள் இல்லை. பல அறைகள் கொண்ட, பல பகுதிகள் உடைய, தோட்டங்கள் உடைய வீடு இல்லை. உயர்ந்த சுவர் உடைய மாளிகை இல்லை. வாயில் காப்பார் இல்லை. மிருதுவான, மென்மையான படுக்கைகள் இல்லை. விலை உயர்ந்த ஆபரணங்கள் இல்லை. வகை வகையான ஆடைகள் இல்லை. ஆடைகள் வைப்பதற்கு அலமாரிகள் இல்லை. தொழவும் தூங்கவும் ஒரே அறைதான். எளிமையான பணிவான பகட்டில்லா வாழ்க்கை!! உலகம் தனக்குமுன் குவிந்தும் மறுமையை தேர்ந்தெடுத்த அந்த தூதரின் எச்சரிக்கையை கொஞ்சம் கவனிப்போம், பயப்படுவோம். இரண்டு பள்ளத்தாக்குகள் நிறைய செல்வம் இருந்தாலும் மூன்றாவதை இந்த உள்ளம் ஆசைப்படும் என்றால் இந்த ஆசை எவ்வளவு கேவலமானது.... எவ்வளவு மோசமானது..... எவ்வளவு கீழ்த்தரமானது..... இதற்கு முடிவில்லையா? ஏன் இல்லை! இருக்கிறது.... ஆம் அதுதான் அவன் ஒரு நாள் மண்ணறையில் வைக்கப்படும் நாள்.... அந்த நாளில் அவனது வாயையும் வயிற்றையும் மண் நிரப்பி விடும்.

அல்லாஹ் பாதுகாப்பானாக!

உள்ளத்தை அவனிடம், அவனது வணக்க வழிபாட்டில் பறிகொடுத்த நல்லோரில் என்னையும் உங்களையும் அவன் ஆக்குவானாக! அவனையும் அவனது வணக்க வழிபாடுகளையும் சொர்க்கத்தையும் ஆசைப்பட்ட சிறந்தோரில் என்னையும் உங்களையும் அவன் ஆக்குவானாக! அந்த நல்லாசைக்கு ஏற்ப அமல்களில் அதிகம்

முயற்சி செய்து முன்னேறிய வணக்கசாலிகளில் என்னையும் உங்களையும் அவன் ஆக்குவானாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 9

மன நிறைவு கொள்வோம், உலக மோகத்தை தவிர்ப்போம், உலகத்தைவிட மறுமைக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

நாம் எவ்வளவு காலம் இந்த உலகத்தில் வாழப் போகிறோம்?! நான் இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே எத்தனை நபர்கள் இந்த உலகத்தில் நோயால், விபத்துகளால், ஆபத்துகளால், போர்களால் இன்னும் கண்ணுக்குத் தெரிந்த, கண்ணுக்கு தெரியாத காரணங்களால் இறந்தார்களோ! அல்லாஹ்தான் அறிந்தவன்.

இந்த உலகத்தில் நாம் வாழத்தான் பிறந்தோம்! உண்மைதான். ஆனால்,

நிரந்தரமாக அல்ல. இங்கு சில காலம்தான் நமக்கு வாழ்க்கை. அதற்குள் மறுமைக்காக நாம் தயார் செய்ய வேண்டியதை தயார் செய்து கொண்டு ரெடியாக இருக்க வேண்டும். நம்மை மறுமைக்கு அழைத்துபோக வருபவர் சொல்லிவிட்டு வரமாட்டார். அவர் திடீர் விருந்தாளியாக திடீர் என்றுதான் வருவாராம்.

அவர் வந்து கூப்பிட்டால் உடனடியாக நாம் போய் ஆக வேண்டுமாம். அது ஒன்வே பயணமாம். திரும்பி வர முடியாதாம். அங்கு சென்ற பின்னர் இங்குள்ள யாருடனும் கமினுகேட் செய்ய முடியாதாம்.

மேலும், இங்குள்ள எதையும் நம்முடன் எடுத்து செல்ல முடியாதாம். யாரும் அப்படி எடுத்து சென்றதாக நான் பார்க்கவில்லை. நீங்கள் பார்த்திருக்கிறீர்களா என்று எனக்கு தெரியாது.

தேசங்களை வெற்றிகொண்டு ஆட்சி செய்த சக்கரவர்த்திகள் எங்கே!

உலகமே எனக்குதான், நான்தான் பட்டத்து இளவரசன், வருங்கால மன்னன் என்று ஆட்டம் போட்ட ஏமாளி இளவரசர்கள் எங்கே!

மன்னனின் பதவிக்காக வேஷமும் கோஷமும் போட்ட மந்திரிகள் எங்கே!!

மாளிகைகளை கட்டி, பணியாட்களை சுற்றி நிற்கவைத்து பவனி வந்த சீமான்கள் எங்கே!

இந்த உலகம் அல்லாஹ் நாடிய ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேலாக ஒரு நொடி கூட தனக்குள் தங்க யாரையும் அனுமதிக்காது.

பேராசையும் பெருமையும் உடையவர்களை அது அழிக்காமல் விடாது!

பணிவும் போதுமென்ற தன்மையும் உடையவர்களை அது உயர்த்தாமல் விடாது.

விதியை நம்ப வேண்டும், முயற்சி செய்ய வேண்டும், கடினமாக உழைக்க வேண்டும், உண்மையாக உழைக்க வேண்டும். பிறகு எது கிடைத்ததோ அதைக் கொண்டு மன திருப்தி கொள்ள வேண்டும். ரப்புக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்ஹம்து லில்லாஹ் கூற வேண்டும்.

உடுத்த உடை, உண்ண உணவு, இருக்க சிறிதளவு ஓர் இல்லம், கடனில்லாத வாழ்க்கை, இனிமையான இல்லறம், அன்பான பிள்ளைகள், நல்ல உறவுகள், உண்மையான நட்புகள், மனத்தூய்மை நிறைந்த வணக்க வழிபாடுகள் இவற்றை மீறி இவ்வுலகில் நாம்

எதைத் தேடி அலைந்து என்ன செய்யப் போகிறோம்!

காசு காசு என்று வாழ்ந்தவன் காசால் அழிந்தான்....

பதவி பதவி என்று அலைந்தவன் பதவியால் அழிந்தான்...

இறை அன்பைத் தவிர வேறு எந்த மோகம் பிடித்து மனிதன் அலைவானோ அதுவே அவனுக்கு அழிவாக மாறிவிடும்.

நமக்கு எழுதப்பட்டது கிடைக்கும் என்ற நம்பிக்கை வேண்டும். அதை ஆகுமான முறையில் தேட முயற்சிக்க வேண்டும்.

ரப்பிடத்தில் நல்லது எதை வேண்டுமானாலும் நாம் கேட்கலாம். ஆனால், அவன் நமக்கு எதை கொடுத்தானோ அதுதான் நமக்கு நன்மை என்று நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், திருப்திபட வேண்டும்.

ரப்பை குறை சொல்வது ஷைத்தானுக்கு பிடித்த செயல். பேராசைப் படுவது ஷைத்தானுக்கு உகந்த காரியம்.

உலகத்தில் மூழ்குவதும் மறுமையை மறப்பதும் ஷைத்தான் நம்மை வழி கெடுப்பதற்கும் பாவத்தில் தள்ளுவதற்கும் போதுமானதாகும்.

வாழ்வதை அல்லாஹ்விற்காக வாழ்ந்துவிட வேண்டும், மறுமைக்காக எந்தளவு முடியுமோ நன்மைகளை செய்து கொள்ள வேண்டும்.

உலகில் வறுமை, செல்வம், சுகம், நோய், கவலை, மகிழ்சி இவை எல்லாம் மாறி மாறி வரும். ஆகவே, மாறாத மறுமைக்காக வாழ்ந்து சென்றவர்கள்தான் வெற்றியாளர்கள்!!

மறுமையை கவனித்து இந்த உலகத்தின் இன்பமும் துன்பமும் ஒன்றுமே இல்லை. அந்த மறுமையின் பேரின்பத்திற்காக நாம்பாடுபட வேண்டும். அதன் கொடிய வேதனையை நினைத்து பயப்பட வேண்டும்.

இத்தகைய வாழ்க்கைதான் இனிமையான, நிம்மதியான, திருப்தியான வாழ்க்கையாக அமையும்.

வாருங்கள் வேதம் மற்றும் நபிமொழியின் உபதேசத்திற்குள் செல்வோம்.

﴿زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوَاتِ مِنَ النِّسَاءِ وَالْبَنِينَ وَالْقَنَاطِيرِ الْمُقَنْطَرَةِ مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْأَنْعَامِ وَالْحَرْثِ ذَٰلِكَ مَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا وَاللَّهُ عِنْدَهُ حُسْنُ الْمَآبِ (١٤) وَاللَّهُ بَصِيرٌ بِالْعِبَادِ (١٥)﴾

பொருள் : பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளிகளின் பெரும் குவியல்கள், உயர்ந்த குதிரைகள் (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகள், பயிர் நிலங்கள் ஆகியவற்றை விரும்புவது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. எனினும் இவை (அனைத்தும் நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) இன்பங்களே! அல்லாஹ்விடத்திலோ (நிலையான) அழகிய தங்குமிடமுண்டு. (நபியே! மனிதர்களை நோக்கி) நீர் கூறுவீராக: “இவற்றைவிட மேலானதொன்றை நான் உங்களுக்கு அறிவிக்கவா? (இறைவனுக்குப்) பயந்து நடக்கிறவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடத்தில் சொர்க்கங்கள் உண்டு. அவற்றில் நீரருவிகள் (தொடர்ந்து) ஓடிக்கொண்டேயிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவார்கள். (அங்கு அவர்களுக்குப்) பரிசுத்தமான மனைவிகளும் உண்டு. இன்னும், அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் கிடைக்கும். அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குபவன் ஆவான். (அல்குர்ஆன் 3 : 14,15)

عَنْ الْمُسْتَوْرِدِ أَخِي بَنِي فِهْرٍ ﷺ قال سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ مَا مَثَلُ الدُّنْيَا فِي الْآخِرَةِ إِلَّا مَثَلُ مَا يَجْعَلُ أَحَدُكُمْ إِصْبَعَهُ فِي الْيَمِّ فَلْيَنْظُرْ بِمَ

يَرْجِعُ رواه ابن ماجة

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: மறுமையை கவனித்து இந்த உலகத்தின் உதாரணம் எப்படி என்றால் உங்களில் ஒருவர் தனது விரலை கடலில் நுழைத்துவிட்டு அது எவ்வளவு தண்ணீருடன் திரும்ப வரும் என்று பார்க்கட்டும். (அவ்வளவுதான் இந்த உலகம்.)[24]

عَنْ زَيْد بْن ثَابِتٍ رضي الله عنه سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ مَنْ كَانَتْ الدُّنْيَا هَمَّهُ فَرَّقَ اللهُ عَلَيْهِ أَمْرَهُ وَجَعَلَ فَقْرَهُ بَيْنَ عَيْنَيْهِ وَلَمْ يَأْتِهِ مِنْ الدُّنْيَا إِلَّا مَا كُتِبَ لَهُ وَمَنْ كَانَتْ الْآخِرَةُ نِيَّتَهُ جَمَعَ اللهُ لَهُ أَمْرَهُ وَجَعَلَ غِنَاهُ فِي قَلْبِهِ وَأَتَتْهُ الدُّنْيَا وَهِيَ رَاغِمَةٌ رواه ابن ماجة

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: யாருடைய சதா சிந்தனையும் கவலையும் உலகமாக இருக்குமோ அவருடைய காரியங்களை அல்லாஹ் அவருக்கு பிரித்து, பரப்பி வைத்துவிடுவான். அவரின் வறுமையை அவரின் இரு கண்களுக்கு நடுவில் ஆக்கிவிடுவான். (அவர் எவ்வளவுதான் கவலைப்பட்டாலும்) அவருக்கு விதியில் எழுதப்பட்டதைத் தவிர அவருக்கு இவ்வுலகத்திலிருந்து எதுவும் கிடைக்காது. யாருடைய எண்ணம், நோக்கம் மறுமையாக இருக்குமோ அவரின் காரியங்களை அல்லாஹ் அவருக்கு ஒருங்கிணைத்து கொடுத்து விடுவான். அவருக்கு மன நிறைவை ஏற்படுத்தி விடுவான். இன்னும் உலகம், அது விரும்பவில்லை என்றாலும் அது அவருக்கு கிடைத்தே தீரும்.[25]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ قَالَ ﷺ يَقُولُ اللهُ سُبْحَانَهُ يَا ابْنَ آدَمَ تَفَرَّغْ

---

24. அறிவிப்பாளர்: அல்முஸ்தவ்ரித் رضي الله عنه , நூல்: இப்னு மாஜா, எண்: 4108, தரம்: ஸஹீஹ்
25. அறிவிப்பாளர்: சைது இப்னு ஸாபித் رضي الله عنه, நூல்: இப்னு மாஜா, எண்: 4105, தரம்: ஸஹீஹ்

لِعِبَادَتِي أَمْلَأْ صَدْرَكَ غِنًى وَأَسُدَّ فَقْرَكَ وَإِنْ لَمْ تَفْعَلْ مَلَأْتُ صَدْرَكَ شُغْلًا وَلَمْ أَسُدَّ فَقْرَكَ رواه ابن ماجة

அல்லாஹ் ஸுப்ஹானஹு கூறுவதாக நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: ஆதமின் மகனே! என்னை வணங்க நீ நேரம் ஒதிக்கிக் கொள்! உன் உள்ளத்தை செல்வத்தால், மன நிறைவினால் நான் நிரப்பி விடுவேன். உன் ஏழ்மையை நான் தீர்த்து வைத்து விடுவேன். நீ அப்படி செய்யவில்லை என்றால் உனது நெஞ்சத்தை குழப்பங்களால் நிரப்பி விடுவேன். உனது ஏழ்மையையும் நான் தீர்த்து வைக்க மாட்டேன்.[26]

படிப்பினைகள்

இது அலங்கரிக்கப்பட்ட உலகம். இதன் அலங்காரம் கலைந்தால்தான் இதன் உண்மை உருவம் தெரியவரும்!

நீ ஓர் அழகியைப் பார்த்து மயங்கினால் முடி நரைத்து, கூனி குறுகி தோல் சுருங்கி, பல் விழுந்த ஒரு கிழவியை கற்பனையில் கொண்டுவந்து பார். பிறகு, நீ பார்த்த அழகியும் சில காலம் கழித்து இப்படித்தான் மாறிவிடுவாள் என்பதை உன் சிந்தனையில் கொண்டுவா!

ஒரு மாளிகை உன்னை மயக்கினால் மன்னர்கள் கட்டி ஆண்டு, இப்போது சிதிலமடைந்து பாழடைந்து இருக்கும் அவர்களின் அரண்மனைகளை கற்பனையில் கொண்டுவா!

ஒரு புது வாகனம், புது துணி, இப்படி புது புது என்று எது உனக்கு கவர்ச்சியாக இருந்தாலும் குப்பைமேட்டில் கிடக்கும் பொருள்களை நினைத்துப் பார்! அவை அனைத்தும் ஒரு காலத்தில் புதியதாக இருந்தவைதான்.

26. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: இப்னு மாஜா, எண்: 4106, தரம்: ஸஹீஹ்!

இப்படித்தான் இந்த உலகத்தின் நிலை. மின்னும், பிறகு மறைந்துவிடும். ஜொலிக்கும், பிறகு மங்கிவிடும். ஒரு பொருள் ஆச்சரிய மூட்டும், ஆர்வமூட்டும், அபூர்வமாக இருக்கும். சிறிது நேரம் அல்லது காலம் கழித்து அதே பொருள் வெறுப்பாக மாறிவிடும். அது சடைவை ஏற்படுத்தும். ஆனால், இவற்றில் இருந்து விதிவிலக்கு ஒன்று இருக்கின்றது. அது அல்லாஹ்வை வணங்குவதுதான்..

பலருக்கு அவர்கள் ஆசையாக கட்டிய மனைவி அரக்கியாக மாறி அருவெறுப்பாக மாறி விடுகிறாள். சிலருக்கு அவர்கள் விரும்பி கட்டிய கணவன் புளித்துப்போகி வெறுப்புக்கு உரியவனாக ஆகிவிடுகிறான்.

இந்த உலகில் நட்பு, பகையாக; பகை, நட்பாக, விருப்பு, வெறுப்பாக; வெறுப்பு, நட்பாக மாறிவிடும்.

இந்த உலகில் நாம் பார்க்கும் இன்பமாக இருக்கட்டும் அல்லது துன்பமாக இருக்கட்டும். இது வெறும் மாதிரிதான். உண்மை மறுமையில் இருக்கின்றது. உண்மையான இன்பம் சொர்க்கத்திலும் உண்மையான துன்பம் நரகத்திலும் இருக்கின்றது.

முழு உலகமும் கடலின் ஒரு துளி தண்ணீருக்குத்தான் சமம் மறுமையில். அப்படி என்றால் இந்த உலகம் எவ்வளவு கேவலமானது, அற்பமானது, மதிப்பற்றது, விலை குறைந்தது என்று சிந்தித்துப் பாருங்கள்!

இப்படிப்பட்ட உலகத்திற்காகவா நமது உயிரை, நமது அறிவை, நமது நேரத்தை நாம் செலவு செய்தோம். பிறகு நாம் மரணித்தால் அதையும் பிரிந்துவிடப் போகிறோமே!! மதிப்பால் இந்த உலகம் மிக மிக அற்பமானது. மேலும் அது நமக்கு நிரந்தரமாக ஒட்டப்போவதும் இல்லை என்றால் இதை விரும்புவதும் இதற்காக வாழ்வதும் எவ்வளவு முட்டாள்தனமானது!!

ஒருவன் இரவு பகலாக கவலைப்படுவதால், தனக்கு கிடைக்குமா

கிடைக்காதா என்று ஏங்குவதால், காசு காசு என்று அலைவதால், செல்வம் செல்வம் என்று ஓயாமல் உழைப்பதால், வசதி வசதி என்று இரவு பகலாக அல்லல் படுவதால் விதியை மீறி அவன் எதையும் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள முடியுமா?

இந்த உலகம் ஒரு சகதி நிறைந்த சதுப்பு நிலம். இதற்குள் செல்ல செல்ல நம்மை உள் வாங்கிக் கொண்டே சென்றுவிடும். நாம் அழிந்து விடுவோம். இப்படி பலரை இது தனக்குள் புதைத்திருக்கின்றது, ஆசைக்காட்டி அழைத்து கொன்று இருக்கின்றது. இதில் ஏமார்ந்தவர்கள்தான் அதிகம். சுதாரித்தவர்கள் மிகக் குறைவு.

மறுமையை நினைத்து கவலைப்படுவதில் மனதுக்கு ஓர் ஆறுதலும் சுகமும் உண்டு. சொர்க்கத்தை நினைத்து ஏங்குவதில் மனதில் தெளிவும், ஒளியும் உண்டாகின்றன. மறுமைக்காக வாழ்பவர்களின் தேவைகளை அல்லாஹ் அவன் புறத்திலிருந்து நிறைவேற்றி வைக்கின்றான். அவர்களது உலகம் மிக சுருக்கமாக இருக்கும். ஆனால் நிறைவாக இருக்கும். எல்லா நிலைகளிலும் அல்ஹம்து லில்லாஹ் என்று கூறிக்கொண்டே இருப்பார்கள் பசியில் தூங்கினாலும் சரி; வறுமையில் வாடினாலும் சரி; நோய் நொடியில் துன்பப்பட்டாலும் சரி. இவர்கள்தான் இறைநேசர்கள் ஆவார்கள்.

உலகத்தின் எந்தவித ஏற்றத்தாழ்வும் இவர்களின் இறை அன்பில் மாற்றத்தை உண்டாக்காது. சோகத்தில் அல்லாஹ்வை கோபிக்க மாட்டார்கள். துன்பத்தில் விதியை குறைக்கூற மாட்டார்கள். சிரமங்களில் அல்லாஹ்வின் மீது வருத்தப்பட மாட்டார்கள். அவ்வாறே செல்வமும் ஆட்சி அதிகாரமும் உலக வசதிகளும் இவர்களை அல்லாஹ்வை விட்டு தூரமாக்காது, அல்லாஹ்வை மறக்க வைக்காது, வணக்க வழிபாட்டில் குறைவு செய்ய வைக்காது. நீங்கள் இதை குர்ஆனில் படிக்க வேண்டும் என்றால் நபிமார்கள் தாவூத், சுலைமான், அய்யூப், மற்றும் நல்ல மன்னர்] துல் கரனைன் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுவதை

படித்துப் பாருங்கள்!

அல்லாஹ்வை வணங்குவதற்காக நாம் படைக்கப்பட்டிருக்கின்றோம். ஆகவே, செல்வந்தனின் செல்வம் அவனை அல்லாஹ்வின் வணக்கத்திலிருந்து திசை திருப்பி விடக்கூடாது. ஓர் ஏழையின் ஏழ்மை அவனை இறைவணக்கத்தை விட்டும் திசை திருப்பி விடக்கூடாது. ஒரு மன்னனின் ஆட்சி அவனை இபாதத்திலிருந்து திசை திருப்பி விடக்கூடாது. இப்படி இவ்வுலகில் மனிதன் எந்த நிலையில் இருந்தாலும் அல்லாஹ்வை வணங்குவதை விட்டும் அவன் ஒரு நொடி கூட திசை திரும்பி விடக்கூடாது.

இதை புரிந்தவர்கள், இதன் படி வாழ்ந்தவர்கள், இன்னும் வாழ்கின்றவர்கள் உண்மையில் வெற்றியாளர்கள். அவர்களின் காரியங்களை அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

ஆகவே, அல்லாஹ்வை வணங்குவதை குறிக்கோளாக வைத்து; மறுமையின் வெற்றியை இலட்சியமாக வைத்து; சொர்க்கத்தை இலக்காக வைத்து; அல்லாஹ்வின் திருப்தியை நமது தேடலாகவும் நோக்கமாகவும் வைத்து வாழ்வோமாக!!

அல்லாஹ் எண்ணையும் உங்களையும் மறுமையின் பிள்ளைகளில் ஆக்குவானாக! உலகத்தின் பிள்ளைகளில் ஆக்காமல் இருப்பானாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 10

தாயைப் பேணுவோம், பெற்றோரை கவனிப்போம்!

பெற்றோர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும். அவர்களிடம் அன்பாகவும், மரியாதையாகவும் பேசவேண்டும். நமது பணிவிடையாலும் அன்பான பேச்சாலும் அவர்களின் உள்ளங்கள் குளிரவேண்டும். அவர்கள் விஷயத்தில் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு பணிவிடை செய்வதிலும் மருத்துவம் பார்ப்பதிலும் சடைவடைவது கூடாது. மக்கள் எல்லோரையும்விட அவர்களுக்குத்தான் முக்கியத்துவம் தர வேண்டும். அவர்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாம் இந்த உலகத்தை பார்த்ததே நமது பெற்றோர்கள் மூலமாகத்தான். அவர்களைத்தான் அல்லாஹ் நமது பிறப்புக்கு காரணமாக தேர்ந்தெடுத்தான்.

சிலர் கேட்பார்கள்...

என் தகப்பன் எனக்கு எனக்கு என்ன செய்தார்? அவர் எனக்கு வாழ்நாளில் எதையும் செய்ததில்லை. நான் ஏன் அவருக்கு என் வருமானத்தில் இருந்து உதவ வேண்டும்? இது சிலரின் கேள்வி!

சிலருக்கு படிக்காத அல்லது ஏழ்மையான அல்லது வயதாகிவிட்ட

தாய் பிடிக்காது. ஏன் என்றால் அது அப்படித்தான் என்பார்கள்.

படித்துவிட்டு பணம் பதவி வந்துவிட்டால் அவ்வளவுதான் சாதாரண தாய் தந்தையுடன் அமர்வதையே தனது தரக்குறைவாக பார்ப்பவர்களும் சமுதாயத்தில் இருக்கின்றார்கள்.

உண்மையில் சொல்லப்போனால் இந்த உலகத்தில் தாய் தந்தைக்கு சமமான செல்வம் எதுவுமில்லை.

குர்ஆனில் அல்லாஹ் தனது வணக்க வழிபாட்டை வலியுறுத்தி கூறுகின்ற பெரும்பாலான இடங்களில் பெற்றோரை அவன் கூறாமல் இருப்பதில்லை.

மார்க்கத்தில் மிக மிக உயர்வாக பயன்படுத்தப்படுகின்ற இஹ்சான் என்ற பதத்தைத்தான் பெற்றோர் விஷயத்தில் நமக்கு அல்லாஹ் பயன்படுத்துகின்றான்.

கருணை, அன்பு, உதவி, பணிவு, இறக்கம், ஈகை, ஒரு காரியத்தை மனத்தூய்மையோடு மறுமையின் கூலியை மட்டும் எதிர்பார்த்து செய்வது, அழகிய உயர் பண்புகளை கடைப்பிடிப்பது, பிரதிபலன் பாராமல் உதவுவது, நன்மை செய்வது, என பல விளக்கங்களை உடைய விசாலமான பதம்தான் இஹ்சான் என்பது.

ஆகவே, நாம் பெற்றோருக்கு என்ன உதவி உபகாரம் செய்தாலும் அவை அனைத்தும் அவர்கள் நம்மை பெற்றெடுத்து வளர்த்ததற்கு சமமாகாது. சுருக்கமாக சொல்வதென்றால் நாம் அவர்களுக்கு அடிமைகள், அவர்கள் நமக்கு எஜமானர்கள். அப்படித்தான் நாம் அவர்களோடு மரியாதையை பேண வேண்டும். நமது சம்பாத்தியத்தில் அவர்களுக்கு போக மிஞ்சியதுதான் நமக்கு.

பெற்றோர் விஷயத்தில் எவ்வளவு நாம் எழுதினாலும் அது குறைவுதான்.

சரி, இனி வேத வசனங்களுக்கும் தூதரின் பொன்மொழிகளையும்

பார்ப்போம்!

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حُسْنًا﴾

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

பொருள் : தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். (அல்குர்ஆன் 31 : 14)

﴿وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ﴾

பொருள் : தனது தாய் தந்தைக்கு நன்மை செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து(க் கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண்டலைந்தாள். (பிறந்த) பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து; உன் தாய் தந்தைக்கும் நன்றி செலுத்து. முடிவில் நீ நம்மிடமே வந்து சேர வேண்டியதிருக்கிறது. (அல்குர்ஆன் 31 : 14)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ جَاءَ رَجُلٌ إِلَىٰ رَسُولِ اللّٰهِ ﷺ فَقَالَ يَا رَسُولَ اللّٰهِ مَنْ أَحَقُّ بِحُسْنِ صَحَابَتِي قَالَ أُمُّكَ قَالَ ثُمَّ مَنْ قَالَ أُمُّكَ قَالَ ثُمَّ مَنْ قَالَ أُمُّكَ قَالَ ثُمَّ مَنْ قَالَ ثُمَّ أَبُوكَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் ஒருவர் வந்து, ‘அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் தோழமைக் கொண்டு, சேர்ந்து வாழ்வதற்கு மிகவும் தகுதியானவர், உரிமை உள்ளவர் யார்?’ என்று

கேட்டார். நபி ﷺ அவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்று கேட்டார். நபி ﷺ அவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். அப்போது நபி ﷺ அவர்கள், 'பிறகு, உன் தந்தை' என்றார்கள்.[27]

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عَمْرٍو رضي الله عنه قَالَ قَالَ رَجُلٌ لِلنَّبِيِّ ﷺ أُجَاهِدُ قَالَ لَكَ أَبَوَانِ قَالَ نَعَمْ قَالَ فَفِيهِمَا فَجَاهِدْ

ஒருவர் நபி ﷺ அவர்களிடம், 'நான் (இந்த) போரில் கலந்து கொள்ளட்டுமா?' என்று கேட்டார். நபி ﷺ அவர்கள், 'உனக்குத் தாய் தந்தை இருக்கின்றனரா?' என்று கேட்டார்கள். அவர், 'ஆம் (இருக்கிறார்கள்)' என்று கூறினார். நபி ﷺ அவர்கள், '(அவ்வாறாயின் திரும்பிச் சென்று) அவர்களுக்கு பணிவிடை செய்து அதில் ஜிஹாதின் நன்மையைப் பெற்றுக் கொள்' என்றார்கள்.[28]

عَنِ الْمُغِيرَةِ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ إِنَّ اللّٰهَ حَرَّمَ عَلَيْكُمْ عُقُوقَ الأُمَّهَاتِ وَمَنْعَ وَهَاتِ وَوَأْدَ الْبَنَاتِ وَكَرِهَ لَكُمْ قِيلَ وَقَالَ وَكَثْرَةَ السُّؤَالِ وَإِضَاعَةَ الْمَالِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: தாய்மார்களைப் புண்படுத்தவது, (மற்றவர்களின் பொருளை அல்லது உரிமையை) தர மறுப்பது, (மற்றவரின் பொருளை அல்லது உரிமையை தனக்குத்) தருமாறு கேட்பது, பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பது ஆகியவற்றை அல்லாஹ் தடை செய்துள்ளான். மேலும், (தேவையின்றி) அதிகமாகப் பேசுவது, அதிகமாகக் (கேள்வி, அல்லது யாசகம்) கேட்பது, செல்வத்தை வீணாக்குவது ஆகியவற்றை அல்லாஹ்

---

27. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா رضي الله عنه, நூல் : புகாரி, எண்: 5971
28. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் رضي الله عنه , நூல்: புகாரி, எண்: 5972

வெறுத்துள்ளான்.[29]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ مَنْ سَرَّهُ أَنْ يُبْسَطَ لَهُ فِي رِزْقِهِ وَأَنْ يُنْسَأَ لَهُ فِي أَثَرِهِ فَلْيَصِلْ رَحِمَهُ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: தம் வாழ்வாதாரம் (ரிஸ்க்) விசாலமாக்கப்படுவதும் வாழ்நாள் நீட்டிக்கப்படுவதும் யாருக்கு மகிழ்ச்சி அளிக்குமோ அவர் தம் உறவைப் பேணி வாழட்டும்.[30]

படிப்பினைகள்

தாய் தந்தை இருவரும் நமக்கு மிக மிக வேண்டியவர்கள். கடமையான இறைவணக்கங்களுக்கு பிறகு அவர்களைவிட இவ்வுலகில் பெரிய ஒன்று இல்லவே இல்லை. உபரியான வணக்க வழிபாடுகளைவிட அவர்களின் பணிவிடைக்கு நாம் முக்கியத்துவம் தர வேண்டும். உபரியான வணக்க வழிபாட்டுக்கு செல்வதாக இருந்தாலும் அவர்களை திருப்தி படுத்தி, அனுமதி பெற்றுதான் நாம் செல்ல வேண்டும்.

பெற்றோரிடம் பழகுவது, பேசுவது, அவர்களுக்கு பணிவிடை செய்வது, அவர்களை சிரிக்க வைப்பது, அவர்கள் மனம் குளிரும்படி நடந்து கொள்வது, அவர்களுக்கு உதவுவது, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது, அவர்களுடன் அதிக நேரம் செலவிடுவது இப்படி இவை அனைத்தும் அல்லாஹ்விற்கு மிக விருப்பமான செயலாகும். இவையும் அல்லாஹ்விற்கு செய்கின்ற இபாதத்தாகத்தான் அமையும்.

பெற்றோரை புறக்கணிப்பது, அவர்களை ஒதுக்குவது, அலட்சியப்படுத்துவது, அவர்களைவிட மற்றவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது ஒரு முஸ்லிமுக்கு அழகல்ல.

29. அறிவிப்பாளர் : முஃகீரா இப்னு ஷுஅபா ﵁, நூல் : புகாரி, எண் : 5975
30. அறிவிப்பாளர் அபூ ஹுரைரா ﵁, நூல் : புகாரி, எண்: 5985

தந்தையைவிட தாய் மிகவும் மென்மையானவள். அதுவும் அவள் வயதானவளாக இருக்கும் போதும் அன்புக்கும் பரிவுக்கும் மிகவும் தேவை உள்ளவளாக இருப்பாள். தனது குழந்தையின் மீது சிறுவயதிலிருந்தே மிகவும் பாசத்தையும் அன்பையும் பொழிந்து, எல்லா இன்னல்களையும் சகித்துக் கொண்டு அவள் வளர்க்கிறாள். ஆகவே, அந்த குழந்தை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி பெரியவனாக ஆனவுடன் தன் தாயை அவமரியாதை செய்வது, உதாசீனப்படுத்துவது தாயின் மனதை மிகவும் காயப்படுத்தும். ஆகவே, அதை அல்லாஹ்வும் மிக வெறுக்கின்றான்.

நாம் நமது பெற்றோரின் நன்மைக்காக, ஆரோக்கியத்திற்காக செலவுகின்ற செலவுகள் எல்லாம் நமக்கு அல்லாஹ்விடம் மிகந்த நன்மையை தரக்கூடியவை ஆகும். அல்லாஹு தஆலா நமக்கு அவற்றுக்காக மாபெரும் பரகத்துகளை கண்டிப்பாக இம்மை மறுமை என ஈருலகிலும் தருவான்.

தாயை அல்லது தந்தையை இழந்தவருக்குத்தான் தெரியும் தாய் தந்தையின் அருமை.

நமது பசிக்கு அவர்கள் உணவை ஏற்பாடு செய்தார்கள். நமது உடலுக்கு அவர்கள் உடையை ஏற்பாடு செய்தார்கள். நாம் உறங்குவதற்கும் வெயில், குளிரிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும் நமக்கு ஓர் இருப்பிடத்தை ஏறப்டுத்திக் கொடுத்தார்கள்.

நமது படிப்புக்கு அவர்கள் செலவு செய்தார்கள். இவ்வுலகில் நல்லது கெட்டது எது என்று அவர்கள் நமக்கு போதித்தார்கள். நாம் நோயுற்றபோது நமக்கு மருத்துவம் பார்த்தார்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நமக்கு வழிகாட்டினார்கள்.

நமது சிறுவயதில் அவர்களுக்கு தொந்தரவு தருவது நாம் பெரியர்களாகிய பின்னர் அவர்களை மறப்பது அல்லது புறக்கணிப்பது

பாவம், பெரிய பாவம், மகா பெரிய பாவம்.!!!

பெற்றோர் குறித்து குர்ஆன் சுன்னாவில் வந்துள்ள வழிகாட்டல்களை அறிந்து அவற்றை வாழ்க்கையில் பின்பற்றி வாழ்வோமாக! ஆமீன்! அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 11

நிலையான தர்மம்

நமது வாழ்க்கை நிரந்தர மற்றது, தற்காலிகமானது, இவ்வுலகில் வரும்போதே இங்கிருந்து போவதற்கான நாள் குறிக்கப்பட்டுதான் வருகிறோம்.

நாம் எதையும் நம்மோடு கொண்டுவருவதில்லை. உடலில் உடை இருப்பதில்லை. நமக்கு என்று உரிமையான, சொந்தமான எதுவும் இவ்வுலகில் இருக்காது அப்போது.

பிறகு, நாம் இவ்வுலகில் வாழும்போது நம்மில் சிலர் செல்வந்தர்களாக, சிலர் ஏழைகளாக வாழ்கிறார்கள். மனித அறிவுக்கும் திறமைக்கும் செல்வத்தோடு எந்த தொடர்பும் இல்லை. அல்லாஹ்வின் விதிப்படி எல்லாம் நடக்கிறது.

ஒரு முஃமின் இப்படித்தான் நம்பிக்கை கொள்வார். அவரை இந்த நம்பிக்கையிலிருந்து எதுவும் மாற்றாது, அல்லாஹ் நாடினால் தவிர.

நாம், தொழுவது, இன்ன பிற அமல்களை செய்வது எல்லாம் அந்த மறுமை வாழ்கையில் நாம் சொர்க்க வாழ்க்கையை அடைய வேண்டும் என்பதற்காகத்தான்.

எவ்வளவுதான் நாம் அமல்கள் செய்தாலும் அவை, நமக்கு

அல்லாஹ் கொடுக்கக்கூடிய சொர்க்க இன்பங்களுக்கு முன்னால் ஒன்றுமே இல்லை. அங்கு சென்ற பின்னர்தான் இன்னும் அமல்கள் செய்திருக்கலாமே, இன்னும், இன்னும் என்று ஏங்குவோம்!!

ஆகவேதான் மார்க்கம் நமக்கு ஒரு வாசலை திறந்து வைத்துள்ளது. அதாவது, நீ வாழ்நாளில் செய்த அமல்கள் போக, நீ இறந்த பின்னரும் உனக்கு அமல்கள் வேண்டுமா? உனக்கு நன்மைகள் முடிவில்லாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்க வேண்டுமா?

அப்படி என்றால் சில நிலையான தர்மங்களை - ஸதகா ஜாரியாவை விட்டுவிட்டு செல்! அதன் நன்மை உனக்கு உலக முடிவு நாள் வரை வந்து கொண்டே இருக்கும், உனது ஏடுகளில் நீ இறந்த பின்னரும் உனக்கு நன்மைகள் பதியப்பட்டுக் கொண்டே இருக்கும்.

அல்லாஹ் உனக்கு கொடுத்த அறிவு இன்னும் செல்வத்தைக் கொண்டு அந்த ஸதகா ஜாரியவை விரைவாக செய்து வைத்துக் கொள்! அது உனது கப்ரில், உனது மஹ்ஷரில், உனது தராசில் கண்டிப்பாக உனக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

மக்கள் எல்லாம் ஒரே ஒரு நன்மைக்காக இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருக்கும்போது நீ எதிர்பார்க்காத அளவு உனக்கு அங்கே நன்மைகளின் மலைகள் உனது தராசில் வைக்கப்படுவதற்காக இருக்கும். ஆம், அதுதான் ஸதகா ஜாரிய, நீ இந்த உலகத்தில் உனது மறுமைக்காக விட்டுவிட்டு சென்ற நல்ல காரியம் - நிரந்தரமான தர்மம் ஆகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ﴾

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் (மெய்யாகவே)

அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் (மறுமை என்னும்) நாளைய தினத்திற்காக, தான் எதைத் தயார்படுத்தி வைக்கிறான் என்பதைக் கவனித்து கொள்ளட்டும்.

(அல்குர்ஆன் 59 : 18)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ، قَالَ إِذَا مَاتَ الْإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلَّا مِنْ ثَلَاثَةٍ إِلَّا مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ.

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதன் இறந்துவிட்டால் அவனை விட்டும் அவனுடைய அமல்கள் முடிவடைந்து விடும். ஆனால், மூன்று அமல்களைத் தவிர. ஸதகா ஜாரியா - தொடர்ந்து வருகின்ற நிலையான தர்மம். அல்லது பிறர் பலன் பெறுகின்ற கலவி. அல்லது ஸலிஹான - நல்லமல் செய்கின்ற பிள்ளைகள். அந்த பிள்ளைகள் அவருக்காக துஆ கேட்பார்கள்.[31]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ مِمَّا يَلْحَقُ الْمُؤْمِنَ مِنْ عَمَلِهِ وَحَسَنَاتِهِ بَعْدَ مَوْتِهِ عِلْمًا عَلَّمَهُ وَنَشَرَهُ وَوَلَدًا صَالِحًا تَرَكَهُ وَمُصْحَفًا وَرَّثَهُ أَوْ مَسْجِدًا بَنَاهُ أَوْ بَيْتًا لِابْنِ السَّبِيلِ بَنَاهُ أَوْ نَهْرًا أَجْرَاهُ أَوْ صَدَقَةً أَخْرَجَهَا مِنْ مَالِهِ فِي صِحَّتِهِ وَحَيَاتِهِ يَلْحَقُهُ مِنْ بَعْدِ مَوْتِهِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக முஃமின் - நம்பிக்கையாளர் இறந்த பின்னர் அவருடைய அமல் இன்னும் நன்மைகளில் அவருக்கு சென்று சேரக்கூடியவைகள் வருமாறு: அவர் பிறருக்கு கற்பித்த, மக்களுக்கு மத்தியில் பரப்பிய கல்வி; இன்னும், அவர் விட்டுச்சென்ற ஸாலிஹான பிள்ளை; இன்னும்,

---

31. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: முஸ்லிம், எண்: 1631.

அவர் ஒருவருக்கு சொந்தமாக்கிக் கொடுத்த குர்ஆன் பிரதி; அல்லது, அவர் கட்டிக்கொடுத்த மஸ்ஜித்; அல்லது, வழிப்போக்கருக்காக அவர் கட்டிய இல்லம் - சத்திரம்; அல்லது அவர் ஓடவைத்த ஆறு; அல்லது தனது செல்வத்திலிருந்து தனது வாழ்நாளில் அவர் செய்த தர்மம். இவற்றின் நன்மை அவருக்கு அவரின் மரணத்திற்கு பின்னரும் சென்று சேரும்.[32]

படிப்பினைகள்

ஒவ்வரு நாளும் நாம் மறுமையை நோக்கி நெருங்கி கொண்டே இருக்கின்றோம். ஒரு நாள் வரும். அது நமது இறுதி நாளாக இருக்கும். அந்த நாள் நமது ஒரு (Today) இன்றையா நாளுக்கு (Tomorrow) நாளைய நாளாக இருக்கும்.

இதுதான் உண்மை, இப்படித்தான் நடக்கப் போகிறது, இதை நாம் உணர்ந்தாலும் சரி, உணர வில்லை என்றாலும் சரி.

இங்கு நாம் இருப்பதை விட மறுமையில் இருக்கப் போவது கணக்கில் அடங்காத காலம். மறுமை வாழ்க்கைக்கு முடிவில்லை, எல்லை இல்லை. அங்கு மரணம் இல்லை.

அங்கு அமல்களை வைத்துதான் மனிதன் வெற்றி பெற முடியும். அந்த அமல்களை இவ்வுலகில் அதிகம் அதிகம் செய்து கொண்டவர்தான் மாபெரும் வெற்றியாளர், நற்பாக்கிய சாலி.

அந்த அமல்களை நாம் வாழ்நாளில் செய்து கொண்டே இருக்க வேண்டும். இன்னும் நமது வாழ்நாளுக்கு பிறகு நமக்கு நன்மைகள் தொடர்ந்து வந்து சேரும்படியான அமல்களை செய்துவிட்டு மரணிக்க வேண்டும்.

இவ்வுலகில் நாம் மிக கவனமா செல்வத்தை சேகரிக்கின்றோம். அதை வளர்ச்சி அடைய செய்கின்றோம். சொத்துக்கு மேல் சொத்து

32. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: இப்னு மாஜா, எண்: 242 , தரம்: ஹசன் - அல்பானி

வாங்குகின்றோம். இங்கு அங்கு என்று எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் நமக்கு ஒரு சொத்து, இடம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

பிறகு, நமது வயோதிகத்தில் நமக்கு வருமானம் வரவேண்டும் என்று பல சொத்துகளை வாங்கி குவிக்கின்றோம். பிறகு, நமது பிள்ளைகளுக்கு, சந்ததிகளுக்கு உதவ வேண்டும் என்று பல சொத்துகளை வாங்கி பத்திரப்படுத்துகின்றோம்.

அல்லாஹ் கொடுக்க கொடுக்க அதில் உலகத்தை மட்டுமே தேடிக்கொண்டே செல்கிறோம், உலகத்தை பெருக்கிக்கொண்டே போகிறோம். இவற்றில் நமது மரணத்திற்கு பின்னர் நமக்கு எது வந்து சேரும் என்று சிந்தித்தோமா?

நமது பிள்ளைகள் நமக்கு நமது மரணத்திற்கு பின்னர் என்ன செய்வார்கள் என்று யோசித்தோமா? வெகுவிரைவில் மறந்துவிடுவார்கள், அல்லாஹ் நாடிய நல்லப் பிள்ளைகளைத் தவிர. பல பிள்ளைகளுக்கு தந்தைக்கு எப்படி ஜனாஸா தொழ வேண்டும் என்பதும் அதில் என்ன துஆ வேண்டும் என்பதும் தெரியாது என்பது யதார்த்த உண்மையாகும்.

அல்லாஹ் கொடுத்த செல்வத்தில் நமது மரணத்திற்கு பின்னர் நமக்கு நன்மைகள் வந்து சேரும்படி சில நன்மைகளை கண்டிப்பாக செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி செய்தோமா? இந்த செல்வத்தில் அல்லாஹ்விற்கு நாம் எவ்வளவு திருப்பி கொடுத்தோம்? அதை மறுமையில் பன்மடங்காக பெற்றுக் கொள்வதற்காக. அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக என்ன செய்தோம்? அதன் நன்மைகள் நம்மை மறுமையில் காப்பாற்றுவதற்காக. ஏழை எளிவர்களுக்காக என்ன தர்மத்தை நாம் செய்து வைத்தோம்? அதன் புண்ணியங்கள் நம்மை மறுமையில் கரை சேர்பதற்காக.

விலையுர்ந்த வாகனங்கள், சொகுசான பங்களாக்கள், ஆடம்பரமான

ஒய்வு இல்லங்கள், விலை மதிப்புமிக்க அணிகலன்கள் என்று இந்த செல்வத்தை அழித்துக் கொண்டே செல்கிறோமே! திடீர் என்று இறந்துவிட்டால்? நமது தொழுகை, இன்னும் பிற அமல்களை எல்லாம் முற்றிலும் சரியாகத்தான் நிறைவேற்றி இருக்கோமா? என்ன துணிவில் இருக்கின்றோம்? நாம் செய்யாத நன்மைகள்தான் எத்தனை? நாம் செய்த பாவங்கள்தான் எத்தனை?

இப்படிப்பட்ட நிலையில் நமது மறுமைக்காக நாம் வாழும்போதும் முற்கூட்டி அமல்களை அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும். வாழ்ந்த பின்னர் நமக்கு நன்மை தொடந்து வர வேண்டும் என்பதற்காக நிலையான தர்மங்களை விட்டுவிட்டு செல்ல வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்.

நாம் சேர்த்த சொத்தில் மூன்றி ஒன்றைக் கொண்டு நமது மறுமையை செழிப்பாக்கிவிட்டு இங்கிருந்து செல்ல வேண்டும். அதை முற்கூட்டியே செய்துவிட வேண்டும். பிள்ளைகள், மனைவ,கணவன் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. காசாசை யாரை விட்டது!?

சிலர் நினைக்கின்றார்கள், என் வாரிசுகள் கத்தம் ஓதுவார்கள், பாத்திஹா ஓதுவார்கள். அது வந்து சேரும் என்று.

அதெல்லாம் ஒன்றும் புண்ணியமும் இல்லை, நன்மையும் இல்லை. மாறாக அவை அனைத்தும் அனாச்சாரமாகும்.

சரி, என்ன செய்யலாம் என்றால் நமக்கு நபி ﷺ அவர்கள் அழகாக வழிகாட்டி இருக்கின்றார்கள். மேற்கூறபப்ட்ட இரண்டு ஹதீஸ்களையும் மீண்டும் மீண்டும் படியுங்கள்!

உங்கள் செல்வத்தால் நீங்கள் பெற்ற பலனைவிட மற்றவர்கள் பெற்ற பலன் அதிகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். நாம் அனுபவித்தது அழிந்துவிட்டது. நம் மூலம் பிறர் அனுபவித்தது நமக்கு மறுமையில் நன்மையாக வர இருக்கின்றது, அது அழியாதது.

இதைத்தான் பின் வரும் நபிமொழி நமக்கு புரிய வைக்கிறது.

عَنْ عَائِشَةَ ﷺ أَنَّهُمْ ذَبَحُوا شَاةً فَقَالَ النَّبِيُّ ﷺ مَا بَقِيَ مِنْهَا قَالَتْ مَا بَقِيَ مِنْهَا إِلاَّ كَتِفُهَا قَالَ بَقِيَ كُلُّهَا غَيْرَ كَتِفِهَا

நிச்சயமாக அவர்கள் (-நபியவர்களின் குடும்பத்தார்கள்) ஆடு ஒன்றை அறுத்தார்கள். (அவற்றில் எல்லாவற்றையும் தர்மம் செய்துவிட்டு ஒரு சப்பையை மட்டும் வீட்டுக்காக வைத்துக் கொண்டார்கள்.) நபி அவர்கள் கேட்டார்கள், அதிலிருந்து எது மீதம் இருக்கிறது என்று. ஆயிஷா கூறினார்கள், அதன் சப்பையைத் தவிர எதுவும் மீதமாக இல்லை என்று. நபி அவர்கள் அதற்கு பதில் கூறினார்கள், அதன் சப்பையைத் தவிர மற்ற எல்லாம் (நம்க்கு) மீதமாக இருக்கின்றன.[33]

நமது முன்னோர் மஸ்ஜிதுகள், மத்ரசாக்கள், கப்ருஸ்த்தான்கள் இன்னும் இப்படியாக சமுதாயத்திற்கு பலன்தருகின்ற கணக்கற்ற வக்ஃஃபுகளை விட்டு சென்றாகள். அவற்றைக் கொண்டு நாம் இன்று பயன் பெறுகின்றோம். அவர்கள் செய்ததில் நாம் என்ன செய்திருக்கின்றோம்? நமது வரும் தலைமுறைக்காக என்ன செய்து வைத்தோம்? அவைதானே நமக்கு மறுமைக்கு வரும்!

சிந்தியுங்கள்! வாய்ப்பை இழந்து விடாதீர்கள்! பிறகு வருந்தாதீர்கள்!

****

33. அறிவிப்பாளர்: ஆயிஷா ﷺ, நூல்: திர்மிதி, எண்: 2470, தரம் : ஸஹீஹ் - அல்பானி

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 12

நாவைப் பேணுவோம்!

அல்லாஹ் வழங்கிய அருள்களை அவனுக்குப் பிடித்தமான வழியில் செலவு செய்ய வேண்டும். அதுதான் அந்த அருளுக்காக அல்லாஹ்விற்கு நாம் சரியான முறையில் நன்றி செலுத்தியதாக ஆகும். அல்லாஹ் நம்மை மனிதனாக படைத்ததே ஒரு பேரருள் ஆகும். ஏனைய படைப்புகளை விட சிறந்த படைப்பு மனித படைப்பாகும். மிக கண்ணியமான சிறப்பான படைப்பாக மனிதனை அல்லாஹ் ஆக்கி இருக்கின்றான். அவன் நமக்கு வழங்கிய உருவ தோற்றம் மிக நேர்த்தியானதும் மிகவும் பொருத்தமானதும் ஆகும்.

நமது உடலில் ஏராளமான உறுப்புகள் இருக்கின்றன. நாம் பார்க்கும்படியான வெளிரங்க உறுப்புகள், நாம் பார்க்காத உள்ரங்கமான உறுப்புகள் என நமது தேவைக்காக அல்லாஹ் நிறைய நேரடி உறுப்புகளையும் துணை உறுப்புகளையும் படைத்திருக்கின்றான். மனிதனின் உறுப்புகளில் அற்புதமான ஒன்றுதான் இந்த நாக்கு. இது இருப்பது வெளியில் தெரியாது. ஆனால், மனிதனே இதைவைத்துதான் எடைப் போடப் படுகிறான்.

ஏனைய படைப்புகளின் நாவுகள் ருசிக்கவும் அசைக்கவும் சப்தமிடவும்தான் செய்யும். ஆனால், மனிதனின் நாவு அதையும் தாண்டி பேசவும் செய்யும். மனிதன் பிற படைப்பினங்களில்

இருந்து இந்த பேச்சு என்ற தன்மையைக் கொண்டு மிகவும் வித்தியாசப்படுகின்றான். பிறகு மனிதனின் பேச்சில் எத்தனை மொழிகள்!

நாவு எனக்கு சொந்தமானது, என்று யாரும் எதை வேண்டுமானாலும் பேசி விட முடியாது. உலக அடிப்படையிலும் அதற்கு ஒரு வரைமுறை உண்டு. மார்க்கமோ நாவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

நம்முடைய பேச்சுக்கள் பதியப்படுகின்றன. நமது கை, கால்களால் செய்யப்படும் செயலைப் போல நமது நாவால் நாம் பேசுகின்ற பேச்சும் ஒரு செயலாக - ஒரு அமலாகத்தான் மார்க்கத்தின் பார்வையில் இருக்கின்றது. ஆகவே, நாம் எதைப் பேசுகிறோம், எப்படி பேசுகிறோம், யாரிடம் பேசுகிறோம், எந்தளவு பேசுகிறோம், என்று யோசித்து கவனமாக பேச வேண்டும். பேசிவிட்டு பிறகு வருந்தும்படியான பேச்சுகளை பேசாமல் தவிர்த்து விடுவதே மேல்.

இஸ்லாமிய மார்க்கத்தில் பேச்சுக்கு என்றே பல ஒழுக்கங்கள், வரைமுறைகள் உள்ளன. அவற்றைத்தான் பின்வரும் குர்ஆன் வசனங்களிலும் நபிமொழிகளிலும் நாம் பார்க்க இருக்கின்றோம்.

﴿أَلَمْ نَجْعَلْ لَهُ عَيْنَيْنِ وَلِسَانًا وَشَفَتَيْنِ وَهَدَيْنَاهُ النَّجْدَيْنِ﴾

பொருள் : (பார்க்கக்கூடிய) இரு கண்களையும் நாம் அவனுக்குக் கொடுக்கவில்லையா? (அவ்வாறிருந்தும் உண்மையை அவன் கண்டுகொள்ளவில்லை.) (பேசக்கூடிய) ஒரு நாவையும், இரு உதடுகளையும் (நாம் அவனுக்குக் கொடுக்கவில்லையா? அதைத் தானாகவே அவன் அடைந்துவிட்டானா?) (அல்குர்ஆன் 90 : 8,9)

﴿وَإِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطَانِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللَّهِ إِنَّهُ سَمِيعٌ عَلِيمٌ﴾

பொருள் : ஷைத்தான் ஒரு (தவறான) எண்ணத்தை உமது மனதில்

ஊசலாடச் செய்து (தகாததொரு காரியத்தைச் செய்யும்படி உம்மைத் தூண்டினால் உடனே நீர் உம்மை காப்பாற்றும்படி அல்லாஹ்விடம் கோருவீராக. நிச்சயமாக அவன் நன்கு செவியுறுபவன், (அனைத்தையும்) நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 7 : 200)

﴿وَقُولُوا لِلنَّاسِ حُسْنًا﴾

அனைத்து மனிதர்களிடமும் அழகாகப் பேசுங்கள் (நல்ல பேச்சுகளை பேசுங்கள்)! (அல்குர்ஆன் 2 : 83)

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ ﷺ عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ مَنْ يَضْمَنْ لِي مَا بَيْنَ لَحْيَيْهِ وَمَا بَيْنَ رِجْلَيْهِ أَضْمَنْ لَهُ الجَنَّةَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் தனது இரு தாடைகளுக்கு மத்தியில் உள்ளதையும் தனது இரு கால்களுக்கு மத்தியில் உள்ளதையும் தான் பாதுகாப்பேன் என்று எனக்கு உறுதி கொடுப்பாரோ (பிறகு அவ்வாறே அவர் நடந்துகொண்டால்) அவருக்கு நான் சொர்க்கத்திற்கு உறுதி கொடுப்பேன்.[34]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَاليَوْمِ الآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَاليَوْمِ الآخِرِ فَلاَ يُؤْذِ جَارَهُ وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَاليَوْمِ الآخِرِ فَلْيُكْرِمْ ضَيْفَهُ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்வாரோ அவர் நல்லதை பேசட்டும். அல்லது வாய்மூடி மவுனமாக இருக்கட்டும். இன்னும், யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்வாரோ அவர் தனது அண்டைவீட்டாருக்கு தொந்தரவு தர வேண்டாம். இன்னும்,

34. அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்னு ஸஅது ﷺ, நூல்: புகாரி, எண்: 6474

யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்வாரோ அவர் தனது விருந்தாளியை கண்ணியமாக உபசரிக்கட்டும்.[35]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ سَمِعَ رَسُولَ اللّٰهِ ﷺ يَقُولُ إِنَّ العَبْدَ لَيَتَكَلَّمُ بِالكَلِمَةِ مَا يَتَبَيَّنُ فِيهَا يَزِلُّ بِهَا فِي النَّارِ أَبْعَدَ مِمَّا بَيْنَ المَشْرِقِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் கேட்டேன்: நிச்சயமாக அடியார்கள் பல விஷயங்களை பேசுகிறார்கள். அவற்றில் அவர்களுக்கு தெளிவு இருப்பதில்லை (அந்த பேச்சுக்கள் நல்லதா, கெட்டதா என்று. ஆகவே, அவற்றின் காரணமாக அவர்கள் கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் உள்ள தூரத்தைவிட அதிக தூரம் நரகத்தின் ஆழத்தில் விழுவார்கள்.[36]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عَنْه عَنِ النَّبِيِّ ﷺ قَالَ إِنَّ العَبْدَ لَيَتَكَلَّمُ بِالكَلِمَةِ مِنْ رِضْوَانِ اللّٰهِ لاَ يُلْقِي لَهَا بَالًا يَرْفَعُهُ اللّٰهُ بِهَا دَرَجَاتٍ وَإِنَّ العَبْدَ لَيَتَكَلَّمُ بِالكَلِمَةِ مِنْ سَخَطِ اللّٰهِ لاَ يُلْقِي لَهَا بَالًا يَهْوِي بِهَا فِي جَهَنَّمَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அடியார்கள் அல்லாஹ்வின் பொருத்தத்திற்கு உட்பட்ட நல்ல பேச்சுகளை பேசுவார்கள். அப்படி பேச வேண்டும் என்று அவர்களுக்கு மனதில் நாட்டம் இருக்காது. அல்லாஹ் அந்த பேச்சுகளின் காரணமாக அவர்களை பல தகுதிகள் உயரத்துகின்றான். இன்னும், நிச்சயமாக அடியார்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு உட்பட்ட தீய பேச்சுகளை பேசுவார்கள். அப்படி பேச வேண்டும் என்று அவர்களுக்கு மனதில் நாட்டம் இருக்காது. அவற்றின் காரணமாக அவர்கள் நரகத்தில் விழுவார்கள்.[37]

---

35. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி, எண்: 6475
36. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி, எண்: 6477
37. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி, எண்: 6478

படிப்பினைகள்

நாவு, அல்லாஹ்வின் படைப்புகளில் அற்புதமான படைப்பும் அல்லாஹ் நமக்கு வழங்கிய அருட்கொடைகளில் மிகப் பயனுள்ளதும் ஆகும். நாம் நாவு என்று இங்கு சொல்வது வெறும் நாவு என்ற உறுப்பை மட்டும் கூறவில்லை. மாறாக, அந்த நாவின் மூலம் அல்லாஹ் வழங்கிய பேசும் ஆற்றலை சேர்த்தே இங்கு குறிப்பிடுகிறோம்.

பேச்சில் பலவகை உண்டு. நல்ல பேச்சுக்கள், கெட்ட பேச்சுக்கள், அழகிய பேச்சுக்கள், ஆபாசமான பேச்சுக்கள், நன்மையான பேச்சுக்கள், பாவமான பேச்சுக்கள், பலனுள்ள பேச்சுகள், வீணான பேச்சுக்கள், அல்லாஹ் விரும்புகின்ற பேச்சுகள், அல்லாஹ் வெறுக்கின்ற பேச்சுக்கள், இப்படியாக பேச்சுகளின் வகைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

அல்லாஹ்வும் ரஸூலும் எதை விரும்புவார்களோ அதுதான் அழகிய பேச்சாகும். அல்லாஹ் மற்றும் ரஸூல் உடைய வழிகாட்டலுக்கு ஏற்ப தனது பேச்சை அமைத்துக் கொள்பவர்கள்தான் புத்திசாலிகள். நல்லறிவுள்ள கல்விமான்கள் எதை அழகான பேச்சு என்று கூறுவார்களோ அதைத்தான் நாம் பேச வேண்டும். வீணர்கள், ஒழுக்கமற்றவர்கள், முரடர்கள், வம்பர்கள் பேசுகின்ற பேச்சுகளை ஒருபோதும் நாம் பேசக்கூடாது.

பல சூழ்நிலைகளில் மனிதன் தனது கட்டுப்பாட்டை இழந்து பேசிவிடுகிறான். பிறகு வருந்துகிறான். சில நேரம் அவனுக்கு அந்த பேச்சு சிறிய அல்லது பெரிய ஆபத்தை ஏற்படுத்தி விடுகிறது. பலர் தங்கள் பேச்சினால் தமது தலையை இழந்துள்ளார்கள். பலர் பல காலம் சிறைவாசம் சென்றுள்ளார்கள். இன்னும் பலர் தங்கள் பேச்சினால் பலவிதமான பிரச்சனைகளுக்கு ஆளாகி இருக்கின்றனர். பல சமயம் முறையற்ற பேச்சினால் உறவுகள் முறிந்து விடுகின்றன.

நண்பர்களுக்கு மத்தியில் பகைமை நிலவி விடுகின்றது. இப்படியாக இந்த பேச்சினால் விளையும் தீமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஒரு வார்த்தை போதும் இரு நாடுகளுக்கு மத்தியில் போர் மூண்டு இலட்சக்கணக்கான மக்கள் உயிர் இழப்பதற்கு. உறவினரின் சில பேச்சு குடும்பங்களை பிரித்து கணவன் மனைவி உறவுகளை அறுத்துவிட்டிருக்கிறது.

ஆம், இதற்கெல்லாம் என்ன காரணம்? ஷைத்தான் நம்மை தூண்டி விடுகிறான், அவன் நமக்குள் ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டி விடுகிறான். பிறகு போதை தலைக்கேறியவன் தான் என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்பதை அறியாதது போல் நாமும் நாம் என்ன சொல்கிறோம், என்ன பேசுகிறோம் என்பதை உணராமல், புரியாமல் பேச ஆரம்பித்து விடுகிறோம். கோபம் மனிதனின் கட்டுப்பாட்டை தடுமாற செய்துவிடும். மனிதனின் நிலையை ஒரு பைத்தியத்தின் நிலைக்கு கொண்டு சென்றுவிடும். ஆகவேதான் அந்த ஒரு நிலை ஏற்படும் என்று உணர்ந்தாலே உடனே ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் நாம் பாதுகாவல் தேட வேண்டும் என்று அல்குர்ஆன் நமக்கு வழிகாட்டுகின்றது. கோபத்தின் தொடக்கம் பைத்தியம், அதன் முடிவு கைசேதம் என்று அரேபிய பழமொழியில் கூறுவார்கள்.

கோபமான நேரத்தில் தீர்ப்பு சொல்வது தடுக்கப்பட்டுள்ளது. கோபத்தை எப்படி அடக்க வேண்டும் என்பதற்கு தனியாக ஒரு அழகிய வழிமுறையை நபி அவர்கள் கற்பித்து தந்துள்ளார்கள்.

எப்போதும் நல்ல அழகிய பேச்சுகளை பேசுபவர்கள் அல்லாஹ்விடமும் அவனது அடியார்களிடமும் போற்றத்தகுந்த மக்களாக இருப்பார்கள். அவர்களுக்கு நண்பர்களும் நேசர்களும் அதிகம் இருப்பார்கள். அவர்களை விரும்புகின்றவர்களும் அவர்களோடு பழகுகின்றவர்களும் எப்போதும் நிம்மதியையும் மன ஆறுதலையும் உணர்வார்கள். ஆகவேதான் நல்லதைத் தவிர

எதையும் பேச வேண்டாம் என்றும் அப்படி இல்லை என்றால் வாய்மூடி மவுனமாக இருக்க வேண்டும் என்றும் நபி அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். அத்துடன் தனது நாவை சரியான முறையில் பேணி, அல்லாஹ்வின் விஷயத்திலும் அடியார்களின் விஷயத்திலும் தடுக்கப்பட்ட எதையும் பேசாமல் பாதுகாத்து வந்தவருக்கு சொர்க்கத்திற்கான பொறுப்பை நபி அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

கண்மூடித்தனமாக, வாய்க்கு வந்ததெல்லாம் பேசுபவர் நரகப் படுகுழியில் சறுக்கி விழுவார் என்று நபி அவர்கள் எச்சரித்தார்கள். நாம் பேசுகின்ற பேச்சு ஷிர்க்கை அல்லது குஃப்ரை அல்லது நிஃபாக்கை ஏற்படுத்தி விடக்கூடாது. அது நிரந்தர நரகத்திற்கு வழி செய்துவிடும். இது அல்லாஹ்வின் விஷயத்தில் ஆகும்.

அடியார்களின் விஷயத்தில் புறம் பேசுவது, கோல் சொல்வது, இட்டுக்கட்டுவது, பழி சுமத்துவது, பொய் சொல்வது, பிறர் மனதை காயப்படுத்துவது, வன்மையான சொற்களால் பேசுவது, திட்டுவது, ஏசுவது, பிறர் கண்ணியத்தை பங்கப்படுத்துவது, பிறரை பரிகாசம் செய்வது, மனம் நோகும்படி கேலி கிண்டல் செய்வது, தன்னிடம் இல்லாததைக் கொண்டு வீண் பெருமையடிப்பது, தற்புகழ்ச்சி செய்து கொள்வது இப்படியாக ஒரு நீண்ட பட்டியலை நாம் கூறலாம். இவையெல்லாம் இஸ்லாமிய மார்க்கத்தில் தடுக்கப்பட்ட பேச்சுகளாகும். இவற்றின் காரணமாகவும் மனிதன் நரகத்தில் தள்ளப்படுவான். நிரந்தரமாக இல்லை என்றாலும் நரகம் என்ன சும்மா சொகுசு இல்லமா அது!? அங்கு யார் தங்க முடியும்? அதன் வேதனையை யார் அனுபவிக்க முடியும்? இவ்வுலகில் பல லட்சம் ஆண்டுகள் துன்பப்படுவதை விட நரகத்தில் ஒரு நிமிடம் துன்பப்படுவது பயங்கரமானது ஆகும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

நாம் நம்மை கட்டுப்படுத்த வேண்டும். நல்லதையும் அழகியதையும் சிறந்ததையும் அனுமதிக்கப்பட்டதையும் மட்டும் பேச வேண்டும் என்று உறுதி எடுக்க வேண்டும். அவ்வப்போது நம்மை நாமே

சுய பரிசோதனை செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் நமது பேச்சை நாமே கண்காணிக்க வேண்டும். நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும். சில நேரம் தேவைப்பட்டால் மார்க்க எல்லைக்கு உட்பட்டு நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்ள வேண்டும்.

மறுமையின் தண்டனையை புரிந்தவருக்கு இவ்வாறு நடப்பது சிரமமல்ல. இங்கு கண்மூடித்தனமாக நாவை அவிழ்த்து விட்டு பிறகு நரக வேதனையை அனுபவிப்பதுதான் மிகப் பெரிய சிரமம் என்பதை நாம் உணர வேண்டும்.

நமது முன்னோர் நாவு குறித்து கூறி இருக்கின்ற அநேக உபதேசங்கள், அறிவுரைகள் உள்ளன. அவற்றை படித்து, உணர்ந்து நாம் படிப்பினைப் பெற வேண்டும்.

அல்லாஹ்வின் பொருத்தம் எதுவோ அதுவே நமது பேச்சாக இருக்க வேண்டும். அவனது பொருத்தத்திற்குள் வராத எதையும் நமது நாவு பேசிவிடக்கூடாது.

அல்லாஹ் என்னையும் உங்களையும் நாவின் தீமையிலிருந்து இம்மையிலும் மறுமையிலும் பாதுகாப்பானாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 13

அனாதைகளை ஆதரிப்போம்!

அனாதைகளை ஆதரிக்க வேண்டும்; அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும்; அவர்களுடன் அன்பாக பழக வேண்டும்; அவர்களின் மனதை காயப்படுத்தக் கூடாது; அவர்களின் வாழ்வாதார தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

மேலும், அவர்களை சமுதாயத்தில் இழிவாக நடத்தக் கூடாது; புறக்கணிக்கக் கூடாது; ஒதுக்கக் கூடாது. இன்னும், அவர்களுக்கு செலவழிப்பதில் கருமித்தனம், பாரபட்சம் காட்டக் கூடாது.

நாம் நினைத்துப் பார்க்க வேண்டும், நாம் அனாதையாக இருந்திருந்திருந்தால், அல்லது நமது பிள்ளைகள் அனாதையாகிவிட்டால், அல்லது நமது உறவுகளின் பிள்ளைகள் அனாதையாகிவிட்டால்.... நிலைமை எப்படி இருக்கும்!!

நாம் ஒரே சமுதாயம். நம்மில் சிரமப்படுபவர்களின் துயர் துடைப்பது நம்மீது கடமையாகும். நம்மில் யாரும் தான் கைவிடப்பட்டேன் என்று தன்னைப் பற்றி எண்ணி விடக்கூடாது.

குறிப்பாக, சமுதாயத்தில் அனாதைகளை யாரும் பராமரிக்காமல் விட்டுவிட்டால் முழு சமுதாயமும் குற்றவாளியாக ஆகிவிடும்.

அல்லாஹ் ஒருவருக்கு செல்வத்தை கொடுத்திருந்தால் அந்த செல்வமெல்லாம் தனக்கு இன்னும் தனது குடும்பத்துக்கு மட்டும்தான் என்று அவர் நினைத்துவிட வேண்டாம்!!! மாறாக சமுதாயத்தில் தேவையுள்ளவர்களை அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நாம் நமது செல்வத்தை யாருக்கு செலவு செய்ய வேண்டும் என்று அல்லாஹ் வழிகாட்டியுள்ள அத்தனை இடங்களிலும் அனாதைகளை அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். இதுவே, அனாதைகளை ஆதரிப்பது எவ்வளவு முக்கியம் என்பதற்கு போதுமானது. அதுபோக, பல வசனங்களில் அனாதைகள் தொடர்பான சட்டங்களை விசேஷமாக குறிப்பிடுகின்றான்.

அனாதைகளுடன் நாம் பேச வேண்டும், அவர்களிடம் அன்பாக உரையாட வேண்டும், கனிவு காட்ட வேண்டும், அவர்களின் தலைகளை தடவி விட வேண்டும், அவர்களுடன் சரி சமமாக உட்கார வேண்டும், அவர்களுடன் ஒரே விரிப்பில் உணவு உண்ண வேண்டும், அவர்களுக்கு நாம் உணவு பரிமாற வேண்டும், அவர்களை அதட்டி, மிரட்டி பேசக் கூடாது. அது அல்லாஹ்விற்கு கோபத்தை ஏற்படுத்தி விடும்.

தனது சொத்தில் ஒரு பகுதியை தனது குடும்பத்தில் உள்ள அனாதைகள் அல்லது சமுதாயத்தில் உள்ள அனாதைகளுக்கு வக்ஃப் செய்யாதவர் செல்வந்தராக வாழ்ந்து என்ன பலன்!

அனாதைகளை வாழவைத்தவர் அவரும் அவருடைய சந்ததிகளும் என்றும் இறையருளோடு வாழ்வார்கள்.

அனாதைகளை பராமரிப்பது தன் மீது கடமையாகிவிட்ட ஒருவர் அதை ஏற்க மறுத்தால் அலலது அதில் அநீதி இழைத்தால் அவர் அவ்வளவுதான். நரகத்தில் கண்டிப்பாக நெருப்பை சாப்பிட தயாராக இருக்க வேண்டியதுதான்.

அனாதைகளின் சொத்தை அபகரித்தவனின் இறுதிகாலம் மிக

மோசமாக இருக்கும். அவனும் அவன் சந்ததியும் சீரழிந்தே ஆக வேண்டும்.

தந்தை இறந்துவிட பருவ வயதை அடையாத தனது சிறிய சகோதரர்களின் அல்லது சகோதரிகளின் சொத்துகளை அபகரித்த மூத்த சகோதரன் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது.

தனது தம்பி அல்லது அண்ணனோடு கூட்டு வியாபாரம் செய்யும் போது ஒருவர் இறந்துவிட அவரின் பிள்ளைகளுக்கு அவர்களின் தந்தையின் சொத்தை கொடுக்காமல் மோசடி செய்த சகோதரனுக்கு கொழுந்துவிட்டு எரியும் நரகத்தில் அவனது இடத்தை அல்லாஹ் முடிவு செய்துவிட்டான்.

அனாதைகளின் சொத்துகளை அபகரிப்பவர், அவர்களுக்கு அநீதி செய்பவர்களின் முகத்தில் ஒரு பிரகாசம் இருக்காது. அவர்களின் உள்ளத்தில் நிம்மதி இருக்காது. அவர்களின் வாழ்க்கையில் திருப்தி இருக்காது. அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿وَأَنْ تَقُومُوا لِلْيَتَامَىٰ بِالْقِسْطِ وَمَا تَفْعَلُوا مِنْ خَيْرٍ فَإِنَّ اللَّهَ كَانَ بِهِ عَلِيمًا﴾

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

பொருள் : இன்னும், அனாதைகள் விஷயத்தில் நீங்கள் நீதமாக நடந்து கொள்ளுங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே, (அவர்களுக்கு) நீங்கள் என்ன நன்மை செய்த போதிலும் நிச்சயமாக அல்லாஹ் அதை அறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 127)

﴿فَأَمَّا الْيَتِيمَ فَلَا تَقْهَرْ﴾

பொருள் : ஆகவே, (அல்லாஹ் உம்மீது செய்த அருள்களுக்கு நீர் நன்றி செலுத்துவதற்காக) நீர் அனாதைகளைக்கு அநீதி செய்யாதீர். (அல்குர்ஆன் : 93:9)

عَنْ سَهْلَ بْنَ سَعْدٍ ؓ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ أَنَا وَكَافِلُ الْيَتِيمِ فِي الْجَنَّةِ هَكَذَا وَقَالَ بِإِصْبَعَيْهِ السَّبَّابَةِ وَالْوُسْطَىٰ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நானும் யதீம்களுக்கு பொறுப்பேற்று அவர்களை வளர்த்து பராமரிப்பவரும் இவ்வாறு இருப்போம். தனது ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் இணைத்து கூறினார்கள்.[38]

عَنْ أَبِي بَكْرِ بْنُ حَفْصٍ ؒ أَنَّ عَبْدَ اللهِ ؓ كَانَ لَا يَأْكُلُ طَعَامًا إِلَّا وَعَلَىٰ خِوَانِهِ يَتِيمٌ

அபூ பக்ர் இப்னு ஹஃப்ஸ் ؒ கூறுகிறார்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ அவர்கள் தங்களது உணவு விரிப்பில் யதீம் இல்லாமல் சாப்பிட மாட்டார்கள்.[39]

عَنْ عَبْدَ الرَّحْمَنِ بْنَ أَبْزَىٰ ؑ قَالَ قَالَ دَاوُدُ ؑ كُنَّ لِلْيَتِيمِ كَالْأَبِ الرَّحِيمِ وَاعْلَمْ أَنَّكَ كَمَا تَزْرَعُ كَذَٰلِكَ تَحْصُدُ مَا أَقْبَحَ الْفَقْرَ بَعْدَ الْغِنَىٰ وَأَكْثَرُ مِنْ ذَٰلِكَ أَوْ أَقْبَحُ مِنْ ذَٰلِكَ الضَّلَالَةُ بَعْدَ الْهُدَىٰ وَإِذَا وَعَدْتَ صَاحِبَكَ فَأَنْجِزْ لَهُ مَا وَعَدْتَهُ فَإِنْ لَا تَفْعَلْ يُورِثُ بَيْنَكَ وَبَيْنَهُ عداوة وَتَعَوَّذْ بِاللهِ مِنْ صَاحِبٍ إِنْ ذَكَرْتَ لَمْ يُعِنْكَ وَإِنْ نسيتَ لم يُذكرك

தாவூத் ؑ கூறுகிறார்கள்: யதீம்களுக்கு - அனாதைகளுக்கு

---

38. அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்னு ஸஃத் ؓ , நூல்: புகாரி 5546
39. நூல்: இமாம் புகாரியின் அல் அதபுல் முஃப்ரத், தரம்: ஸஹீஹ் - சரியானது.

கருணையுள்ள தந்தையைப் போன்று நீ இரு! நீ எதை விதைப்பாயோ அதைத்தான் அறுவடை செய்வாய். செல்வத்திற்கு பின் வறுமை வருவது மிகக் கேவலம் ஆகும். அதைவிட கேவலம், நேர்வழிக்குப் பின் வழிகேட்டில் செல்வதாகும். நீ உனது நண்பனுக்கு வாக்கு கொடுத்தால் அதை அவருக்கு நிறைவேற்றிக் கொடு! நீ அப்படி செய்யவில்லை என்றால் அது உனக்கும் அவனுக்கும் இடையில் பகைமையை ஏற்படுத்தி விடும். நீ அவனை நினைக்கும்போது உனக்கு உதவாத, நீ அவனை மறக்கும்போது உன்னை நினைக்காத நண்பனை விட்டு அல்லாஹ்விடம் நீ பாதுகாப்புத் தேடு.[40]

படிப்பினைகள்

சிறுவயதில் தந்தையை இழப்பது மிகப் பெரிய பாதிப்பாகும், ஒரு பெரும் சோதனையாகும். ஆகவேதான், அந்த பாதிப்புக்கு ஆளான அனாதைகளை நாம் ஆதரிக்க வேண்டும் என்று அல்லாஹுவும் அவனது நபி ﷺ அவர்களும் நமக்கு ஆர்வமூட்டினார்கள்.

சமுதாயத்தில் பலர் வணக்க வழிபாடுகளில் கவனம் அதிகம் செலுத்துவார்கள். ஆனால், இதுபோன்ற அனாதை பராமரிப்பு விஷயத்தில் அவர்கள் அக்கறை காட்டாமல் இருப்பார்கள். சமூகத்தில் உள்ள அனாதைகள் மட்டுமல்ல, தங்களது சொந்த குடும்பத்தில் உள்ள அனாதைகள் மீது கூட அக்கறை காட்டாமல், அவர்களை பராமரிக்காமல் பரிதவிக்க விட்டுவிடுவார்கள். தமது பிள்ளைகளை அக்கறையோடு, நல்ல கல்வியோடு வளர்க்கின்ற அதே நேரத்தில் தமது சகோதர சகோதரிகளின் அனாதைப் பிள்ளைகளைப் பற்றி கண்டுகொள்ள மாட்டார்கள்.

இது மிகவும் வருந்த தக்க விஷயமாகும். அனாதைகள் மீது கருணை காட்டுவதாலும் அவர்களை பராமரிப்பதாலும் கிடைக்கின்ற நன்மையை அவர்கள் அறிவார்களேயானால் ஒருபோதும் அவர்கள் இப்படி நடந்துகொள்ள மாட்டார்கள்.

---

40. அறிவிப்பாளர்: அப்துர் ரஹ்மான் இப்னு அப்ஸா ﵁ , நூல்: இமாம் புகாரியின் அல் அதபுல் முஃப்ரத், தரம்: ஸஹீஹ் - சரியானது.

அனாதைகளை ஆதரிப்பது அல்லாஹ்விற்கு எந்தளவு பிடித்தமானது என்பதை முதல் நபிமொழி நமக்கு உணர்த்துகிறது. அதாவது, அல்லாஹு தஆலா அனாதைகளின் காப்பாளரை நபி ﷺ அவர்களுடன் சொர்க்கத்தில் தங்க வைக்கின்றான். உபரியான இபாதத்துகள் - வணக்க வழிபாடுகள் செய்ய முடியாத பலர் அல்லாஹ்விற்காக மனத்தூய்மையோடு, ஒரு அனாதையை பொறுப்பேற்று வளர்த்தால் கண்டிப்பாக அவர் இந்த நன்மையை மறுமையில் அடையப் பெறுவார். அனாதையின் மீது அவர் கருணையும் அன்பும் காட்டியதால் அவர் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கருணைக்கும் அன்புக்கும் தகுதியானவராக ஆகிவிடுகின்றார்.

ஆகவேதான், நமது சான்றோர்கள் அனாதைகளுடன் மிக பரிவோடும் அன்போடும் நடந்துகொண்டதை பார்க்கிறோம். இப்னு உமர் அவர்கள் ஒரு பெரிய தகுதி உடைய நபித்தோழர், இரண்டாம் கலீஃபா உமர் அவர்களின் மகனார், சமுதாயத்தில் பெரிய மனிதர், பல போர்களில் கலந்துகொண்ட பெரிய தியாகி ஆவார்கள். இவ்வாறெல்லாம் இருந்தும் ஓர் அனாதையோடு எவ்வளவு நெருக்கமாக இருந்திருக்கின்றார்கள். அந்த அனாதை தனது குடும்பத்தில் உள்ளவராக இல்லை என்றாலும் அவரை நேசித்து, அரவணைத்து, மரியாதை கொடுத்து, அன்பு செலுத்தி சொந்த பிள்ளையைப் போன்று பாசம் செலுத்தி தன்னுடன் அமர வைத்து, அவரை உணவு உண்ண வைத்து அனாதையை போற்றினார்கள். இந்த உயர்ந்த குணத்தைத்தான் நாம் நமது சான்றோரிடமிருந்து படிக்க வேண்டும். உணவளிப்பது மட்டும் பெரிதல்ல. அதை எப்படி நமது சான்றோர் செய்தார்கள் என்பதைத்தான் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

மூன்றாவது அறிவிப்பில் முந்திய நபிமார்களும் அனாதைகள் விஷயத்தில் எவ்வளவு அழகிய உபதேசங்களை செய்தார்கள் என்பதை நாம் காண முடிகிறது. அனாதைக்கு கருணையுள்ள

தந்தையைப் போன்று நீ இரு என்று சுருக்கமாக கூறி எவ்வளவு விசாலமான தத்துவத்தை தாவூத் அலைஹிஸ் ஸலாம் போதித்துள்ளார்கள்.

ஒரு கருணையுள்ள தந்தையின் இலக்கணத்தை புரிந்துகொண்டு அதை அப்படியே அனாதைகள் விஷயத்தில் நாம் பேணவேண்டும்.

அனாதைகளை ஆதரிக்கின்ற நல்லோரில் எண்ணையும் உங்களையும் அல்லாஹ் ஆக்கிவைப்பானாக! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 14

ஏமாற்றுவது

ஏமாற்றுவது நம்பிக்கை துரோகம் செய்வது, கலப்படம் செய்வது, வஞ்சகம் செய்வது, பொருளின் குறையை மறைத்து விற்பது, வாக்கை மீறுவது, உடன்படிக்கைக்கு மாற்றமாக நடப்பது ஆகிய இவை அனைத்தும் இஸ்லாமிய மார்க்கத்தில் பெரும் பாவமாகும்.

அல்லாஹ்வை நம்புகின்ற ஒரு முஃமின் எப்படி இதை செய்ய முடியும்!?

அல்லாஹ்வை நம்புகின்ற ஒரு முஃமின் எப்படி இதை செய்ய முடியும்!?

அல்லாஹ்வின் கண்களை மறைக்க முடியாது, கிராமன் காதிபீன் மலக்குகளை விட்டு தப்ப முடியாது என்று நம்புகின்ற ஒரு முஸ்லிம் ஏமாற்றுபவனாக எப்படி இருக்க முடியும்!?

சிராத் பாலத்தையும், மீசான் தராசையும் நம்பிக்கைக் கொண்ட முஃமின் இப்படி நடப்பாரா!?

தீர்ப்பு நாளில் பேரரசன், மகா நீதவான் அல்லாஹ்வின் நீதி மன்றத்தில் நிற்க வேண்டும் என்பதை நம்பிக்கை கொண்டவர் இப்படி செய்வாரா!?

அநியாயம், மோசடி, துரோகம், வஞ்சகம் செய்தவர்கள் யாரும் தப்பிக்க முடியாது என்ற கொள்கையை உடைய மார்க்கத்தை ஏற்று இருக்கும் மனிதர் இப்படி செய்வாரா!?

முடியாது, முடியாது, முடியவே முடியாது...

வாருங்கள் வேத வசங்கள் மற்றும் நபிமொழிகளின் எச்சரிக்கையைப் பார்ப்போம்!

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿يُخَادِعُونَ اللَّهَ وَالَّذِينَ آمَنُوا وَمَا يَخْدَعُونَ إِلَّا أَنْفُسَهُمْ وَمَا يَشْعُرُونَ (٩)﴾

பொருள் : அவர்கள் (-நயவஞ்சக்காரர்கள்) அல்லாஹ்வையும், நம்பிக்கை கொண்டவர்களையும் வஞ்சிக்(கக் கருது)கின்றனர். ஆனால், அவர்கள் தங்களையே தவிர (பிறரை) வஞ்சிக்க முடியாது. (இதை) அவர்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 9)

﴿وَيْلٌ لِلْمُطَفِّفِينَ (١) الَّذِينَ إِذَا اكْتَالُوا عَلَى النَّاسِ يَسْتَوْفُونَ (٢) وَإِذَا كَالُوهُمْ أَوْ وَزَنُوهُمْ يُخْسِرُونَ (٣) أَلَا يَظُنُّ أُولَئِكَ أَنَّهُمْ مَبْعُوثُونَ (٤) لِيَوْمٍ عَظِيمٍ (٥) يَوْمَ يَقُومُ النَّاسُ لِرَبِّ الْعَالَمِينَ (٦)﴾

பொருள் : அளவில் மோசடி செய்பவர்களுக்குக் கேடுதான். அவர்கள் மனிதர்களிடம் அளந்து வாங்கினால், நிறைய அளந்து கொள்கின்றனர். மற்றவர்களுக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்து (அவர்களை நஷ்டப்படுத்தி) விடுகின்றனர். மகத்தான ஒரு நாளில், நிச்சயமாக அவர்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள்

நம்பவில்லையா?அந்நாளில், மனிதர்கள் அனைவருமே உலகத்தாரின் இறைவன் முன் (விசாரணைக்காக) நின்று கொண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 83 : 1 - 6)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ مَنْ حَمَلَ عَلَيْنَا السِّلَاحَ فَلَيْسَ مِنَّا وَمَنْ غَشَّنَا فَلَيْسَ مِنَّا رواه مسلم

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் நமக்கு எதிராக வாளேந்துவாரோ அவர் நம்மை சேர்ந்தவர் அல்ல. இன்னும் யார் நம்மை ஏமாற்றுவாரோ அவர் நம்மை சேர்ந்தவர் அல்ல.[41]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺمَرَّ عَلَىٰ صُبْرَةِ طَعَامٍ فَأَدْخَلَ يَدَهُ فِيهَا فَنَالَتْ أَصَابِعُهُ بَلَلًا فَقَالَ مَا هٰذَا يَا صَاحِبَ الطَّعَامِ قَالَ أَصَابَتْهُ السَّمَاءُ يَا رَسُولَ اللهِ، قَالَ أَفَلَا جَعَلْتَهُ فَوْقَ الطَّعَامِ كَيْ يَرَاهُ النَّاسُ مَنْ غَشَّ فَلَيْسَ مِنِّ رواه مسلم

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் ஒரு தானியக் குவியலைக் கடந்து சென்றார்கள். தனது கரத்தை அதற்குள் நுழைத்துப் பார்த்தார்கள். அவர்களின் விரல்களில் ஈரம் பட்டது. தானியத்தின் உரிமையாளரே! இது என்ன செயல்? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! மழையில் இது நனைந்துவிட்டது என்று கூறினார். அதற்கு, அப்படிஎன்றால் மக்கள் அதை பார்த்துக்கொள்ளும் பொருட்டு அதை தானியத்திற்கு மேல் பரப்பில் நீ வைத்திருக்க வேண்டாமா? யார் ஏமாற்றுகின்றாரோ அவர் என்னை சேர்ந்தவர் இல்லை என்று நபி ﷺ கூறினார்கள்.[42]

---

41. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ , நூல்: முஸ்லிம், எண்: 101
42. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ , நூல்: முஸ்லிம், எண்: 102

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مِنْ عَلَامَاتِ الْمُنَافِقِ ثَلَاثَةٌ إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا اؤْتُمِنَ خَانَ وَإِنْ صَامَ وَصَلَّى وَزَعَمَ أَنَّهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: முனாஃபிக் - நயவஞ் சகனின் அடையாளங்களில் முக்கியமானது மூன்றாகும். அவன் பேசினால் பொய் சொல்வான். அவன் வாக்களித்தால் அதற்கு மாறு செய்வான். அவனை நம்பப்பட்டால் அவன் நம்பிக்கை மோசடி செய்வான். அவன் நோன்பு வைத்து, தொழுது, தன்னை ஒரு முஸ்லிம் என்று பிதற்றிக் கொண்டாலும் சரி.[43]

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ أَرْبَعٌ مَنْ كُنَّ فِيهِ كَانَ مُنَافِقًا أَوْ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنْ أَرْبَعَةٍ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنَ النِّفَاقِ حَتَّى يَدَعَهَا إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا عَاهَدَ غَدَرَ وَإِذَا خَاصَمَ فَجَرَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நான்கு குணங்கள் யாரிடம் இருக்குமோ அவர் முனாஃபிக்காக - நயவஞ்சகராக இருப்பார். அல்லது நான்கில் ஒன்று ஒருவரிடம் இருந்தால் அவரிடம் நயவஞ் சகத்தின் ஒரு குணம் இருக்கும், அவர் அதை விடுகின்றவரை (நயவஞ்சகம் அவரை விட்டு போகாது. அவர் பேசினால் பொய் பேசுவான். அவன் வாக்களித்தால் அதற்கு மாறு செய்வான். அவன் ஒப்பந்தம் செய்தால் துரோகம் செய்வான். அவன் வாக்குவாதம் செய்தால் உண்மைக்கு மாற்றமாக பேசுவான்.[44]

43. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: முஸ்லிம், எண்: 222, 223.
44. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﵄, நூல்: புகாரி, எண்: 2459

படிப்பினைகள்

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்ட நம்பிக்கையாளர் எப்போதும் நேர்மையாளராக இருக்க வேண்டும்.

அவர் தனக்கு விரும்புவதை எல்லோருக்கும் விரும்ப வேண்டும். யாருக்கும் கெடுதி செய்வது அவருக்கு அழகல்ல. அவர் மனித குலத்திற்கு நன்மை செய்ய ஏவப்பட்டுள்ளார். ஆகவே, எந்த மனிதனுக்கும் அவர் தீங்கு செய்யக் கூடாது.

பிறரை ஏமாற்றுவது, சூழ்ச்சி செய்வது, நம்பிக்கை துரோகம் செய்வது, வியாபார மோசடி செய்வது, உடன்படிக்கையை மீறுவது, இன்னும் பிற மனிதர்களின் செல்வத்தில் இழப்பை ஏற்படுத்தும்படி நடந்து கொள்வது ஆகிய இவை அனைத்தையும் நாம் தவிர்த்து

உண்மையாளர்களாக, நேர்மையாளர்களாக, நீதவான்களாக, பிறர் நலம் பேணுபவர்களாக இருக்க வேண்டும்.

உண்மை முஃமினை வித்தியாசப்படுத்திக் காட்டுகின்ற குணங்கள்தான் உண்மை பேசுவது, நம்பிக்கை பேணுவது, ரகசியம் காப்பது, ஒப்பந்தங்களை, வாக்குறுதிகளை பேணி பாதுகாத்து வருவது. அதற்காக அந்த முஃமின் என்ன விலைக்கொடுக்கவும் தயாராக இருப்பார்.

நபி ﷺ அவர்கள் எந்த மனிதரிடமும் செய்த வாக்குறுதியையும் ஒப்பந்தத்தையும் மீறியதே இல்லை. அப்படித்தான் அவர்களின் ஸஹாபாக்களும் வாழ்ந்தார்கள்.

இன்று உள்ள காலத்தை அல்லாஹ் அறிவித்ததைக் கொண்டு அறிந்துதான் நபி ﷺ அவர்கள் மேற்படி கூறி இருக்கின்றார்கள் போலும்.

இன்று இந்த உம்மத்தில் பலர் ﷺ வாக்கு, ஒப்பந்தம், சத்தியம்,

அமானிதம் என்றால் கிலோ எவ்வளவு என்று கேட்கும் அளவிற்குதான் நிலைமை உள்ளது.

இன்றைய உம்மத்தில் பலரின் நிலை...

அவர்களிடம் கடன் கொடுத்தால் திரும்ப வராது....

அவர்களிடம் வியாபாரம் செய்தால் அவர்கள் ஏமாற்றுவார்கள்...

பொருள்களை அவர்களிடம் விற்றால் அதன் கிரயத்தை கொடுக்க இழுத்தடிப்பார்கள்...

இறுதியில் மறுக்கவும் செய்யலாம்....

பணியாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதில் காலதாமதம் செய்வார்கள், ஆனால், தங்களுக்கு கணக்கின்றி செலவு செய்து கொள்வார்கள்....

அவர்களிடம் கூட்டு வியாபராம் செய்தால் பங்காளிக்கு இறுதில் மிஞ்சுவது நஷ்ட கணக்குதான்...

வாங்குபோது குனிந்து சிரித்து வாங்குவார்கள். சிறிது காலம் வரை உங்களிடம் அடிக்கடி இனிக்க இனிக்கப் பேசுவார்கள்.

பிறகு சிறிது காலம் கழித்து பேச்சின் தொனி மாறும்.

பிறகு, பிசி என்று கூறுவார்கள். பிறகு பேசவே மாட்டார்கள். பிறகு, அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்றே தெரியாது.

பிறகு வியாபாரம் என்றால் லாபம் நஷ்டம் இருண்டும்தானே, நீங்கள் என்ன வட்டிக்காக கொடுத்தீர்கள் என்று நம்மை மிரட்டுவார்கள்.

நாம் அவர்களை வருத்திக் கேட்டால் நம்மை போலீசில் புகார் செய்வேன் என்று மிரட்டுவார்கள்.

வாங்கும் போது நம்மிடம் கூறுவது ஒரு வியாபாரம். ஆனால், வாங்கிய பின்னர் அவர்கள் செய்வது வேறு ஒரு இரண்டாம் நம்பர்

வியாபாராம்.

தொழுகை இருக்கும் பலரிடம் நேர்மை இருப்பதில்லை.

நோன்பு வைத்து, உம்ரா செய்கின்ற பலர் மோசடியில் மன்னனாக இருக்கின்றார்கள்.

தாடி வைத்து, அல்லாஹ் அல்லாஹ் என்று வார்த்தைக்கு வார்த்தை சொன்னவர்கள்... அவர்களிடம் இன்று, அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்! எங்கள் தொகையை திருப்பித் தாருங்கள் என்று கூறப்பட்டால் அது எங்களுக்கு தெரியும், நாங்கள் அவனிடம் பதில் சொல்லிக் கொள்கிறோம் என்று இறுமாப்பாக பேசுவார்கள்.

உங்களிடம் பணம் வாங்கும்போது உங்கள் வீட்டில் காத்து இருந்தவர்கள் அதை உங்களுக்கு திருப்பித் தரும்போது உங்களை காக்க வைப்பார்கள்.

அவர்களுக்கு நீங்கள் பணம் கொடுக்கும்போது உங்களைப் பார்த்து சிரித்து இருப்பார்கள். அதன் பொருள் உங்களுக்கு பின்னால்தான் தெரிய வந்திருக்கும். அதன் பொருள், இதை நீ என்னிடம் இருந்து திரும்ப வாங்கிவிடுவாயா பார்ப்போம்.

சொல்லும் எந்த வாக்கையும் தவணையையும் கனவில் கூட நிறைவேற்றிவிட மாட்டார்கள்.

பார்ப்பதற்கு சுல்த்தான், ஆனால் உள்ளுக்குள் ஷைத்தான் என்று ஒரு பழமொழி உண்டு. அது இவர்களுக்குகாத்தான் சொல்லப்பட்டதோ!

இப்படிப்பட்டவர்கள் இருக்கும் சமுதாயத்தின் துஆவை அல்லாஹ் ஏற்கவும் மாட்டான், அவர்களுக்கு உதவவும் மாட்டன், அவர்கள் மீது எதிரிகளை சாட்டி விடுவான், அவர்களை இழிவு படுத்துவான்.

இதற்குமேல் இந்த தலைப்பில் எழுத என் கை நடுங்குகிறது, உள்ளம் பதறுகிறது, கண் கலங்குகிறது!!

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!! அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 15

உரிமைகளை கொடுப்போம், அநீதி தவிர்ப்போம், நேர்மையாக நடப்போம்

பகுதி 1/2

கருத்து : நல்லவர்கள் யார் என்று வணக்க வழிபாட்டை வைத்து மட்டும் முடிவு செய்ய முடியாது.

ஒரு மனிதனின் நேர்மை, நாணயம், உண்மை, உரிமைப் பேணல், நேர்மையாக நடத்தல் இன்னும் இவை சார்ந்த பண்புகள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன ஒருவரை நல்லவர் என்று நாம் முடிவு செய்வதில்.

அல்லாஹ்வின் மார்க்கம் இதில் எந்த விதத்திலும் சமரசம் செய்து கொள்ளவில்லை. வணக்க வழிபாட்டில் ஒருவன் உச்சத்தில் இருந்தாலும் அவன் பிறர் விஷயத்தில் அநியாயமாக நடந்து கொண்டால் அவன் நரக நெருப்புக்கு தயாராக இருக்க வேண்டியதுதான்.

ஒரு பூனைக்கு கொடுமை செய்தாலும், அதற்குரிய உரிமையை கொடுக்கவில்லை என்றாலும் அவ்வளவுதான் கதி. அவர் படைப்பினங்களின் அதிபதியிடமிருந்து தப்பிக்க முடியாது.

ஒரு மனிதனிடம் உணர்வு உயிராக இருக்க வேண்டும். அது செத்து விடக்கூடாது. அது செத்த பின் உடல் மட்டும் உயிர் வாழ்ந்தால் எந்த பிரயோசனமும் இல்லை.

ஒருவனின் ஆன்மா சரியாக இருக்கிறது என்பதற்கு அடையாளம் அவன் பிறர் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறான் என்பதுதான். ஒருவர் பிறர் விஷயத்தில் நீதம் பேணி, நேர்மையாக நடந்து, வாங்கிய கடனை சரியான தவணையில் கண்ணியமாக திருப்பிக் கொடுத்து, கொடுத்த வாக்கை காப்பாற்றி நடந்துவந்தால் அவர் அல்லாஹ்விடமும் அடியார்களிடமும் கண்ணியமானவராக இருப்பார்.

தன்னால் யாருக்கும் எவ்விதத்திலும் தீங்கு, தொந்தரவு, சிரமம், ஆபத்து, பிராச்சனை, நஷ்டம், பாதிப்பு, இழப்பு, ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிக கவனமாக இருப்பவர்தான் உண்மையான முஃமினாக இருக்க முடியும். அவரிடம் உபரியான நஃபில் வணக்கங்கள் குறைவாக இருந்தாலும் சரி.

சிலர் மார்க்கத்தை வாய்க்கிழிய பேசிவிட்டு, மற்றும் சிலர் கால்கடுக்க வணங்கிவிட்டு, இன்னும் என்னென்னமோ வணக்க வழிபாடுகள் செய்துவிட்டு, கடைசியில் அல்லாஹ்வின் அடியார்கள் விஷயத்தில் கோட்டை விட்டிருந்தால் மொத்தமாக முடிந்தது அவரின் கதை.

பின் வரும் குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் நமக்கு போதிக்கும் பாடங்களை செவிதாழ்த்தி கேட்ப்போம்!!

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمَانَاتِ إِلَىٰ أَهْلِهَا وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوا بِالْعَدْلِ إِنَّ اللَّهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهِ إِنَّ اللَّهَ كَانَ سَمِيعًا بَصِيرًا (٥٨)﴾

பொருள்:(நம்பிக்கையாளர்களே! உங்களிடம்நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதப் பொருள்களை அதன் உரிமையாளர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடும்படியும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்கும்படியும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். உங்களுக்கு அல்லாஹ் செய்யும் இவ்வுபதேசம் மெய்யாகவே எவ்வளவு சிறந்தது! நிச்சயமாக அல்லாஹ் செவியுறுபவனாக, உற்று நோக்குபவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 58)

﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ بِالْقِسْطِ شُهَدَاءَ لِلَّهِ وَلَوْ عَلَىٰ أَنْفُسِكُمْ أَوِ الْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ إِنْ يَكُنْ غَنِيًّا أَوْ فَقِيرًا فَاللَّهُ أَوْلَىٰ بِهِمَا فَلَا تَتَّبِعُوا الْهَوَىٰ أَنْ تَعْدِلُوا وَإِنْ تَلْوُوا أَوْ تُعْرِضُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا (١٣٥)﴾

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதத்தின் மீதே உறுதியாக நிலைத்திருங்கள். (நீங்கள் சாட்சி கூறினால் அது) உங்களுக்கோ, உங்கள் தாய், தந்தைக்கோ அல்லது உங்கள் உறவினர்களுக்கோ பாதகமாக இருந்தபோதிலும் அல்லாஹ்வுக்காக (உண்மையையே) சாட்சி கூறுபவர்களாக இருங்கள். (நீங்கள் யாருக்காக சாட்சி கூறுகிறீர்களோ) அவர் பணக்காரராயினும் ஏழையாயினும் (உண்மையையே கூறுங்கள். ஏனென்றால்) அல்லாஹ் அவ்விருவருக்குமே (உதவி செய்ய) மிகத் தகுதியானவன். ஆகவே, நீங்கள் (உங்கள்) ஆசை (அபிலாஷை) களைப் பின்பற்றி வரம்பு மீறாதீர்கள்! (பரிவு அல்லது குரோதத்தை முன்னிட்டு) நீங்கள் தவறாக (சாட்சி) கூறினாலும் அல்லது (சாட்சி) கூற மறுத்தாலும் நிச்சயமாக அல்லாஹ் உங்கள் (இத்தவறான) செயலை நன்கறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 135)

﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ بِالْقِسْطِ وَلَا يَجْرِمَنَّكُمْ

شَنَآنُ قَوْمٍ عَلَىٰٓ أَلَّا تَعْدِلُوا اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ

خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ (٨)﴾

பொருள் : நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்காக நீதிவான்களாக நீதத்திற்கு சாட்சி சொல்பவர்களாக இருங்கள். ஒரு வகுப்பார் மீதுள்ள துவேஷம் அவர்களுக்கு அநியாயம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கட்டும். (பகைமை இருந்தாலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. (எப்போதும்) நீங்கள் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன் ஆவான்.

(அல்குர்ஆன் 5 : 8)

படிப்பினைகள்

இந்த பாடத்தின் முதல் வசனம் கற்பிக்கும் கட்டளைகள்

1. உரிமைகளை கொடுப்பது, பிறர் ஹக்குகளைப் பேணுவது அல்லாஹ்வின் உறுதியான கட்டளையாகும். நம்பிக்கையாளர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்ட்டாலும் அதை செய்துதான் ஆகவேண்டும்.

2. இருவருக்கு இடையில் நாம் நடுவராக இருக்க நேர்ந்தால் பாரபட்சம் பார்க்காமல் எது நீதியோ அதைத்தான் நாம் தீர்ப்பளிக்க வேண்டும்.

3. ஒருவருக்கு ஒருவர் நீதத்தை உபதேசித்துக் கொள்வது உபதேசங்களில் சிறந்த உபதேசம் ஆகும். அதுதான் படைப்புகளுக்கு அல்லாஹ்வின் உபதேசமும் ஆகும்.

4.அல்லாஹ் நமது சொல் செயலை கேட்டவனாகவும் பார்த்தவனாகவும் இருக்கின்றான். ஆகவே, இவ்வுலகில் அநியாயக்காரன் ஒருவன் தப்பித்தாலும் மறுமையில் அவன் தப்பிக்க முடியாது.

இந்த பாடத்தின் இரணடாவது வசனம் கூறும் போதனைகள்:

1. நீதம் பேணுவது, நேர்மையாக நடப்பது ஈமான் உடைய குணமாகும்.

2. நீதம் பேணுவதில், நேர்மையாக நடப்பதில் எவ்விதத்திலும் ஒரு துரும்பளவு கூட அலட்சியம் செய்யக்கூடாது.

3. நீதவான்கள் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள் ஆவார்கள். அப்படி என்றால், நீதம் தவறுபவர்கள் ஷைத்தானின் சாட்சியாளர்கள் ஆவார்கள்.

4. நீதம் பேணும்போது அது யாருக்கு பாதகமாக இருக்கிறது என்று அறவே பார்க்கக்கூடாது.

5. பொது வாழ்க்கையில், கொடுக்கல் வாங்கலில், உரிமைகளை கொடுப்பதில் ஏழை பணக்காரன், நலிந்தவன் வலியவன் என்று பார்க்கக் கூடாது.

6. நீதம் பேணுவதில், இன்னும் பிறர் உரிமைகளை கொடுப்பதில் தனது மன இச்சசைக்கும், தனது விருப்பு வெறுப்புக்கும் எவ்விதத்திலும் இடம் கொடுக்கக் கூடாது.

7. பிறர் உரிமைகளில் குறை செய்பவர்களும் நேர்மை தவறுபவர்களும் அல்லாஹ்வின் பார்வையிலிருந்து இன்னும் அவனது விசாரனையிலிருந்து எஸ்கேப் ஆக முடியாது.

இந்த பாடத்தின் மூன்றாவது வசனம் கூறும் வழிகாட்டல்கள்:

1. நீதவான்கள், நேர்மையானவர்கள் அல்லாஹ்விற்கு நெருக்கமானவர்கள், அவனுக்கு விருப்பமானவர்கள், மனத்தூய்மை உள்ளவர்கள் ஆவார்கள்.

2. நீதமாக நேர்மையாக சாட்சி கூறுவது, நீதமான தீர்ப்பு வழங்குவது, இவை எல்லாம் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை கட்டளைகளாகும்.

3. முஃமின்கள் இந்த நற்குனங்களை வாழ்நாளெல்லாம் பின்பற்ற

வேண்டும். ஒருமுறை செய்துவிட்டு பிறகு இதில் அலட்சியாமாக நடக்க முடியாது. நீதம், நேர்மை, பிறர் உரிமைப் பேணல் என்பது ஒரு முஸ்லிமின் வாழ்நாள் குணமாக, கொள்கையாக இருக்க வேண்டும்.

4. நமது மார்க்க விஷயத்தில் நமக்கு பரம எதிரியாக இருந்தாலும் அவனிடமும் க்கை, நேர்மை, நீதம், நியாயம், நாணயம் பேணிதான் நாம் நடக்க வேண்டும்.

5. நீதம், நேர்மை, பிறர் உரிமை பேணுவது தக்வாவின் இறையச்சத்தின் வெளிப்பாடாகும். தக்வாவின் தன்மைகளில் சேர்ந்தவை ஆகும்.

6. நீதம், நேர்மை, பிறர் ஹக்குகளை சரிவர கொடுப்பது, ஆகியவற்றில் கூடுதல் கவனத்துடன் உறுதியாக சமரசமின்றி அலட்சியமின்றி இருக்க வேண்டும். அப்போதுதான் தக்வாவின் உயர் நிலையை அடைய முடியும். இல்லையென்றால் அது போலி தக்வா ஆகும்.

7. அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருக்கின்றான் என்ற உறுதியான நம்பிக்கை இருந்தால்தான் ஒருவர் நீதவானாக, நேர்மையாளனாக, உரிமைகளை சரிவர நிறைவேற்றுபவனாக இருக்க முடியும்.

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 16

உரிமைகளை கொடுப்போம், அநீதி தவிர்ப்போம், நேர்மையாக நடப்போம்.

பகுதி 2/2

பகுதி 1 ல் கூறப்பட்ட கருத்துகளை மனதில் வைத்துக்கொண்டு இன் ஷா அல்லாஹ் பின்வரும் நபிமொழிகளையும் அவற்றின் படிப்பினைகளையும் பார்ப்போம்.

முதல் ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ لَتُؤَدُّنَّ الْحُقُوقَ إِلَىٰ أَهْلِهَا يَوْمَ الْقِيَامَةِ حَتَّىٰ يُقَادَ لِلشَّاةِ الْجَلْحَاءِ مِنَ الشَّاةِ الْقَرْنَاءِ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீங்கள் மறுமை நாளில் உரிமைகளை, உடமைகளை அவற்றுக்கு உரியவர்களிடம் நிச்சயமாக கொடுப்பீர்கள். இறுதியாக, கொம்புள்ள ஆட்டிடமிருந்து கொம்பில்லாத ஆட்டுக்காக பழிவாங்கப்படும்.[45]

படிப்பினைகள்

45. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁ , நூல்: முஸ்லிம், எண்: 2582

1. மார்க்கத்தில் இரண்டு ஹக்குகள் உள்ளன. ஒன்று ஹுகூகுல்லாஹ் - அல்லாஹ்வின் உரிமைகள். இதில் செய்யப்படுகின்ற குறைகளை அல்லாஹ் அவனது அருளால் மன்னிக்கப் போதுமானவன். இரண்டாவது ஹகூகுல் இபாத் - அடியார்களின் உரிமைகள். இதில் ஒருவர் குறை செய்துவிட்டால் சம்பந்தப்பட்டவர் மன்னிக்காத வரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்.

2. ஒருவரின் பொருளை ஒருவர் அநியாயமாக எடுத்துக்கொண்டால் அல்லது கடன் வாங்கிவிட்டு திரும்ப கொடுக்கவில்லை என்றால் அல்லது தன் மீது பிறருக்கு இருக்கும் கடமைகளை செய்ய மறுத்தால் பிறகு சம்பந்தப்பட்ட இருவரும் மரணித்துவிட்டால் அத்தோடு பிரச்சனை முடிந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். அந்த பிரச்சனை மஹ்ஷர் மைதானத்தில் நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியின் முன்னிலையில் கொண்டு வரப்படும்.

3. அவனின் நீதி மன்றத்தில் யாரும் யாருக்கும் சிபாரிசு செய்ய முடியாது, எந்த செல்வமும் அங்கு பலன் தராது. நீதி மிகச் சரியாக இருக்கும். எப்படி செய்தாரோ அப்படித்தான் கூலி கொடுக்கப்படும். முட்டிய ஆட்டை முட்டப்பட்ட ஆடு முட்டும். அதுதான் நீதி. அல்லாஹ் நீதியை நிலை நிறுத்தியே ஆவான்.

இரண்டாவது ஹதீஸ்

عَنْ أَبِي أُمَامَةَ ﷺ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ مَنِ اقْتَطَعَ حَقَّ امْرِئٍ مُسْلِمٍ بِيَمِينِهِ فَقَدْ أَوْجَبَ اللّٰهُ لَهُ النَّارَ وَحَرَّمَ عَلَيْهِ الْجَنَّةَ فَقَالَ لَهُ رَجُلٌ وَإِنْ كَانَ شَيْئًا يَسِيرًا يَا رَسُولَ اللّٰهِ قَالَ وَإِنْ قَضِيبًا مِنْ أَرَاكٍ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் தனது சத்தியத்தால் ஒரு முஸ்லிமான மனிதரின் உடமையை பறித்துக் கொள்வாரோ அல்லாஹ் அவருக்கு நரகத்தை கட்டாயமாக்கி விடுவான்; இன்னும்

அவர் மீது சொர்க்கத்தை ஹராமாக்கிவிடுவான். அப்போது நபி அவர்களிடம் ஒருவர் கேட்டார், ரஸூலுல்லாஹ்வே! அது ஒரு சாதாரண பொருளாக இருந்தாலுமா? நபி அவர்கள் கூறினார்: அது, பல்துலக்கும் அராக் மரக் குச்சியாக இருந்தாலும்தான்.[46]

படிப்பினைகள்

1. நமக்கு ஆகுமாகாததை அடைய நாம் ஆசைப்படக் கூடாது.

2. பிறர் பொருளுக்கு ஆசைப்படுவது ஆபத்தில் முடிந்து விடும்.

3. அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வது மிக மகத்தான ஒன்றாகும். உண்மைக்கேத் தவிர வேறு எதற்கும் அல்லாஹ்வின் கண்ணியமான பெயர்கள் எதையும் நாம் பயன்படுத்திவிடக் கூடாது.

4. பிறருக்கு உரிமையானதை ஆசைப்படுவது, அதை அபகரிப்பது அல்லாஹ்வின் பார்வையில் பெரிய கொடிய குற்றமாகும். அதை செய்பவர் தன்னைத் தானே திறமையானவர் என்றோ ரொம்ப ஸ்மார்ட் என்றோ எண்ணிக் கொள்ளலாம். ஆனால், அது ஒரு கேவலமான செயல் ஆகும்.

5. ஆகவேதான் அந்த கேவலத்தை செய்தவருக்கு சொர்க்கத்தில் இடமில்லை. கேவலமானவர்கள் உடைய தங்குமிடத்தில்தான் அவருக்கு தங்குமிடம் இருப்பது பொருத்தமாக இருக்கும்.

6. பிறர் பொருளை அபகரிப்பதை ஒருவர் ஆகுமானதாக கருதினால், அவர் ஹராமை ஹலால் என்று கருதியவர் ஆவார். ஆகவே அவர் காஃபிர் உடைய சட்டத்தில் வந்துவிடுவார். இப்படிப்பட்டவர்கள் நேரடியாக இந்த ஹதீஸின் எச்சரிக்கையில் வந்து விடுவார்கள். யார் இந்த குற்ற செயலை ஆகுமானதாக கருதாமல் உலக ஆசையில் செய்துவிடுவார்களோ அவர்கள் தங்கள் குற்றத்திற்கான தண்டனைக்குப் பிறகு நரகத்தில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

46. அறிவிப்பாளர்: அபூ உமாமா ﵁ , நூல்: முஸ்லிம், எண்: 137

இதுதான் அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கையாகும்.

7. நபித்தோழர்கள் தங்களுக்குத் தெரியாததை, குழப்பமாக அல்லது சந்தேகமாக உள்ளதை உடனே நபியவர்களிடம் கேட்டு விளக்கம் பெற்றுக்கொள்வார்கள். நபித்தோழர்கள் அல்லாஹ்வின் அச்சம் மிகுந்தவர்களாக இருந்தார்கள். மறுமையின் பயம் அவர்களுக்கு அதிகமாக இருந்தது.

8. ஆகவே, மார்க்கத்தில் அவர்களுக்கு புரியாததை நான் புரிந்துகொண்டேன் என்று சொல்பவன் சர்வ முட்டாளாகத்தான் இருப்பான்.

9. பெரும் பாவத்தை பொறுத்த வரை அதன் அளவு பார்க்கப்படாது. அதை எத்தனை முறை செய்தான், எந்தளவு செய்தான் என்பது கணக்கல்ல. உதாரணமாக கொலையை எடுத்துக் கொள்வோம். சிறுவனை கொல்வது, வாலிபனைக் கொல்வது, வயோதிகனை கொல்வது, ஆரோக்கியமானவனை கொல்வது, நோயாளியை கொல்வது, ஏழையைக் கொல்வது, பணக்காரனைக் கொல்வது என்று தனித்தனியாக பார்க்கப்படாது. அப்படித்தான் பிறர் பொருளை, உரிமையை, உடமையை பறிப்பது, அபகரிப்பதும். ஆகவேதான் பல் துலக்கும் குச்சியை அபகரித்திருந்தாலும் அவனுக்கும் அதே சட்டம்தான்.

மூன்றாவது ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ أَتَدْرُونَ مَا الْمُفْلِسُ قَالُوا: الْمُفْلِسُ فِينَا مَنْ لَا دِرْهَمَ لَهُ وَلَا مَتَاعَ، فَقَالَ: «إِنَّ الْمُفْلِسَ مِنْ أُمَّتِي يَأْتِي يَوْمَ الْقِيَامَةِ بِصَلَاةٍ وَصِيَامٍ وَزَكَاةٍ وَيَأْتِي قَدْ شَتَمَ هَذَا وَقَذَفَ هَذَا وَأَكَلَ مَالَ هَذَا وَسَفَكَ دَمَ هَذَا وَضَرَبَ هَذَا فَيُعْطَى هَذَا مِنْ حَسَنَاتِهِ وَهَذَا مِنْ

حَسَنَاتِهِ فَإِنْ فَنِيَتْ حَسَنَاتُهُ قَبْلَ أَنْ يُقْضَىٰ مَا عَلَيْهِ أُخِذَ مِنْ خَطَايَاهُمْ فَطُرِحَتْ عَلَيْه ثُمَّ طُرِحَ فِي النَّارِ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள், நீங்கள் பரம ஏழை - திவாலானவன் யார் என்று அறிவீர்களா? என்று கேட்டார்கள். எங்கள் பார்வையில் யாரிடம் எந்த காசு பணம், பொருள் அறவே இல்லையோ அவர்தான் பரம ஏழை என்று தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக எனது உம்மத்தில் பரம ஏழை யாரென்றால் அவர் தொழுகை, நோன்பு, இன்னும் சகாத் ஆகிய இபாதத்துகளுடன் வருவார். அதே சமயத்தில் அவர் இவரை திட்டினார், இவரை அவதூறு கூறினார், இவரின் செல்வத்தை அபகரித்தார், இவரை கொன்றார், இவரை அடித்தார் என்ற குற்றங்களுடன் வருவார். அப்போது இவர், இவருக்கெல்லாம் அவரின் நன்மைகளில் இருந்து கொடுக்கப்பட்டு விடும். அவர் மீதுள்ள குற்றங்களுக்கு பழி தீர்க்கப்படுவதற்கு முன்பாக அவரின் நன்மைகள் எல்லாம் அழிந்துவிட்டால் (பாதிக்கப்பட) இவர்களின் பாவங்களை எடுத்து அவர் மீது வீசப்படும். பிறகு, அவரையும் நரகத்தில் வீசி எறியப்படும்.[47]

படிப்பினைகள்

1. நமது அகராதி வேறு, அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறுவதற்கு அவர்களிடம் தனி பொருள் ஒன்று இருக்கலாம். ஆகவே, மார்க்கத்தில் நமது அகராதியை வைத்து முடிவு செய்யக் கூடாது.

2. இம்மைக்கும் மறுமைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இங்கு பாக்கியம் பெற்றவன் அங்கு அபாக்கியவானாக இருப்பான். இங்கு அபாக்கியவானாக இருப்பவன் அங்கு பாக்கியவானாக இருப்பான்.

3. காசு பணத்தை வைத்து மக்கள்தான் மதிப்பு போடுவார்கள்.

47. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: முஸ்லிம், எண்: 2581

அல்லாஹ்வும் ரஸூலும் அமல்களையும் குணங்களையும் வைத்துதான் மதிப்பிடுவார்கள்.

4. மறுமை என்பது முற்றிலும் அமல்களின் இல்லமாகும். அங்கு அமல்தான் செல்லும். காசு, பணம், தங்கம், வெள்ளி, பதவி, பந்தா, எதுவும் அங்கே செல்லுபடியாகாது. அமல்களை வைத்துதான் எதுவும் முடிவு செய்யப்படும்.

5. உலகத்தோடு கதை முடிந்தது என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். மறுமையில் எல்லாவற்றுக்கும் ஒரு நல்ல முடிவு உண்டு. எல்லாம் கணக்கு வைக்கப்பட்டிருக்கும். சின்னது பெரியது எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கும். உங்களின் பணமோ பதவியோ உறவோ யாரும் உங்களை அல்லாஹ்விடமிருந்து பாதுகாக்காது.

6. தொழுதவன் எல்லாம் சொர்க்கம் புகுந்து விட முடியாது. இன்னும் வேறு வேறு வணக்க வழிபாடுகள் செய்தவர்களும் அப்படித்தான். பாவங்களை எல்லாம் செய்துவிட்டு, பிறகு தொழுது, அல்லது ஹஜ், உம்ரா செய்து, அல்லது வேறு ஏதும் புண்ணியம் செய்துவிட்டு தப்பித்துவிடுவதற்கு இது ஒன்னும் அப்பம் சாப்பிடுகின்ற மதம் அல்ல. செய்த பெரும் பாவத்திற்காக வருந்த வேண்டும், இனி அவற்றை செய்ய மாட்டேன் என்று உறுதி எடுக்க வேண்டும், அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இவற்றுடன் செய்த பாவம் அடியார்களுடன் தொடர்புடையதாக இருந்தால் அவர்களிடம் சென்று அதை சரி செய்ய வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வும் மன்னிப்பான். அடியார்கள் சம்பந்தப்பட்ட குற்றத்தை அவர்கள் மன்னிக்காமல் அல்லாஹ் மன்னிக்க மாட்டான்.

7. உரிமைகள் பறிக்கப்பட்டவர்கள், உடமைகள் பறிக்கப்பட்டவர்கள், இன்னும் எந்த வகையில் யார் ஒருவர் பிறரால் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தாலும் சரி அவர் கவலைப்பட வேண்டாம். அடியார்களின் ரப்பு மறுமையில் சரியாக கணக்கு தீர்த்து விடுவான். பறிக்கப்பட்ட உங்கள் உரிமைகள், உடமைகளுக்குப் பதிலாக உங்களுக்கு நாளை

மறுமையில் நன்மைகள் கிடைக்கும். உங்கள் பாவங்கள் உங்கள் ஏட்டிலிருந்து எடுக்கப்பட்டு உங்களுக்கு அநியாயம் செய்தவரின் தலையில் சுமத்தப்பட்டு விடும். நீங்கள் பாவமற்றவர்களாகி விடுவீர்கள். ஆகவே, நீங்கள் சொர்க்கம் செல்லலாம். தொழுது வணங்கி வழிபாடுகளுடன் வந்தவர்கள் எல்லாவற்றையும் அங்கே பிறரிடம் கொடுத்துவிட்டு, அவர்களின் பாவங்களை தங்கள் தலையில் சுமந்துகொண்டு நரகம் செல்வார்கள். நிலைமை தலைகீழாக மாறிவிடும்.

8. நபி ﷺ அவர்கள் தங்கள் உம்மத்துக்கு தொழுகை, நோன்பை மட்டும் போதிக்கவில்லை. எப்படி வாழ வேண்டும், யார் யாருக்கு என்னென்ன செய்ய வேண்டும், எது செய்யக்கூடாது, பிறர் விஷயத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டிய ஒவ்வொரு சிறிய பெரிய விஷயம் என வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் நபியவர்கள் நமக்கு கற்றுக்கொடுத்து இருக்கின்றார்கள். அத்தகைய வழிகாட்டல்களில் சிலதான் இந்தப் பாடத்தில் கூறப்பட்ட சில நபிமொழிகள். குர்ஆனும் ஹதீஸும் அடியார்கள் உரிமை விஷயத்தில் கூறி இருக்கும் எச்சரிக்கைகள் அல்லாஹ்வின் உரிமைகள் விஷயத்தில் கூறிய எச்சரிக்கைகளுக்கு சற்றும் குறைவானது அல்ல.

உதாரணமாக தொழுகையில் அலட்சியம் செய்பவனுக்கு வைல் - (என்ற நரக பள்ளத்தாக்கு) உண்டு.

மக்களின் பொருள்களில் கொடுக்கல் வாங்கல் செய்யும்போது அலட்சியம் செய்பவனுக்கும் வைல் (- நரக பள்ளத்தாக்கு) உண்டு.

தொழுகையின் நேரத்தில் கவனமில்லாமல் இருப்பவனும் அதில் அலட்சியம் செய்பவனும் முனாஃபிக். இன்னும் மக்களிடம் கொடுத்த வாக்கை நிறைவேற்றாதவனும் அவர்களின் நம்பிக்கையில் மோசடி செய்தவனும் முனாஃபிக் ஆவான். இப்படியாக பல உதாரணங்களை கூறலாம்.

9. ஆகவே, உண்மையான முஸ்லில் மார்க்கத்தில் தனக்கு பிடித்ததை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றதை விட்டு விடக் கூடாது. தனது சுய விருப்பு வெறுப்பு இன்றி அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். ஹுகூகுல் இபாதிற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், ஹுகுகுல்லாஹ்விற்கு முக்கியத்துவம் கொடுப்பது போல்.

10. ஹுகூகுல் இபாதில் தான் குறை செய்துவிட்டால் உடனே சம்பந்தப்பட்டவரிடம் மன்னிப்பு கேட்டுவிட வேண்டும். அப்போதுதான் தவ்பா பூர்த்தியாகும். மன்னிப்பு என்பது வெறும் வாயினால் சொல்வது மட்டுமல்ல. ஒவ்வொரு தப்பிலும் குற்றத்திலும் மன்னிப்பு வித்தியாசமாக இருக்கலாம். அப்போதுதான் மறுமையில் தப்பிக்க முடியும்.

11. மறுமையின் பயம் அதிகமாக இருக்க வேண்டும். கூலி கொடுக்கப்படும் தீர்ப்பு நாளின் அச்சம் அதிகமாக இருக்க வேண்டும். எல்லா நன்மைகளுக்கும் அதாவது நன்மைகளை சரியாக செய்வதற்கும் பாவங்களை விட்டு விலகி இருப்பதற்கும் மறுமை நம்பிக்கை அடிப்படையாக இருக்கிறது. இஸ்லாம் கூறுகின்ற மறுமை நம்பிக்கைதான் சரியானதும் உண்மையானதும் ஆகும்.

நான்காவது ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ مَنْ أَخَذَ أَمْوَالَ النَّاسِ يُرِيدُ أَدَاءَهَا أَدَّى اللهُ عَنْهُ وَمَنْ أَخَذَ يُرِيدُ إِتْلاَفَهَا أَتْلَفَهُ اللهُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் மக்களின் செல்வங்களை அவற்றை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வாங்குவாரோ அல்லாஹ் அவர் சார்பாக அதை நிறைவேற்றுவான். (அவர் அதை திரும்ப ஒப்படைப்பதில் அல்லாஹ் அவருக்கு உதவுவான்.) யார் மக்களின் செல்வங்களை அழிக்க வேண்டும் என்ற

எண்ணத்தில் வாங்குவாரோ அவரை அல்லாஹ் அழித்துவிடுவான்.[48]

படிப்பினைகள்

1. நமது செயலுக்கும் எண்ணத்திற்கும் ஆழ்ந்த தொடர்பு உள்ளது.

2. அல்லாஹ் ஓர் அடியானுடன் நடந்து கொள்வது அவனது எண்ணத்தின் படிதான்.

3. ஒருவனின் செயல் அவனது உள்ளத்தின் எண்ணத்தை சில நேரம் காண்பித்து கொடுத்துவிடும்.

4. நல்லவர்கள் தங்கள் எண்ணத்தை சரியாக வைத்திருப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவார்கள்.

5. நல்ல உள்ளம் உள்ளவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி இம்மையிலும் மறுமையிலும் மிகவும் நெருக்கமாக இருக்கும்.

6. பாவிகளின் உள்ளம் கெட்டு இருப்பதால் அவர்கள் அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளாகி விடுகிறார்கள்.

7. எப்போதும் உயர்வான எண்ணங்களை வைக்க வேண்டும்.

8. பாவமான செயல்களுக்கு பாவமன்னிப்பு தேடுவதுபோல் பாவமான எண்ணங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்க வேண்டும்.

9. வணக்க வழிபாட்டுக்கு மட்டும் நிய்யத் இல்லை. மாறாக, கொடுக்கல் வாங்கலிலும் நிய்யத் இருக்கிறது. நல்ல நிய்யத்தோடு கொடுக்கல் வாங்கல் செய்பவர் அல்லாஹ்வின் உதவிக்கும் அருளுக்கும் உரியவராக இருக்கின்றார்.

10. பொருளாதாரம், கொடுக்கல் வாங்கல், விற்பது, வாங்குவது போன்ற உலக விஷயங்கள் எதுவாக இருந்தாலும் யார் அதில்

48. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி, எண்: 2387

நீதமாக நேர்மையாக நடக்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ் உலகத்தில் கொடுக்க வேண்டிய பிரதிபலன்களை கொடுத்துவிடுவான். ஈமான் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு மறுமையில் நன்மை இருக்காது. ஆனால், அதற்கு பதிலாக இவ்வுலகில் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அபிவிருத்திகள் கிடைத்துவிடும்.

11. உலகம் பொதுவானது. அதில் யார் நீதம் நேர்மை பேணினாலும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அல்லாஹ்வின் உலக கூலி கிடைத்து விடும். ஈமான் இல்லாத காரணத்தால் மறுமையின் நன்மையை அவர்கள் இழந்துவிடுவார்கள் என்பது தனி.

12. இதுதான் இன்று பல முஸ்லிம்கள் வியாபாரத்தில் பின்தங்கி இருப்பதற்கும் முஸ்லிமல்லாத பலர் வியாபாரத்தில் முன்னேறி இருப்பதற்கும் முக்கிய காரணமாகும். பல காஃபிர்களிடம் நியாயம் நம்பிக்கை, நேர்மை இருக்கின்றது. பல முஸ்லிம்கள் மோசடியின் மன்னனாக அதில் கொடிகட்டி திகழ்கிறார்கள்.

13. நமது மார்க்கம் வணக்க வழிபாடு, உலக பொருளாதாரம், குடும்ப வாழ்கை, ஆட்சி, அரசியல் என இவ்வுலகத்தில் உயிர் வாழ்வதற்கு தேவையான, அவசியமான அனைத்தையும் மார்க்கத்திற்குள் கொண்டுவந்துள்ளது. பிறகு, ஒவ்வொரு துறைக்கும் மிகச் சரியான வழிகாட்டல்களை கொடுத்துள்ளது. நன்மைக்கு நன்மையையும் தீமைக்கு தண்டனையையும் உறுதி செய்துள்ளது. ஒவ்வொன்றுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை சம அளவில் கொடுத்துள்ளது. எந்த பகுதியிலும் சரிவு வராமல் பாதுகாத்துள்ளது.

14. எப்போதும் அல்லாஹ் நம்மை பார்க்கின்றான், நமது எண்ணங்களையும் செயல்களையும் அல்லாஹ் அறிகின்றான் என்ற நம்பிக்கையும் நினைவும் நமக்குள் இருக்க வேண்டும்.

15. அல்லாஹ்வின் கூலி மிக மகத்தானதாக இருப்பதுபோன்று அவனது தண்டனையும் மிகக் கடுமையாக இருக்கும். ஆகவே, ஒரு

முஸ்லிம் அல்லாஹ்வின் தண்டனையை அதிகம் அஞ்சியவராக இருக்க வேண்டும். வியாபாரத்தில் தவறிழைத்த ஒரு சமுதாயத்தை அழித்துள்ள சம்பவம் அல்குர்ஆனில் பல இடங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளதை மறந்து விடக்கூடாது.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 17

நல்லெண்ணம்

நல்ல உள்ளம் எப்போதும் நல்ல எண்ணங்களை உடையதாக இருக்கும்.

உள்ளம் ஒரு வெண்மையான காகிதம்போல். அதில் நாம் எழுதும் எண்ணங்களுக்கு ஏற்ப நமது செயல்கள் அமைகின்றன.

உடலில் படுகின்ற கறையை அல்லது ஆடையில் படுகின்ற கறையை கழுவி அகற்றிவிடலாம். அந்த கறை கண்ணுக்குத் தெரியும். அது பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. ஆகவே, மனிதன் அதை அகற்ற, இன்னும் தன்னை சுத்தப்படுத்திக்கொள்ள விரைந்து செயல்படுவான்.

ஆனால், உள்ளத்தில் உள்ள அழுக்குகள், கறைகள் அப்படி அல்ல. அவை அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும் தெரியாது.

உள்ளத்தில் உள்ள அழுக்குகள், கறைகள் என்றால் என்ன? ஆம், அவைதான் கெட்ட, அசிங்கமான, மோசமான, தீய எண்ணங்கள் ஆகும்.

வண்ணங்கள் பல்லாயிரம் இருப்பதுபோல் எண்ணங்களும் அப்படி இருக்கின்றன. வித விதமான எண்ணங்கள், வகை வகையான எண்ணங்கள். ஒன்று போய் மற்றொன்று உள்ளத்தில் வந்துகொண்டே

இருக்கின்றது. வாழ்நாள் எல்லாம் ஒரே போராட்டம்தான், இந்த எண்ணத்தை எப்படி சரி செய்வது, எப்படி இதை கட்டுப்படுத்துவது என்று.

பொந்துகளில் இருந்து பாம்புகள் எட்டிப் பார்ப்பதுபோல் கெட்ட எண்ணம் எட்டிப் பார்த்துக் கொண்டே இருக்கின்றது. ஓயாத அலைகள்போல் இந்த எண்ண அலைகளும் உள்ளத்தில் ஓய்வதில்லை. நாம் உறங்கினாலும் அது உறங்குவதில்லை போலும்.

உள்ளம் ஒரு நிலத்தைப் போல. அதை சுத்தம் செய்துகொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் தேவையற்ற புற்பூண்டுகள் முளைத்து விஷ பூச்சுகளின், விஷ ஜந்துக்களின் இருப்பிடமாக மாறிவிடும். அப்படித்தான் உள்ளமும். அதை அனுதினம் அல்ல, ஒவ்வொரு நொடியும் சுத்தம் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

இந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை கொண்டுவர அதில் தக்வா - அல்லாஹ்வின் அச்சம் இருக்க வேண்டும். அதில் அல்லாஹ்வின் நினைவு இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

முகஸ்துதி, புகழ் விரும்புதல், பிறர் பொருள் மீது ஆசைப்படுவது, ஹராமான இச்சைகளை நினைப்பது இப்படியாக ஒரு நீண்ட பட்டியலை நாம் போடலாம் கெட்ட எண்ணங்களுக்கு.

எந்த செயல்கள் எல்லாம் மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளனவோ அவற்றை உள்ளத்தில் விரும்புவது கெட்ட எண்ணம் ஆகும். அதை தவிர்க்க வேண்டும்.

உதாரணமாக விபச்சாரம் ஒரு பாவமாகும். அதை மனதில் எண்ணி, அந்த எண்ணத்தை உணர்ச்சியாக்கி உள்ளத்தால் இன்புறுவதும் பாவமாகும். அப்படி எண்ணம் வரும்போதே உடனே உள்ளத்தில் இருந்து அந்த எண்ணத்தை அகற்றிவிட வேண்டும். ஆகவேதான் நாம் நமது பார்வைகளை தாழ்த்தும்படி ஏவப்பட்டுள்ளோம். பார்வையை ஒருமுறைக்கு மேல் தொடரக்கூடாது என்றும் நமக்கு

வழிகாட்டப்பட்டுள்ளது. அந்த பார்வையில் ஆயிரம் ஆசைகளும் தீய எண்ணங்களும் மனித உள்ளத்திற்குள் ஊறிவிடும்.

பல இடங்களில் கொலையும் பலாத்காரமும் பார்வை என்ற பொறியினால் முதலில் தோன்றி பிறகு தீயாக மாறின.

நமது நபி ﷺ அவர்கள் அனுப்பப்பட்ட உயர் குறிக்கோள்களில் ஒன்று தஸ்கியா - உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவதாகும். தமது வாழ்நாள் எல்லாம் உள்ளங்களுக்கு அறிவுரை கூறிக்கொண்டே இருந்தார்கள் நமது நபி ﷺ.

உள்ளம் சுத்தமாகவும் தூய்மையாகவும் இருக்கின்ற நிலையில் நாம் தொழும்போது அந்த தொழுகையை தக்வாவோடும் இறை அன்போடும் இறை நினைவோடும் நிறைவேற்ற முடிகிறது. உடல் மட்டுமில்லாமல் உள்ளமும் ரப்புக்கு முன்னாள் வணக்கத்தில் ஈடுபடுகிறது. நாம் ஓதுவதை சிந்திக்கின்றது, அதை புரிகின்றது, அதை உணர்கிறது, கண் கலங்குகிறது, தக்வாவும் ஈமானும் அதிகரிக்கின்றது. தொழுத தொழுகையின் உணர்வு உள்ளத்தில் தங்கி இருக்கும். அந்த தொழுகைதான் மனிதனை மானக்கேடான மற்றும் பாவமான காரியங்களில் இருந்து தடுக்கக்கூடியதாக இருக்கும்.

உள்ளம் சுத்தமடைந்த நிலையில் ஒருவருக்கு இரண்டு ரக்அத்துகள் தொழக்கூடிய பாக்கியம் கிடைத்துவிட்டால் அது எப்பேற்பட்ட பெரும் பாக்கியம் ஆகும்.

நாமும் தொழுதுகொண்டுதான் இருக்கின்றோம். நமது சான்றோரும் தொழுதார்கள். அவர்களது தொழுகை அவர்களின் உள்ளங்களை மென்மையாக்கின, கண்களில் அழுகையை வரவைத்தன. ஏனெனில், அவர்கள் உளூ செய்யும்போது அவர்களது உள்ளத்தையும் சுத்தம் செய்தார்கள். நமது நபியின் கூற்றை இங்கு கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! உளூ செய்யும்போது பாவங்கள் ஒவ்வொரு உறுப்பிலிருந்தும் வெளியேறுகின்றன என்று நமது நபி கூறினார்கள்.

பிறகு, உளூ செய்து முடித்தவுடன் அல்லாஹ்வே என்னை தவ்வாபீன் - பாவங்களைவிட்டு மீண்டோரில் ஆக்கு! முததஹ்ஹிரீன் - உடலும் உள்ளமும் பரிசுத்தம் பெற்ற நல்லோரில் ஆக்கு! என்ற அழகிய துஆவையும் நமது நபி நமக்கு கற்றுக் கொடுத்த உள்ளர்த்தத்தை இப்போது சிந்தித்து புரிய முயற்சி செய்யுங்கள்!

ஆம், அல்லாஹ்விற்கு முன் நிற்கும்போது உடல் சுத்தம், உடை சுத்தம், இடம் சுத்தமாக இருப்பதோடு நமது மனதும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளத்தில் முகஸ்துதி இருக்கக் கூடாது. உள்ளம் பாவங்களில் சிக்கி இருக்கக்கூடாது. பாவமன்னிப்பு கேட்டு உள்ளத்தை சுத்தப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். ஆகவேதான் நபி அவர்கள் ஒரு நாளையில் பலமுறை பாவமன்னிப்பு தேடுவார்கள். ஒரு சபையில் பலமுறை பாவமன்னிப்பு தேடுவார்கள்.

மேலும், இஸ்திக்ஃபார் கேட்கும்படி நம்மையும் தூண்டினார்கள்.

இன்னும், உள்ளத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு பல துஆக்களை நமக்கு கற்பித்து கொடுத்துள்ளார்கள்.

இக்லாஸ் - அல்லாஹ் ஒருவனின் திரு முகத்தை மட்டும் நாடுவதும் அல்லாஹ்வின் பயமும் நமக்கு மிக முக்கியமான அடிப்படையாகும் நமது உள்ளங்களில் நல்லெண்ணங்கள் எப்போதும் நீடித்து இருப்பதற்கு.

இந்த இரண்டு குணங்களும் பலவீனப்பட்டால் உள்ளம் கெட்ட எண்ணங்களின் சங்கமமாக மாறிவிடும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

வாருங்கள், கம்பீரமும் கண்ணியமும் மிக்க அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு கூறிய சில வழிகாட்டல்களை செவியுறுவோம்:

﴿إِذْ جَاءُوكُمْ مِنْ فَوْقِكُمْ وَمِنْ أَسْفَلَ مِنْكُمْ وَإِذْ زَاغَتِ الْأَبْصَارُ
وَبَلَغَتِ الْقُلُوبُ الْحَنَاجِرَ وَتَظُنُّونَ بِاللَّهِ الظُّنُونَا (١٠)﴾

பொருள் : உங்களுக்கு மேற்புறமிருந்தும், கீழ்ப்புறமிருந்தும் (உங்களைச் சூழ்ந்து கொண்டு) அவர்கள் வந்த சமயத்தில் உங்கள் திறந்த கண்கள் திறந்தவாறே இருந்து உங்கள் உள்ளங்கள் உங்கள் தொண்டைக் குழிகளை அடைத்து (நீங்கள் திக்குமுக்காடி) அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் பலவாறு எண்ணிய சமயத்தையும் நீங்கள் நினைத்துப் பாருங்கள். (அல்குர்ஆன் 33 : 10)

﴿الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ قُلُوبُهُمْ بِذِكْرِ اللهِ أَلَا بِذِكْرِ اللهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ (٢٨)﴾

பொருள் : மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அவர்கள்தான்; (அவர்கள் முன்) அல்லாஹ்வின் திருப்பெயர் துதி செய்யப்பட்டால், அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைந்து விடுகின்றன. (ஏனென்றால்,) அல்லாஹ்வின் திருப்பெயரை துதி செய்வதனால் (உண்மை நம்பிக்கையாளர்களின்) உள்ளங்கள் நிச்சயமாக நிம்மதி அடையும் என்பதை (நபியே!) அறிந்துகொள்வீராக. (அல்குர்ஆன் 13 : 28)

﴿لَقَدْ مَنَّ اللهُ عَلَى الْمُؤْمِنِينَ إِذْ بَعَثَ فِيهِمْ رَسُولًا مِنْ أَنْفُسِهِمْ يَتْلُو عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِنْ كَانُوا مِنْ قَبْلُ لَفِي ضَلَالٍ مُبِينٍ (١٦٤)﴾

பொருள் : அல்லாஹ், நம்பிக்கையாளர்களின் மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கிறான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களில் இருந்தே அனுப்பினான். அவர் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களை பரிசுத்தமாக்கியும் வைக்கிறார். மேலும், அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். நிச்சயமாக அவர்கள் இதற்கு

முன் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்தனர்.

(அல்குர்ஆன் 3 : 164)

﴿قُلْ إِنْ تُخْفُوا مَا فِي صُدُورِكُمْ أَوْ تُبْدُوهُ يَعْلَمْهُ اللهُ وَيَعْلَمُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ وَاللهُ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ (٢٩)﴾

பொருள் : (நபியே!) கூறுவீராக: உங்கள் மனங்களில் நீங்கள் மறைத்துக் கொண்டாலும் அல்லது அதை வெளிப்படுத்தினாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிவான். (இது மட்டிலுமா?) வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ளவற்றையும் அவன் அறிகிறான். (அறிவது மட்டுமல்ல) அல்லாஹ் (இவை) அனைத்தின் மீதும் பேராற்றலுடையவன். (அல்குர்ஆன் 3 : 29)

عَنْ عُمَرَ بْنَ الخَطَّابِ ﵁ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَىٰ فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَىٰ دُنْيَا يُصِيبُهَا أَوْ إِلَى امْرَأَةٍ يَنْكِحُهَا فَهِجْرَتُهُ إِلَىٰ مَا هَاجَرَ إِلَيْهِ

ரசூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: அவர்கள் கூறினார்கள், அமல்கள் எல்லாம் எண்ணங்களைக் கொண்டுதான் முடிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் அவர் எண்ணியதுதான் கிடைக்கும். யார் உலகத்தை அடைய ஹிஜ்ரத செய்வாரோ அல்லது ஒரு பெண்ணை மனமுடிக்க ஹிஜ்ரத் செய்வாரோ அவர் எதை நாடி ஹிஜ்ரத் செல்வாரோ அதற்காகவே அவரது ஹிஜ்ரத் அமையும்.[49]

عَنِ ابْنِ عَبَّاسٍ ﵁ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ لاَ هِجْرَةَ بَعْدَ الفَتْحِ وَلَـكِنْ جِهَادٌ وَنِيَّةٌ وَإِذَا اسْتُنْفِرْتُمْ فَانْفِرُوا

49. அறிவிப்பாளர்: உமர் ﵁, நூல்: புகாரி, எண்: 1

மக்கா வெற்றி பெற்ற பின்னர் அங்கிருந்து ஹிஜ்ரத் செய்வது கூடாது. என்றாலும் ஜிஹாதும் நல்ல நிய்யத்தும் இருக்கிறது. நீங்கள் போருக்கு புறப்படுமாறு அழைக்கப்பட்டால் போருக்கு புறப்பட்டு செல்லுங்கள்![50]

عَنْ مَعْنَ بْنَ يَزِيدَ ﵁ عَنْهُ قَالَ بَايَعْتُ رَسُولَ اللهِ ﷺ أَنَا وَأَبِي وَجَدِّي وَخَطَبَ عَلَيَّ فَأَنْكَحَنِي وَخَاصَمْتُ إِلَيْهِ وَكَانَ أَبِي يَزِيدُ أَخْرَجَ دَنَانِيرَ يَتَصَدَّقُ بِهَا فَوَضَعَهَا عِنْدَ رَجُلٍ فِي المَسْجِدِ فَجِئْتُ فَأَخَذْتُهَا فَأَتَيْتُهُ بِهَا فَقَالَ وَاللهِ مَا إِيَّاكَ أَرَدْتُ، فَخَاصَمْتُهُ إِلَىٰ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَقَالَ لَكَ مَا نَوَيْتَ يَا يَزِيدُ وَلَكَ مَا أَخَذْتَ يَا مَعْن

நானும் என் தந்தையும் என் பாட்டனாரும் ரஸூலுல்லாஹ் அவர்களிடம் பைஅத் சத்திய வாக்கு பிரமாணம் செய்து கொடுத்தோம். என் தந்தை எனக்கு பெண் பேசி, பிறகு, எனக்கு திருமணம் செய்து வைத்தார். நான் அவரிடம் வாக்கு வாதம் செய்தேன். எனது தந்தை சில தீனார்களை எடுத்துக் கொண்டு அவற்றை தர்மம் செய்ய சென்றார். அதை மஸ்ஜிதில் இருந்த ஒருவருக்கு அருகில் வைத்துவிட்டு சென்றுவிட்டார். நான் மஸ்ஜிதிற்க்கு சென்று அவற்றை எடுத்துக் கொண்டு எனது தந்தை இடம் எடுத்துவந்தேன். அவர் கூறினார், அல்லாஹ்வின் மீது ஆணையாக உனக்கு அது கிடைக்க வேண்டும் என்று நான் நாடி அங்கு வைக்கவில்லை என்று என் தந்தை கூறினார். ஆகவே, ரஸூலுல்லாஹ் அவர்களிடம் நான் என் தந்தையைப் பற்றி நான் முறையிட்டேன். அதற்கு நபி அவர்கள் கூறினார்கள்: யசீதே நீ நிய்யத் வைத்தது உனக்கு கிடைத்துவிடும். மஅனே உனக்கு நீ எடுத்தது ஆகுமானதாகும்.[51]

50. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ், நூல்: புகாரி, எண்: 2783
51. அறிவிப்பாளர்: மஅன் இப்னு யசீது, நூல்: புகாரி, எண்: 1422

عَنِ الأَحْنَفِ بْنِ قَيْسٍ قَالَ ذَهَبْتُ لِأَنْصُرَ هٰذَا الرَّجُلَ فَلَقِيَنِي أَبُو بَكْرَةَ فَقَالَ أَيْنَ تُرِيدُ؟ قُلْتُ أَنْصُرُ هٰذَا الرَّجُلَ قَالَ ارْجِعْ فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِذَا التَقَى المُسْلِمَانِ بِسَيْفَيْهِمَا فَالقَاتِلُ وَالمَقْتُولُ فِي النَّارِ فَقُلْتُ يَا رَسُولَ اللهِ هٰذَا القَاتِلُ فَمَا بَالُ المَقْتُولِ قَالَ إِنَّهُ كَانَ حَرِيصًا عَلَىٰ قَتْلِ صَاحِبِهِ

நான் இந்த மனிதருக்கு - அலி அவர்களுக்கு உதவி செய்வதற்காக (வாளேந்தி) புறப்பட்டு சென்றபோது என்னை அபூ பக்ரா அவர்கள் சந்தித்து எங்கு செல்ல நாடுகிறாய் என்று கேட்டார்கள். இவருக்கு உதவ நான் செல்கிறேன் என்று கூறினேன். அவர் கூறினார்: நீ திரும்ப செல்! ரஸூலுல்லாஹ் அவர்களிடம் அவர்கள் கூற செவியுற்று இருக்கின்றேன். அவர்கள் கூறினார்கள்: இரு முஸ்லிம்கள் தங்கள் வாள்களால் தாக்கிக் கொண்டால் கொன்றவரும் கொல்லப்பட்டவரும் நரகத்தில்தான் செல்வார்கள். அதற்கு நான் கேட்டேன்: ரஸூலுல்லாஹ்வே! கொன்ற இவர் நரகம் செல்வது புரிகிறது. ஆனால், கொல்லப்பட்ட மனிதர் நரகம் செல்வதன் காரணம் என்ன? நபி அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அவரும் தனது தோழரை கொல்ல வேண்டும் என்ற ஆசையில் இருந்தார்.[52]

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ، فِيمَا يَرْوِي عَنْ رَبِّهِ عَزَّ وَجَلَّ قَالَ قَالَ إِنَّ اللهَ كَتَبَ الحَسَنَاتِ وَالسَّيِّئَاتِ ثُمَّ بَيَّنَ ذٰلِكَ فَمَنْ هَمَّ بِحَسَنَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللهُ لَهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً فَإِنْ هُوَ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللهُ لَهُ عِنْدَهُ عَشْرَ حَسَنَاتٍ إِلَىٰ سَبْعِ مِائَةِ ضِعْفٍ إِلَىٰ أَضْعَافٍ كَثِيرَةٍ وَمَنْ هَمَّ بِسَيِّئَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللهُ لَهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً فَإِنْ

52. அறிவிப்பாளர்: அபூ பக்ரா ﵁, நூல்: புகாரி, எண்: 31

هُوَ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللهُ لَهُ سَيِّئَةً وَاحِدَةً

நபி அவர்கள் தமது ரப்பு இடமிருந்து அறிவித்து கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் நன்மைகளையும் தீமைகளையும் விதித்துவிட்டான். பிறகு, அதை அவன் தெளிவுபடுத்தினான். ஆகவே, யார் ஒருவர் ஒரு நன்மையை செய்ய வெண்டும் என்று உறுதியாக நாடுவாரோ அல்லாஹ் அவருக்கு ஒரு முழுமையான நன்மையை அவர் செய்ததாக அவருக்கு பதிவு செய்துவிடுகிறான். அவர் அந்த நன்மையை செய்யவில்லை என்றாலும் சரி. அவர் அந்த நன்மையை செய்ய உறுதியாக நாடி அதை செய்தும்விட்டால் அவருக்கு அல்லாஹ் அதை தன்னிடம் பத்து நன்மைகளாகவும் இன்னும் ஏழு நூறு நன்மைகள் வரை, இன்னும் அதிகமாக பலமடங்காக பதிவு செய்கிறான். யார் ஒரு தீமையை செய்ய வேண்டும் என்று உறுதியாக நாடி அதை அவர் செய்யவில்லை என்றால் அல்லாஹ் அவருக்கு அதை தன்னிடம் ஒரு நன்மையாக பதிவு செய்கின்றான்.[53]

படிப்பினைகள்

1. சோதனைக்காலங்களில் மனிதனின் மனதில் பலவாறு எண்ணங்கள் தோன்றும். வெறும் எண்ணங்கள் வருவதால் மட்டும் அல்லாஹ் குற்றம் பிடிக்க மாட்டான். வந்த கெட்ட எண்ணத்தை மனதில் தக்க வைப்பது, அதை சரிகாணுவதுதான் பாவமாக ஆகிவிடும்.

2. பசி, பட்டினி, பஞ்சம், போர், நோய்கள் கடுமையாகுவது, எதிரிகளின் அச்சுறுத்தல், வியாபார நஷ்டம் என சோதனைகளில் மனம் அல்லாஹ்வின் மீது உறுதியாக இருக்க வேண்டும்.

3. அந்த நேரங்களில் நமது உள்ளத்தில் சிறு ஓட்டை கிடைத்தாலும் ஷைத்தான் உள்ளே நுழைந்து அல்லாஹ்வின் மீது ஆயிரம்

53. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ﷺ, நூல்: புகாரி, எண்: 6491

தப்பெண்ணங்களை உண்டாக்கி இறை நிராகரிப்பில் அல்லது நன்றிகெட்ட தனத்தில் தள்ளிவிடுவான்.

4. பாவமான எண்ணங்கள் பலவகையாக உள்ளன. அவற்றில் மிக ஆபத்தானது ஷிர்க் அல்லது குஃப்ர் அல்லது நிஃபாக் சார்ந்த தீய எண்ணங்களாகும். உள்ளத்தில் வந்துபோகும் எண்ணங்களை மனதில் நாம் தரிபடுத்தி வைக்கக் கூடாது. உடனே வேறு நல்லெண்ணங்களின் பக்கம் நாம் நமது கவனத்தை திருப்பிவிட வேண்டும்.

5. நிம்மதியாக இருக்கும்போது அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வருவது பெரிய விஷயமல்ல. கஷ்டமான நேரத்தில் அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைக்க வேண்டும். சுகமான காலத்தில் அல்லாஹ் செய்த நிஃமத்துகளை நினைத்துப் பார்க்க வேண்டும். நம்மை விட அதிகம் கஷ்டப்படுகின்ற மக்களை நாம் நோக்க வேண்டும். நமக்கு மேலுள்ள வசதியானவர்களை அல்ல.

6. உள்ளத்தை உறுதிபடுத்தும் வலிமை ஈமானுக்கு மட்டும்தான் உண்டு. ஈமானைவிட சிறந்த ஒன்று இல்லை மனதைப் பலப்படுத்துவதற்கு.

7. அல்லாஹ்வின் நினைவு உள்ளத்தின் நிம்மதிக்கும் அமைதிக்கும் அருமையான டானிக் ஆகும். மனது தூய்மை அடைய திக்ரில் மூழ்குவதுதான் மிக பலனுள்ள பயிற்சி.

8. அல்லாஹ்வை விட சிறந்தவன் இல்லை. அவனைவிட நமக்கு நெருக்கமானவன் இல்லை. அவனைவிட நமக்கு கருணையாளன் இல்லை. அவனுடைய நேசமும் அன்பும் பயமும் உள்ளத்திற்கு கிடைத்துவிட்டால் போதும் அந்த உள்ளத்தில் தூய எண்ணங்கள் குடிகொள்வதற்கு. கெட்ட எண்ணங்கள் உள்ள இதயத்தில் அல்லாஹ்வின் அன்பும் பயமும் வராது என்று அறிந்த பின்னரும் எப்படி ஓர் அடியான் அந்த எண்ணங்களில் இருந்து தனது உள்ளத்தை சுத்தப்படுத்தாமல் இருக்க முடியும்! வீட்டுக்கு மதிப்பும் கண்ணியமும் கம்பீரமும் நிறைந்த பிரியமான விருந்தாளி வந்தால்

அவருக்காக நமது வீட்டை எவ்வளவு நாம் சுத்தப்படுத்தி, அலங்கரித்து, நறுமணம் வீசும்படி ஆக்கி வைப்போம். அல்லாஹ்வின் அன்பும் அவனது பாசமும் அவனது பயமும் நமது உள்ளத்திற்கு மிகப்பெரிய கண்ணியமிக்க விருந்தாளிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உள்ளத்தை தீய ஷிர்க்கான குஃப்ரான பாவமான எண்ணங்களால் நிரப்பி வைத்துக் கொண்டு அல்லாஹ்வின் அன்பும் ஈமானும் அதனுள் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது மிகப் பெரிய ஏமாற்றமாகும். லா இலாஹ இல்லல்லாஹ் முதலில் லா இலாஹ அல்லாஹ்வைத் தவிர உள்ளதை உள்ளத்தில் இருந்து நீக்க வேண்டும். இல்லல்லாஹ் பிறகு உள்ளத்தில் அல்லாஹ் ஒருவனை மட்டும் வைக்க வேண்டும். முதலில் தஸ்ஃபியா சுத்தப்படுத்துவது, பிறகு அலங்கரிப்பது. இதுதான் சரியான முறையாகும். பல குர்ஆன் வசனங்களை நாம் இதற்கு ஆதாரமாக கூறலாம்.

9. குர்ஆனை அதிகம் ஓதுவதும் அதை அதிகம் சிந்திப்பதும் உள்ளத்தை சுத்தப்படுத்த சிறந்த மருந்தாகும்.

10. குர்ஆனை ஓதுவது தீய எண்ணங்கள் நமக்குள் நுழையாமல் பாதுகாக்கும்.

11. அல்லாஹ்வின் கலாமை ஓதுபவர் அல்லாஹ்வுடன் தொடர்பில் இருக்கின்றார்.

12. நபியின் அழைப்பு பணிக்கு அல்லாஹ் வழங்கிய அற்புத ஆயுதம் அல்குர்ஆன் ஆகும்.

13. உள்ளம் கெட்ட குனங்களைவிட்டு சுத்தமாக வேண்டும். அத்துடன் அதில் கல்வியும் ஞானமும் ஊற்றப்பட வேண்டும். உள்ளம் தூய்மை அடைய வேண்டும். அத்துடன் வேதக்கல்வியும் தூதரின் ஞானமும் அந்த உள்ளத்தில் வேரூன்ற வேண்டும்.

14. பலர் கல்வி தேடுகின்றனர். ஆனால், உள்ளத்தை சுத்தப்படுத்துவதில்லை. எனவே, கல்வி பலனளிப்பதில்லை.

15. பலர் உள்ளத்தை சுத்தப்படுத்துகிறோம் என்று கூறி கல்வி இன்றி வழிகேட்டில் விழுந்து விடுகின்றனர்.

16. உள்ளத்தின் கண்கள் திறப்பதற்கு கல்வியும் வேண்டும், உள சுத்தமும் வேண்டும். இரண்டில் ஒன்று தவறினாலும் பாதையில் ஆபத்து அதிகம்தான். தப்பிப்பது சிரமம்தான்.

17. வேதக் கல்வியும் தூதர் ஞானமும் இறைவேத தொடர்பும் உள சுத்தமும் இல்லாத சமுதாயம் தெளிவான வழிகேட்டில் சிக்குவது நிச்சயம்.

18. வேதக் கல்வி மற்றும் தூதர் ஞானம், மற்றும் இவ்விரண்டின் அடிப்படையில் அமையப்பெற்ற உள சுத்தம் மூலமாகத்தான் நிம்மதியையும் வாழ்க்கையின் வசந்தத்தையும் இந்த உலகம் அனுபவிக்க முடியும். காசையும் பணத்தையும் அறிவியல் கண்டுப்பிடிப்பையும் வைத்து வசதியாக வாழலாம். ஆனால், வசந்தமாக வாழ முடியாது. நிம்மதியாக வாழ முடியாது. பாதுகாப்பாக வாழ முடியாது. சமூக நீதியோடு வாழ முடியாது. பரஸ்பரஅன்போடு வாழ முடியாது. சகோதரத்துவ வாஞ்சையோடு வாழ முடியாது. மனித நேயத்தோடு வாழ முடியாது. உறவுகளின் புனிதம் பேணி வாழ முடியாது. அங்கே பணம்தான் ஆட்சி செலுத்தும். சிற்றின்பம்தான் முன்னிலைப் படுத்தப்படும். அற்ப சுகம்தான் கவனத்தில் கொள்ளப்படும். பொருளாதார எதிர்ப்பார்ப்புகள் அதிகமாக இருக்கும். அன்பு தேடினாலும் கிடைக்காது. விட்டுக் கொடுத்தல் விலாசம் தெரியாமல் காணாமல் போயிருக்கும். உறவுகள் குறிப்பிட்ட வயதோடு சுருங்கி போயிருக்கும். ஆண், பெண் பொறுப்புகள் சமநிலை பெற்றிருக்காது. கொலைகளும் தற்கொலைகளும் பெண் இன வன்மமும் முக்கிய செய்திகளாக அன்றாடம் இடம் பெற்றிருக்கும். எங்கு நோக்கினாலும் சிரிப்புகள் இருந்தாலும் உள்ளமெல்லாம் வெறுப்புகளாலும் பொறாமையாலும் குரோதத்தாலும் ஆணவத்தாலும் அகம்பாவத்தாலும் தனக்கு மட்டும்

என்ற சுயநலத்தாலும் நிரம்பி இருக்கும்.

19. அல்லாஹ்வின் அருளை உங்களிடம் இருக்கும் உலக வஸ்த்துக்களில் தேடாதீர்கள். உங்களிடம் இருக்கும் பொருளாதாரத்தை வைத்து அல்லாஹ்வின் அன்பையும் அருட்கொடையையும் எடைப் போடாதீர்கள். காரூனுக்கும் ஹாமானுக்கும் ஃபிர்அவ்னுக்கும் நம்ரூதுக்கும் இன்னும் பல வழிகெட்ட மக்களுக்கும் செல்வம் மிக தாராளமாக கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால், அது அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை கொடுக்க வில்லை. இன்னும் இறை தண்டனையிலிருந்து அவர்களை காப்பாற்றவில்லை.

20. இறைவேதமும் மார்க்க ஞானமும் கொடுக்கப்பட்டவர்தான் ஆசிர்வதிக்கப்பட்டவர். அகிலங்களின் இறைவன் பிரபஞ்சத்தின் பேரரசன் அல்லாஹ்வின் அருட்கொடைகளை பெற்றவர் ஆவார். நேர்வழியோடு குர்ஆனும் சுன்னாவும் கிடைக்கப் பெறுவதுதான் மாபெரும் இறையருள் ஆகும்.

21. அல்லாஹ்வின் பார்வை என் உள்ளத்தின் மீது நீங்காமல் இருந்துகொண்டு இருக்கிறது என்று ஒருவன் நன்றாக புரிந்துகொண்டால் அவன் தனது உள்ளத்தை சுத்தமாக வைத்திருப்பதில் அதிகம் கவனம் உள்ளவனாக இருப்பான். கெட்ட எண்ணங்கள், தீய சிந்தனைகள், அழுக்கான உணர்வுகள், இன்னும் இறைவன் வெறுக்கின்ற எதுவும் உள்ளத்தில் நுழையாமல், தங்காமல் பார்த்துக் கொள்வான்.

22.அல்லாஹ்விற்கு உள்ளத்தில் உள்ளது தெரிவது மட்டுமல்ல. கெட்ட நோக்கம் கொண்டவர்களையும் தீய எண்ணமுள்ளவர்களையும் பாவ நம்பிக்கையில் இருப்பவர்களையும் கெட்டுப்போன நெஞ்சம் உடையவர்களையும் அவன் தண்டிப்பதற்கு பேராற்றல் உடையவன் ஆவான். அவன் தண்டித்தால் யாரும் தடுக்க முடியாது, காப்பாற்ற முடியாது. கதையை முடித்து விடுவான். வேரோடு அறுத்து சாய்த்து விடுவான். பூண்டோடு அழித்துவிடுவான். அடிச்சுவடு தெரியாமல்

காலிபண்ணி விடுவான். யாரையும் தப்பிக்க விடாமல் தரைமட்டமாக்கி விடுவான். கூண்டோடு ஒழித்து விடுவான். பூமிக்குள் இருந்த இடம் தெரியாமல் இழுத்துக் கொள்வான். அவனது கடல் அலைகளால் மூழ்கடித்து விடுவான். மழை வெள்ளத்தால் வீடு வாசல், சொத்து சுகம் என அடித்து செல்ல வைத்து விடுவான். வெயிலில் பொசுக்கி எரித்து விடுவான். கடும் குளிரால் உறைய வைத்து விடுவான். நோய்க் கிருமிகளால் முடங்க வைத்து, கொத்து கொத்தாக உயிர்களை தூக்கிக் கொள்வான். உண் தந்திரம் பலிக்காது. உன் முன்னேற்பாடு உன்னை பாதுகாக்காது. உன் மருத்துவம் உன்னை கைவிட்டு விடும். உனது படைகள் உன்னை சுற்றி இருக்காது. ஊரே மயானமாகி விடும். சாமிரி சொல்லி அலைந்தது போல் என்னை தொடாதே தொடாதே என்று அலைய விட்டு விடுவான். இறை கோபத்தை அஞ்சிக்கொள்! அவனது தண்டனையை பயந்துகொள்!

படிப்பினைகள்

நபிமொழிகள் தரும் படிப்பினைகளை சுருக்கமாக பார்ப்போம்:

1. உன் எண்ணங்களை நேர்மையாக்கு!

2. உன் நோக்கத்தை சரிப்படுத்து!

3. நல்லதை, நிரந்தர நன்மையை நாடு!

4. உன் ரப்பின் திரு முகத்தை நாடு!

5. நன்மையை விரும்பு! செய்யவில்லை என்றாலும் நன்மை உண்டு. செய்துவிட்டால் பன்மடங்கு நன்மைகள் உண்டு.

6. மறுமையின் அமல்களுக்கு அற்ப உலகதாயத்தை குறி வைக்காதே!

7. உலகம் கிடைத்தாலும் அது ஒரு நாள் உன்னைவிட்டு தவறத்தான் போகிறது. ஆகவே, உலகம் கிடைக்காமல் போவது நஷ்டமல்ல.

8. மறுமை கிடைக்கவில்லை என்றால் இனி உனக்கு உலகம் கிடைத்து ஆகப்போவது ஒன்றுமில்லை. ஏனெனில், நீ தேடிய உலகம் உன்னோடு உன் புதைக்குழிக்கு வராது.

9. ஆகவே, உன் உள்ளத்தில் உன் ரப்பு விரும்பும் உயர்வான எண்ணங்களை கொண்டுவா!

10. உன் உலகம் இருளாக இருந்தாலும் உன் உள்ளத்தை வெளிச்சமாக்கி வை!

11. உன் உடல் நோயுற்று இருந்தாலும் உன் உள்ளத்தை ஆரோக்கியமாக வை!

12. உன் வாழ்க்கை நெருக்கடியில் இருந்தாலும் உன் உள்ளத்தை இறைநினைவால் விசாலமடைந்ததாக ஆக்கி வை.

13. கையில் காசு பணம் இல்லை என்றாலும் உள்ளத்தை திருப்தியால் நிறைவாக்கி வை!

14. மகான்கள் உள்ளம் ஒளிபெற்றவர்கள், உடல் மெலிந்திருந்தாலும் மனம் வலிமை பெற்றவர்கள்.

சான்றோர்கள் வளமான வாழ்க்கையை தேடவில்லை. மாறாக, உள்ளத்தின் ஒளியை தேடினார்கள், அதன் நிம்மதியை தேடினார்கள், ஈமானும் இறையன்பும் கிடக்கப் பெற்ற இதயத்தை தேடினார்கள், இதயத்தை சுத்தமாக்கி சுத்தமாக்கி அமல்களின் கனத்தை கூட்டினார்கள். உள்ளத்தை பரிசுத்தமாக்கி நல்லறங்களின் மதிப்பை அல்லாஹ்விடம் அதிகப்படுத்தினார்கள். அவர்கள் செய்தது குறைவாக இருந்தாலும் அதன் மதிப்பு அல்லாஹ்விடம் கூடுதலாக இருந்தது. ஆகவே, ரப்பின் பொருத்தம் கிடைக்கப் பெற்றார்கள். அவர்களின் உள்ளங்களின் சுத்தத்திற்கு அர்ஷின் அரசன் சாட்சி கூறினான். வாழ்ந்தார்கள். உலகத்தை விட்டு பிரிந்து செல்லும்முன் சொர்க்கத்தை வென்றுவிட்டு, இறை பொருத்தத்தை பெற்றுவிட்டு

இவ்வுலகத்தில் இருந்து விடைபெற்று சென்றார்கள். அவர்களது உடல்தான் இவ்வுலகத்தை விட்டு சென்றது. ஆனால், அவர்களின் ரப்பு அவர்களின் நினைவையும் புகழையும் கீர்த்தியையும் இவ்வுலகில் சூரியன் உதிக்கும் காலமெல்லாம் நிரந்தரமாக்கி விட்டான். அவர்களை இறை கருணையோடும் ஈமானிய பாசத்தோடும் நினைவுகூரும் கோடிக்கணக்கான நாவுகளையும் உள்ளங்களையும் இவ்வுலகில் அந்த ரப்பு நீங்காமல் ஏற்படுத்தி விட்டான். அவர்களுக்கு சிலைகள் வைக்கப்படவில்லை. ஆனால், அவர்களை அறியாதவர்கள் யாரும் உண்டு என்று சொல்ல முடியாதவாறு ஆக்கிவிட்டான். ஆம், அவர்கள் தங்கள் ரப்பை மட்டும் உள்ளத்தில் வைத்தார்கள். அந்த ரப்பு அவர்களுக்கு உலகத்தில் நற்ப்புகழ்ச்சியையும் மறுமையில் சொர்க்கத்தையும் அன்பளிப்பாக தந்துவிட்டான்.

என் வரிகளை படிக்கும் சகோதரனே சகோதரியே! வா! நமது உள்ளம் எப்படி இருக்கின்றது என்று பரிசோதிப்போம். உள்ளத்தின் பரிசோதனை நிலையம் குர்ஆனும் நபிமொழியும் ஆகும். வா! அனுதினமும் அவற்றைப் படித்து சிந்தித்து நம்மை சீர்திருத்துவோம்! அது கெட்டு, அழுகி நாறிப் போவதற்குள் அதற்கு சிகிச்சை செய்து மருந்திட்டு, பத்தியம் இருந்து, பலப்படுத்தி, பண்படுத்தி கரை சேருவோம்!!

அல்லாஹ்வே! எங்கள் ஆன்மாக்களை சுத்தப்படுத்து! எங்கள் உள்ளங்களை சுத்தப்படுத்து! உன் நெருக்கம் பெற்ற நல்லோரில் எங்களை சேர்த்துக் கொள்! உள்ளத்தை கெடுக்கும் குனங்களைவிட்டும் ஆசாபாசங்களைவிட்டும் எங்களை பாதுகாத்துக்கொள்!! ஆமீன்!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 18

உடல் ஆரோக்கியம்

கருத்து : அகிலங்களின் இறைவன் அல்லாஹு தஆலாவின் அருட்கொடைகள் மனிதன் மீது எண்ணிலடங்காதவை ஆகும். அவற்றை ஒவ்வொன்றாக நாம் எண்ண ஆரம்பித்தால் நமது வாழ்நாள் எல்லாம் முடிந்து விடும். ஆனால், அல்லாஹ்வின் அருட்கொடைகளை நம்மால் எண்ணி முடிக்க முடியாது.

அவன் நமக்கு கொடுத்த உடல் உறுப்புகளை கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். ஒவ்வொரு உறுப்பும் நமக்கு எத்தனையோ பலன்களை தந்து கொண்டே இருக்கின்றன. ஒவ்வொன்றும் அதன் அதன் வேலையை செய்து கொண்டே இருக்கின்றன. உடலின் உள் உறுப்புகள் வெளி உறுப்புகள் என நமது உடல் உறுப்புகளையும் அவற்றால் நாம் அடைந்துகொண்டிருக்கின்ற நன்மைகளையும் நாம் எண்ணிவிட முடியுமா?

இப்படியாக நிகரற்ற இறைவன் நமக்கு கொடுத்த அன்பளிப்புகளில் ஒன்றுதான் உடல் ஆரோக்கியம் என்பது. நமது உடலின் ஒவ்வொரு உறுப்பும் சரியாக இருப்பது, சரியாக இயங்குவது, அவற்றில் பலவீனம் அல்லது தேய்மானம், அல்லது குறை ஏற்படாமல் இருப்பது, அல்லது அவற்றை செயல் இழக் செய்யும் அளவிற்கு அதில் நோய் ஏற்படாமல் இருப்பது... இதைத்தான் நாம் உடல் ஆரோக்கியம்

என்று குறிப்பிடுகின்றோம்.

ஒரு முறை மருத்துவமனை சென்று பார்த்தால்தான் தெரியும் நோய்கள் எத்தனை வகை உள்ளன என்று; மக்கள் எப்படியெல்லாம் பலவகையான நோய்களால் அல்லல் பட்டு கொண்டு இருக்கின்றனர் என்று.

யாரை கேட்டாலும் ஏதாவது ஒரு நோய் தனக்கு இருப்பதாகவும், அதனால் தான் கஷ்டப்படுவதாகவும் சாதாரணமாக கூறுவதைபார்க்கிறோம். நோய்களில் தற்காலிகமான நோய், நிரந்தர நோய் என்று இரு வகையாகவும் நாம் பிரித்துப் பார்க்கலாம்.

எது எப்படியோ நோய் என்பது மிக சிரமமான ஒன்றுதான். அதை தாங்குவது மனிதனுக்கு மிக கஷ்டம்தான். ஆகவேதான் நோயுக்கு அரபியில் சிரமம் என்று பெயர் கூறுவார்கள்.

உடலின் ஆரோக்கியத்தின் அருமை தெரிய வேண்டும் என்றால் நோயின்போதுதான் அதை சரியாக அறிந்து கொள்ள முடியும்.

மனிதனின் ஒரு விரல் இயங்க வில்லை என்றால்......

அவனின் கண் பார்வை மங்கி விட்டால்.... அல்லது பார்வை முற்றிலும் பறிபோய் விட்டால்....

மனிதனின் பல்லில் வலி ஏற்பட்டால்.....

மனிதனின் கண்ணில் வலி ஏற்பட்டால்....

மனிதனுக்கு தலைவலி ஏற்பட்டால்.....

கழுத்துவலி, இடுப்புவலி, கைவலி, கால்வலி, நெஞ்சுவலி, என்று ஏதாவது ஒரு வலி ஏற்பட்டால்.....

உடல் சூடு அதிகமாகி காய்ச்சல் ஏற்பட்டால்....

வயிற்றுப்போக்கு ஏற்பட்டால்....

சளி, இருமல் ஏற்பட்டால்....

அஜீரணக் கோளாறு ஏற்பட்டால்....

அல்லது பசியே எடுக்க வில்லை என்றால்....

உடலின் உள் உறுப்புகள் கிட்னி, கல்லீரல், மண்ணீரல் இப்படி ஏதாவது ஒன்று அதன் செயலை நிறுத்தினால் அல்லது அது பலவீனப்பட்டால்.....

நோயை நினைத்தாலே அவ்வளவுதான்.... அதுவும் உயிர்கொல்லி நோய் பரவுகிறது என்று பயம் ஏற்பட்டால்....

எத்தனை வகையான உயிர்கொல்லி நோய்கள்.... உலக வல்லரசே இன்று கதிகலங்கி நிற்கிறது இறைவனின் இராணுவமாகிய இந்த ஒரு நோயுக்கு முன்னால்.

மனிதன் இறைவனை மறக்காமல் இருக்க வேண்டும், அவனுக்குள் பெருமை, அகம்பாவம், ஆணவம், செருக்கு, மரணத்தை மறப்பது வந்து விடக்கூடாது என்பதற்காக இறைவன் மனிதனை அவ்வப்போது சிறிய பெரிய நோய்களைக் கொண்டு சோதிக்கிறான்.

மனிதன் தன் பலவீனத்தை உணர வேண்டும், மரணத்தை மறந்துவிடக்கூடாது, மறுமையை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது நோய் ஏற்படுவதின் தத்துவங்களில் மிக முக்கியமானதாகும்.

நோயாளியை பார்க்கும்போது ஆரோக்கியமானவர் தனது ஆரோக்கியத்திற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும், நோயாளி பொறுமையாக இருந்து தேவையான மருந்தை எடுத்துக் கொள்வதுடன் தன்னை படைத்த இறைவனை நம்பி அவனிடம் தனக்கு உடல் ஆரோக்கியத்தை வேண்டி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதும் நோயின் தத்துவங்களில் நினைவு கூரதக்கதாகும்.

இறைவனின் செயல்களில் எதுவும் தீமையானது அல்ல. ஒரு பக்கம் வெளிப்படையாக பார்த்தால் நமக்கு அது தீமையாக தெரியும். ஆனால், அதில் எண்ணற்ற பல நன்மைகளும் மறைந்திருக்கும். நமக்கு ஒன்றின் ஒரு பக்கம் மட்டும்தான் தெரியும். படைத்த இறைவனுக்குத்தான் மறு பக்கமும் தெரியும்.

ஆரோக்கியம் மிகப் பெரிய அருட்கொடையாக இருப்பதில் எவ்வித சந்தேகமும் யாருக்கும் இருக்காது. ஆனால் நோயின் காரணமாக அடியான் மீது அல்லாஹ் புரிகின்ற அருளை நினைத்துப் பார்த்தால் அடியான் உடல் ஆரோக்கியத்தை விரும்பவே மாட்டான். அந்தளவு நோயாளிக்கு அல்லாஹ்விடம் நன்மைகள் ஏராளம் உள்ளன.

நோய் பாவங்களை போக்கி மனிதனை சுத்தப்படுத்தி விடுகின்றது. பிறகு நோயினால் அவன் கஷ்டப்படுவதை சகித்து பொறுமையாக இருக்கும்போது அவனுக்கு நன்மைகள் எழுதப்படுகின்றன. அவன் ஆரோக்கியமான காலத்தில் செய்துகொண்டு இருந்த நன்மைகள் முழுமையாக அவனுக்கு வழங்கப்படுகின்றன. நாளை மறுமையில் அல்லாஹ்வை சந்திக்கும்போது பாவமற்ற பரிசுத்தவானாக, நன்மைகள் நிறைந்தவனாக சந்திப்பான். இது எவ்வளவு பெரிய அருள் என்று நினைத்துப் பாருங்கள்!

நோயும் அதன் நிவாரணமும் அல்லாஹ்வின் நாட்டப்படித்தான். நாம் நோயிலிருந்து பாதுகாப்பு தேட வேண்டும், நோய் வராமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது வேறு விஷயம். ஆனால், நோய் ஏற்பட்டுவிட்டால் அதற்காக அல்லாஹ்வை அல்லது அவனது விதியை நாம் கோபித்துக் கொள்ளக் கூடாது. பொறுமையாக இருக்க வேண்டும். நமது சக்திக்குமேல் அல்லாஹ் நமக்கு சோதனை தரமாட்டான் என்று நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். அத்துடன் அல்லாஹ்விடம் உடல் நலனை வேண்டி மன்றாடி துஆ கேட்க வேண்டும். அடியான் அல்லாஹ்விடம் துஆ கேட்க கேட்க அல்லாஹ் மிகவும் சந்தோஷப்படுகின்றான். ஒவ்வொரு முறை

அல்லாஹ்வை அடியான் ரப்பே என்று அழைக்கும்போது ரப்பு பெருமைப்படுகின்றான். அந்த அடியானை தனக்கு நெருக்கமாக்கி கொள்கின்றான். அவனுடைய பொறுமை மற்றும் சகித்தலுக்கு எண்ணிடலங்கா நன்மைகளை தருகின்றான். தனது உண்மையான அடியானாக அவனை ரப்பு அங்கீகரித்துக் கொள்கின்றான்.

உடல் ஆரோக்கியம் கிடைக்கப் பெற்றவர்கள் அல்லாஹ்விற்கு அதிகம் நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் கொடுத்த உடல் ஆரோக்கியத்தில் அதிகம் நன்மைகளை செய்ய வேண்டும். உடல் நலனை வீணாக்கி விடக்கூடாது. நன்மைகள் செய்யாமல் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. ஆரோக்கியமான காலங்களை வீணாக கழித்து விடக்கூடாது. உடல் ஆரோக்கியத்தை கெடுக்கும் காரியங்களை செய்யக் கூடாது. உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பது மார்க்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அதற்காகவே அல்லாஹ் நமக்கு பல உணவுகளை ஹராமாக ஆக்கி இருக்கின்றான். மேலும் பல சலுகைகளை வழங்கி இருக்கின்றான். எந்த ஒரு கொள்கையும் போதிக்காத, போதிக்க முடியாத ஆரோக்கிய தத்துவங்களை நமக்கு நமது மார்க்கத்தில் அல்லாஹ்வும் அவனது ரஸூலும் கற்றுக் கொடுத்து இருக்கின்றார்கள்.

வாருங்கள் நோய் மற்றும் ஆரோக்கியம் குறித்து குர்ஆனும் சுன்னாவும் கூறுகின்ற சில விஷயங்களையும் அவற்றின் படிப்பினைகளையும் பார்த்து இந்த பாடத்தை நிறைவு செய்வோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿الَّذِي خَلَقَنِي فَهُوَ يَهْدِينِ (٧٨) وَالَّذِي هُوَ يُطْعِمُنِي وَيَسْقِينِ (٧٩) وَإِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِينِ (٨٠) وَالَّذِي يُمِيتُنِي ثُمَّ يُحْيِينِ (٨١)﴾

பொருள் : அவன்தான் என்னைப் படைத்தான். அவனே என்னை நேரான வழியில் நடத்துகிறான். அவனே எனக்குப் புசிக்கவும்

குடிக்கவும் தருகிறான். நான் நோயுற்ற தருணத்தில் அவனே என்னை குணப்படுத்துகிறான். அவனே என்னை மரணிக்கச் செய்வான்; பின்னர் அவனே என்னை (மறுமையில்) உயிர்ப்பிப்பான்.

(அல்குர்ஆன் 26 : 78-81)

﴿فَلَوْلَا إِذْ جَاءَهُمْ بَأْسُنَا تَضَرَّعُوا وَلَٰكِنْ قَسَتْ قُلُوبُهُمْ وَزَيَّنَ لَهُمُ الشَّيْطَانُ مَا كَانُوا يَعْمَلُونَ (٤٣) فَلَمَّا نَسُوا مَا ذُكِّرُوا بِهِ فَتَحْنَا عَلَيْهِمْ أَبْوَابَ كُلِّ شَيْءٍ حَتَّىٰ إِذَا فَرِحُوا بِمَا أُوتُوا أَخَذْنَاهُمْ بَغْتَةً فَإِذَا هُمْ مُبْلِسُونَ (٤٤) فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِينَ ظَلَمُوا وَالْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ (٤٥)﴾

பொருள் : (நபியே!) உமக்கு முன்னிருந்த பல வகுப்பினருக்கும் நாம் (நம் தூதர்களை) நிச்சயமாக அனுப்பி வைத்தோம். (எனினும் அத்தூதர்களை அவர்கள் நிராகரித்து விட்டனர். ஆகவே,) அவர்கள் பணிந்து வருவதற்காக நோயைக் கொண்டும், வறுமையைக் கொண்டும் நாம் அவர்களைப் பிடித்தோம். நம் வேதனை அவர்களிடம் வருவதற்குள் அவர்கள் பணிந்துவிட வேண்டாமா? ஆனால், அவர்களுடைய உள்ளங்கள் இறுகிவிட்டன. அவர்கள்செய்து கொண்டிருந்ததையே (-பாவங்களையே) ஷைத்தான் அவர்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டான். அவர்களுக்குச் செய்யப்பட்ட நல்லுபதேசத்தை அவர்கள் மறந்து விடவே (அவர்களைச் சோதிப்பதற்காக) ஒவ்வொரு பொரு(ள் செல்வங்க)ளின் வாயிலையும் நாம் அவர்களுக்குத் திறந்துவிட்டோம். (அவர்களுக்கு வேண்டியவை எல்லாம் தாராளமாக கிடைத்துக் கொண்டிருந்தன.) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவற்றைக் கொண்டு அவர்கள் பெருமையுடன் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்த சமயத்தில் (நமது வேதனையைக் கொண்டு) நாம் அவர்களைத் திடீரென பிடித்துக் கொண்டோம் (தண்டித்தோம். அந்நேரத்தில் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். ஆகவே, அநியாயம் செய்து கொண்டிருந்த (அந்த)

மக்களின் வேர் அறுபட்டுவிட்டது. எல்லாப் புகழும் அகிலத்தாரின் இறைவன் அல்லாஹ்வுக்கே! (அல்குர்ஆன் 6 : 42-45)

وَأَيُّوبَ إِذْ نَادَىٰ رَبَّهُ أَنِّي مَسَّنِيَ الضُّرُّ وَأَنْتَ أَرْحَمُ الرَّاحِمِينَ (٨٣) فَاسْتَجَبْنَا لَهُ فَكَشَفْنَا مَا بِهِ مِنْ ضُرٍّ وَآتَيْنَاهُ أَهْلَهُ وَمِثْلَهُمْ مَعَهُمْ رَحْمَةً مِنْ عِنْدِنَا وَذِكْرَىٰ لِلْعَابِدِينَ (٨٤)

பொருள் : ஐயூபையும் (நாம் நம் தூதராக அனுப்பிவைத்தோம். அவர் தன் இறைவனை நோக்கி "நிச்சயமாக நோய் என்னைப் பிடித்துக் கொண்டது. (அதை நீ நீக்கி விடு.) நீயோ கருணையாளர்களிலெல்லாம் மகா கருணையாளன்" என்று பிரார்த்தனை செய்தார். ஆகவே, நாம் அவருடைய பிரார்த்தனையை அங்கீகரித்து, அவரைப் பீடித்திருந்த நோயையும் நீக்கி, அவருடைய குடும்பத்தையும் நாம் அவருக்கு அளித்து, நம் அருளால் மேலும் அதைப் போன்ற தொகையினரையும் அவருக்குக் (குடும்பமாகக்) கொடுத்தோம். இது (எனக்குப் பயந்து) என்னை வணங்குபவர்களுக்கு(ம் என்னிடம் பிரார்த்தனை செய்பவர்களுக்கும்) நல்லுணர்ச்சி ஊட்டக்கூடியதாக இருக்கிறது. (அல்குர்ஆன் 21 : 83-84)

عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما قَالَ قَالَ النَّبِيُّ ﷺ نِعْمَتَانِ مَغْبُونٌ فِيهِمَا كَثِيرٌ مِنَ النَّاسِ الصِّحَّةُ وَالفَرَاغُ رواه البخاري

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: இரண்டு நிஃமத்துகள் - அருட்கொடைகள் மக்களில் அதிகமானவர்கள் அவ்விரண்டிலும் ஏமார்ந்து இருக்கின்றார்கள். உடல் ஆரோக்கியம், இன்னும் ஓய்வு.[54]

عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ لِرَجُلٍ وَهُوَ يَعِظُهُ اغْتَنِمْ

54. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் رضي الله عنهما, நூல்: புகாரி, எண்: 6412

خَمْسًا قَبْلَ خَمْسٍ شَبَابَكَ قَبْلَ هِرَمِكَ وَصِحَّتَكَ قَبْلَ سَقَمِكَ وَغِنَاءَكَ قَبْلَ فَقْرِكَ وَفَرَاغَكَ قَبْلَ شُغْلِكَ وَحَيَاتَكَ قَبْلَ مَوْتِكَ رواه الحاكم

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் ஒருவருக்கு உபதேசசம் செய்யும்போது கூறினார்கள்: ஐந்துக்கு முன்னர் ஐந்தை நீ பொக்கிஷமாக பயன்படுத்திக்கொள்! உனது வயோதிகத்திற்கு முன்பாக உனது வாலிபத்தை, இன்னும் உனது நோயுக்கு முன்பாக உனது உடல் ஆரோக்கியத்தை, இன்னும் உனது வறுமைக்கு முன்பாக உனது செல்வத்தை, இன்னும் உனது வேலைக்கு முன்பாக உனது ஓய்வை, இன்னும் உனது மரணத்திற்கு முன்பாக உனது வாழ்க்கையை (நீ பயன்படுத்திக்கொள்!.[55]

عَنِ ابْنِ مَسْعُودٍ رضي الله عنه قَالَ دَخَلْتُ عَلَى النَّبِيِّ ﷺ وَهُوَ يُوعَكُ فَمَسِسْتُهُ بِيَدِي فَقُلْتُ إِنَّكَ لَتُوعَكُ وَعْكًا شَدِيدًا قَالَ أَجَلْ كَمَا يُوعَكُ رَجُلَانِ مِنْكُمْ قَالَ لَكَ أَجْرَانِ قَالَ نَعَمْ مَا مِنْ مُسْلِمٍ يُصِيبُهُ أَذًى مَرَضٌ فَمَا سِوَاهُ إِلَّا حَطَّ اللَّهُ سَيِّئَاتِهِ كَمَا تَحُطُّ الشَّجَرَةُ وَرَقَهَا رواه البخاري

நான் நபி ﷺ அவர்களிடம் சென்றேன். அவர்களுக்கு அதிகம் உடல் சூடு காய்ச்சல் இருந்தது. நான் எனது கையால் அவர்களை தொட்டு பார்த்தேன். உங்களுக்கு கடுமையாக காய்ச்சல் இருக்கிறது என்று கூறினேன். உங்களில் இருவருக்கு வரும் காய்ச்சலைப் போன்று எனக்கு காய்ச்சல் - உடல் சூடு இருக்கும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். உங்களுக்கு இரு கூலிகள் கிடைக்கும் என்று நான் கூறினேன். நபி ﷺ அவர்கள் ஆம், என்று கூறிவிட்டு மேலும் கூறினார்கள்: எந்த ஒரு முஸ்லிமுக்கும் உடல் தீங்கு, நோய் ஏற்பட்டால் அல்லாஹ் அவரின் பாவங்களை உதிர்த்துவிடுகின்றான்

55. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் رضي الله عنه நூல்: ஹாகிம், எண்: 7846

மரம் தனது இலைகளை உதிர்த்துவிடுவதுபோல்.[56]

عَن جَابِرِ بْنِ عَبْدِ اللهِ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ دَخَلَ عَلَىٰ أُمِّ السَّائِبِ أَوْ أُمِّ الْمُسَيِّبِ فَقَالَ مَا لَكِ يَا أُمَّ السَّائِبِ أَوْ يَا أُمَّ الْمُسَيِّبِ تُزَفْزِفِينَ قَالَتْ الْحُمَّىٰ لَا بَارَكَ اللهُ فِيهَا فَقَالَ لَا تَسُبِّي الْحُمَّىٰ فَإِنَّهَا تُذْهِبُ خَطَايَا بَنِي آدَمَ كَمَا يُذْهِبُ الْكِيرُ خَبَثَ الْحَدِيدِ رواه مسلم

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் உம்முஸ் சாயிப் அல்லது உம்முல் முசய்யிப் என்ற பெண்மணியிடம் வந்தார்கள். உம்முஸ் சாயிபே அல்லது உம்முல் முசய்யிபே உமக்கு என்ன நேர்ந்தது, இப்படி உடல் நடங்குகிறாய் என்று கேட்டார்கள். எனக்கு காய்ச்சலாக உள்ளது. அல்லாஹ் இந்த காய்ச்சலுக்கு அருள் புரியக்கூடாது என்று அப்பெண் கூறினார். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: காய்ச்சலை நீ திட்டாதே! நிச்சயமாக அந்த காய்ச்சல் மனிதர்களின் பாவங்களை போக்கிவிடுகின்றது எப்படி கொல்லனின் துருத்தி இரும்பின் துருக்களை போக்கிவிடுகிறதோ.[57]

عَنْ أُمِّ الْعَلَاءِ قَالَتْ عَادَنِي رَسُولُ اللهِ ﷺ وَأَنَا مَرِيضَةٌ فَقَالَ أَبْشِرِي يَا أُمَّ الْعَلَاءِ فَإِنَّ مَرَضَ الْمُسْلِمِ يُذْهِبُ اللهُ بِهِ خَطَايَاهُ كَمَا تُذْهِبُ النَّارُ خَبَثَ الذَّهَبِ وَالْفِضَّةِ رواه أبو داود وقال الألباني صحيح

உம்முல் அலா கூறுகின்றார்: நான் நோயாளியாக இருந்தபோது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் என்னை நலம் விசாரிக்க வந்தார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள்: உம்முல் அலாவே! நீ நற்செய்தி பெற்றுக்கொள்! முஸ்லிம் நோயுற்றால் அல்லாஹ் அந்த நோயினால் அவருடைய பாவங்களை போக்கிவிடுகின்றான், நெருப்பு தங்கம்

56. அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் ﵁ நூல்: புகாரி, எண்: 5667
57. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﵁, நூல்: முஸ்லிம், எண்: 2575

இன்னும் வெள்ளியின் அழுக்குகளை போக்கிவிடுவதைப் போன்று.[58]

عَنْ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللهِ أَيُّ النَّاسِ أَشَدُّ بَلَاءً قَالَ الْأَنْبِيَاءُ ثُمَّ الْأَمْثَلُ فَالْأَمْثَلُ يُبْتَلَ الْعَبْدُ عَلَى حَسَبِ دِينِهِ فَإِنْ كَانَ فِي دِينِهِ صُلْبًا اشْتَدَّ بَلَاؤُهُ وَإِنْ كَانَ فِي دِينِهِ رِقَّةٌ ابْتُلِيَ عَلَىٰ حَسَبِ دِينِهِ فَمَا يَبْرَحُ الْبَلَاءُ بِالْعَبْدِ حَتَّىٰ يَتْرُكَهُ يَمْشِي عَلَى الْأَرْضِ وَمَا عَلَيْهِ مِنْ خَطِيئَةٍ رواه ابن ماجة وقال الألباني حسن صحيح

அல்லாஹ்வின் தூதரே! மக்களில் யார் கடுமையான சோதனைக்கு ஆளாகுபவர் என்று நான் கேட்டேன். நபிமார்கள், பிறகு அவர்களைப் போன்ற நல்லவர்கள், பிறகு அவர்களைப் போன்ற நல்லவர்கள். அடியான் தனது மார்க்க பற்றுக்கு ஏற்ப சோதிக்கப்படுகின்றான். அவன் தனது மார்க்கப் பற்றில் உறுதியானவனாக இருந்தால் அவனுடைய சோதனையும் கடுமையாக இருக்கும். அவனுடைய மார்க்கப்பற்றில் மென்மை இருந்தால் அவர் தனது அந்த மார்க்கப்பற்றுக்கு ஏற்ப சோதிக்கப்படுவார். இப்படியாக சோதனைகள் அடியானுக்கு தொடர்ந்துகொண்டே இருக்கும். இறுதியாக அவன் இந்த பூமியில் நடக்கும்போது அவன் மீது பாவமே இல்லாத நிலைக்கு அவனை ஆக்கிவிடும் என்று நபி அவர்கள் கூறினார்கள்.[59]

முதல் வசனத்தின் படிப்பினைகள்

1. படைக்கும் ஆற்றல் பெற்ற அல்லாஹ்தான் நோயையும் அதிலிருந்து நிவாரணத்தையும் படைக்கின்றான்.

2. அல்லாஹ்வின் நாட்டம் இல்லாமல் எதுவும் நடக்காது.

3. வாழ்வும் மரணமும் அல்லாஹ்வின் கையில்தான் இருக்கின்றது.

58. அறிவிப்பாளர்: உம்முல் அலா, நூல்: அபூ தாவூத், எண்: 3092
59. அறிவிப்பாளர்: ஸஅது இப்னு அபீ வக்காஸ்ﷺ, நூல்: இப்னு மாஜா, எண்: 4023

4. நாம் நன்மைகளை அல்லாஹ்வின் பக்கம் சேர்த்து அவனை புகழ வேண்டும். தீமைகளை, கெட்டதை நமக்கு பிடிக்காததை அல்லாஹ்வின் பக்கம் சேர்க்க கூடாது. அல்லாஹ் எனக்கு நோயை கொடுத்தான் என்று கூறாமல் நான் நோயுற்று இருக்கின்றேன் என்று கூற வேண்டும். பிறகு உடல் நலம் பெற்ற உடன் அல்லாஹ் என்னை சுகமாக்கினான், அல்லாஹ் என்னை குணப்படுத்தினான், அல்லாஹ் எனக்கு ஆரோக்கியத்தை கொடுத்தான் என்று அல்லாஹ்வை புகழ வேண்டும். இதுதான் நபிமார்களின் வழிகாட்டல் ஆகும். எல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் அல்லாஹ்வைகொண்டுதான் என்று இருந்தாலும் அடியார்களாகிய நாம் நல்லதைமட்டும் அல்லாஹவின் பக்கம் சேர்க்க வேண்டும். இதற்கு விளக்கம் யூஸுஃப் நபியின் வரலாற்றில் நாம் பார்க்கலாம். அவர்கள் அல்லாஹ் என்னை சிறையிலிருந்து வெளியேற்றினான் என்று கூறினார்கள். உங்களை கிராமத்திலிருந்து நகரத்திற்கு கொண்டு வந்தான் என்று கூறினார்கள். ஷைத்தான் எனக்கும் என் சகோதரர்களுக்கும் இடையில் பிரச்சனையை உண்டுபண்ணினான் என்று கூறினார்கள். இதுதான் ஒரு முஃமினின் அழகிய ஈமானிய பண்பாகும்.

5. அடியான் நோயுற்றுவிட்டால் அழகிய பொறுமை காக்க வேண்டும். அல்லாஹ்விடம் உடல் ஆரோக்கியத்தை ஆதரவு வைக்க வேண்டும். அல்லாஹ்வை நம்பி இருக்க வேண்டும்.

இரண்டாம் வசனத்தின் படிப்பினைகள்

6. எந்த ஒரு சிறிய பெரிய தீமை, சிரமம், நோய் ஏற்பட்டாலும் அடியான் உடனடியாக அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும்.

7. அவனுடைய உள்ளம் மென்மையாகவும் இலகியதாகவும் இறை அச்சம் உள்ளதாகவும் மாற வேண்டும். அல்லாஹ்வின் பிடியை நினைத்து பயப்பட வேண்டும், அழ வேண்டும்.

8. ஷைத்தானின் சதி வலையில் வீழ்ந்து விடக்கூடாது. சோதனைகளை

சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

9. வேத உபதேசங்களைக் கொண்டு படிப்பினை பெற வேண்டும். அவற்றை புறக்கணிக்க கூடாது.

10. சோதனைக்கு பின்னர் செல்வமும் வசதியும் ஏற்படும். அப்போது அதில் மயங்கி அல்லாஹ்வின் மார்க்கத்தை மீறி விடக்கூடாது. நமக்கு ஏற்பட்ட சோதனையை மறந்து விடக் கூடாது.

11. அல்லாஹ்வின் இறுதி பிடி மிக பயங்கரமாக இருக்கும். அதிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. இது வரை யாரும் தப்பித்தது இல்லை. இனியும் யாரும் தப்பிக்க முடியாது. அவன் வரம்புமீறிகளை வேரறுத்து விடுவான். அடியோடு தரை மட்டமாக்கி விடுவான். அடிச்சுவடே இல்லாமல் அழித்துவிடுவான். மறுமையிலோ அவனது தண்டனை இன்னும் கடுமையாக பயங்கரமாக இருக்கும். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்.

மூன்றாவது வசனத்தின் படிப்பினைகள்

12. சோதனை இவ்வுலகில் பொதுவானதாக இருக்கும். நல்லோரும் சோதிக்கப்படுவார்கள். பாவிகளும் சோதிக்கப்படுவார்கள். முஃமின்களும் சோதிக்கப்படுவார்கள். நிராகரிப்பாளர்களும் சோதிக்கப்படுவார்கள். இறுதி நல்ல முடிவு நல்லவர்களுக்குத்தான்.

13. நாம் நல்லவர்களை நமக்கு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சோதனைகளில் ரப்புடன் எப்படி நடந்து கொண்டார்களோ அது போன்று நாமும் நடந்து கொள்ள வேண்டும்.

14. அல்லாஹ்வின் பக்கம் திரும்புவதையும் அவனை மட்டும் முன்னோக்கி இருப்பதையும் அவனிடம் அதிகமதிகம் பிரார்த்தனை செய்துகொண்டு இருப்பதையும் ஒருபோதும் விட்டுவிடக் கூடாது.

15. அல்லாஹ்வை அழகிய பெயர்களைக் கொண்டும் உயர்வான

தனமைகளைக் கொண்டும் புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். ஒருபோதும் அல்லாஹ்வின் மீது அதிருப்தி படக்கூடாது. அவனுக்கு தகுதி இல்லாததை அவனுக்கு கூறி விடக் கூடாது. பணிவும் பயமும் அன்பும் ஆதரவும் சரி சமமாக உள்ளத்தில் இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

முதல் ஹதீஸின் படிப்பினைகள்

1. பெரும்பாலும் மனிதர்கள் மறுமை விஷயத்தில் ஏமார்ந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். உலக விஷயங்களில் மிகவும் உஷாராக இருந்தாலும் மறுமைக்கான தயாரிப்பில் கோட்டை விட்டுவிடுகிறார்கள்.

2. அதிலும் குறிப்பாக ஓய்வையும் ஆரோக்கியத்தையும் வீணாக்கி விடுகிறார்கள். அல்லாஹ்வை வணங்குவதில் கழிப்பதற்கு பதிலாக வீண் விளையாட்டுகளில் வேடிக்கைகளில் கழித்து வாழ்க்கையை வீணடித்து விடுகிறார்கள்.

3. யார் உடல் ஆரோக்கியத்தையும் ஓய்வையும் இறை வணக்க வழிபாட்டில் கழித்து மறுமையை தேடிக்கொண்டார்களோ அவர்கள்தான் உண்மையான புத்திசாலிகள், சுதாரித்துக் கொண்டவர்கள் ஆவார்கள்.

இரண்டாம் ஹதீஸின் படிப்பினைகள்

4. இந்த ஹதீஸில் கூறப்பட்ட ஒவ்வொரு அருளும் அதற்கு நாம் மதிப்பு போட முடியாது. அதை இழக்கும்போதுதான் அதன் அருமை தெரியவரும். உண்மையில் ஒருவர் இந்த ஹதீஸை நினைவில் வைத்து தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் அவர் மாபெரும் நன்மைகளை பெற்ற மிகப் பெரிய இறை நேசர்களில் ஒருவராக அஸ்ஸாபிக்கூன் - முந்தியவர்களில்

ஒருவராக ஆகிவிடுவார். இப்படித்தான் நபிமார்கள் மற்றும் அவர்கள் வழி வந்த சான்றோரின் வாழ்க்கை அமைந்திருந்தது. அவர்கள் வாழ்நாள்களை வீணாக்குபவர்களாக இருக்கவில்லை. கல்வி, வணக்கம், மக்கள் சேவை, என தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக மறுமைக்காக அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு நொடியையும் இறை பொருத்தத்தை தேடி செலவழித்தார்கள். வீண் விளையாட்டுகள், பகட்டு ஆடம்பரங்கள், கேளிக்கைகள் என வாழ்க்கையை வீணாக்குவதை விட்டும் மிக தூரமாக இருந்தார்கள். நமது முன்னோர்கள் கற்ற கல்விகள், அவர்கள் எழுதிய நூல்கள், அவர்கள் செய்த வணக்க வழிபாடுகள் என்று ஒவ்வொன்றாக நாம் எடுத்துப் பார்த்தால் நாமெல்லாம் வெட்கி தலை குனிய வேண்டும். நாள் மறுமையில் சென்று அல்லாஹ்விடம் என்ன பதில் கூறப்போகிறோமோ!! அல்லாஹ்தான் நம்மை இரட்சிக்க வேண்டும்.!!

மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது ஹதீஸ்களின் படிப்பினைகள்

5. இந்த ஹதீஸ்கள் அனைத்தும் ஒரு பொதுவான கருத்தை நமக்கு உணர்த்துகின்றன. அதாவது நோய் நொடிகள் எதுவாக இருந்தாலும் அவை நமது பாவங்கள் மன்னிக்கப்பட காரணமாக ஆகிவிடுகின்றன.

6. ஒரு பக்கம் உடல் நோய்வாய்ப்படும் போது நமக்கு சிரமம், துன்பம், வலி, இன்னும் பல பிரச்சனைகள் ஏற்பட்டாலும் நாம் அழகிய பொறுமையாக பொறுமை காக்கும்போது அல்லாஹ் நாம் படுகின்ற ஒவ்வொரு சிரமத்திற்கும் நமக்கு பாவமன்னிப்பை வழங்கி கொண்டே இருக்கின்றான். இறுதியில் முற்றிலும் பாவமற்றவர்களாக நம்மை மாற்றி விடுகின்றான். அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைக்கப் பெறுவதற்கு நோய்நொடிகள் காரணமாக இருப்பதால் கண்டிப்பாக ஒரு நல்ல முஃமின் தனக்கு ஏற்பட்ட நோயை குறை கூற மாட்டான். அழகிய பொறுமையுடன் இருப்பான். அல்லாஹ்வின் மீது

நல்லெண்ணம் வைப்பான். தனது பாவங்கள் மன்னிக்கப்படுவதை நினைத்து அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவான். உடல் சுகத்தை அல்லாஹ்விடம் வேண்டுவதுடன் தனது நோயை நினைத்து துவண்டு விட மாட்டான், சோர்ந்துவிட மாட்டான், துஆக்களை அதிகப்படுத்தி அல்லாஹ்விடம் ஆதரவுடன் இருப்பான். இத்தகையவர்கள்தான் அல்லாஹ்வின் உண்மையான விசுவாசமுள்ள நல்லடியார்கள்.

இன்னும் மேற்கூறப்பட்ட வசனங்களையும் நபிமொழிகளையும் நாம் ஆழ்ந்து சிந்தித்து நற்பாடங்கள், படிப்பினைகள் பெற்று அல்லாஹ்விற்கு பொருத்தமான நல்லடியார்களில் ஆக முயற்சிப்போமாக! ஆமீன்!!

அல்லாஹ்வே எங்கள் வாழ்க்கையை உனக்காக ஏற்றுக்கொள்! நற்பாக்கியம் பெற்ற நல்லோரில் எங்களையும் ஆக்குவாயாக! மறந்து, புறக்கணித்து, வீண்டித்து துர்பாக்கியமடைந்த தீயோரில் நாங்கள் ஆகுவதைவிட்டும் எங்களை பாதுகாப்பாயாக!! ஆமீன்!!!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰی رَسُولِ اللّٰهِ وَعَلٰی آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 19

நேர்வழியைத் தேடு!

மனிதனுக்கு ஒவ்வொரு காரியத்திலும் பல முக்கியமான அம்சங்கள் இருக்கும். சில அம்சம் முக்கியங்களில் மிக முக்கியமானதாக இருக்கும். அப்படிப்பட்ட ஒன்றுதான் நேர்வழி என்பது.

நேர்வழி என்றால் ஓர் இலக்கை அடைவதற்குரிய சரியான பாதையை குறிக்கும். அல்லது சரியான அணுகுமுறையை குறிக்கும். அது இல்லாமல் இலக்கை அடைவது முடியாது.

அல்லது அதன் பக்கம் சேர்த்து வைக்கக்கூடிய முறையான, அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளை குறிக்கும்.

ஓர் ஊருக்கு பயணம் செல்வதென்றால் நேரான பாதையில் பயணித்தால்தான் அங்கு சென்று சேர முடியும். பாதை தவறாக இருந்தால் அவன் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும். அவன் இலக்கை அடைய மாட்டான். அல்லது பயணத்தின் பாதிவழியிலேயே அவன் அழிந்து விடுவான். பிறகு இலக்கை அடையாத நஷ்டவாளியாக ஆகிவிடுவான்.

கிழக்கில் உள்ள ஊருக்கு மேற்கு நோக்கிய பாதையில் ஒருவன் பயணித்தால் அவன் எப்படி தன் இலக்கை அடைய முடியும்?

வடக்கில் இருக்கின்ற நேசரை சந்திக்க அவன் தெற்கில் உள்ள பாதையில் பயணித்தால் அவன் எப்படி தன் நேசரை சந்திக்க முடியும்?

இரவில் தோன்றும் சந்திரனை பகலில் தேடக் கூடாது.

பகலில் தெரியும் சூரியனை இரவில் தேடக் கூடாது.

கடலில் உள்ள முத்துவையும் பவளத்தையும் தெருவில் உள்ள குளத்தில் தேடக் கூடாது.

மக்காவில் இருக்கின்ற கஅபாவை தவாஃப் செய்ய வேண்டிய மனிதன் நாகூரில் உள்ள சமாதியை தவாஃப் செய்கிறான்.

சொர்க்கத்து கறுப்புக் கல்லை முத்தமிட சொன்னால் தர்காவில் உள்ள ஜன்டாவையும் ஜன்னலையும் முத்தமிட்டுக் கொண்டிருக்கின்றான்.

இறை வேதத்தை ஓதி அருளைப் பெறு என்றால் இவன் மவ்லிது புரானங்களை பாடி அருளை தேடுகிறான்.

உயிராக உள்ள இறைவனை நாடி வா என்றால் இறந்துபோன மனிதர்கள் அடங்கி இருக்கும் சமாதிக்கு சென்று நேர்ச்சை செய்கிறான்.

சொர்க்கத்தின் வழிகாட்டி அஹ்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்க, அவர்களை விட்டுவிட்டு யார் யாரையோ இவன் பின்பற்றி செல்கிறான். அந்த யார் யாரோ வழிதவறியவர்களாக இருக்க அவர் எப்படி இவனுக்கு சொர்க்கப் பாதையை வழிகாட்ட முடியும்?!

மேதையிடம் விளக்கம் கேள், தெளிவு கிடைக்கும் என்றால் சர்வ முட்டாளிடம் ஞானம் தேடி மண்டியிட்டு சரணடைந்து கிடக்கின்றான்.

சத்திய ஞானம் வேதத்தில் இருக்க, கல்வி ஞானம் ஸுன்னாவில் இருக்க, அவற்றை விட்டுவிட்டு உணர்ச்சி போதையால், காதல்

கவிதையால் மதி மயங்கி கிடக்கும் சூஃபி பைத்தியங்களிடம் மெய்ஞ் ஞானம் இருப்பதாக நம்பி அவர்களை சுற்றி அலைகின்றான். இவனுக்கு உதாரணம் கானல் நீரால் தாகம் தீர முயற்சித்தவனைப் போல்தான்.

தங்கத்தையும் பித்தளையையும் பிரித்துப் பார்க்க தெரியாதவன் ஏமாறுவது நிச்சயம்!

தன் காலுக்கு கீழே குழி தோண்டுபவன் அதில் விழுவது நிச்சயம்!

இப்படித்தான் நேர்வழியை அறியாதவன் வழிகெடுவதும், பிறகு நஷ்டமடைவதும் நிச்சயம்! அவன் என்னத்தான் முயற்சித்தாலும் அவனது எல்லா முயற்சிகளும் வீனானவைதான். அவற்றால் எந்த பலனும் கிடைக்காது.

ஒருவன் நேர்வழியை அறவே அறியவில்லை என்றாலும் அவன் வழிகேட்டில் இருக்கின்றான்.

இன்னொருவன் தவறான வழியை நேர்வழி என்று அறிந்து வைத்திருக்கின்றான் என்றால் அவனும் வழிகேட்டில்தான் இருக்கின்றான்.

இன்னொருவன் நேர்வழியை தவறான வழியாகவும் தவறான வழியை நேர்வழி என்றும் அறிந்து வைத்திருக்கின்றான் என்றால் அவனும் வழிகேட்டில்தான் இருக்கின்றான்.

இந்த மூன்று நபர்களில் முதலாமவனை திருத்துவது கொஞ்சம் இலகுவான காரியம். இரண்டாமவனை திருத்துவது கொஞ்சம் கடினமாக இருக்கும்.

மூன்றாம் நபரை திருத்துவது மிக மிக கடினமான காரியம் ஆகும். ஏனெனில், அவனிடம் மூன்று அறியாமைகள், மடமைகள் உள்ளன.

1. உண்மையை தெரியாமல் இருப்பது.

2. பொய்யை உண்மை என்று நம்பி இருப்பது.

3. உண்மையை பொய் என்று நம்பி இருப்பது.

இன்று நமது கால மக்களிடம் இருக்கின்ற அறியாமைகள் இந்த மூன்றாவது வகையை சேர்ந்தவை ஆகும்.

ஆகவே, நாம் நேர்வழியை பரப்புவது, அதன் பக்கம் அழைப்பது, அதை மக்களுக்கு எடுத்து சொல்வது மிக சிரமம்தான். இருந்தாலும் நாம் அயராமல் அதற்காக உழைக்க வேண்டும், பாடுபட வேண்டும். நபிமார்களின் கூட்டத்தோடு சேர விரும்புகின்ற அழைப்பாளர் எதிர்ப்புகளை பார்த்து பயந்து விடக் கூடாது, அச்சுறுத்தல்களைக் கண்டு மிரண்டு விடக் கூடாது. இன்னல்கள் எதிரே வரும்போது சோர்ந்து விடக் கூடாது. இழப்புகள் வந்தால் ஒதிங்கி விடக் கூடாது. இன்னும் உற்சாகத்துடன் முன்னேற வேண்டும், இன்னும் வேகத்துடன் பணி செய்ய வேண்டும், அதிக நம்பிக்கையுடன், துணிவுடன், மன வலிமையுடன், இறை நம்பிக்கையுடன் பணியை தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அவர்தான் உண்மையில் நபிமார்களின் பாதையில் பயணிக்கும் நேர்வழி அழைப்பாளர். இன்று அத்தகைய சத்திய அழைப்பாளர்களின் தேவை மிக அதிகமாக இருக்கின்றது.

மக்களில் பலர் இஸ்லாமுக்கு வெளியே இருக்கின்றனர். அவர்கள் மதங்களால், கொள்கையால், சமய சித்தாந்தங்களால், கொள்கை கோட்பாடுகளால் பலவாறாக பிரிந்து இருந்தாலும் வழிகேடு என்ற ஒற்றைக் கருத்தில் ஒரே கூட்டமாக இருக்கின்றனர். அவர்களில் யாருடைய முயற்சியும் மறுமையில் நன்மை தராது. அவர்களுக்கு தோல்வியும் நரகமும் உறுதிதான்.

நேர்வழி என்ற இஸ்லாம் கிடைக்கப் பெற்ற மக்களோ அந்த நேர்வழியை சரியாக அறியாததால், அதை முறையாக கற்காததால் பல பிரிவுகளாக பிரிந்து, நேர்வழியின் இமாமாகிய தூதர் மற்றும்

நேர்வழி நடந்த அவரின் தோழர்களின் பாதையை தவற விட்டு வழிகேட்டில் இருப்பதை பார்க்கும் போது மனம் மிகுந்த வேதனை அடைகிறது.

சிலரிடம் அறியாமை.

சிலரிடம் பிடிவாதம்.

சிலரிடம் குருட்டு நம்பிக்கை.

சிலரிடம் மூதாதையர் வழியே மேல் என்ற கொள்கை.

சிலரிடம் உலக மோகம்.

சிலரிடம் அல்லாஹ்வின் பயமின்மை.

சிலரிடம் தவறான அளவுகோல்.

சிலரிடம் மடமை மிகைத்திருத்தல்.

சிலரிடம் சந்தேக நோய்...

இப்படியாக வழிகேட்டுக்கான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

நடக்கும்போது கண்கள் திறந்திருக்க வேண்டும் என்பது போன்று நேர்வழியின் பயணத்தில் முஃமின் என்ற நம்பிக்கையாளனுடைய உள்ளம் திறந்திருக்க வேண்டும். ஆம், சத்தியத்திற்காக, உண்மைக்காக, சரியான ஆதாரத்திற்காக அவனது உள்ள வாசல்கள் அகல திருந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவனுக்கு நேர்வழியின் தென்றல் உள்ளே செல்லும், சத்தியப் பாதையின் வெளிச்சம் உள்ளே பாயும். அத்துடன் இறை பயம் இருக்க வேண்டும். அல்லாஹ்விற்கும் தூதருக்கும் முழுமையாக கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். குர்ஆனுக்கும் ஸஹீஹான ஸுன்னாவிற்கும் கட்டுப்படுதல் இருக்க வேண்டும். அவற்றை ஏற்றுக் கொள்ளும்

மனம் இருக்க வேண்டும். ஸித்தீக்கின் கீழ்ப்படிதலும் ஃபாரூக்கின் உறுதியும் துன் நுரைன் உடைய பணிவும் சகிப்பும், அபுல் ஹசனின் பற்றும் பயமும் இருக்க வேண்டும்.

குதர்க்க புத்தி இருக்கக் கூடாது. தூதரை எதிர்த்துப் பேசும் குணம் இருக்கக் கூடாது. ஸஹீஹான ஹதீஸை குறை காணும் கோணல் அறிவு இருக்கக் கூடாது. நேர்வழிபெற்ற தோழர்களை விட பின்னோரை உயர்த்தும் பிற்போக்குத்தனம் இருக்கக் கூடாது. நான் பெரியவன் என்ற இப்லீஸின் அகம்பாவ குணம் இருக்கக் கூடாது. பல்அம் இப்னு பாவூராவின் உலகாசை இருக்கக் கூடாது. சனிக்கிழமை வாசிகளின் பேராசை இருக்கக் கூடாது. இஸ்ரவேலர்களின் தடுமாற்றமும் சந்தேக புத்தியும் இருக்கக் கூடாது. யூதர்களின் தற்பெருமை இருக்கக் கூடாது. கிறிஸ்த்தவர்களின் அறியாமை இருக்கக் கூடாது.

அல்லாஹ் நமக்கு நேர்வழியை இலகுவாக்கித் தருவானாக! நமது உள்ளத்தை அதற்கு விசாலமாக்கித் தருவானாக! ஆமீன்.

குர்ஆனும் ஸுன்னாவும் நேர்வழி குறித்து பேசுகின்ற நல்லுரைகளை செவியுறுவோம்! நேர்வழியை அதிகப்படுத்துவோம்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

﴿فَإِمَّا يَأْتِيَنَّكُمْ مِنِّي هُدًى فَمَنْ تَبِعَ هُدَايَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ﴾

பொருள் : என்னிடமிருந்து உங்களுக்கு (என் தூதர்கள் மூலம்) நேர்வழி நிச்சயமாக வரும். (உங்களில்) எவர்கள் என் நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு ஒரு பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 38)

﴿فَإِمَّا يَأْتِيَنَّكُمْ مِنِّي هُدًى فَمَنِ اتَّبَعَ هُدَايَ فَلَا يَضِلُّ وَلَا يَشْقَىٰ﴾

பொருள் : நிச்சயமாக என் நேர்வழி உங்களிடம் வரும். எவர் என் நேர்வழியைப் பின்பற்றுகிறாரோ அவர் வழி தவறவும் மாட்டார்; நஷ்டமடையவும் மாட்டார்." என்றும் கூறினான்.

(அல்குர்ஆன் 20 : 123)

படிப்பினைகள்

1. நேர்வழி எது என்று மனித அறிவு முடிவு செய்ய முடியாது.

2. அல்லாஹ்தான் மனிதனுக்கு நேர்வழியை காட்டுபவன்.

3. அவன் கூறுவதுதான் நேர்வழியாகும். நேர்வழி எது என்பதை அல்லாஹ்தான் முடிவு செய்பவன்.

4. மனிதர்களுக்கு நேர்வழி எது என்று தெளிவுப்படுத்தாமல் அல்லாஹ் விட மாட்டான். மனிதனின் உணவுக்கு பொறுப்பேற்ற இறைவன் அவனுடைய நேர்வழிக்கும் பொறுப்பேற்று அதை சிறப்பாக செய்திருக்கின்றான்.

5. ஹுதா - நேர்வழி என்பதற்கு இமாம் தபரி விளக்கமளிக்கிறார்கள்

بيانٌ من أمري وطاعتي، ورشاد إلىٰ سبيلي وديني

ஹுதா என்றால் அல்லாஹ்வின் கட்டளை மற்றும் அவனுக்கு கீழ்ப்படிவது பற்றிய விளக்கம்; அல்லாஹ்வின் பாதை இன்னும் அவனது மார்க்கம் தொடர்பான வழிகாட்டல்.

6. அல்லாஹ்வின் நேர்வழியை தேடி, அதை அறிந்து, அதை பின்பற்றி வாழ்பவர்களுக்கு நான்கு நற்செய்திகளை அல்லாஹ் கூறுகின்றான். 1. அவர்கள் மீது பயம் இல்லை. 2. அவர்கள்

கவலைப்பட மாட்டார்கள். 3. அவர்கள் வழிதவற மாட்டார்கள். 4. அவர்கள் துர்பாக்கியம் அடைய மாட்டார்கள்.

7. பயம் இல்லை என்றால் அவர்கள் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை. அவர்களுக்கு கவலை இல்லை என்றால் அவர்கள் உலகத்தில் விட்டுவந்ததைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். காரணம், அவர்கள் நல்லவர்களாக இருந்ததால் அவர்களின் சந்ததிகளை அல்லாஹ் தனது பொறுப்பில், பாதுகாப்பில், அருளில் வைத்துக் கொள்கிறான். அவர் வழிகெட மாட்டார் என்றால், யார் நேர்வழியைப் பின்பற்றி, அதன் படி அமல் செய்வாரோ அவர் சத்திய ஆதாரத்திலிருந்து ஒருபோதும் விலக மாட்டார். அவர் இவ்வுலகில் எப்போதும் நல்லறிவோடு நடப்பார். நேர்வழியில் எப்போதும் நிலைத்திருப்பார். துர்பாக்கியம் அடையமாட்டார் என்றால் அவர் அல்லாஹ்வின் தண்டைனையிலிருந்து பாதுகாக்கப்பட்டு சொர்க்கத்தில் நுழைவிக்கப்படுவார்.

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள் : யார் குர்ஆனை ஓதி, அதில் உள்ளதை பின்பற்றி நடப்பாரோ அவருக்கு அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான். அவர் இவ்வுலகில் வழிகெட மாட்டார். மறுமையில் துர்பாக்கியமடைய மாட்டார்.

﴿اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ﴾

பொருள் : நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக! (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி.(உன்) கோபத்திற்குள்ளானவர்களோ வழிதவறியவர்களோ சென்ற வழியல்ல. (அல்குர்ஆன் 1 : 6, 7)

படிப்பினைகள்

1. அடியான் அல்லாஹ்விடத்தில் மன்றாடி கேட்க வேண்டிய முதல் விஷயம் நேரான பாதைக்கு இட்டுச் செல்லும் நேர்வழிதான். நேரான பாதை என்பது இஸ்லாம் ஆகும். அந்த இஸ்லாமை பின்பற்றி நடப்பதற்கும் அதில் நிலைத்திருப்பதற்கும், அதில் உறுதியாக இருந்து அதிலே இருக்கின்ற நிலையில் இறப்பு வருவதற்கும் அல்லாஹ்விடம் அடியான் வேண்ட வேண்டும்.

2. அந்த நேர்வழி எது என்பதை அடையாளம் காண்பதற்கும் நமக்கு முன் நேரான பாதையில் பயணித்த நல்லோர் முன்னுதாரணமாக இருக்கின்றனர். அவர்களை நாம் முன்னோடிகளாக எடுத்துக் கொண்டு இந்த மார்க்கத்தில் வழிநடக்க வேண்டும். அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானவர்கள் அல்லது வழிகெட்டு இந்த நேரான பாதையிலிருந்து விலகி சென்ற கூட்டத்தார் உடைய வழியில் ஒருபோதும் சென்றுவிடக் கூடாது. அவர்களுக்கு ஒப்பான செயலை ஒருபோதும் செய்யக் கூடாது.

قُلْ إِنَّ هُدَى اللّٰهِ هُوَ الْهُدَىٰ وَلَئِنِ اتَّبَعْتَ أَهْوَاءَهُمْ بَعْدَ الَّذِي جَاءَكَ مِنَ
الْعِلْمِ مَا لَكَ مِنَ اللّٰهِ مِنْ وَلِيٍّ وَلَا نَصِيرٍ

பொருள் : (நபியே!) அல்லாஹ்வின் நேர்வழி (யாகிய இஸ்லாம்) தான் நேரான வழி. (அதையே பின்பற்றுவேன்) எனக் கூறிவிடுவீராக. மேலும், உமக்கு (மெய்யான) ஞானம் வந்த பின்னும் அவர்களுடைய விருப்பங்களை பின்பற்றினால் அல்லாஹ்விடத்தில் (அதற்காக விசாரணை செய்யப்படும் நாளில்) உம்மை காப்பவனும் இல்லை; உமக்கு உதவி செய்பவனும் இல்லை. (அல்குர்ஆன் 2 : 120)

قُلْ إِنَّ الْهُدَىٰ هُدَى اللّٰهِ

பொருள் : (நபியே!) கூறுவீராக: உண்மையான நேர்வழி அல்லாஹ்வின் நேர்வழிதான். (அல்குர்ஆன் 3 : 73)

படிப்பினைகள் :

1. அல்லாஹ்விடமிருந்து வந்ததுதான் உண்மையான நேர்வழியாகும்.

2. நேர்வழியை மனிதன் தானாக கற்பனை செய்து கொள்ள முடியாது.

3. மனித அறிவு எவ்வளவுதான் திறமைகள் மிக்கதாக இருந்தாலும் நேர்வழி என்ற விஷயத்தில் அது அல்லாஹ்வின் வழிகாட்டலின் பக்கம் முற்றிலும் தேவை உள்ளதாக இருக்கிறது.

4. அல்லாஹ்விடமிருந்து வந்ததில் மட்டும்தான் நேர்வழியைத் தேட வேண்டும்.

5. அல்லாஹ்விடமிருந்து வந்த ஒவ்வொன்றும் நேர்வழியாகும்.

6. அதில் வழிகேடு, தவறு, குழப்பம், பாவம், சீர் கேடு ஏதும் அறவே இல்லை.

7. மனித குலத்திற்கும் இப்பிரபஞ்சத்திற்கும் கேடுவிளைவிக்கும் எதுவும் அதில் இருக்காது.

8. மனிதனுக்குத் தேவையான இல்ம் என்ற கல்வி, அறிவியல், நற்சிந்தனை, நற்போதனை, நன்மை பயக்கும் தத்துவம் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து மனிதனுக்கு வேதங்கள் மற்றும் தூதர்கள் மூலமாக வந்துவிட்டது. அதை நம்பிக்கைக் கொண்டு, அதன்படி செயல்படுவது அறிவின் மீது கடமையாக இருக்கின்றது.

9. அல்லாஹ்வின் வழிகாட்டல் இல்லாமல் மனித அறிவு இம்மைக்கும் மறுமைக்கும் பொருத்தமான பாதையில் செல்ல முடியாது. படைத்த இறைவனை அறிந்து, அவனது சொர்க்கத்தின் பக்கம் சேர்க்கின்ற அமல்களை மனித அறிவால் கண்டுபிடிக்க முடியாது.

10. மனித அறிவால் வழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அது சிலை வணக்கமாகவும் மூடத்தனமான சடங்குகளாகவும் இருக்கும். இன்னும் கேவலமும் இழிவும் அவமானமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த மத சடங்குகளாகத்தான் இருக்கும். இஸ்லாமைத் தவிர வேறு மதங்களில் மனிதர்கள் செய்கின்ற வழிபாடுகளையும் சடங்குகளையும் கொஞ்சம் சிந்தித்தால் இந்த உண்மை புரியவரும்.

وَمَنْ يَعْتَصِمْ بِاللّٰهِ فَقَدْ هُدِيَ إِلَىٰ صِرَاطٍ مُسْتَقِيمٍ

பொருள் : ஆகவே, எவர் அல்லாஹ்வை (அவனது மார்க்கத்தை) பலமாகப் பற்றிக் கொள்கிறாரோ அவர் நிச்சயமாக நேரான பாதையில் செலுத்தப்பட்டுவிட்டார். (அல்குர்ஆன் 3 : 101)

إِنَّهُمْ فِتْيَةٌ آمَنُوا بِرَبِّهِمْ وَزِدْنَاهُمْ هُدًى

பொருள் : நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனை நம்பிக்கைகொண்ட வாலிபர்களாவர். (ஆகவே,) மேலும், நேரான வழியில் நாம் அவர்களை செலுத்தினோம். (அல்குர்ஆன் 18 : 13)

وَمَنْ يُؤْمِنْ بِاللّٰهِ يَهْدِ قَلْبَهُ

பொருள் : ஆகவே, எவர் அல்லாஹ்வை நம்பிக்கைகொள்கிறாரோ, அவருடைய உள்ளத்தை நேரான வழியில் நடத்துகிறான். (அல்குர்ஆன் 64 : 11)

படிப்பினைகள்

1. அல்லாஹ் கொடுத்த மார்க்கம் மட்டும்தான் நம்மை நமது ரப்பாகிய அல்லாஹ்வின் பக்கம் சேர்த்து வைக்கும்.

2. ஆகவே, அல்லாஹ்விடமிருந்து அவனது நன்மைகளையும்

அருள்களையும் ஆதரவு வைப்பவர் கண்டிப்பாக அல்லாஹ்வின் மார்க்கத்தை மட்டுமே உறுதியாக பற்றிப்பிடிக்க வேண்டும்.

3. மார்க்கத்தில் கூறப்பட்டதை நம்புவதும் அதன்படி அமல் செய்வதும்தான் நேர்வழியாகும். அதுதான் சொர்க்கத்திற்கு இட்டுச்செல்லும் நேரான பாதையாகும்.

4. நேர்வழி கிடைப்பதற்கும் அதில் அதிகரிப்பு ஏற்படுவதற்கும் ஈமான் அவசியம் ஆகும்.

5. எவ்வளவு ஈமான் உறுதியாக, உண்மையாக இருக்குமோ அவ்வளவு நேர்வழி அதிகமாகி கொண்டே இருக்கும். அல்லாஹ், அந்த அடியானுக்கு நல்லறிவையும் உண்மையான ஞானத்தையும் கொடுப்பான்.

6. முதலில் எனது அறிவைக் கொண்டு நான் சிந்திப்பேன்; நல்லது கெட்டதை எனது அறிவால் முடிவு செய்வேன்; அல்லாஹ்வும் ரஸூலும் கூறி இருந்தாலும் எனது அறிவு முடிவு செய்வதைத்தான் நான் ஏற்றுக் கொள்வேன் என்று ஒருவன் கூறினால் அவன் தனது இருப்பிடத்தை இப்லீஸுடன் ஜஹன்னம் நரகத்தில் ஏற்படுத்திக் கொண்டான்.

7. மார்க்கம் என்று அறியப்பட்டதில் உறுதி இருக்க வேண்டும்; பற்றும் பிடிப்பும் இருக்க வேண்டும்; தடுமாற்றம் இருக்கக் கூடாது; சந்தேகம் இருக்கக் கூடாது; அது அல்லாத ஒன்றில் மனம் செல்லக் கூடாது.

8. மேற்கூறப்பட்ட மூன்று வசனங்களில் மூன்று விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. 1. அல்லாஹ்வைப் பற்றிப்பிடிப்பது. அதாவது, அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து, அவன் பக்கம் நம்மை சேர்த்து வைக்கக்கூடிய காரணங்களுடன் இணைந்துவிடுவது ஆகும். 2. ஈமானில் உறுதியாக இருப்பவருக்கு மேலும் மேலும் அல்லாஹ்வை நெருங்குவதற்குரிய நேர் வழியின் வழிகாட்டல் அல்லாஹ்விடமிருந்துகொடுக்கப்படுகிறது. 3. அல்லாஹ்வை

நம்பிக்கைகொண்ட மனிதரின் நேர்வழிக்கு அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான். அவரது உள்ளத்தில் கோணல் ஏற்படாமல் பாதுகாத்து நேர்வழியின் வெளிச்சத்தையும் சத்தியத்தின் ஞானத்தையும் அவரது உள்ளத்திற்கு அல்லாஹ் விளங்க வைத்து விடுகிறான். அத்தகைய மனிதர் பெரிய அறிவாளிகள் புரியாததை எளிதில் புரிந்து கொள்கிறார்; அல்லாஹ்வும் ரஸூலும் கூறியதில் தெளிவான ஞானம் இருப்பதை அவர் கண்டுக் கொள்கிறார். யார் என்னதான் வழிகேட்டை அலங்கரித்து, தத்துவ வாதங்கள் செய்தாலும் உண்மை முஃமினை வழிகெடுக்க முடியாது. ஈமான் உள்ளத்தில் வேரூன்றிவிட்டக் காரணத்தால் அவர் உண்மையின் அந்தரங்கத்தையும் பொய்யின் அந்தரங்கத்தையும் அறிந்து கொள்வார்; நேர்வழியின் உண்மையையும் வழிகேட்டின்பொய்மையையும் புரிந்து கொள்வார்.

﴿فَإِنْ لَمْ يَسْتَجِيبُوا لَكَ فَاعْلَمْ أَنَّمَا يَتَّبِعُونَ أَهْوَاءَهُمْ وَمَنْ أَضَلُّ مِمَّنِ اتَّبَعَ هَوَاهُ بِغَيْرِ هُدًى مِنَ اللهِ إِنَّ اللهَ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ﴾

பொருள் : உமக்கு அவர்கள் பதில் சொல்லாவிடில், நிச்சயமாக அவர்கள் தங்கள் சரீர இச்சையையே பின்பற்றுகிறார்கள் என்று உறுதியாக நீர் அறிந்து கொள்வீராக. அல்லாஹ்வுடைய நேரான வழியை தவிர்த்து விட்டுத் தன் சரீர இச்சையைப் பின்பற்றுபவனை விட வழிகெட்டவன் எவனுமுண்டோ! நிச்சயமாக அல்லாஹ் (இத்தகைய) அநியாயக்கார மக்களை நேரான வழியில் செலுத்துவதில்லை.

(அல்குர்ஆன் 28 : 50)

﴿قُلْ أَطِيعُوا اللهَ وَأَطِيعُوا الرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّمَا عَلَيْهِ مَا حُمِّلَ وَعَلَيْكُمْ مَا حُمِّلْتُمْ وَإِنْ تُطِيعُوهُ تَهْتَدُوا وَمَا عَلَى الرَّسُولِ إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ﴾

பொருள் : (மேலும்) நீர் கூறுவீராக: அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் (உண்மையாக) கட்டுப்பட்டு நடங்கள். நீங்கள் புறக்கணித்தாலோ (நமக்கொன்றும் நஷ்டமில்லை. ஏனென்றால்) அவர் மீதுள்ள கடமை எல்லாம், அவர் (தன்) மீது சுமத்தப்பட்ட (தூதை உங்களுக்கு எடுத்துரைப்ப)துதான். உங்கள் மீதுள்ள கடமையெல்லாம் உங்கள் மீது சுமத்தப்பட்ட (அவருக்கு கட்டுப்பட்டு நடப்ப)து தான். நீங்கள் அவருக்கு கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள்தான் நேரான வழியில் சென்று விடுவீர்கள். (நம் தூதைப்) பகிரங்கமாக (தெளிவாக) அறிவிப்பதைத் தவிர, வேறொன்றும் நம் தூதர் மீது கடமையில்லை. (அல்குர்ஆன் 24 : 54)

﴿وَادْعُ إِلَىٰ رَبِّكَ إِنَّكَ لَعَلَىٰ هُدًى مُسْتَقِيمٍ﴾

பொருள் : (நபியே!) மேலும் நீர் அவர்களை உமது இறைவன் (ஏற்படுத்திய வழியின்) பக்கம் அழைப்பீராக. நிச்சயமாக நீர் நேரான வழியில்தான் இருக்கிறீர். (அல்குர்ஆன் 22 : 67)

படிப்பினைகள்

1. சான்று வழங்கப்பட்ட நேர்வழியாளர் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான்.

2. அவர்களுக்கு பின்னால் செல்வதுதான் நேர்வழியில் செல்வதாகும்.

3.அவர்கள்கூறுவது அனைத்தையும் நம்புவது, செயல்படுத்துவதுதான் நேர்வழி நடப்பதாகும்.

4. அவர்களது வாழிக்காட்டல்கள் எல்லாம் அல்லாஹ்வின் அனுமதிக் கொண்டு நமக்கு வழங்கப்பட்டதாகும்.

5. அவர்கள் எதை கற்பித்தார்களோ, எதன் பக்கம் மக்களை அழைத்தார்களோ அதுதான் நேர்வழியாகும்.

6. அவர்கள் அழைத்ததை தாண்டி நேர்வழி இருக்க முடியாது.

7. அவர்கள் நேர்வழியை தவற விடவில்லை.

8. அவர்களின் போதனைகளுக்கு வெளியில் நேர்வழி இருக்க சாத்தியமே இல்லை.

9. அவர்களின் வழிகாட்டலில் நாம் எதையும் பிரித்துப் பார்க்க அனுமதி நமக்கு இல்லை.

10. அவர்கள் ஒன்றை கூறிவிட்டார்கள் என்றால் உடனே அதற்கு கட்டுப்படுவதும் அதை செயல்படுத்துவதும்தான் நம்மீது கடமையாகும்.

11. அவர்கள் கூறியதை எதனுடனும் ஒப்பிட்டு பார்க்க முடியாது.

12. அவர்களின் கூற்றுகள்தான் உண்மை எது, பொய் எது, நேர்வழி எது, வழிகேடு எது, சத்தியம் எது, அசத்தியம் எது என்று பிரித்தறிவுக்கும் அளவுகோல் ஆகும்.

13. அவர்களின் கூற்று என்று உறுதியாகிவிட்டால், ஸஹீஹான ஹதீஸ் என்று அறிஞர்களிடம் முடிவாகிவிட்டால் பிறகு அதன் கருத்தை ஏற்பதற்கு வேறு ஓர் அளவுகோலை நிபந்தனையாக ஆக்கக்கூடாது. அது தெளிவான நயவஞ்சகமாக ஆகிவிடும்.

14. தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்று ஒருபக்கம் என்றால் அதற்கு எதிரில் இருப்பது மனிதர்களின் மனோ இச்சைதான். மனோ இச்சை ஒரு போதும் மார்க்கமாகாது. மனோ இச்சை மனிதனை நரகத்தின் பக்கம்தான் இழுக்கும். சொர்க்கத்தின் பக்கம் அல்ல. மனோ இச்சை இப்லீஸின் பக்கம்தான் வழிகாட்டும். அல்லாஹ்வின் பக்கம் அல்ல.

15. நீதத்தை அறிந்தும் அதை புறக்கணிப்பவன் அநியாயக்காரன் ஆவான். அதுபோன்றுதான் நேர்வழியாளர் யார், யாருடைய

நேர்வழிக்கு அல்லாஹ்விடம் அங்கீகாரம் இருக்கிறது என்று அறிந்தும் அவர் பின்னால் செல்லாமல், அவருடைய கூற்றுகளை ஏற்காமல், அதில் குதர்க்கம் செய்பவர்கள், அதில் கோணலை தேடுபவர்கள் நிச்சயமாக அநியாயக்காரர்கள்தான். அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழியின் நற்பாக்கியத்தை கொடுக்க மாட்டான். அவர்கள் தாங்களாகவே தங்களை மூடர்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

16. தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறுவது ஒருபோதும் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கு முரணாக இருக்காது. ஒருவர் அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்தவர் என்பதை அவர் தூதருக்கு கீழ்ப்படிவதை வைத்துதான் முடிவு செய்யப்படும். யார் எந்தளவு தூதருக்கு கீழ்ப்படிகிறாரோ அவர் அந்தளவு அல்லாஹ்விற்கு கீழ்ப்படிகிறார். தூதருக்கு கீழ்ப்படிவது அல்லாஹ்வின் அனுமதியும் அவனது கட்டளையும் ஆகும்.

17. புறக்கணிப்பவர்களால் நேர்வழிக்கும் நபிக்கும் அறவே நஷ்டமில்லை. நஷ்டமெல்லாம் நேர்வழியில் இருந்து விலகி செல்பவர்களுக்குத்தான்.

18. தூதரை உண்மையாக முழுமையாக பின்பற்றுபவர்தான் நேர்வழியாளர். மக்கள் அவரை வழிகேடர் என்றோ அறிவில்லாதவர் என்றோ கூறினாலும் சரி.

19. தூதரை பின்பற்றாதவர் மிகப் பெரிய வழிகேடர் ஆவார். அவர் மக்களின் பார்வையில் பெரிய அறிவாளியாக, சிந்தனைவாதியாக, சீர்திருத்தவாதியாக, ஞானியாக தோன்றினாலும் சரி.

20. ரஸூல் மற்றும் நம்பிக்கையாளர்களின் பணி நேர்வழியை அழகாக எடுத்து சொல்வதுதான். நேர்வழிப்படுத்துவது அல்லாஹ்வின் செயலாகும். அதில் அடியானுக்கு உரிமை இல்லை. அவன் நாடியவர்களை நேர்வழி நடத்துகின்றான். அவன் நாடியவர்களை வழிகெடுக்கின்றான். அது அவனது ஞானம் மற்றும் நாட்டத்துடன்

சம்பந்தப்பட்டதாகும்.

நேர்வழி பற்றி சில ஹதீஸ்களும் அவற்றின் படிப்பினைகளும்

عَنْ أَنَس بْن مَالِكٍ أَنَّهُ سَمِعَ عُمَرَ الغَدَ حِينَ بَايَعَ المُسْلِمُونَ أَبَا بَكْرٍ وَاسْتَوَىٰ عَلَىٰ مِنْبَرِ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ تَشَهَّدَ قَبْلَ أَبِي بَكْرٍ فَقَالَ أَمَّا بَعْدُ فَاخْتَارَ اللّٰهُ لِرَسُولِهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الَّذِي عِنْدَهُ عَلَى الَّذِي عِنْدَكُمْ وَهٰذَا الكِتَابُ الَّذِي هَدَى اللّٰهُ بِهِ رَسُولَكُمْ فَخُذُوا بِهِ تَهْتَدُوا وَإِنَّمَا هَدَى اللّٰهُ بِهِ رَسُولَهُ

(அபூ பக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீஃபாவாக பொறுப்பேற்று) முஸ்லிம்கள் அபூ பக்ர் அவர்களுக்கு பைஅத் செய்து கொடுத்த மறு நாள் அபூ பக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் (மக்களுக்கு பிரசங்கம் நிகழ்த்தினார்கள். அவர்கள் அந்த) குத்பாவில் தஷஹ்ஹுத் கூறுவதற்கு முன்னர் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய மின்பரில் அமர்ந்து பேசினார்கள் : அல்லாஹ் தனது நபி ﷺ அவர்களுக்கு உங்களிடம் உள்ளதைப் பார்க்கிலும் தன்னிடம் உள்ளதை தேர்ந்தெடுத்தான். அல்லாஹ் தனது ரஸூலுக்கு நேரவழிகாட்டிய வேதம் இதோ இருக்கிறது. அதை நீங்கள் பற்றிப் பிடியுங்கள்! நீங்கள் நேர்வழி பெறுவீர்கள். நிச்சயமாக அல்லாஹ் தனது ரஸூலுக்கு அதன் மூலம்தான் நேர்வழிகாட்டினான்.[60]

படிப்பினைகள்

1. ஸஹாபாக்கள் உடைய கூற்றுகளையும் இமாம்கள் ஹதீஸ்களுடன் ஹதீஸ் நூல்களில் பதிவு செய்ததிலிருந்து ஸஹாபாக்களின் கூற்றுகளுக்கு அறிஞர்களிடம் உள்ள முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

60. அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல் : புகாரி, எண் : 7269.

2. ஸஹாபாக்கள் நம்மை விட மார்க்கத்தை நன்கு அறிந்தும், புரிந்தும் இருந்தார்கள்.

3. நபி ﷺ அவர்களின் தகுதியையும் மார்க்கத்தையும் ஸஹாபாக்கள் நம்மை விட அதிகம் நன்கு புரிந்திருந்தார்கள்.

4. இந்த கூற்று நேரடியாக குர்ஆனின் சிறப்பை உறுதி செய்வதைப் போன்று நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களின் சிறப்பையும் உறுதி செய்கிறது. அதாவது, ஒருவர் நான் குர்ஆனை பின்பற்றுவேன், எனக்கு குர்ஆன்தான் முக்கியம், அதற்கு பிறகுதான் ஹதீஸ் எல்லாம், குர்ஆனுக்கு முரண்படாமல் இருந்தால்தான் ஹதீசை ஏற்பேன் என்று கூறினால் அவர் கூறுவது வழிகேடாகும். அவர் குர்ஆனைப் பின்பற்றுவதில் தவறிழைத்து விட்டார். அவர் நபி ﷺ அவர்களையும் அவர்களின் ஹதீஸ்களையும் உண்மையில் சரியாக விளங்கவில்லை என்றுதான் பொருளாகும். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் இந்த கூற்றை நன்கு சிந்தித்தால் நாம் கூறுகின்ற கருத்து புரியவரும். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு அல்லாஹ் குர்ஆனின் வழியாக நேர்வழி காட்டினான். மேலும், அவர்களை நேரடியாக அல்லாஹ் நேர்வழியில் செலுத்தினான். அவர்களுக்கு குர்ஆனையும் அதன் நேர்வழியையும் அல்லாஹ் புரியவைத்தான். அதன்படி அவர்களை வழிநடக்க வைத்தான். நபி ﷺ அவர்கள் வழிகெடுவதிலிருந்தும் வழிதவறுவதிலிருந்தும் அல்லாஹ் அவர்களை அவர்களின் இறுதி மூச்சு வரை பாதுகாத்தான்.

அப்படி இல்லை என்றால் அவர்களை தூதராக்கியதில் நமக்கு எந்த நன்மையும் இல்லை. மேலும், நபி ﷺ அவர்கள், குர்ஆன் மூலம் நேர்வழி காட்டப்பட்டார்கள் என்பதன் பொருள், குர்ஆனைக் கொண்டு எப்படி அமல் செய்ய வேண்டும்; குர்ஆனை மக்களுக்கு எப்படி விளக்கி கூற வேண்டும்; குர்ஆன் வசனங்களைக் கொண்டு அல்லாஹ் என்ன கருத்தை நாடி இருக்கின்றான் என்பதை எல்லாம் நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் கற்பித்துக் கொடுத்தான்.

அல்லாஹ் தனக்கு கற்பித்து கொடுத்ததைத்தான் நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியார்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். அல்லாஹ் தனக்கு கற்பிக்காத, இன்னும் அனுமதி கொடுக்காத எதையும் நபி ﷺ அவர்கள் உம்மத்திற்கு கற்றுக் கொடுக்கவில்லை. ஆகவே, நபி ﷺ அவர்களை பின்பற்றாதவர் குர்ஆனை பின்பற்றவில்லை. நபி ﷺ அவர்களையோ அல்லது அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்களையோ யார் குறை கூறுவாரோ அவர் குர்ஆனை குறை கூறுகிறார். உண்மையில் அவர் குர்ஆனை மதிக்கவில்லை. யார் ஹதீ-ஸ்களில் ஒன்றை குறை கூறி விமர்சனம் செய்வாரோ உண்மையில் தனது அறிவின்மையால் அல்லது நயவஞ்சகத்தால்தான் அப்படி செய்கிறார். ஹதீஸில் ஒரு விஷயம் இருந்தால் கண்டிப்பாக அதற்கு ஒப்பான ஒரு விஷயம் குர்ஆனில் இருக்கும். அதை அவர் புரியாமல் இருந்திருப்பார். அறிஞர்களை அவர் அணுகி இருந்தால் கண்டிப்பாக அவருக்கு விளக்கம் கிடைத்திருக்கும். தனக்கு தெரியாததை மறுப்பவன் ஒன்று சிறு பிள்ளையாக இருப்பான். அல்லது புத்தி பேதலித்த பைத்தியமாக இருப்பான்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றை மேலோட்டமாக பார்ப்பவர் குர்ஆன் போதும் என்று விளங்கி விடக்கூடாது. மாறாக உமர் ரழியல்லாஹு அன்ஹு நோக்கம் என்னவென்றால், நபி ﷺ அவர்கள் முற்றிலும் குர்ஆன் படி வாழ்ந்தார்கள்; அதைத்தான் நமக்கு போதித்தார்கள். அந்தக் குர்ஆன் நம்முடன் இருக்கின்றது. ஆகவே, நபி ﷺ அவர்களின் இறப்பால் நீங்கள் தடுமாறிவிட வேண்டாம் என்று கூறுவதும் குர்ஆனின் மகத்துவத்தையும் கண்ணியத்தையும் நமக்கு எடுத்துக் கூறுவதும் ஆகும். ஏனெனில் இந்தக் கூற்றை கூறிய உமர் ரழியல்லாஹு அன்ஹு ஹதீஸை பின்பற்றுவதில் மிகவும்உறுதியாகவும் கவனமாகவும் இருந்தார்கள். மேலும் யாராவது நபி ﷺ அவர்களின் சுன்னாவிற்கு மாற்றமாக தீர்ப்பு கூறினால் அவரை கடுமையாக கண்டித்தார்கள். அவர்கள் குர்ஆன், சுன்னா ஆகிய இரண்டின்படிதான் ஆட்சி செய்தார்கள்.

அவர்கள் ஒருபோதும் தன்னிடம் உறுதியான ஹதீஸை மறுக்க வில்லை.

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நபி ﷺ அவர்களின் குணம் எப்படி இருந்தது என்று கேட்கப்பட்டபோது, நபி ﷺ அவர்களின் குணம் குர்ஆனாக இருந்தது என பதிலளித்தார்கள்.

عَنْ عَبْدُ اللهِ إِنَّ أَحْسَنَ الحَدِيثِ كِتَابُ اللهِ وَأَحْسَنَ الهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَشَرَّ الأُمُورِ مُحْدَثَاتُهَا وَإِنَّ مَا تُوعَدُونَ لَآتٍ وَمَا أَنْتُمْ بِمُعْجِزِينَ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: பேச்சுகளில் மிக அழகானது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில், கலாச்சாரங்களில் மிக சிறந்தது நபி அவர்களின் வழிமுறை, கலாச்சாரம் ஆகும். காரியங்களில் மிகக் கெட்டவை புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும். நிச்சயமாக, உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட அனைத்தும் வரத்தான் போகிறது. நீங்கள் அல்லாஹ்வை பலவீனப்படுத்த முடியாது.[61]

படிப்பினைகள்

1. இந்த கூற்றிலிருந்து ஸஹாபாக்கள் உடைய செயல்கள் மார்க்க ஆதாரம் என்பதையும் அவர்கள் நமக்கு குர்ஆன் சுன்னாவில் உள்ள நேர்வழியைத்தான் போதித்தார்கள் என்பதையும் அவர்கள் குர்ஆனையும் சுன்னாவையும் மீறவில்லை என்பதையும் நாம் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

2. ஸஹாபாக்கள் நம்மை விட மார்க்கத்தை நன்கு புரிந்திருந்தார்கள். குர்ஆன், சுன்னாவை பின்பற்றுவதன் அவசியத்தையும் பித்அத்துகள்

61. நூல் : புகாரி, எண் : 7277

மிகக் கெட்டவை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அது மட்டுமல்ல, அதன் படி அவர்கள் நடக்கவும் செய்தார்கள். ஆகவேதான் ஸஹாபாக்கள் செய்த செயல் கண்டிப்பாக பித்அத்தாக இருக்காது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அவர்கள் ஹதீஸ்களை விளங்கி அதன் அடிப்படையிலேயே அதை செய்திருப்பார்கள். அது சம்பந்தமாக நபி அவர்களின் வழிகாட்டல் கண்டிப்பாக அவர்களிடம் இருந்திருக்கும். அதிலும் குறிப்பாக நான்கு கலீஃஃபாக்கள் ஒரு அமலை செய்தால் அதற்கு மாற்றமாக ஹதீஸ் இல்லை என்றால், கண்டிப்பாக அந்த அமல் மார்க்க ஆதாரமாக ஆகிவிடும். அவ்வாறே மற்ற சஹாபாக்களில் ஒருவர் அல்லது சிலர் ஒரு அமலை செய்து அதை அவர் அல்லாத மற்றவர்கள் மறுக்கவில்லை என்றாலும் அதற்கு மாற்றமாக ஹதீஸ் இல்லை என்றாலும் அந்த சஹாபியின் அமல் அல்லது கூற்று மார்க்க ஆதாரமாக ஆகிவிடும்.

3. அனாச்சாரங்கள் பார்க்க அழகாக இருந்தாலும் அவை மார்க்கத்தின் பார்வையில் மிகக் கெட்டவை ஆகும். அனாச்சாரங்கள் என்பதில் மக்கள் செய்கிற மூடத்தனமான சடங்குகள் மட்டும் அடங்காது. மாறாக தொழுகை, திக்ரு, துஆ போன்ற நல்லமலாக இருந்தாலும் அவற்றை அல்லாஹ்வும் ரஸூலும் காண்பிக்காத இடத்தில், காண்பிக்காத நேரத்தில், காண்பிக்காத முறையில் செய்வது பித்அத் ஆகும். உதாரணமாக அதான் சொல்வதற்கு முன்னர் ஸலவாத் ஓதுவது, அதானுக்கு முன்னர் அவூது, பிஸ்மில்லாஹ் கூறுவது, இன்னும் இவைப் போல பல காரியங்கள்.

4. குர்ஆனில் அல்லது ஹதீஸில் கூறப்பட்ட ஒரு நல்லமலை ஒருவர் அது அழகாக இல்லை என்று கூறினால், அல்லது அது நாகரீகமாக இல்லை, அல்லது நமது பண்பாட்டுக்கு ஏற்றமானது இல்லை, அல்லது அது பழங்கால பண்பாடு, தற்ககால நாகரீகத்திற்கு ஒத்து வராது இவ்வாறு அல்லது இது போன்று மார்க்கத்தில் கூறப்பட்ட ஒரு நல்லமலை விமர்சித்தால், அதை அசிங்கமாக பேசினால், அதை செய்பவரை பார்த்து இழிவாக பேசினால் அவருடைய ஈமானுக்கு

அது கேடு விளைவித்து விடும். இது போன்ற சில வார்த்தைகளால் அவர் மார்க்கத்தை விட்டே வெளியேறியவராக ஆகிவிடுவார். அல்லாஹ் பாதுகாப்பானாக!

عَنْ أَبِي أُمَامَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَا ضَلَّ قَوْمٌ بَعْدَ هُدًى كَانُوا عَلَيْهِ إِلَّا أُوتُوا الْجَدَلَ ثُمَّ تَلَا هَٰذِهِ الْآيَةَ بَلْ هُمْ قَوْمٌ خَصِمُونَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் : நேர்வழியில் இருந்த பின்னர் ஒரு கூட்டம் வழிகெடுகிறார்கள் என்றால் அவர்கள் மார்க்க விஷயங்களில் தர்க்கம் செய்திருப்பார்கள். அதனால்தான் அவர்கள் வழிகெட்டார்கள். பிறகு இந்த வசனத்தை நபி ﷺ அவர்கள் ஓதினார்கள் :

﴿بَلْ هُمْ قَوْمٌ خَصِمُونَ﴾

பொருள் : இன்னும் அவர்கள் மிகவும் தர்க்கம் செய்கின்ற கூட்டமாக இருக்கின்றார்கள்.[62] (அல்குர்ஆன் 43 : 58)

படிப்பினைகள்

1. நேர்வழி கிடைக்கப்பெற்றவர்கள் அதை பாதுகாக்க வேண்டும்.

2. நேர்வழி கிடைத்தப் பின்னர் அதிலிருந்து விலகி சென்றுவிடாமல், தடம் புரண்டு விடாமல், வழிகெட்டு விடாமல் இருக்க வேண்டும்.

3. அது குறித்து பயம் இருக்க வேண்டும். வழிகேட்டை குறித்து எப்போதும் அச்சத்தில் இருக்க வேண்டும். நான் நேர்வழியில்தான் இருப்பேன் என்று பெருமை பேசக் கூடாது. வழிகேடு தன்னில் வந்துவிடக் கூடாது என்று கவனமாகவும் பயத்துடனும் துஆவுடனும் இருக்க வேண்டும்.

62. அறிவிப்பாளர் : அபூ உமாமா ؓ, நூல் : இப்னு மாஜா, எண் : 48

﴿رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ﴾

பொருள் : எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காண்பித்த பின்னர் எங்கள் உள்ளங்களில் கோணலை ஏற்படுத்தி விடாதே! உன் புறத்திலிருந்து எங்களுக்கு கருணையைத் தா! நிச்சயமாக நீதான் மகத்தான கொடைவள்ளல் ஆவாய். (அல்குர்ஆன் 3 : 8)

4. நேர்வழியை பாதுகாப்பது என்பது அதை நம்பிக்கை கொள்வது, அதில் கூடுதல் குறைவு செய்யாமல் இருப்பது, அதன் படி முற்றிலும் செயல்படுவது, அதை மறுக்காமல், மாற்றாமல் இருப்பது, அதில் சந்தேகம் கொள்ளாமல் இருப்பது, யார் ஒருவரின் கூற்றுக்காகவும் அதை விட்டு விலகாமல் இருப்பது, அதற்காக அது அல்லாத எல்லாவற்றையும் விட்டுவிடுவதாகும்.

5. மார்க்கத்தில் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு நிரூபணமான ஒரு விஷயத்தை உடனே நம்பிக்கை கொள்ள வேண்டும்; அதை செயலில் கொண்டு வரவேண்டும்; அதை வாழ்க்கையில் பின்பற்றி நடக்க வேண்டும். இதற்கு மாறாக, அதை மாற்றும் விதமாக, அல்லது மறுக்கும் விதமாக, அல்லது அதில் கூடுதல், குறைவு செய்யும் விதமாக தர்க்கம் செய்வது மிகப் பெரிய வழிகேடாகும். அது ஈமானுக்கு ஆபத்தான ஒன்றாகும்.

6. நேர்வழி கிடைப்பது மிகப்பெரிய இறையருளாக இருப்பது போன்று அந்த நேர்வழியில் நிலைத்திருப்பதும் அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் நாடாமல் ஒருவர் நேர்வழி பெற முடியாது. அல்லாஹ் நாடாமல் ஒருவர் நேர்வழியில் நிலைத்திருக்க முடியாது. ஆகவேதான் இஹ்தினஸ் சிராத்தல் முஸ்த்தக்கீம் என்ற துஆவை நாம் ஒவ்வொரு தொழுகையிலும் பல முறை கேட்கும்படி அல்லாஹ் செய்திருக்கின்றான்.

7. மார்க்க விஷயத்தில் வீண் தர்க்கம் செய்வது, வாக்கு வாதம் செய்வது, விதண்டாவாதம் செய்வது இவை அனைத்தும் வழிகேட்டின் வாசல்களாகும்.

முடிவுரை : மனிதனுக்கு காற்று, நீர், உணவு அவசியமாக இருப்பது போன்று நேர்வழி மிக அவசியமாகும். அதாவது முன்பு கூறியது போன்று அல்லாஹ்வின் வழிகாட்டல், விளக்கம் மிக மிக தேவையாகும்.

இந்த தேவையை சரியாக பூர்த்தி செய்வதற்கு அல்லாஹு தஆலா நபிமார்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு வேதங்களை கொடுத்து மக்களிடம் அனுப்பினான். அந்த நபிமார்களை பின்பற்றுவதை நேர்வழியாகவும் அவர்களை நிராகரிப்பதை வழிகேடாகவும் ஆக்கினான்.

நபிமார்கள்தான் நேர்வழியின் ஒளிவிளக்குகள் ஆவார்கள். அவர்கள்தான் நேர்வழியின் ஆசிரியர்கள் ஆவார்கள். நேர்வழியின் இமாம்களும் அவர்களே! அவர்களை பின்பற்றி மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்கள்தான் உண்மையான வழிகாட்டிகள், இமாம்கள், இன்னும் நல்லோர் ஆவார்கள்.

நேர்வழி குறித்து குர்ஆனும் ஹதீஸும் மிக விரிவாக பேசுகின்றன. நேர்வழியின் சிறப்பு, முக்கியத்துவம் மற்றும் நேர்வழியின் விளக்கம் ஆகியவற்றை விவரிக்கின்ற அதே நேரத்தில் வழிகேட்டின் ஆபத்து, வழிகேட்டால் விளையும் குழப்பங்கள், இம்மை, மறுமையின் நஷ்டங்கள் ஆகியவற்றையும் விவரிக்கின்றன.

யார் தனது உள்ளத்தை அல்லாஹ்வின் தக்வாவைக் கொண்டு சுத்தப் படுத்தி, ஈமான் என்ற ஒளியால் அதை நிரப்பி, கட்டுப்படுதல், கீழ்ப்படிதல் என்ற அலங்காரத்தால் தனது உறுப்புகளை அலங்கரித்துக் கொள்வாரோ அவர் கண்டிப்பாக நேர்வழி காட்டப்பட்டு, அதில் நிலைத்திருப்பார்.

கண்ணியத்திற்குரிய ஸஹாபாக்களிடம் இந்த உயர்ந்த பண்புகள் நிறைவாக இருந்தன. ஆகவே, அவர்கள் நேர்வழியின் நட்ச்சத்திரங்களாக திகழ்ந்தார்கள். சத்தியத்தின் உரைக்கல்லாக விளங்கினார்கள். எனவேதான் அவர்களின் ஈமானை நாம் அளவுகோலாக எடுக்க வேண்டும் என்று அல்லாஹ் நேர்வழிக்கு நிபந்தனையாக கூறுகின்றான்.

﴿فَإِنْ آمَنُوا بِمِثْلِ مَا آمَنْتُمْ بِهِ فَقَدِ اهْتَدَوْا وَإِنْ تَوَلَّوْا فَإِنَّمَا هُمْ فِي شِقَاقٍ فَسَيَكْفِيكَهُمُ اللَّهُ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ﴾

பொருள் : (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் நம்பிக்கை கொண்டவாறே அவர்களும் நம்பிக்கை கொண்டால் நிச்சயமாக அவர்கள் நேரான வழியை அடைந்து விடுவார்கள். அவர்கள் புறக்கணித்து விட்டால் நிச்சயமாக வீண் பிடிவாதத்தில்தான் அவர்கள் இருக்கின்றனர். (நபியே!) அவர்களைப் பற்றி உமக்கு(ப் பயம் வேண்டாம்) அல்லாஹ் போதுமானவன். மேலும், அவன் (அனைத்தையும்) செவியுறுபவன், நன்கறிபவன் ஆவான். (அல்குர்ஆன் 2 : 137)

இந்த வசனம் நபி ﷺ அவர்கள் காலத்தில் வாழ்ந்த நயவஞ் சகர்கள் நேர்வழி பெற்று திருந்த வேண்டும் என்றால் அவர்கள் ஸஹாபாக்களைப் போன்று தங்கள் ஈமானை மாற்ற வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை இட்டான். ஸஹாபாக்களிடம் இருந்தது என்னவென்றால்,

1. சந்தேகம் கலக்காத நம்பிக்கை.

2. தடுமாறாத, உறுதியான நம்பிக்கை.

3. அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் முழுமையாக கட்டுப்படுவது.

4. அவர்களை எதிர்த்து பேசாமல் இருப்பது.

5. அவர்களின் கட்டளைகளை மதிப்பது, அதற்கு மிகுந்த மரியாதை தருவது.

6. குர்ஆன், ஹதீஸை கற்பது, அதன் விளக்கத்தை தேடுவது.

7. நபி ﷺ அவர்களின் கூற்றுக்கு முன் யாருடைய கூற்றையும் முற்படுத்தாமல் இருப்பது.

8. நபி ﷺ அவர்களின் கூற்றுகளில் மனதிருப்தி அடைவது.

9. நபி ﷺ அவர்களின் ஹதீஸைக் கொண்டு தங்கள் கருத்து வேற்றுமைகளை தீர்த்துக் கொள்வது.

10. நபி ﷺ அவர்களின் கூற்று வந்துவிட்டால் உடனே தனது கருத்தை விட்டுவிடுவது.

இத்தகைய நல்ல பண்புகள் அவர்களிடம் நிறைவாக இருந்தன. பின்னோரிலும் யாரிடம் இந்த பண்புகள் எவ்வளவு இருக்குமோ அந்தளவு அவர்கள் நேர்வழியில் இருப்பார்கள். இந்த பண்புகள் குறைய குறைய நேர்வழி குறைந்து கொண்டே போகும். இறுதியாக பாம்பு தனது சட்டையை கழட்டுவது போன்று அவர் ஈமானிலிருந்தும் நேர்வழியிலிருந்தும் கழண்டு விடுவார்.

அல்லாஹ்வே! எங்களை நேர்வழி பெற்றவர்களாக, நேர்வழி காட்டுபவர்களாக ஆக்கிவை! வழிகெட்டவர்களாக, வழிகெடுப்பவர்களாக ஆக்கி விடாதே!! ஆமீன்.

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 20

பணிவு

நற்குணங்கள் ஏராளம் உள்ளன. நற்குணங்களில் ஒவ்வொன்றும் விலை மதிக்க முடியாதவை. நற்குணங்கள் மனிதனுக்கு மிக அவசியமானவை ஆகும்.

ஒரு பெண்ணுக்கு அழகு சேர்க்கும் பொன் ஆபரணங்களை விட நற்குணங்கள் மனிதனுக்கு மதிப்பையும் கண்ணியத்தையும் சேர்க்கின்றன நற்குணங்கள்.

ஒரு மனிதன் நற்குணத்தைக் கொண்டுதான் உண்மையில் மதிக்கப்படுகின்றான். நற்குணத்தில்தான் உண்மையான கண்ணியமும், மதிப்பும் மனிதனுக்கு இருக்கின்றது.

ஒரு அரசனிடம் நற்குணங்கள் இருந்தால் அவனுக்கு அவை புகழுக்கு மேல் புகழை கொடுக்கும். அது போன்றுதான் ஒரு செல்வந்தனிடம் நற்குணங்கள் இருந்தால் மக்கள் அவனை போற்றிக்கொண்டே இருப்பார்கள். நற்குணமுள்ளவர்களை மனிதர்கள் தங்கள் உள் மனதிலிருந்து நேசிப்பார்கள். அவர்களை மனமாற வாழ்த்துவார்கள். அவர்களுக்கு பின்னால் அவர்களைப் பற்றி உயர்வாக பேசுவார்கள்.

இன்று மனிதன் காசை சம்பாதிக்க ஆசைப்படுகிறான். பதவியை அடைய ஆசைப்படுகிறான். அதற்காக பெரும் முயற்சியும்

செய்கிறான். இப்படி இவ்வுலகில் எத்தனையோ விஷயங்களை மனிதன் ஆசைப்பட்டு அவற்றை அடைய விடா முயற்சி செய்கிறான். அவன் ஆசைப்படுகின்ற எல்லாம் நேர்மையான நல்ல விஷயங்கள் என்று சொல்லிவிட முடியாது. அழிந்துபோகும் அற்ப விஷயங்களுக்கு எல்லாம் ஆசைப்பட்டு முயற்சி செய்கின்ற மனிதன் நற்குணத்தை மறந்துவிடுகிறான். நற்குணத்தின் அவசியத்தையும் அதன் நன்மையையும் மறந்துவிடுகிறான்.

மனிதர்களில் சிலர்தான் நற்குணத்தின் மதிப்பை உணர்ந்திருக்கின்றனர். நற்குணத்தை வலியுறுத்தி பல சமயங்களும் தத்துவ ஞானிகளும் நல்ல பல கருத்துகளை கூறி இருந்தாலும் குர்ஆனும் சுன்னாவும் நற்குணத்தை பற்றி கூறி இருப்பதற்கு ஈடாக அவை ஆகவே முடியாது.

நற்குணத்தின் மேன்மையை அறிந்திட அது அகிலங்களின் இறைவன் அல்லாஹ்விற்கும் அவனது ரஸூலுக்கும் மிகவும் விருப்பமானது என்பதே போதுமானது.

தான் அனுப்பிய நபிமார்களை எல்லாம் நற்குணசீலர்களாக அல்லாஹ் ஆக்கி இருந்தான். நபித்துவத்திற்கு நற்குணம் ஒரு நிபந்தனை என்று கூறுமளவுக்கு அதன் முக்கியத்துவம் இருகிறது.

மக்களில் மிக சிறப்பான குடும்பத்தில் இருந்து குணத்தால் மிக உயர்ந்தவர்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்து தனது நபித்துவத்தை அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்தான். பிறகு, தனது வஹ்யின் மூலம் மேலும் மேலும் அவர்களின் குணங்களை அழகாக்கிக் கொண்டே இருந்தான். ஒவ்வொரு நபியிடமும் நாம் படிக்க வேண்டிய பல நற்குணங்கள் உள்ளன.

வணக்க வழிபாடுகள் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், அந்த வணக்க வழிபாடுகளை செய்பவர் தனது குணத்தை சீர் செய்ய வில்லை

என்றால் அவரின் வணக்கங்கள் ஓட்டைப் பையில் போடப்படுகின்ற காசுகளைப் போல் ஆகிவிடும். அதிகம் வணக்கம் செய்கின்ற ஒரு வணக்கசாலி அல்லாஹ்வின் பக்கம் நெருங்கும் வேகத்தை விட ஒரு நற்பண்பாளர் அவரிடம் குறைவான அமல் இருந்தாலும் அல்லாஹ்விடம் மிக வேகமாக நெருங்கிவிடுவார். காரணம் அல்லாஹ்விற்கு நற்குணம் அவ்வளவு பிடிக்கும்.

பாவம் செய்த ஒரு பெண்ணை அவளின் இறக்க குணத்தால் அல்லாஹ் மன்னித்து விட்டான். ஒரு செல்வந்தரை அவரின் விட்டுக் கொடுத்து பெருந்தன்மையாக நடத்தல் என்ற குணத்தால் அல்லாஹ் அவரை மன்னித்து சொர்க்கம் செல்ல அனுமதி கொடுத்து விட்டான். மக்களுக்கு உதவி செய்வதற்காக பாதையில் இருந்த மரத்தை வெட்டி பாதையை சரி செய்து கொடுத்த மனிதரை அல்லாஹ் மன்னித்து சொர்க்கத்தில் சுற்ற அனுமதி கொடுத்து விட்டான். பெற்றோருடன் பணிவன்புடன் நடந்துகொண்டவரின் துஆவை ஏற்று அவரின் குகை வாயிலை அடைத்த பாறையை அல்லாஹ் அகற்றி விட்டான். நீதம் தவறாமல் ஆட்சி செய்த மன்னரை அர்ஷின் நிழலில் தங்கி இருக்கும் ஏழு கூட்டங்களில் முதல் நபராக அல்லாஹ் ஆக்கிவிட்டான். இப்படியாக நற்குணத்தின் நன்மைகளை நாம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இப்போது நற்குணங்களில் முக்கியமான ஒன்றை பற்றிதான் நாம் இங்கு பேச போகிறோம்.

ஆம்! அந்த குணம் பணிவாகும்.

ஆகா, பணிவு எவ்வளவு இனிமையான ஒரு குணம் தெரியுமா!? பணிவானவர்கள் மிகவும் இனிமையானவர்கள். பெருமை அடிப்பவர்கள் மிகவும் கேவலமானவர்கள்.

பணிவு அடியானுக்கு மிக அவசியம். அல்லாஹ்விற்கு முன்னும் பணிவாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அடியார்களுக்கு

முன்னும் பணிவாக இருக்க வேண்டும். நடை உடை பாவனை என அனைத்திலும் பணிவு இருக்க வேண்டும்.

இந்த நப்ஸ் பெருமையை, ஆணவத்தை விரும்பும். தன்னைத்தானே பெருமையாக பேச அது துடியாய் துடிக்கும். தன் பெருமையை பேச இடங்களை அது தேடி அலையும். கேட்பவர் சங்கட படும் அளவிற்கு தனது பெருமையை பேசிக்கொண்டே இருக்கும்.

நான் யாருக்கும் பணிய மாட்டேன், எல்லோரும் எனக்கு பணிய வேண்டும் என்று அது எதிர்பார்க்கும். பணிந்து நடப்பது நப்சுக்கு மிக கஷ்டமாக இருக்கும். நான் ஏன் பணிந்து நடக்க வேண்டும் என்று அகம்பாவமாக அது கேட்கும்.

உன்னைவிட எனக்கு என்ன குறை, நான் ஏன் உன்னிடம் பணிவாக இருக்க வேண்டும் என்று இப்லீசின் தத்துவங்களை தனது வாயால் உதிர்க்கும்.

தன் சொத்துகளைக் கொண்டு பெருமை பேசுவதும், தனது ஆடை அணிகலன்களை அணிந்து ஆணவமாக நடப்பதும், தனது உயர்வான இருக்கையில் அகங்காரமாக அமர்வதும் வீதியில் நெஞ் சை நிமிர்த்தி, என்னை விட பெரியவன் யார் என்ற தோரணையில்கர்வத்துடன் நடப்பதும் இந்த நப்சுக்கு ரொம்ப பிடிக்கும்.

நமது மார்க்கம் நமக்கு இத்தகைய இழி குணங்களை கற்றுக் கொடுக்க வில்லை.

நமது சொல், செயல், நடை, உடை, பாவனை என அனைத்திலும் நாம் பணிவாக நடக்க வேண்டும் என்று நமக்கு நமது மார்க்கம் கட்டளை இடுகிறது.

பணிவை நல்லோரின் குணமாகவும் பெருமையை தீயோரின் குணமாகவும் நமது மார்க்கம் அடையாளப்படுத்துகிறது.

பணிவால் அல்லாஹ்விடமும் அடியார்களிடமும் உயர்வு கிடைக்கும்

என்று மார்க்கம் நமக்கு அறிவுரை கூறுகிறது.

வாருங்கள்! நமது மார்க்கம் பணிவை நமக்கு எப்படி கற்பிக்கிறது என்று பார்ப்போம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿تِلْكَ الدَّارُ الْآخِرَةُ نَجْعَلُهَا لِلَّذِينَ لَا يُرِيدُونَ عُلُوًّا فِي الْأَرْضِ وَلَا فَسَادًا وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِينَ﴾

பொருள் : (மிக்க பாக்கியம் பெற்ற) மறுமையின் வீட்டையோ, பூமியில் பெருமையையும் விஷமத்தையும் விரும்பாதவர்களுக்கே நாம் சொந்தமாக்கி விடுவோம். முடிவான நற்பாக்கியம் இறையச்சம் உடையவர்களுக்குத்தான் உண்டு. (அல்குர்ஆன் 28 : 83)

படிப்பினைகள்

1. மறுமையின் நற்பாக்கியம்தான் உண்மையானதும் நிரந்தரமானதும் ஆகும்.

2. இவ்வுலக செல்வதைக் கொண்டோ அல்லது பெயர் புகழைக் கொண்டோ அல்லது ஆட்சி அதிகாரத்தைக் கொண்டோ மறுமையின் நற்பாக்கியம் கிடைத்து விடாது.

3. மாறாக மறுமையின் நற்பாக்கியம் கிடைப்பதற்கு ஈமானும் இறையச்சமும் நற்குணமும்தான் அல்லாஹ்விடம் நிபந்தனையாகும்.

4. இந்த பூமி ஈமான், இறையச்சம், நற்குணம் ஆகியவற்றைக் கொண்டுதான் உண்மையான செழிப்பை அடையும். இவற்றின் முன்னேற்றம்தான் உண்மையான முன்னேற்றமாகும். இவற்றின் மூலம்தான் மனித வாழ்க்கையில் நிம்மதியும் பாதுகாப்பும் பரஸ்பர அன்பும் நிலவும். பொருளாதார முன்னேற்றம் மற்றும் தொழில்

நுட்ப முன்னேற்றம் மனித வாழ்க்கையின் தேவைகளை இலேசாக்கி கொடுக்கும். ஆனால், மனிதனுக்கு நிம்மதியையும் பாதுகாப்பையும் கொடுக்குமா என்றால் கண்டிப்பாக கொடுக்காது. இதற்கு வளர்ந்த நாடுகளை உதாரணமாக சொல்லலாம். அந்த நாடுகளில் செல்வம், தொழில் நுட்பம்,வாழ்க்கை வசதிகள் காணப்பட்டாலும் அந்த சமூகங்கள் பாதுகாப்பு, நிம்மதி, பரஸ்பர அன்பு ஆகியவற்றை விட்டும் வெகு தொலைவில் இருக்கின்றன. இஸ்லாம் கூறுகின்ற சமூக அமைப்பு உலக வசதிகளை முன்வைத்து மட்டும் இருக்காது. மாறாக, இறை நம்பிக்கை மற்றும் நற்குணத்தின் மீது இஸ்லாம் தனது சமூகத்தை கட்டமைக்கிறது. நற்குணங்களைக் கொண்டுதான் குடும்பம் மேம்படுகிறது; நிம்மதியின் சுவாச காற்றை அது சுவாசிக்கிறது. குடும்பங்களுக்கும் உறவினர்களுக்கும் சமூகங்களுக்கும் இடையில் அமைதியும் பரஸ்பர அன்பும் ஒற்றுமையும் சுய நலமற்ற போக்கும் நற்குணங்களால்தான் மேம்படுகின்றன.

5. நற்குணங்களில், பெருமை கொள்ளாமை; பிறர் மீதி ஆதிக்கம் செலுத்த விரும்பாமல் இருத்தல்; தன்னை விட பிறருக்கு எந்த நல்லதும் கிடைத்து விடக்கூடாது, தானே எப்போதும் உயர்வாக இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையை விட்டு விலகி இருத்தல் இந்த வசனத்தில் மிக முக்கியமாக கூறப்பட்டுள்ளது. அல்லாஹு தஆலா இந்த இடத்தில் பணிவினால் மனிதனுக்குள் ஏற்படும் நல்ல மாற்றங்களை விவரித்து கூறுகின்றான். கண்டிப்பாக பணிவாக இருப்பவர்தான் இந்த நற்குணங்களை தனக்குள் கொண்டு வர முடியும். யாரிடம் பணிவு இல்லையோ அவர் நான் சிறந்தவன், நானே உயர்ந்தவன், நானே எல்லோரை விட மேலானவன், எனக்கு எல்லோரும் பணிய வேண்டும் என்று ஆசைப்படுவான். அது நடக்காத போது அதற்காக மனிதர்களை அச்சுறுத்துவான், அவர்கள் மீது அத்து மீறுவான். அவர்கள் தனக்கு முன் பணிய வேண்டும் என்பதற்காக ஓர் அரக்கனாக மாறிவிடுவான். இதற்கு வரலாறுகளில் ஃபிர்அவ்னையும் நம்ரூதையும் இன்னும் இவர்களைப்

போன்றவர்களையும் உதாரணமாக கூறலாம்.

﴿وَاخْفِضْ جَنَاحَكَ لِمَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِينَ﴾

பொருள் : உம்மைப் பின்பற்றிய நம்பிக்கையாளர்களிடம் புஜம் தாழ்த்தி(ப் பணிவாக நடந்து)க் கொள்வீராக. (அல்குர்ஆன் 26 : 215)

படிப்பினைகள்

1. இந்த வசனத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் நற்பண்பை கற்றுத்தருகின்றான்.

2. பணிவாக இருங்கள் என்பதை மிகவும் அழுத்தமாக இந்த வசனம் கூறுகிறது.

3. உன் புஜத்தை தாழ்த்துவீராக! என்பது பணிவாக நடந்து கொள்ளுங்கள் என்று கூறுவதை விட மிகவும் ஆழமானதாகும்.

4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நற்குணங்களுடைய சங்கமமாக திகழ்ந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ் இந்த உபதேசத்தை செய்வதிலிருந்து நற்குணங்களில் பணிவு எவ்வளவு முக்கியமான பண்பு என்பதை அறிய முடிகிறது.

5. உடன் இருக்கும் தோழர்களிடம் பணிவாக பழகுவதன் அவசியத்தை இந்த வசனம் உணர்த்துகிறது.

6. உண்மையான, நிரந்தரமான, ஆழமான நட்புக்கு பணிவு அவசியம் என்பதை இந்த வசனம் அழகாக எடுத்துக் கூறுகிறது.

7. பல நட்புகளும் தோழமைகளும் நீடிக்காமல் போவதற்கு காரணம் அங்கே நற்குணங்கள் பேணப்படாமல் இருத்தல் காரணமாகும்.

8. பணிவுடன் கூடிய உயர்ந்த நற்குணங்களால்தான் மிக சிறந்த தோழர்களை உருவாக்க முடியும்.

9. நல்லபண்புகள் இல்லாத தலைமை சிறந்த தோழர்களையும் உயர்ந்த சமுதாயத்தையும் உருவாக்க முடியாது.

10. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்கள் நபியின் குணத்தால் மிகவும் ஈர்க்கப்பட்டு இருந்தார்கள். தனது குடும்பத்தை விடவும் தனது உயிரை விடவும் அவர்கள் நபியை நேசித்ததன் காரணம் நபியின் நற்பண்புகள் ஆகும். அவற்றில் நபியிடமிருந்த பாசம், பணிவு, இறக்கம் மிகவும் முக்கியமானவையாக திகழ்கின்றன. இதைப் பற்றி பின்வரும் வசனம் அழகாக விவரிக்கிறது.

﴿فَبِمَا رَحْمَةٍ مِنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيظَ الْقَلْبِ لَانْفَضُّوا مِنْ حَوْلِكَ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ﴾

பொருள் : (நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்கள் மீது மென்மையானவராக நடந்து கொண்டீர். நீங்கள் கடுகடுப்பானவராகவும், கடின உள்ளம் கொண்டவராகவும் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் வெருண்டோடி இருப்பார்கள். ஆகவே, அவர்(களின் குற்றங்)களை நீர் மன்னித்து (இறைவனும்) அவர்களை மன்னிக்கப் பிரார்த்திப்பீராக! (அல்குர்ஆன் 3 : 159)

படிப்பினைகள்

1. அல்லாஹ்வின் அருள் இல்லாமல் யாரும் நல்லவராக, நற்குணமுள்ளவராக ஆக முடியாது. எல்லா நன்மைகளுக்கும் அல்லாஹ்வின் அருள் நமக்கு தேவையாக இருக்கிறது.

2. ஆகவே, அல்லாஹ்விடம் எப்போதும் நல்லதையும் நற்குணத்தையும் நாம் வேண்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடம்

எப்போதும் நற்குணத்தை வேண்டி துஆ செய்பவர்களாக இருந்தார்கள்.

4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணத்தை அல்லாஹ் எப்போதும் சீர்ப்படுத்திக் கொண்டே இருந்தான்.

5.அழைப்பாளர்களுக்கும் சமுதாயத் தலைவர்களுக்கும் மென்மையும் பணிவும் மிக முக்கியம் என்பதை இந்த வசனம் உணர்த்துகிறது.

6. பணிவும் தன்னடக்கமும் மென்மையும் இல்லா மனிதனை மக்கள் நேசிக்க மாட்டார்கள். அவனுக்கு நல்ல நண்பர்கள் இருக்க மாட்டார்கள். அவனைப் போன்ற தலைக்கனம் உள்ளவர்கள்தான் அவனுக்கு நண்பர்களாக இருப்பார்கள்.

7. பணிவுள்ளவர் மக்களின் குறைகளை மன்னிக்கும் மாண்பாளராக இருப்பார்.

8. பணிவுள்ளவர்களின் உள்ளம் விசாலமாக இருக்கும். ஆகவே, அவர் மக்களுடன் பெருந்தன்மையாக நடந்துகொள்வார்.

9. பணிவுள்ளவர் பிறர் உள்ளம் உடையாமல் தனது பேச்சையும் நடத்தையையும் அமைத்துக் கொள்வார்.

10. பணிவுள்ளவர் உடைய உள்ளம் விசாலமாக இருக்கின்ற காரணத்தால் அவர் எப்போதும் மக்களுக்கு நல்ல துஆக்களை செய்வார், தனக்கு கெடுதி செய்யும் மக்களை மன்னிப்பதுடன் அவர்களுக்காக அல்லாஹ்விடம் அவர் பாவமன்னிப்பு கேட்பார்.

பணிவை வலியுறுத்தி இது போன்ற பல வசனங்கள் குர்ஆனில் உள்ளன. நபிமார்களின் நற்குணங்களில் மிகவும் முன்னிலை குணமாக பணிவு இருந்ததை பார்க்க முடிகிறது. பணிவு இருப்பவர்தான் அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆக முடியும். அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்ற நல்ல வாய்ப்பையும் அல்லாஹ் அவருக்கு நிரந்தரமாக வழங்குகின்றான். அவருக்கு

உற்ற நல்ல தோழர்களையும் நிரந்தரமாக்கி தருகின்றான். பணிவு இல்லாதவர்களை மக்கள் நேசிக்க மாட்டார்கள். அவர்களுடன் மக்கள் நட்பு வைக்கவும் மாட்டார்கள்.

இனி பணிவை குறித்து நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய சில ஹதீஸ்களை பார்ப்போம்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ وَمَا زَادَ اللهُ عَبْدًا بِعَفْوٍ إِلَّا عِزًّا وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلّٰهِ إِلَّا رَفَعَهُ اللهُ

தர்மம் செல்வத்தை குறைக்காது. ஓர் அடியான் பிறரை மன்னிப்பதால் அல்லாஹ் அவருக்கு கண்ணியத்தைதான் அதிகப்படுத்துவான். ஒருவர் அல்லாஹ்விற்காக பிறரிடம் பணிந்து நடந்தால் அல்லாஹ் அவரின் கண்ணியத்தை உயர்த்துவான்.[63]

படிப்பினைகள்

1. அல்லாஹ் மகா கருணையாளன், பெரும் நிதீயாளன், பெரும் தயாளன். அவனுடைய தயாளத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் தர்மம் செய்தவருக்கு செல்வத்தில் அவன் அபிவிருத்தி செய்கின்றான். தர்மசாலியின் செல்வம் எப்போதும் வளர்ந்து கொண்டே போகும். அதில் குறைவுகள் ஏற்படாது. இவர் மக்களின் கஷ்டங்களை போக்குவதால் அல்லாஹ் இவரின் கஷ்டங்களை கண்டிப்பாக போக்குவான்.

2. அடியார்களின் பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான். அடியார்களும் தங்களுக்குள் மன்னிக்கும் பண்பை கடைப்பிடிக்க வேண்டும் என்று அவன் ஆசைப்படுகிறான். எல்லோரும் தவறுகள், தப்புகள் செய்பவர்கள்தான். எல்லோரிடமும் குறைகள் இருக்கும். குறையில்லாத நண்பனை நீ தேடினால் சாத்தியமில்லாத ஒன்றை

63. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ﵁, நூல் : முஸ்லிம், எண் : 2588

நீ தேடுகிறாய் என்று பழமொழியில் சொல்லப்படும். அடியார்களின் நற்பண்புகளுக்கு ஏற்ப அல்லாஹ்வும் அருள் புரிகிறான். தர்மம் கொடுப்பவர்களுக்கு அவனும் செல்வத்தை வாரி வழங்குகிறான். அடியார்களை மன்னிப்பவர்களை அல்லாஹ்வும் மன்னிக்கின்றான்.

3. பணிவு உயர்வுக்குத்தான் வழிவகுக்கும். பணிவால் உயர்வுதான் கிடைக்கும். பணிவானவர் கண்ணியப்படுத்தப்படுவார். பணிவுள்ளவர் மதிக்கப்படுவார். பணிவாக நடப்பவரை மனிதர்கள் கவுரவப்படுத்துவார்கள். பணிவாக ஒருவர் நடக்க தடையாக இருப்பது, பணிவினால் தனக்கு அவமானம் ஏற்படுமோ அல்லது தான் தாழ்ந்துவிடுவோமா, நமது கண்ணியம் குறைந்து விடுமோ, தனது மதிப்பு போய் விடுமோ என்ற எண்ணம்தான். ஒருவர் இந்த ஹதீஸை சரியாக புரிந்து கொண்டால் அவர் பணிவாக நடப்பதை அவரின் பதவி, கல்வி, வயது, சமூக அந்தஸ்து, செல்வம் என எதுவும் தடுக்காது.

4. அல்லாஹ்விற்காக பணிபவரின் பணிவுதான் உண்மையான பணிவு. அவரின் பணிவு அவரை விட்டும் எப்போதும் பிரியாது. அவர் மக்கள் எல்லோரிடமும் பணிவாக நடப்பார். தன்னை விட மற்றவர்களை உயர்வாக கருதுவார். யார் மீதும் அவர் தனது பெருமையை நிலைநாட்ட முயற்சிக்க மாட்டார்.

5. பணிவு என்பது பிறருக்கு பணிவிடை செய்வதைக் கொண்டு வெளிப்படுகின்றது. நல்ல, பண்பான, அழகிய வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுகின்றது. தான் பிறருக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும். பிறருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அடக்கமாக நடந்து கொள்ள வேண்டும். வெறும் தலையை தாழ்த்தி, தாழ்வான குரலில் பேசுவது மட்டுமல்ல பணிவு என்பது. மாறாக பணிவு உள்ளத்தில் இருக்க வேண்டும். அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும். பிறர் பார்த்து போற்ற வேண்டும் என்பதற்காக இருக்கக் கூடாது.

6. பணிவானவர்கள் அல்லாஹ்விற்கு நெருக்கமானவர்கள்.

7. உயர்வு என்பது நற்குணங்களைக் கொண்டுதான்.

8. செல்வம் மற்றும் பதவியைக் கொண்டு கிடைக்கும் உயர்வு தற்காலிகமானது.

9. பணிவு, இன்னும் அது போன்ற நற்குணங்களைக் கொண்டு கிடைக்கும் கண்ணியம்தான் நிரந்தரமானதும் உண்மையானதும் ஆகும்.

10. பதவி மற்றும் செல்வத்தைக் கொண்டு அடைய முடியாத உயர்வையும் கண்ணியத்தையும் நற்பண்புகளைக் கொண்டு அடைந்து விடலாம்.

11. மனிதன் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நம்பிக்கைக் கொள்ள வேண்டும். அவர்கள் தர்மம் வளர்ச்சியை தரும் என்று கூறினார்கள். மன்னிப்பு கண்ணியத்தை கூட்டும் என்று கூறினார்கள். பணிவு உயர்வைத் தரும் என்று கூறினார்கள். ஆகவே நாம் இந்த வழிகாட்டலை நம்பி தர்மத்தை அதிகப்படுத்த வேண்டும். பிறர் தவறுகளை மன்னிக்க வேண்டும். உலகில் உள்ள எல்லா மக்களிடமும் குறிப்பாக, ஏழை எளிய மக்களிடம் பணிவாக நடக்க வேண்டும். காரணம், அவர்கள் உள்ளதால் மிகவும் பலவீனமாக இருப்பார்கள். பதவி மற்றும் செல்வந்தர்களை சந்திக்கும் போது அவர்களுக்குள் தாழ்வு மனப்பான்மை ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவர்கள் நம்மை அவமதித்து விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்குள் இருக்கலாம். ஆகவே செல்வந்தர்களும் பதவி வகிப்பவர்களும் ஏழைகள் மற்றும் சாமானியர்கள் தம்மை சந்திக்க வரும்போது அவர்களுக்கு முன் பணிவாக அன்பாக கருணையாக இருக்க வேண்டும். நபியவர்களும் கலீஃபாக்களும் இஸ்லாமிய மன்னர்களும் இத்தகைய நற்பண்புகள் உடையவர்களாக திகழ்ந்தார்கள். அல்லாஹு தஆலா தனது நபிக்கு

இதை கட்டளையாக கூறினான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

﴿وَإِذَا جَاءَكَ الَّذِينَ يُؤْمِنُونَ بِآيَاتِنَا فَقُلْ سَلَامٌ عَلَيْكُمْ كَتَبَ رَبُّكُمْ عَلَىٰ نَفْسِهِ الرَّحْمَةَ أَنَّهُ مَنْ عَمِلَ مِنْكُمْ سُوءًا بِجَهَالَةٍ ثُمَّ تَابَ مِنْ بَعْدِهِ وَأَصْلَحَ فَأَنَّهُ غَفُورٌ رَحِيمٌ﴾

பொருள் : (நபியே!) நம் வசனங்களை நம்பிக்கை கொண்டவர்கள் உம்மிடம் வந்தால் (நீர் அவர்களை நோக்கி, “ஸலாமுன் அலைக்கும்) உங்கள் மீது சாந்தியும், சமாதானமும் நிலவுவதாக! உங்கள் இறைவன் (உங்களுக்கு) அருள் புரிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டான். நிச்சயமாக உங்களில் எவரேனும் அறியாமையின் காரணமாக (ஒரு) பாவத்தைச் செய்துவிட்டு, பின்னர் அதற்காக கைசேதப்பட்டு (அதில் இருந்து விலகி) நற்செயல்களைச் செய்தால் (அவருடைய குற்றங்களை இறைவன் மன்னித்து விடுவான். ஏனென்றால்) நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவன், மிகக் கருணையுடையவன்" என்று கூறுவீராக. (அல்குர்ஆன் 6 : 54)

இந்த வசனத்தில் முஃமின்கள் சபைக்கு வந்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முந்தி சலாம் கூற வேண்டும், அல்லாஹ்வின் நற்செய்தியை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும், அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வைப் பற்றி நல்லாதரவை ஏற்படுத்த வேண்டும் என்று அல்லாஹ் கற்பிக்கின்றான்.

ஒருவர் மற்றவருக்கு முந்தி சலாம் கூறுவது பணிவின் உயர்ந்த வெளிப்பாடாகும். சபைக்கு வருபவர் தான் சபையில் வீற்றிருப்பவருக்கு சலாம் கூற வேண்டும். ஆனால், தனது சபைக்கு வருபவர்களுக்கு தான் முந்தி சலாம் கூற வேண்டும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் சொல்லியதிலிருந்து

தனது நபி மிகப் பணிவோடு இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புவதை நாம் அறிய முடிகிறது. எந்த குணத்தை அல்லாஹ் தனது நபியிடம் விரும்பினானோ அதை விட சிறந்த குணம் இருக்க முடியுமோ!?

ஆகவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பணிவின் உச்சத்தில் இருந்தார்கள். மக்களோடு நடந்து சென்றால் தான் முந்தி செல்லாமல் மக்களை முன்னாள் நடக்கவிட்டு தான் அவர்களுக்கு பிந்தி செல்வார்கள். தனது தோழர்களுக்கு நபி அவர்கள் பணிவிடை செய்வார்கள். தனது மனைவிமார்களுக்கும் அடிமைகளுக்கும் நபி அவர்கள் பணிவிடை செய்வார்கள். சிறுவர்களுக்கு தான் முந்தி சலாம் கூறுவார்கள். மக்களை விட்டு தன்னை அவர்கள் தூரமாக்கிக் கொள்ள மாட்டார்கள். கழுதையில் பயணிப்பார்கள். எல்லோரோடும் அமர்வார்கள். எல்லோருக்கும் கொடுத்துவிட்டு மீதியை உண்பார்கள், குடிப்பார்கள். அதில் எவ்விதமான சங்கடத்தையும் உணர மாட்டார்கள். யாரையும் கடிந்து பேச மாட்டார்கள். பணியாளர்களை தண்டிக்க மாட்டார்கள். ஏன் இதை செய்தாய்? நீ ஏன் இதை செய்ய வில்லை என்று கேட்க மாட்டார்கள். விருந்துக்கு அழைப்பவர் எதை உன்ன கொடுத்தாலும் பணிவன்போடு ஏற்று அதை உண்டு அவருக்காக துஆ கேட்பார்கள். அவரை வாழ்த்துவார்கள்.

நபியின் நற்குணம் அவர்களின் தோழர்களிடம் பிரதிபலித்தது. தோழர்களும் மிக்க பணிவுள்ளவர்களாக மக்களிடம் பழகினார்கள். தங்கள் அடிமைகளிடம் பணிவுடன் பேசினார்கள். அன்புடன் கருணையுடன் நடந்து கொண்டார்கள். அவர்களின் நற்குணத்தால் கவரப்பட்ட அடிமைகள் இஸ்லாமை ஏற்று அந்த தோழர்களிடம் கல்வி கற்று பெரிய மார்க்க அறிஞர்களாக விளங்கினார்கள்.

12. மனிதனின் தொழுகை நோன்பு ஹஜ்ஜுக்கு அல்லாஹ்விடம் நற்கூலிகளும் நன்மைகளும் கிடைப்பது போல் உயர்வான

நற்குணங்களுக்கும் அல்லாஹ்விடம் நன்மைகளும் நற்கூலிகளும் உண்டு. சில நேரங்களில் நல்லமல்களுக்கு கிடைக்கும் கூலியை விட நற்குணங்களுக்கு கூலி அதிகமாக கிடைக்கலாம்.

13. யார் தர்மத்தால் செல்வம் குறையும் என்று நம்புவானோ அவனது உள்ளத்தில் உண்மையில் சந்தேக நோய் இருக்கிறது.

14. முரட்டுத் தனம், கடுமை, பெருமையாக நடத்தல், தன்னை உயர்வுப் படுத்தி காட்டிக் கொள்ளுதல், தனது செல்வம், வசதி, அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டு பெருமை பேசி கண்ணியத்தை தேடுபவன் உண்மையில் அல்லாஹ்வின் பார்வையிலும் அவனது அடியார்களின் பார்வையிலும் தாழ்ந்தவனாகதான் இருப்பான்.

15. இஸ்லாம் மார்க்கம் உயர்ந்த நற்குணங்கள் மீது தனது சமூகத்தை கட்டி அமைக்கிறது. முஸ்லிம்களிடம் உயர்வான பண்புகள் குடிகொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறது. இழி குணங்களை கடுமையாக கண்டிக்கிறது. தன்னை பின்பற்றுபவர்கள் உயர் பண்புகளை கடைப்பிடித்து மேலான, முன்மாதிரியான சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று இஸ்லாம் விரும்புகிறது. நற்குணத்தால் விளையும் நன்மைகளையும் அல்லாஹ்விடம் அதற்குள்ள நற்கூலியையும் விரிவாக விவரிக்கிறது. நாம் கூறும் இந்த கருத்துக்கு இந்த ஹதீஸ் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

عَنْ عِيَاضِ بْنِ حِمَارٍ أَنَّهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ اللهَ أَوْحَىٰ إِلَيَّ أَنْ تَوَاضَعُوا حَتَّىٰ لَا يَبْغِيَ أَحَدٌ عَلَىٰ أَحَدٍ وَلَا يَفْخَرَ أَحَدٌ عَلَىٰ أَحَدٍ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : நீங்கள் (உங்களுக்குள் ஒருவர் மற்றவருடன்) பணிவாக நடந்து கொள்ளுங்கள். ஒருவர் மற்றவர் மீது அநியாயம் செய்ய வேண்டாம். ஒருவர் மற்றவர் மீது பெருமை பேச வேண்டாம்.[64]

64. அறிவிப்பாளர் : இயாழ் இப்னு ஹிமார் ؓ, நூல் : முஸ்லிம், எண் : 2588, தரம் : ஸஹீஹ் - அல்பானி

عَنْ أَبِي هُرَيْرَةَ يَقُولُ قَالَ النَّبِيُّ ﷺ بَيْنَمَا رَجُلٌ يَمْشِي فِي حُلَّةٍ تُعْجِبُهُ نَفْسُهُ مُرَجِّلٌ جُمَّتَهُ إِذْ خَسَفَ اللَّهُ بِهِ فَهُوَ يَتَجَلْجَلُ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் முழு ஆடை அணிந்து நடந்து சென்றுகொண்டிருக்கும்போது அவருக்கு அவரின் அழகு பெருமையாக இருந்தது. அவர் தனது நீண்ட தலை முடியை சீவி சிங்காரித்து இருந்தார். அப்போது அல்லாஹ் அவரை பூமியில் சொருகிக் கொண்டான். அவர் மறுமை நாள் வரை பூமிக்குள் உள்ளே புதைந்து கொண்டு இருக்கிறார்.[65]

இரண்டு ஹதீஸ்களின் படிப்பினைகள்

1. பணிவாக நடப்பது கட்டாயம் நாம் பேணவேண்டிய ஒரு குணமாகும். காரணம் அது அல்லாஹ்வின் கட்டளையாகும்.

2. விரும்பினால் பணிவாக இருக்கலாம், விரும்பினால் பெருமையாகநடக்கலாம் என்பதல்ல. மாறாக, பணிவாகத்தான் நடந்தாக வேண்டும். தனது நபிக்கு அல்லாஹ் பல கட்டளைகளை குர்ஆனில் கூறி இருக்கின்றான். பல கட்டளைகளை குர்ஆனுக்கு வெளியிலும் அல்லாஹ் கூறி இருக்கின்றான். பணிவு குறித்து பொதுவாக குர்ஆனில் கூறப்பட்டு இருப்பது போல் குர்ஆனுக்கு வெளியில் அல்லாஹ் நபிக்கு செய்த உபதேசங்களில் இதுவும் ஒன்றாகும்.

3. இந்த உபதேசத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு கூறும்படி கூறப்பட்டிருந்தாலும் அது அவர்களுக்கும் உள்ள உபதேசம் ஆகும்.

4. அல்லாஹ் நமக்கு கூறுகின்ற உபதேசம் குர்ஆனிலும் இருக்கும். குர்ஆனுக்கு வெளியில் அல்லாஹ் கூறியதாக நபி ஸல்லல்லாஹு

65. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ؓ, நூல் : புகாரி, எண் : 5789

அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதிலும் இருக்கும். இன்னும் அப்படி இல்லாமல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு கூறுவதாகவும் இருக்கும். இந்த மூன்று முறைகளில் எப்படி வந்தாலும் நாம் பின்பற்றுவதை பொறுத்த வரை அவை எல்லாம் ஒன்றுதான். அதாவது, அந்த கட்டளைகளுக்கு மத்தியில் பாகுபாடு காட்டாமல் நாம் அவற்றை பின்பற்ற வேண்டும்.

5. பணிவு என்பது வெறும் பேச்சல்ல. அல்லது சில பாவனைகள் அல்ல. அல்லது சில சைகைகள் அல்ல. அல்லது சில சடங்கான வெளிப்பாடுகள் அல்ல. மாறாக அது உள்ளத்திலிருந்து வெளிவர வேண்டும். பிறரை மதிக்க வேண்டும். அவரை விட தன்னை உயர்வாக பேசக்கூடாது. பிறர் மீது அத்து மீறக் கூடாது. பிறருக்கு அநியாயம் செய்யக் கூடாது. பிறர் விஷயத்தில் மரியாதையாக நடக்க வேண்டும். பிறர் கண்ணியத்தை பேண வேண்டும். பிறரை தரம் தாழ்த்தி பேசக் கூடாது. பிறரை அவமரியாதை செய்யக் கூடாது. மனிதத்தையும் மனித கண்ணியத்தையும் பேணி நடக்க வேண்டும். தன்னையும் தனது பொருளையும் உயர்வாக பேசுவதும் பிறரையும் பிறர் பொருளையும் தாழ்த்தி பேசுவதும் கூடாது. பொதுவாக உலக வஸ்துக்களை உயர்த்தி பேசுவது அதில் நமது ஆசையை அதிகப்படுத்தும்; அதன் மீது நமக்கு மோகத்தை அதிகப்படுத்தும்; அதை இன்னும் அதிகமாக அடைய வேண்டும் என்ற தேடலை அதிகப்படுத்தும்; எப்போதும் நமது சிந்தனையை அதிலேயே ஈடுபடுத்தி வைக்கும்.

6. தன்னிடம் இருப்பதெல்லாம் அல்லாஹ் தனக்கு கொடுத்த அருள் என்ற எண்ணம் இருக்க வேண்டும். எனது செல்வம், எனது குடும்பம், எனது வசதிகள், இன்னும் இவை போக என்னிடம் இருக்கின்ற எல்லா வஸ்துக்களும் அல்லாஹ் எனக்கு கொடுத்தவையாகும், அல்லாஹ் நாடி எனக்கு கிடைத்தவை ஆகும். அவன் நாடவில்லை என்றால் எனக்கு எதுவும் கிடைத்திருக்காது, அவன் நாடாமல் எனக்கு எந்த நன்மையும் கிடைத்திருக்காது என்று

நம்ப வேண்டும். நான் சம்பாதித்தேன், நான் உழைத்தேன், எனது அறிவால், எனது திறமையால், எனது அனுபவத்தால் எனக்கு கிடைத்தது என்ற பெருமை இருக்க கூடாது. தன்னிடம் இருக்கின்ற எதைக் கொண்டும் செருக்கு வந்துவிடக்கூடாது. நம்மிடம் இருக்கின்ற ஒரு பொருள் நமக்கு அழகாக தோன்றினால், நாம் அணிந்து இருக்கின்ற ஆடை நமக்கு அழகாக தோன்றினால், நமது வாகனம் நமக்கு அழகாக தோன்றினால், நமது வீடு நமக்கு அழகாக தோன்றினால் உடனே நாம் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து, இவை எல்லாம் அல்லாஹ் நாடி அவன் எனக்கு கொடுத்த அருளாகும். இதில் எனக்கு எவ்விதமான ஆற்றல், திறமை இல்லை. அல்லாஹ் நாடவில்லை என்றால் எனக்கு கிடைத்திருக்காது என்று நாம் நினைக்க வேண்டும். அப்படி நினைக்காமல், பெருமையும் செருக்கும் தன்னை பெரிதாக நினைப்பதும் உள்ளத்தில் வந்துவிட்டால் அவன் அழிவது நிச்சயம்தான். அவனை அல்லாஹ் கடும் சினம் கொண்டு தண்டிப்பான். அவன் பெருமை கொண்டதுபோல் அவன் அவனை சிறுமைப்படுத்துவான். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

7. சில நேரங்களில் நமது பார்வையில் ஒன்று சிறிய குற்றமாக இருக்கும். ஆனால் அதுவோ அல்லாஹ்வின் பார்வையில் கடுமையாக இருக்கும்.

8. அல்லாஹ்விடம் தணடனைகள் பாவத்திற்கு ஏற்ப இருக்கும்.

9. யார் எத்தகைய பாவங்களை, குற்றங்களை செய்கிறார்களோ அதற்கேற்ப அல்லாஹ் அவரை தண்டிப்பான்.

10. அல்லாஹ்விற்கு பிடிக்காத குணம் பெருமை பேசுவது, பெருமை அடிப்பது, தற்புகழ்ச்சி செய்வது.

11. தன்னை அழகாக வைத்திருப்பது, அழகிய ஆடைகளை அணிவது, உயர்வான பொருளை பயன்படுத்துவது தவறல்ல. ஆனால், அவற்றைக் கொண்டு தற்பெருமை கொள்வதும்,

தன்னை உயர்வாக கருதுவதும் பிறரை குறைத்து மதிப்பதும்தான் அல்லாஹ்விடம் குற்றமாகும்.

12. தனது வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப உலக செல்வத்தை அனுபவிப்பதும் பயன்படுத்துவதும் குற்றமாகாது.

13. மாறாக, தன்னை மக்கள் பெரிய மனிதனாக மதிக்க வேண்டும், தனக்கு கண்ணியமும் பெருமையும் வேண்டும், நான் பெரியவன் என்று காட்ட வேண்டும், என்னிடம் அதிக செல்வம் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக விலை உயர்ந்த பொருளை பயன்படுத்துவதும் தன்னையும் தனது பொருளையும் அழகாக வைப்பதும்தான் பாவமாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

14. வெளிரங்கமான பாவத்தை விட சில சமயம் உள்ரங்கமான பாவம் அல்லாஹ்விடம் குற்றத்தாலும் தண்டனையாலும் கடுமையாக இருக்கும்.

15. ஒரு மனிதனின் வெற்றியிலும் நற்பாக்கியத்திலும் அவனது உள்ளத்திற்கும் நல்ல எண்ணங்களுக்கும் மிகுந்த தொடர்பு இருக்கிறது.

16. ஒரு மனிதனின் நாசத்திற்கும் துர்பாக்கியத்திற்கும் அவனது உள்ளமும் அவனது தீய எண்ணங்களும் அதிகம் பங்கு வகிக்கின்றன.

17. நற்குணங்கள் அல்லாஹ்வின் அன்புக்கு காரணமாகும். கெட்ட குணங்கள் அல்லாஹ்வின் வெறுப்புக்கும் கோபத்திற்கும் காரணமாகும்.

18. சிலரின் நற்குணம் அவர்களை நபிமார்களோடு சேர்த்து விடும். மலக்குகளோடு வானத்தில் அல்லாஹ்வை வணங்கி கொண்டு இருந்தாலும் கெட்ட குணம் எப்படி இப்லீஸை மிக இழி நிலைக்கு தள்ளி விட்டதோ அப்படிதான் கெட்ட குணம் ஒருவரை மிக இழி

நிலைக்கு தள்ளிவிடும்.

19. வெளிப்படையான பாவத்தையும் அதன் தண்டனையையும் நாம் அஞ்சுவது போல் கெட்ட குணங்களையும் அவற்றின் தண்டனைகளையும் நாம் அஞ்ச வேண்டும்.

20. ஒரு மனிதனின் உருவம், உடை அழகாக இருப்பதை விட அவனது குணம் அழகாக இருப்பது மிக முக்கியம். இம்மை, மறுமையின் நற்பாக்கியத்திற்கு நற்குணம்தான் முக்கியமாகும். தன்னை அலங்கரிப்பதிலும் அழகுபடுத்துவதிலும் அதிகம் கவனம் செலுத்தும் பலர் தமது குணத்தை சீர்ப்படுத்துவதில் அலட்சியம் செய்து விடுகின்றனர்.

21. பெருமை அது குறைவாக இருந்தாலும் மிக ஆபத்தானதாகும்.

22. பெருமையும் தற்புகழ்ச்சியும் அல்லாஹ் ஒருவனுக்கே தகுதியானதாகும். அந்த பெருமையை யார் எடுக்க முயற்சித்தாலும் அவர்களுக்கு அல்லாஹ்விடம் கடுமையான தண்டனை உண்டு.

23. இஸ்லாமிய மார்க்கம் பாவமான செயல்களை நம்மீது ஹராமாக்கியது போல் கெட்ட குணங்களையும் தீய பண்புகளையும் நம்மீது ஹராமாக்கி இருக்கிறது.

24. பாவமான செயல்களை விட்டும் விலகி இருக்கும் பலர் கெட்ட குணங்களை விட்டு விலகி இருப்பதில்லை.

25. ஹராமான உணவை உண்ண பயப்படும் பலர் தீய குணங்களோடு தாம் இருப்பதை நினைத்து வருத்தப்படுவதில்லை.

26. கெட்ட குணத்தை அல்லாஹ் வெறுக்கிறான் என்று அறிந்திருந்தும் அந்த கெட்ட குணங்களில் பல தமக்குள் இருப்பதை தெரிந்த பின்னரும் அவற்றை விட்டும் தம்மை திருத்திக்கொள்ள பலர் முன்வருவதில்லை.

27. இந்த மார்க்கத்தில் கொள்கையை சீர் திருத்த கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குணத்தை சீர் திருத்தவும் கொடுக்கப்பட்டுள்ளது.

28. இஸ்லாம் கூறும் நாடு நிலையான, சம நிலையான, உண்மையான நற்குணங்கள்தான் சமூக முன்னேற்றத்திற்கும் பரஸ்பர அன்பிற்கும் துணையாக இருக்கும்.

29. எந்த ஒரு கெட்ட குணத்தையும் நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. அதன் பாதிப்பு பயங்கரமாக இருக்கலாம்.

30. மக்களில் சிறந்தவர்கள் ஈமானும் அதன் அமலும் அதன் நற்குணமும் உள்ளவர்களே. யாரிடம் ஈமான் இருந்து மற்ற இரண்டில் குறை இருக்குமோ அவர் அந்தளவு அல்லாஹ்வை விட்டும் தூரமாக இருப்பார். அவர் மறுமையில் சொர்க்கம் சென்றாலும் யார் மூன்றிலும் சிறந்தவராக இருந்தாரோ அவருக்கு சமமாக இருக்க மாட்டார். இரண்டு பேர்களின் அந்தஸ்துகளுக்கும் இடையில் வானம் பூமிக்கு இடையில் உள்ள இடைவெளி இருக்கும்.

அல்லாஹ்வே எங்களை நற்குணத்தால் அழகுப்படுத்து! தீய குனங்களைவிட்டும் எங்களை தூய்மைப் படுத்து!! ஆமீன்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ تَحَاجَّتِ الجَنَّةُ وَالنَّارُ فَقَالَتِ النَّارُ أُوثِرْتُ بِالْمُتَكَبِّرِينَ وَالْمُتَجَبِّرِينَ وَقَالَتِ الجَنَّةُ مَا لِي لاَ يَدْخُلُنِي إِلَّا ضُعَفَاءُ النَّاسِ وَسَقَطُهُمْ قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَىٰ لِلْجَنَّةِ أَنْتِ رَحْمَتِي أَرْحَمُ بِكِ مَنْ أَشَاءُ مِنْ عِبَادِي وَقَالَ لِلنَّارِ إِنَّمَا أَنْتِ عَذَابِي أُعَذِّبُ بِكِ مَنْ أَشَاءُ مِنْ عِبَادِي وَلِكُلِّ وَاحِدَةٍ مِنْهُمَا مِلْؤُهَا فَأَمَّا النَّارُ فَلاَ تَمْتَلِئُ حَتَّىٰ يَضَعَ رِجْلَهُ فَتَقُولُ قَطْ قَطْ فَهُنَالِكَ تَمْتَلِئُ وَيُزْوَىٰ بَعْضُهَا إِلَىٰ بَعْضٍ وَلاَ يَظْلِمُ اللهُ عَزَّ وَجَلَّ مِنْ خَلْقِهِ أَحَدًا وَأَمَّا الجَنَّةُ فَإِنَّ اللهَ عَزَّ وَجَلَّ يُنْشِئُ لَهَا خَلْقًا

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : சொர்க்கமும் நரகமும் தர்க்கம் செய்தன. அப்போது நரகம் கூறியது, பெருமை அடிப்பவர்கள் இன்னும் தற்புகழ்ச்சி செய்பவர்கள் எனக்காக தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. சொர்க்கம் கூறியது, எனெக்கென்ன! மக்களில் பலவீனமானவர்களும் சாதாரணமானவர்களும்தான் என்னில் பிரவேசிப்பார்கள். அப்போது அருளும் உயர்வும் மிக்க அல்லாஹ், சொர்க்கத்தை நோக்கி கூறினான் : நீ எனது கருணை ஆவாய். எனது அடியார்களில் நான் யாரை நாடுகிறேனோ அவர் மீது உன்னைக் கொண்டு நான் கருணை காட்டுகிறேன். இன்னும் நரகத்தை நோக்கி கூறினான் : நிச்சயமாக நீ எனது தண்டனை ஆவாய். என் அடியார்களில் நான் யாரை நாடுகிறேனோ அவரை உன்னைக் கொண்டு நான் வேதனை செய்வேன். அவ்விரண்டில் ஒவ்வொன்றும் நிரப்பப்படும். நரகம், அதில் அல்லாஹ் தனது காலை வைக்கின்ற வரை அது நிரம்பாது. அப்போது அது கூறும், போதும் போதும் என்று. பிறகு, அது நிரம்பிவிடும். இன்னும் அவற்றில் சிலப் பகுதி சிலப் பகுதியுடன் சுருட்டப்பட்டு விடும். அல்லாஹ் தனது படைப்புகளில் யாருக்கும் அநியாயம் செய்ய மாட்டான். கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ் சொர்க்கத்திற்காக தனியாக படைப்புகளை படைப்பான்.[66]

عَنِ النَّبِيِّ ﷺ قَالَ لَوْ دُعِيتُ إِلَى كُرَاعٍ لَأَجَبْتُ وَلَوْ أُهْدِيَ إِلَيَّ كُرَاعٌ لَقَبِلْتُ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : என்னை ஆட்டுக்காலுடைய விருந்துக்கு அழைக்கப்பட்டால் அதற்கு நான் செல்வேன். இன்னும் எனக்கு ஆட்டுக்கால் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டால் அதை நான் ஏற்றுக் கொள்வேன்.[67]

இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள குரா என்ற பதத்தின் பொருள் : ஆட்டின் முட்டிக்காலில் இருந்து அதன் குழம்பு வரை உள்ள

66. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ﵁ , நூல் : புகாரி, எண் : 7011
67. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ﵁ நூல் : புகாரி, எண் : 5178

பகுதியாகும்.

படிப்பினைகள்

1. சொர்க்கமும் நரகமும் அல்லாஹ்வின் படைப்புகளில் மிக பிரம்மாண்டமான படைப்பாகும்.

2. சொர்க்கமும் நரகமும் படைக்கப்பட்டு இப்போது அவை இருக்கின்றன. அவை என்றென்றும் அழியாமல் இருக்கும்.

3. அல்லாஹ்வின் படைப்புகள் ஒவ்வொன்றும் ஒரு நோக்கத்திற்காக படைக்கப்பட்டுள்ளது.

4. அல்லாஹ் எதையும் காரணமின்றி படைக்க மாட்டான்.

5. ஒவ்வொரு படைப்புக்கும் உணர்வையும் அறிவையும் அவன் படைத்திருக்கின்றான்.

6. சொர்க்கமும் நரகமும் பேசியது உண்மையாகும். அது ஒரு உவமை அல்ல. கற்பனை அல்ல.

7. அல்லாஹ் சுவர்க்கம் மற்றும் நரகத்திடம் பேசியது உண்மையாகும். அல்லாஹ் அவனுக்கு தகுதியான விதத்தில் அவன் நாடியவர்களுடன் பேசுகிறான்.

8. அல்லாஹ்வின் தன்மைகளில் ஒன்று அவனது கால் ஆகும். அதை அப்படியே நம்பிக்கை கொள்ள வேண்டும். அதை படைப்பினங்களின் காலுடன் ஒப்பிடக் கூடாது.

9. உலகத்தில் மக்கள் பார்வையில் சாதாரணமாக, தாழ்ந்த நிலையில் இருந்த பலர் மறுமையில் மிக உயர்ந்த நிலையில் இருப்பார்கள். காரணம் அவர்களின் ஈமானும் நற்பண்பும் ஆகும்.

10. இவ்வுலகில் தங்களை மிக மதிப்புடையவர்களாக எண்ணிக்

கொண்டு, மக்களை மட்டம் தட்டி, அவமதித்து, அநியாயம் செய்து பெருமை அடித்துவந்தவர்கள் மறுமையில் நரகத்தில் இழிவுப்படுத்தப்படுவார்கள்; சிறுமைப்படுத்தப்படுவார்கள்.

11. நற்குண சீலர்கள் நிரந்தர வாழ்க்கையில் உயர்வானவர்களாக இருப்பார்கள்.

12. துற்குணம் கொண்டவர்கள் குறுகிய வாழ்க்கையில் செல்வ செழிப்போடு, ஆடம்பரமாக, அதிகாரத்தோடு, அடக்கு முறையோடு, பெருமையடித்து வாழ்ந்தாலும் மறுமையின் நிரந்தர வாழ்க்கையில் அவர்கள் கேவலத்தைதான் சந்திக்கப் போகிறார்கள்.

13. மறுமையின் கேவலம்தான் மிக பயங்கரமானதும் நிரந்தரமானதும் ஆகும்.

14. ஈமானும் பணிவும் உள்ளவர்கள் சொர்க்க வாசிகள். குஃப்ரும் பெருமையும் உள்ளவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்.

15. மறுமையில் யாருக்கும் அவர்களது உலக செல்வமும் வசதி வாய்ப்புகளும் பதவிகளும் எவ்வித உதவியும் செய்ய முடியாது.

16. மறுமையின் வெற்றியும் கண்ணியமும் ஈமானிலும் நற்குணத்திலும்தான் இருக்கிறது.

17. அல்லாஹ் யாரையும் அவர் செய்த பாவத்திற்கு அதிகமாக தண்டிக்க மாட்டான். அவனது தண்டனை அவனது நீதமாகும். அவனது நற்கூலி அவனது கருணையாகும்.

18. இவற்றில் யார் எதை அடைந்தார்களோ அவர்கள் தங்கள் செயல்களுக்கு ஏற்பவே அடைந்தார்கள்.

19. சொர்க்கம் சென்றவர்கள் அல்லாஹ்வின் கருணையால் சென்றார்கள்.

20. நரகம் சென்றவர்கள் அல்லாஹ்வின் நீதத்தின் அடிப்படையில்

சென்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கு அநீதி செய்யவில்லை.

21. இந்த ஹதீஸ் பணிவாக இருப்பது, சாதாரணமாக இருப்பது, அடக்கமாக இருப்பதுடைய சிறப்பை மிக அழகாக எடுத்துக்கூறுகிறது. பகட்டை விட்டும் தூரமாக இருப்பது, ஆடம்பரத்தை விட்டும் தூரமாக இருப்பது, தற்பெருமை பேசாமல் இருப்பது, தற்புகழ்ச்சி செய்யாமல் இருப்பது, பிற மக்களோடு சகஜமாக பழகுவதுடைய கூலி சொர்க்கம் என்பதை இந்த ஹதீஸ் தெளிவுப் படுத்துகிறது.

22. தன்னைத் தானே உயர்வாக நினைத்துக்கொண்டு, பிற மக்களை விட்டும் ஒதுங்கி வாழ்வது பெருமையின் வெளிப்பாடாகும்.

23. பெருமை உள்ளவர்கள் சொர்க்கத்திற்கு தகுதி பெற மாட்டார்கள்.

24. உலகில் தோன்றிய உயர்ந்தோரில் நமது நபியைவிட வேறு யார் உயர்ந்தவராக இருக்க முடியும். நமது நபியோ மிக சாதாரணமாக பழகுவார்கள். எல்லோரோடும் உண்பார்கள், படுப்பார்கள், தங்குவார்கள், பயணிப்பார்கள், யாரையும் தன்னை சந்திப்பதை விட்டும் தடுக்க மாட்டார்கள்.

25. அன்பையும் மனிதத்தையும் முன்வைத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்தார்கள்.

26. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாமானியர்களுக்கும் மிக நெருக்கமாக இருந்தார்கள்.

27. அனபளிப்பு கொடுப்பவரின் அன்பை மதித்தார்கள். அவர் கொடுக்கும் பொருளை அது சிறிதாக, சாதாரணமானதாக இருந்தாலும் அதை கண்ணியத்தோடும் அன்போடும் ஏற்று அவரை கண்ணியப்படுத்துவார்கள்.

28. எத்தகைய சாதாரண விருந்துக்கு அழைக்கப்பட்டாலும் அதை ஏற்று விருந்தளிப்பவரின் உள்ளத்தை குளுமைப் படுத்துவார்கள்.

அவருக்காக துஆ செய்வார்கள்.

29. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களின் அன்புக்கு மதிப்பளித்தார்கள். செல்வத்தை வைத்தும் குலத்தை வைத்தும் பதவியை வைத்தும் அவர்கள் மக்களை எடைப் போடவில்லை.

30. பணிவை தனது சொல்லால் போதித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது செயலாலும் அதை நிரூபித்து காட்டினார்கள்.

முடிவுரை

நாம் ஏற்றுள்ள மார்க்கம் எவ்வளவு அழகானது!! அதன் வேதம் எவ்வளவு நீதமானது! அதன் தூதர் எத்தகைய அழகிய முன்மாதிரி!!

இங்கே கவலையான செய்தி என்னவென்றால் நாம் இன்று நமது குணத்தால் போற்றப்படுவதற்கு பதிலாக தூற்றப்படுவதுதான் அதிகம் ஆகும். நமது சமூகத்தில் முற்றிலும் நற்குணம் எடுக்கப்படவில்லை என்றாலும் எந்தளவு நற்குணம் அதிகமாக இருக்க வேண்டுமோ அந்தளவு இல்லை என்று சொல்வது மிகையாகாது.

நம்மில் உள்ள செல்வந்தர்கள், பதவி வகிப்பவர்கள் அதிகமாக சமுதாயத்தில் உள்ள ஏழை எளியவர்களை விட்டும் தூரமாக வாழ்கிறார்கள். அவர்களை நெருங்குவதும் இல்லை, நெருங்க விடுவதும் இல்லை. மஸ்ஜிதுக்கு சென்று தொழுதாலும் யாரையும் சந்திக்காமல், யாரும் சந்திப்பதற்கு வாய்ப்பு அளிக்காமல் உடனே மஸ்ஜிதை விட்டு தலை குனிந்தவர்களாக வெளியேறி விடுகிறார்கள். தனது பக்கத்தில் தம்மைப் போன்று செல்வந்தர் யாரும் தொழுதால் அவருக்கு சலாம் கூறி கைக் கொடுப்பார்கள். ஏழைகளை பார்த்தால் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு உடனே இடத்தை காலி செய்துவிடுவார்கள். இதிலிருந்து அல்லாஹ் நாடிய சில நல்லவர்கள்

விதிவிலக்காக இருக்கலாம். ஆனால், பெரும்பாலானவர்களின் நிலை இதுதான் என்று கூறினால் யாரும் மறுக்க முடியாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உருவாக்கிய சமுதாயம் இதுவல்ல. இஸ்லாம் விரும்பும் சமுதாயம் இதுவல்ல. குர்ஆன் போற்றும் சிறந்த சமுதாயம் இதுவல்ல.

அந்த சமூகத்தில் செல்வந்தர்கள் ஏழைகளின் அரணாக இருப்பார்கள். ஆட்சியாளர்கள் எளிவர்களின் உதவியாளர்களாக இருப்பார்கள். யாரும் செல்வத்தால், குலத்தால், குடும்பத்தால், பதவியால் பாகுபாடு காட்ட மாட்டார்கள். ஐங்கால கூட்டுதொழுகையின் அமைப்பு இதை அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டே இருந்தது.

ஆம், உண்மை முஸ்லிம்கள் இப்படித்தான் இருப்பார்கள். அல்லாஹ்வின் வாக்கு அவர்களின் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கும்.

நிச்சயமாக உங்களில் அல்லாஹ்விடம் மிக கண்ணியமானவர் உங்களில் அதிகம் அல்லாஹ்வை பயப்படுபவர்தான்.

நற்குணங்களில் நன்மைகளும் நற்பலன்களும் சிறந்த எதிர் வினைகளும் உடைய நற்பண்பு பணிவாகும். ஒருவர் உயர்ந்தவர் என்பதற்கு அவரின் பணிவான குணமே போதுமான சான்றாகும்.

நல்ல அரசர் பணிவாக இருப்பார்.

நல்ல செல்வந்தர் பணிவாக இருப்பார்.

நல்ல கல்வியாளர் பணிவாக இருப்பார்.

நல்ல அதிகாரி பணிவாக இருப்பார்.

நல்ல தலைவர் பணிவாக இருப்பார்.

நல்ல ஆசிரியர் பணிவாக இருப்பார்.

நல்ல மாணவர் பணிவாக இருப்பார்.

நல்ல வர்த்தகர் பணிவாக இருப்பார்.

நல்லவர்களின் அடையாளம் பணிவாகும்.

தீயவர்களின் அடையாளம் பெருமையாகும்.

பணிவை விரும்புபவர் நபிமார்களின் குணத்தை விரும்புகிறார். பணிவாக நடப்பவர் நபிமார்களின் குணத்தை பின்பற்றுகிறார்.

பெருமையை விரும்புபவர் இப்லீஸின் குணத்தை விரும்புகிறார். பெருமை பேசுபவர் இப்லீஸின் குணத்தை பின்பற்றுகிறார்.

பணிவானவர் நபிமார்கள் செல்லும் சொர்க்கம் செல்வர்.

பெருமையடிப்பவர் இப்லீஸ் நுழையும் நரகத்தில் நுழைவார்.

அல்லாஹ்வே எங்களுக்கு பணிவைக் கொடு! பெருமையை விட்டுஎங்களை தூரமாக்கு!!

எங்களை மன்னித்து விடு! எங்கள் மீது கருணை காட்டு!! ஆமீன். நீ மகா கருணையாளன், மகா மன்னிப்பாளன்!

பணிவு அமர்வுகள் முடுவுற்றது

அல்ஹம்து லில்லாஹ்!!!

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَىٰ رَسُولِ اللّٰهِ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 21

நல்லாதரவு

அடியானுக்கு அல்லாஹ்வின் மீது எப்போதும் ஆதரவு இருக்க வேண்டும். அது நல்லாதரவாக இருக்க வேண்டும். தனது இறைவன் தன்னை கைவிட மாட்டான் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். தனது இறைவனின் அருள் தனக்கு கிடைக்கும் என்ற ஆதரவு உள்ளத்தில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் மீது ஆதரவு வைப்பது உள்ளத்திற்கு அழகிய இன்பத்தை கொடுக்கிறது, மனதிற்கு நிம்மதியை கொடுக்கிறது, நெஞ் சத்தில் விசாலத்தை ஏற்படுத்தி அதிலிருந்து நெருக்கடியை நீக்குகிறது, முகத்தை மலரச் செய்து வாழ்க்கையில் வசந்தத்தை வளர்க்கிறது, மன உறுதியை அதிகப்படுத்தி தடுமாற்றத்தை அகற்றி விடுகிறது.

எனது பாவத்தை என் இறைவன் மன்னிப்பான், என் மீது கருணை காட்டுவான் என்ற ஆதரவு இருக்க வேண்டும்.

எனது நன்மைகளை என் இறைவன் ஏற்றுக் கொள்வான், எனக்கு நற்கூலி வழங்குவான் என்ற ஆதரவு இருக்க வேண்டும்.

என் சிரமத்தை எனதிறைவன் போக்குவான். என் துன்பத்தை எனதிறைவன் நீக்குவான். என் நோயை எனதிறைவன் குணப்படுத்துவான். என் இழப்புக்கு எனதிறைவன் எனக்கு சிறந்த

பரிகாரத்தை கொடுப்பான். என் கவலைகளை என் இறைவன் மகிழ்ச்சியாக மாற்றுவான். என் துக்கங்களை என் இறைவன் நீக்கி என்னை உள்ளம் குளிரச் செய்வான். எனது இம்மை மறுமை காரியங்களை என் இறைவன் எனக்கு சீராக்குவான். எனக்கு ஏற்படும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் நான் என் இறைவனிடம் திரும்பும்போது அவனிடம் எனக்கு அழகிய தீர்வு கிடைக்கும். செல்வத்திலும் அவன்தான் என்னை இரட்சிக்கின்றான். வறுமையிலும் அவன்தான் எனக்கு உணவளிக்கின்றான்.

யார் என்னை விட்டு பிரிந்தாலும் என் இறைவன் என்னை விட்டு பிரிய மாட்டான். நான் தனித்து இல்லை. என் இறைவன் என்னுடன் இருக்கின்றான். துன்பங்களும் துயரங்களும் சோதனைகளும் எதிரிகளும் பேராபத்துகளும் என்னை சூழ்ந்து கொண்டால் அப்போது நான் ஆதரவு வைப்பது என் இறைவன் மீதுதான். அவன் என்னுடன் இருக்கின்றான். அவனது உதவி எனக்கு மிகப் பெரியது. அவன் நாடியது நடக்கும். அவன் நாடாமல் எதுவும் நடக்காது. அவன் மீது நான் வைக்கும் நம்பிக்கையை அவன் எனக்கு நிறைவேற்றுவான். எனக்கு இம்மையைவிட மறுமையே முக்கியம். மறுமையில் அவன் என்னை மன்னித்து நல்லோரில் சேர்க்க வேண்டும் என்பதுதான் எனது பேராதரவு.

இப்படியான நல்லாதரவுகள் அடியானின் உள்ளத்தில் பசுமையாக இருக்க வேண்டும், பலமாக இருக்க வேண்டும்.

ஆதரவு வைப்பதால் ஏற்படும் பலன்கள் என்ன?

1. நல்லாதரவு, அடியானை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கிக் கொண்டே இருக்கும். அல்லாஹ்வின் நெருக்கத்தை விட ஓர் இன்பம் இருக்க முடியுமோ!

2. நல்லாதரவு அமல்களில் ஆர்வத்தை ஏற்படுத்தி, அவற்றை செய்வதை இலகுவாக்குவதுடன் அவற்றை தொடர்ந்து முறையாக

பேணுவதற்கு உந்து சக்தியாக இருக்கிறது.

3. நஃப்சுக்கு சிரமமான அமல்களையும் மனதிற்கு இன்பமாக ஆக்கி விடுகிறது.

4. அல்லாஹ்விடம் கையேந்துவதும் அவனிடம் மன்றாடுவதும் அவனிடம் தேவைகளைக் கேட்டு பேசிக்கொண்டு இருப்பதும் பேரின்பமாக தோன்றும், இந்த ஆதரவு உள்ளத்தில் இருக்கின்ற வரை.

5. அல்லாஹ்வின் மீது ஆதரவு வைப்பது அடியானுக்கு அல்லாஹ்வின் அன்பை அதிகப்படுத்துகின்றது.

6. அல்லாஹ்விற்கு நன்றியுடன் இருப்பதற்கு ஆதரவு துணை செய்கிறது.

7. உலக வாழ்க்கையில் அடியான் படுகின்ற சிரமங்களையும் அவனுக்கு வரும் இன்னல்களையும் அவன் சந்திக்கின்ற சோதனைகளையும் கடப்பதை இந்த ஆதரவு எளிதாக்கி விடுகிறது.

8. நல்லாதரவு அதிகம் வைத்தவர்கள் மறுமையில் அதிகம் மகிழ்ச்சி அடைவார்கள்.

9. அடியான் அல்லாஹ்விடம் அவனது அன்பையும் கருணையையும் மன்னிப்பையும் ஆதரவு வைப்பது அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானதாகும்.

10. அல்லாஹ்விடம் நாம் நமது தேவைகளை ஆதரவு வைப்பது நாம் அவனது அடிமைகள், அவன் நமது எஜமானன் என்று நாம் ஏற்றுக்கொண்டிருப்பதற்கு சாட்சியாக இருக்கின்றது.

11.அல்லாஹ்வை நாம் நமது மஅபூதாக - வணக்கதிற்குரியவனாக, நமது ரப்பு - படைத்து பரிபாளிப்பவனாக, நமது மலிக் - அரசனாக, நமது மவ்லா - எஜமானனாக, சமீவுன், முஜீப் - நமது பிரார்த்தனைகளை

செவியுற்று அங்கீகரிக்கின்றவனாக நாம் ஏற்றுக் கொண்டது உண்மை என்பதற்கு இந்த ஆதரவுதான் அடையாளமாக இருக்கின்றது.

12. ஆதரவு வைப்பது நபிமார்கள், மற்றும் உண்மையான முஃமின்களின் உயர்ந்த பண்பாகும். காலங்கள் பல கடந்தாலும் நபிமார்கள் ஆதரவை விடாமல், நம்பிக்கையை இழக்காமல் இருந்தார்கள்.

13. அல்லாஹ்விடம் நன்மைகளை ஆதரவு வைத்து வணங்குவது வணக்க வழிபாட்டின் மிக முக்கியமான நிபந்தனையாகும்.

14. குர்ஆனும் சுன்னாவும் ஆர்வமூட்டுகின்ற குணம்தான் ஆதரவு.

15. ஆதரவோடு அல்லாஹ்விடம் துஆக்கள் கேட்டு, அவனது உதவியை எதிர்ப்பார்த்து இருந்து அதை அடையப்பெருவது நமது உள்ளத்தில் மட்டில்லா மகிழ்ச்சியை கொடுப்பதுடன் நாம் அல்லாஹ்விற்கு அதிகம் நன்றி செலுத்துவதற்கு நம்மை தூண்டுகிறது.

நாம் இந்த உலகில் இந்த ஆதரவின் பக்கம் மிகவும் தேவை உள்ளவர்களாக இருக்கின்றோம்.

நம்மில் உள்ள ஏழை அல்லாஹ்விடம் செல்வத்தை ஆதரவு வைக்கட்டும்.

நம்மில் உள்ள நோயாளி அல்லாஹ்விடம் தனது நிவாரணத்தையும் சுகத்தையும் ஆதரவு வைக்கட்டும்.

நம்மில் உள்ள பாவி அல்லாஹ்விடம் அவனது மன்னிப்பை ஆதரவு வைக்கட்டும்.

யார் எந்த கஷ்டத்தில் சிரமப்பட்டாலும் அவர் தனது சிரமத்திலிருந்து விடுதலையை அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கட்டும்.

எல்லா துன்பத்திலிருந்தும் விடுதலை அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது.

நாம் ஆதரவு வைப்பதற்கு மிகத் தகுதியானவன் அவன்தான். ஆதரவுவைக்கப்படுபவர்களில் அவன் மிக சிறந்தவன்.

நாம் அவனை ஆதரவு வைக்கமால் இருப்பதற்கு நமக்கு என்ன கேடு நேர்ந்தது?

அவன் நமக்கு நாம் விரும்பியதில் எதை கொடுக்க வில்லை?

நாம் குறைவாக நன்றி செலுத்தியும் அவன் அவனுடைய அருளை நமக்கு குறைக்க வில்லை.

நாம் அவனுக்கு மாறு செய்தும் அவன் நமக்கு கொடுத்த அருளை அவன் நம்மிடமிருந்து பிடுங்கவில்லை.

நாம் அவனை மறந்த போதும் அவன் நமக்கு கொடுக்க மறக்க வில்லை.

நாம் அவனுடைய நிஃமத்துகளை தவறான வழியில் பயன்படுத்தியும் உடனே அவன் நம்மை தண்டிக்க வில்லை.

அவனை விட பெருந்தன்மையாளன் யார் இருக்க முடியும்? அவனைவிட கருணையால் விசாலமானவன் ஒருவர் இருக்க முடியுமோ?!

நாம் எத்தனை பாவங்கள் செய்தாலும் அவன் மன்னிக்க காத்திருக்கிறான். நமது எல்லா குற்றங்கள் குறைகளையும் அழகிய மன்னிப்பாக அவன் மன்னிப்பதில் மகிழ்ச்சி அடைகிறான். நாம் ரப்பு என்று அழைத்து ஆதரவு வைப்பதற்கு உண்மையில் அவன்தான் தகுதியானவன். சிரம்பணிந்து நமது உள்ளக் குமுறல்களை எடுத்து சொல்வதற்கும் நமது தேவைகளை கேட்டுப் பெறுவதற்கும் அவனை விட பொருத்தமானவன் யார்?

அவனை நம்பியவர்கள் யாரும் வீண் போனதில்லை. அவனை ஆதரவு வைத்தவர்கள் யாரும் கைவிடப்பட்டதில்லை. நமது

தேவைகளை செவியுறுவதிலும் அவன் மிக சிறந்தவன். அவற்றை நமக்கு நிறைவேற்றிக் கொடுப்பதிலும் அவன் மிக சிறந்தவன்.

உலக தேவைகள், மறுமையின் நற்பாக்கியங்கள் என எல்லாம் அவனிடம் கொட்டிக் கிடக்கின்றன. யார் எதை விரும்புகிறார்களோ அவன் அவர்களுக்கு அதைக் கொடுக்கின்றான்.

நம்மில் சிலர் உலகத் தேவைக்கு அல்லாஹ்வை ஆதரவு வைத்துவிட்டு மறுமை தேவையை அவனிடம் ஆதரவு வைப்பதற்கு மறந்து விடுகின்றனர். அதற்கு காரணம் அவர்களின் பார்வையில் உலகம் பெரிதாக தோன்றி விட்டது. மறுமை அவர்களின் கண்ணுக்கு முன்னால் இல்லாததால் அவர்கள் அதைப் பற்றி அக்கறை கொள்ள வில்லை. அந்த மறுமையை அவர்கள் கண்ணால் கானும்போதுதான் அவர்களுக்கு தெரியவரும் மறுமையின் மகத்துவமும் அதன் பெருமதிப்பும். ஆனால், பிரயோசனம் என்ன?

இனி ஆதரவைப் பற்றி குர்ஆன், ஹதீஸ் கூறும் நற்போதனைகளில் சிலவற்றை கவனிப்போம்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்;

﴿فَمَنْ كَانَ يَرْجُو لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا﴾

பொருள் : ஆகவே, எவர் தன் இறைவனுடைய சந்திப்பை ஆதரவு வைக்கிறாரோ அவர் நற்செயல்களைச் செய்யட்டும்! இன்னும், தன் இறைவனை வணங்குவதில் ஒருவரையும் (அவனுக்கு) இணையாக்க வேண்டாம்! (அல்குர்ஆன் 18 : 110)

படிப்பினைகள்

1. உண்மையான ஆதரவு அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு

வைப்பதாகும்.

2. ஒவ்வொரு முஃமினும் அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு வைக்க வேண்டும்.

3. அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு வைப்பது உண்மையான ஈமானையும் உறுதியான தக்வாவையும் ஒரு முஃமினுக்கு கொடுக்கிறது.

4. அல்லாஹ்வின் சந்திப்பின் மீது ஆதரவும் நம்பிக்கையும் உள்ளவர் அல்லாஹ்வை திருப்திபடுத்த வேண்டும். தனது இறைவனான அல்லாஹ் தன் மீது திருப்தியும் மகிழ்ச்சியும் உள்ள நிலையில் அவனை சந்திக்க வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.

5. அல்லாஹ்வை திருப்திப்படுத்த அடியான் நல்லமல்களை செய்ய வேண்டும். இன்னும் அவனுக்கு இணைவைக்கக் கூடாது.

6. அடியானிடம் அல்லாஹ்விற்கு பிடித்தமானது ஈமானும் அமலும்தான். அவனுடைய வம்சமோ, அழகோ, செல்வமோ, பதவியோ அல்ல.

7. அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு வைப்பவர் இம்மையில் தனக்கு தேவையான எல்லா நன்மைகளுக்கும் அல்லாஹ்வையே ஆதரவு வைத்து அவனை வணங்கி, நல்லமல்கள் செய்து அவனை பிரார்த்திக்கட்டும்.

﴿أَمْ حَسِبَ الَّذِينَ يَعْمَلُونَ السَّيِّئَاتِ أَنْ يَسْبِقُونَا سَاءَ مَا يَحْكُمُونَ (٤)
مَنْ كَانَ يَرْجُو لِقَاءَ اللَّهِ فَإِنَّ أَجَلَ اللَّهِ لَآتٍ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ (٥)
وَمَنْ جَاهَدَ فَإِنَّمَا يُجَاهِدُ لِنَفْسِهِ إِنَّ اللَّهَ لَغَنِيٌّ عَنِ الْعَالَمِينَ (٦)﴾

பொருள் : பாவங்களைச் செய்பவர்கள் (தண்டனை அடையாது) நம்மை விட்டுத் தப்பித்துக் கொள்வார்கள் என்று எண்ணிக்

கொண்டிருக்கின்றனரா? (அவ்வாறாயின், இதைப் பற்றிய) அவர்களுடைய தீர்மானம் மகா கெட்டது. எவர்கள் அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு வைக்கிறார்களோ அவர்கள் (அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால்,) நிச்சயமாக அதற்காக அல்லாஹ் ஏற்படுத்திய தவணை வந்தே தீரும். அவன் (அனைத்தையும்) செவியுறுபவனும் நன்கறிந்தவனும் ஆவான். (அல்லாஹ்வுடைய வழியில்) எவரேனும் கடின முயற்சி மேற்கொண்டால், நிச்சயமாக அவர் தன் நலனுக்காகவே முயன்றவராகிறார். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரிடமிருந்து தேவையற்றவன் ஆவான்.

(அல்குர்ஆன் 29 : 4 - 6)

படிப்பினைகள்

1. பாவங்களை செய்பவர்கள், குற்ற செயல்களில் மூழ்கியவர்கள் அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு வைத்திருந்தால் அவர்கள் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். அல்லாஹ்வின் பயம் அவர்களை தடுத்திருக்கும்.

2. அல்லாஹ்வின் ஆதரவு மனிதனை நேர்வழிப்படுத்துகிறது.

3. உலகில் மனிதன் ஆதரவு வைப்பதெல்லாம் அவனுக்கு கிடைக்கும் என்று கூற முடியாது.

4. ஆனால், மறுமையில் எதை மனிதன் ஆதரவு வைப்பானோ, பிறகு அதற்கேற்ப அமல்கள் செய்வானோ அவன் கண்டிப்பாக தனது ஆதரவை அல்லாஹ்விடம் அடைந்து கொள்வான்.

5. நமது உள்ளத்தின் ஆதரவை அல்லாஹ் நன்கறிந்து இருக்கின்றான். நமது நாவின் பிரார்த்தனைகளை அல்லாஹ் நன்கு செவியுறுகின்றான்.

6. அடியான் அல்லாஹ்வை ஆதரவு வைத்து அவன் செய்கின்ற

அமல்களுக்கு அல்லாஹ்விடம் நற்கூலி உண்டு. அந்த நன்மைகளால் அடியான் பலன் பெறுவானே தவிர அல்லாஹ்விற்கு அடியார்களின் அமல்கள் தேவை இல்லை.

7. நல்லோரின் நல்லமல்கள் அல்லாஹ்வின் கண்ணியத்தை கூட்டி விடாது. பாவிகளின் பாவங்கள் அல்லாஹ்வின் கண்ணியத்தை குறைத்து விடாது.

8. மனிதனின் ஆதரவின் மூலமும் அமல்களின் மூலமும் பலன் பெறுபவன் மனிதன்தான். அல்லாஹ் அல்ல.

9. அதே நேரத்தில் அல்லாஹ் அவனது கருணையால் அடியானின் அமல்களை ஏற்றுக் கொள்கிறான். அவனது ஆதரவை தனது ஞானத்திற்கும் திட்டத்திற்கும் ஏற்ப அவன் நிறைவேற்றி வைக்கின்றான். ஆதரவு வைப்பதும் நல்லமல்கள் செய்வதும் நம்மீது கடமையாகும். அது அல்லாஹ்வின் ஞானத்தின்படி நிறைவேறுகின்ற வரை அடியான் பொறுமையுடன் இருக்க வேண்டும். மக்காவில் இஸ்லாம் பரவுவதை நபி ﷺ அவர்கள் ஆதரவு வைத்தார்கள். கஅபதுல்லாவில் இருந்து சிலைகளை அகற்றி அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்று நபி ﷺ அவர்கள் ஆதரவு வைத்தார்கள். அதற்காக அவர்கள் பொறுமையாக 21 ஆண்டுகள் காத்திருந்தார்கள். இவ்வாறுதான் முன் சென்ற நபிமார்களும் இருந்தார்கள். யஅகூப் நபியவர்கள் யூஸுஃபின் சந்திப்பை ஆதரவு வைத்து அவர்களின் வருகைக்காக பல சகாப்தங்கள் பொறுமையுடன் இருந்தார்கள். இன்று நாம் அவசரப்படுவது போன்று அவர்கள் அவசரப்படவில்லை. அய்யூப் நபி தனது நிவாரணத்தை ஆதரவு வைத்து பல ஆண்டுகள் பொறுமையாக இருந்தார்கள். யூனுஸ் நபி இறைவனை ஆதரவு வைத்து திக்ரு செய்தவர்களாக மீன் வயிற்றில் பொறுமையாக இருந்தார்கள். நபிமார்களின் வாழ்க்கை தரும் படிப்பினைகளில் முக்கியமானது நல்லாதரவும் அழகிய பொறுமையும் ஆகும்.

10. அல்லாஹ்விடம் நல்லாதரவு வைப்பவர்கள் அல்லாஹ்வை

திருப்திப்படுத்தும் நல்லமலையும் செய்ய வேண்டும். அவர்கள்தான் உண்மையில் ஆதரவு வைப்பவர்கள். நாம் எதை ஆதரவு வைக்கிறோமோ அதற்கு முயற்சியும் செய்ய வேண்டும். கடையை திறந்துவைத்துக் கொண்டு கஸ்டமரை எதிர்பார்க்க வேண்டும். சாத்தப்பட்ட கடையைக் கொண்டும் உழாத நிலத்தைக் கொண்டும் ஒருவன் வாழ்வாதாரத்தை தேடினால் அவனின் உதாரணம்தான் ஆதரவு வைத்து அமல் செய்யாமல் இருப்பவர்களுக்கு பொருந்தும்.

﴿إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَاجَرُوا وَجَاهَدُوا فِي سَبِيلِ اللَّهِ أُولَٰئِكَ يَرْجُونَ رَحْمَتَ اللَّهِ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ﴾

பொருள் : நிச்சயமாக எவர்கள் மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ அவர்களும்; எவர்கள் (நிராகரிப்பாளர்களின் துன்பத்தால்) தம் ஊரைவிட்டும் வெளியேறி, அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரிகிறார்களோ அவர்களும்தான் அல்லாஹ்வின் கருணையை எதிர்பார்க்கின்றனர். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மகா கருணையுடையவன் ஆவான்.

(அல்குர்ஆன் 2 : 218)

படிப்பினைகள்

1. நாம் ஆதரவு வைப்பதில் மிக முக்கியமான ஒன்று அல்லாஹ்வின் கருணையாகும். அந்த கருணையைக் கொண்டுதான் நாம் இம்மையிலும் மறுமையிலும் கரை சேர முடியும். நாளை மறுமையில் அல்லாஹ்வின் கருணை இல்லாமல் யாரும் சொர்க்கம் செல்ல முடியாது என்று நபி ﷺ அவர்கள் கூறியபோது நீங்களுமா என்று தோழர்கள் கேட்க ஆம் நானும்தான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் கூறினார்கள்.

2. அல்லாஹ்வின் கருணையை ஆதரவு வைப்பவர்கள் அதைத்

தேடித்தரும் அமல்களையும் செய்ய வேண்டும். இவ்வுலகில் அல்லாஹ்வின் கருணை பொதுவாக இருந்தாலும் மறுமையில் அல்லாஹ்வின் கருணை முஃமின்களுக்கு மட்டும்தான் கிடைக்கும்.

3. உண்மையான உறுதியான ஈமானும் அதன் பிறகு ஹிஜ்ரத்தும் ஜிஹாதும் அல்லாஹ்விற்கு மிகப் பிடித்தமான அமல்களாகும். அல்லாஹ்வின் மன்னிப்பும் கருணையும் கண்டிப்பாக இந்த மூன்றும் உடையவர்கள் அடையப் பெறுவார்கள்.

﴿وَلَا تَهِنُوا فِي ابْتِغَاءِ الْقَوْمِ إِنْ تَكُونُوا تَأْلَمُونَ فَإِنَّهُمْ يَأْلَمُونَ كَمَا تَأْلَمُونَ وَتَرْجُونَ مِنَ اللهِ مَا لَا يَرْجُونَ وَكَانَ اللهُ عَلِيمًا حَكِيمًا﴾

பொருள் : எதிரிகளைத் தேடிச் செல்வதில் நீங்கள் (சிறிதும்) சோர்வடையாதீர்கள். (அதனால்) உங்களுக்கு வலி ஏற்பட்டால் (பொருட்படுத்தாதீர்கள். ஏனென்றால்) நீங்கள் வலியை அனுபவிப்பதைப் போலவே அவர்களும் வலியை அனுபவிப்பதுடன் அவர்கள் ஆதரவுவைக்க முடியாத (வெற்றி, நற்கூலி அனைத்)தையும் அல்லாஹ்விடமிருந்து நீங்கள் ஆதரவு வைக்கிறீர்கள். அல்லாஹ் மிக அறிந்தவனாக, ஞானமுடையவனாக இருக்கிறான்.

(அல்குர்ஆன் 4 : 104)

﴿إِنَّ الَّذِينَ يَتْلُونَ كِتَابَ اللهِ وَأَقَامُوا الصَّلَاةَ وَأَنْفَقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلَانِيَةً يَرْجُونَ تِجَارَةً لَنْ تَبُورَ (٢٩) لِيُوَفِّيَهُمْ أُجُورَهُمْ وَيَزِيدَهُمْ مِنْ فَضْلِهِ إِنَّهُ غَفُورٌ شَكُورٌ﴾

பொருள் : எவர்கள் அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதி, தொழுகையையும் கடைப்பிடித்து, நாம் அவர்களுக்கு அளித்தவற்றை இரகசியமாகவும் வெளிப்படையாகவும் தானம் செய்து வருகிறார்களோ அவர்கள் நிச்சயமாக என்றுமே நஷ்டமடையாத

(லாபம் தரும்) ஒரு வர்த்தகத்தை எதிர்பார்க்கிறார்கள். (அல்லாஹ்) அவர்களுக்கு அவர்களுடைய கூலியைப் பூரணமாகவே கொடுத்து, தன் அருளை மேலும் அதிகமாகவும் அவர்களுக்கு கொடுப்பான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன், நன்றி அறிபவன்.

(அல்குர்ஆன் 35 : 29-30)

படிப்பினைகள்

1. மனிதர்கள் எல்லோரும் வெற்றியையும் முன்னேற்றத்தையும் விரும்புவார்கள். வெற்றியிலும் முன்னேற்றத்திலும் மிக சிறந்தது மறுமையின் வெற்றியும் முன்னேற்றமும் ஆகும்.

2. மறுமையின் வெற்றியை ஆதரவு வைப்பவர்தான் உண்மையான புத்திசாலி ஆவார்.

3. அழியும் உலகில் வெற்றியை ஆதரவு வைப்பவர்கள் அழியாத வாழ்க்கையில் வெற்றியை ஆதரவு வைப்பவர்களுக்கு சமமாக மாட்டார்கள். இவர்களோ இறைவனின் அருளை அடைவார்கள். அவர்களோ இறைவனின் கோபத்தை அடைவார்கள்.

4. அல்குர்ஆனும் நபிமொழிகளும் அல்லாஹ்வின் அருளை நாம்ஆதரவு வைத்தால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நமக்கு வழிகாட்டுகின்றன.

5. அந்த அடிப்படையில் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுவதும் தொழுகையை பேணிவருவதும் தர்மம் செய்வதும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதும் நிலையான வெற்றியை ஆதரவு வைப்பவர்களிடம் அவசியம் இருக்க வேண்டிய பண்புகளாகும்.

6. உலகில் நாம் சில நன்மைகளையும் நமது தேவைகள் நிறைவேறுவதையும் ஆதரவு வைக்கும்போது இந்த மூன்று பண்புகளும் நமக்கு அல்லாஹ்விடம் அதற்காக அதிகம் சிபாரிசு செய்யும். தொழுகையைக் கொண்டு என்னிடம் உதவி தேடுங்கள்

என்பதும் அல்லாஹ்வின் கட்டளையாகும். தர்மத்தின் மூலம் பிறரின் தேவையை நாம் நிறைவேற்றும்போது அல்லாஹ் நமது தேவையை நிறைவேற்றுகிறான் என்று நபி ﷺ அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள். குர்ஆனை அதிகம் ஓதுவதால் அல்லாஹ்விடம் தனது தேவையை கேட்க முடியாமல் போன அடியானுக்கு தேவைகளை கேட்டு துஆ செய்பவர்களுக்கு அல்லாஹ் கொடுப்பதைவிட அதிகமாக கொடுக்கின்றான் என்று நபி ﷺ அவர்கள் கூறி இருக்கின்றார்கள். ஜிஹாது செய்பவர் அல்லாஹ்வின் மார்க்கத்தை பாதுகாக்க பாடுபடுகின்றார். அவர் அல்லாஹ்விற்கு உதவி செய்பவர் என்று அவரை அல்லாஹ் போற்றுகின்றான். ஆகவே, அவரை இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் பல பதவிகளைக் கொண்டு கண்ணியப்படுத்துகின்றான்.

7. இத்தகைய நல்லோருக்கு அல்லாஹ்விடம் அளவில்லா கூலிகள் கிடைக்கும். அல்லாஹ்வின் விசாலமான அருள் அவர்களை சூழ்ந்துகொள்ளும். இவர்களின் பாவங்களையும் இந்த புண்ணியங்களால் அல்லாஹ் மன்னித்துவிடுகிறான். நாம் செய்ததைவிட அதிகமாக அல்லாஹ் நமக்கு நற்கூலி வழங்குகின்ற காரணத்தால் அவன் ஷகூர் - மிகவும் நன்றி அறிபவனாக இருக்கின்றான். அந்த பெயர் அவனுக்கு மட்டுமே தகுதியானதாகும். நாமோ பிறருக்கு நன்மை செய்யும்போது அவர் நமக்கு செய்த நன்மையை அளந்து பார்த்து அதற்கு ஏற்பதான் செய்கிறோம். ஆனால் அல்லாஹ் அப்படி அல்ல. அவன் நாம் செய்த நன்மைக்கும் கூலி தருகிறான். அதைவிட அதிகமாக தன் புறத்திலிருந்து அவன் தனது அருளை கொடுக்கின்றான்.

8. உலக செல்வத்தையும் வசதியான உலக வாழ்க்கையையும் ஆதரவு வைப்பவன் அழிந்துபோகும் ஒன்றைத்தான் ஆதரவு வைத்தான். யார் மறுமையை ஆதரவு வைப்பார்களோ அவர்கள்தான் உண்மையான அழியாத வாழ்க்கையை ஆதரவு வைத்தவர்கள் ஆவார்கள். அவர்கள்தான் உண்மையான புத்திசாலிகள், வெற்றியாளர்கள்

ஆவார்கள்.

﴿إِنَّ الَّذِينَ لَا يَرْجُونَ لِقَاءَنَا وَرَضُوا بِالْحَيَاةِ الدُّنْيَا وَاطْمَأَنُّوا بِهَا وَالَّذِينَ هُمْ عَنْ آيَاتِنَا غَافِلُونَ أُولَٰئِكَ مَأْوَاهُمُ النَّارُ بِمَا كَانُوا يَكْسِبُونَ﴾

பொருள் : நிச்சயமாக எவர்கள் நம்மைச் சந்திப்பதை (ஒரு சிறிதும்) நம்பாது இவ்வுலக வாழ்க்கையை விரும்பி, அதைக் கொண்டு திருப்தியடைந்து (அதிலேயே மூழ்கி) விட்டார்களோ அவர்களும், இன்னும் எவர்கள் நம் வசனங்களை (புறக்கணித்து) விட்டுப் பராமுகமாக இருக்கின்றனரோ அவர்களும், (ஆகிய) இவர்கள், இவர்கள் செய்து கொண்டிருந்த (தீய)வற்றின் காரணமாக இவர்களுடைய தங்குமிடம் நரகம்தான். (அல்குர்ஆன் 10 : 7,8)

படிப்பினைகள்

1. இந்த வசனம் நஷ்டவாளிகள் பற்றி பேசுகிறது. அவர்கள் அல்லாஹ்வின் சந்திப்பை ஆதரவு வைக்க மாட்டார்கள், அதை நம்ப மாட்டார்கள். அதனால் உலகம்தான் அவர்களது குறிக்கோளாக இருக்கும். அவர்களின் ஆசை எல்லாம் உலகத்தை அடைவதாகத்தான் இருக்கும். அவர்களின் உள்ளமெல்லாம் உலக ஆசை நிரம்பி இருக்கும். மார்க்கம் மறுமை இதுவெல்லாம் அவர்களுக்கு நினைவில் இருக்காது. வேத வசனங்களைக் கொண்டு உபதேசம் செய்யப்பட்டால் அவர்களுக்கு அது உரைக்காது. காது செவிடாக இருக்கும் உபதேசத்தை செவியுறும் விஷயத்தில். அல்லாஹ்வின் அத்தாட்ச்சிகளைப் பார்த்து படிப்பினை பெறுவதில் அவர்களின் கண்கள் குருடாக இருக்கும். இறுதியாக ஒருநாள் சேர்த்த உலகத்தை விட்டும் குவித்த செல்வத்தை விட்டும் கட்டிய மாளிகையை விட்டும் வாங்கிய பொருள்களை விட்டும் அவன் பிரியும்போதுதான் அவனுக்கு தெரியவரும் தான் ஏமார்ந்துபோனது. அப்போது புத்தி வருவதால் எப்பலனும் இருக்காது. அவனால் தனக்கு

நன்மைகள் எதையும் தேடிக்கொள்ள அவகாசம் இருக்காது. பிறகு அவனுக்காக கப்ரில் சம்மட்டி அடிகளும் பாம்புகளும் வரவேற்க காத்துக் கொண்டிருக்கும். நரகப் படுகுழியில் அவன் கிடத்தப்பட்டு விலாக்கள் ஒன்றோடு ஒன்று சேரும் அளவிற்கு நெருக்கப் படுவான். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

ஆதரவை வலியுறுத்துகின்ற சில ஹதீஸ்களையும் அவற்றின் படிப்பினைகளையும் பார்ப்போம் இன் ஷா அல்லாஹ்...

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ الْأَنْصَارِيِّ قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ قَبْلَ مَوْتِهِ بِثَلَاثَةِ أَيَّامٍ يَقُولُ لَا يَمُوتَنَّ أَحَدُكُمْ إِلَّا وَهُوَ يُحْسِنُ الظَّنَّ بِاللهِ عَزَّ وَجَلَّ

பொருள் : ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தங்கள் மரணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக கூறுவதை நான் செவியுற்றேன் : உங்களில் ஒருவரும் கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைத்தவராகவே தவிர மரணிக்க வேண்டாம்.[68]

படிப்பினைகள்

1. தமது உம்மத்துக்கு கூற வேண்டிய உபதேசம் தவறிவிடக்கூடாது என்பதற்காக நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை நாம் அறிய முடிகிறது.

2. தமது உம்மத்திற்கு நபி ﷺ அவர்கள் கொடுத்த முக்கியத்துவமும் சிறப்பும் இதில் தெளிவாகிறது.

3. அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைப்பதன் முக்கியத்துவமும் அவசியமும் இதில் இருக்கிறது.

4. அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைக்க வேண்டும்

68. அறிவிப்பாளர் : ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல்அன்ஸாரி ﵁, நூல் : முஸ்லிம், எண் : 2877

என்று சொல்லும்போது அல்லாஹ்வின் தன்மை அஸீஸ், ஜலீல் இரண்டையும் குறிக்கின்ற அஸ்ஸ, வ ஜல்ல என்ற சொற்களை நபி ﷺ அவர்கள் சேர்த்து கூறினார்கள். அதன் விளக்கம் நாம் நல்லெண்ணம் யார் மீது வைக்கின்றோமோ அந்த அல்லாஹ் அதற்கு முற்றிலும் தகுதியானவன் ஆவான். அவன் அஸீஸ் - மிக்க கண்ணியமானவன், யாவரையும் மிகைத்தவன். ஜலீல் - மிகவும் கம்பீரமும் மதிப்பும் மிக்கவன் ஆவான். இந்த இரண்டு தன்மைகளும் யாரிடம் இருக்குமோ அவன் மீது நாம் எப்போதும் ஆதரவும் நல்லெண்ணமும் வைக்க வேண்டும். அவனைத் தவிர வேறு யார் மீதும் நாம் முழு ஆதரவையும் நல்லெண்ணத்தையும் வைக்க முடியாது. அல்லாஹ் மட்டுமே நமது ஆதரவை குறைவின்றி நிறைவேற்றுவதற்கும் நமது நல்லெண்ணத்திற்கு ஏற்ப நமக்கு அவனுடைய அருளையும் பரகத்துகளையும் வழங்க முடியும். அவனே எல்லா ரஹ்மத்துகளுக்கும் பரகத்துகளுக்கும் சொந்தக்காரன் ஆவான்.

5. அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைப்பது என்றால் என்ன?

• எனது ரப்பு எனக்கு எதைக் கொடுத்தானோ அவன் எனக்கு பொருத்தமானதைத்தான் கொடுத்தான்.

• என் ரப்பின் விதியை நான் பொருந்திக் கொண்டேன்.

• என் ரப்பு என் மீது கருணை உள்ளவன்.

• அவன் என்னை மன்னிப்பான்.

• அவன் நான் விரும்புவதைவிட எனக்கு சிறப்பானதை எனக்கு தருவான்.

• இந்த உலகத்தில் நான் விரும்புவது தற்காலிகமானது. ஆகவே, நான் அவனிடம் மறுமையை ஆதரவு வைக்கிறேன். மறுமையில் வெற்றியையும் உயர் பதவிகளையும் நான் அவனிடம் ஆதரவு

வைக்கின்றேன்.

• நான் விரும்புவதில் எனக்கு மிகவும் தேவையானது இவ்வுலகில் அவனது ஹிதாயத்தும் தவ்ஃபீக்கும் ஆகும். மறுமையில் அவனது மன்னிப்பும் சொர்க்கமும் ஆகும்.

• நாம் இவ்வுலகில் வாழும்போது அல்லாஹ்வின் பயம் அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் பாவங்களை விட்டு விலகி இருப்போம். இன்னும் கடமைகளை விடாமலும் அவற்றில் குறைவு செய்யாமலும் இருப்போம். நமது மரண நேரத்தில் நாம் அல்லாஹ்வை ஆதரவு வைக்க வேண்டும். அவன் மீது நல்லெண்ணம் வைக்க வேண்டும். அதாவது இப்போது நாம் அவனை சந்திக்க இருக்கின்றோம். ஆகவே, அவனின் கண்ணியத்தை மனதில் வைத்து அவன் நம்மை மன்னித்து நம்மீது அருள் புரிவான் என்ற உயர்வான எண்ணம் இருக்க வேண்டும். அவன் என்னை தண்டித்து நரகத்தில் தள்ளிவிடுவான் என்று எண்ணிவிடக்கூடாது. இது நிராசை ஆகும். நிராசை வைப்பது நிராகரிப்பில் தள்ளிவிடும். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

عَنْ أَبِي ذَرٍّ قَالَ: قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ يَقُولُ اللّٰهُ عَزَّ وَجَلَّ مَنْ جَاءَ بِالْحَسَنَةِ فَلَهُ عَشْرُ أَمْثَالِهَا وَأَزِيدُ وَمَنْ جَاءَ بِالسَّيِّئَةِ فَجَزَاؤُهُ سَيِّئَةٌ مِثْلُهَا أَوْ أَغْفِرُ وَمَنْ تَقَرَّبَ مِنِّي شِبْرًا تَقَرَّبْتُ مِنْهُ ذِرَاعًا وَمَنْ تَقَرَّبَ مِنِّي ذِرَاعًا تَقَرَّبْتُ مِنْهُ بَاعًا وَمَنْ أَتَانِي يَمْشِي أَتَيْتُهُ هَرْوَلَةً وَمَنْ لَقِيَنِي بِقُرَابِ الْأَرْضِ خَطِيئَةً لَا يُشْرِكُ بِي شَيْئًا لَقِيتُهُ بِمِثْلِهَا مَغْفِرَةً

கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ் கூறுவதாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள் : யார் நன்மை செய்வாரோ அவருக்கு அதுபோன்ற பத்து நன்மைகள் கிடைக்கும். இன்னும் நான் அதிகமாக

வழங்குவேன். யார் தீமை செய்வாரோ அவரின் கூலி அதுபோன்ற தீமையாக இருக்கும். அல்லது நான் மன்னிப்பேன். யார் என்னிடம் ஒரு ஜான் நெருங்குவாரோ நான் அவரிடம் ஒரு முழம் நெருங்குவேன். யார் என்னிடம் ஒரு முழம் நெருங்குவாரோ நான் அவரிடம் ஒரு கஜம் நெருங்குவேன். யார் என்னிடம் நடந்து வருவாரோ நான் அவரிடம் ஓடி வருவேன். யார் பூமி நிரம்ப பாவத்துடன் என்னை சந்திப்பாரோ அவர் எனக்கு எதையும் இணைவைத்திருக்கவில்லை என்றால் நானும் அதுபோல மன்னிப்புடன் அவரை சந்திப்பேன்.[69]

படிப்பினைகள்

1. இந்த ஹதீஸ் நமக்கு மிகப்பெரிய ஆதரவை தரக்கூடியதாகும்.

2. ஒரு நன்மைக்கு பத்து நன்மைகள் கூலியாக கிடைக்கின்றன.

3. ஒரு பாவத்திற்கு அதே அளவுதான் தண்டனை. அதையும் அல்லாஹ் மன்னிக்கலாம்.

4. நாம் அல்லாஹ்வை நெருங்குவதை விட அல்லாஹ் நம்மைநோக்கி நெருங்குவது மிக அதிகம்.

5. நாம் செய்கின்ற அமல்களை விட அல்லாஹ் நமக்கு கொடுக்கின்ற நன்மைகள் அதிகம்.

6. அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் தவ்ஹீதில் உறுதியாக இருப்பது மிகப் பெரிய காரியமாகும்.

7. ஆகவே, ஈமான் சரியாக இருந்து, ஷிர்க் செய்யாமல் வாழ்ந்த ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடந்த எல்லா பாவங்களையும் அல்லாஹ் மன்னித்துவிடுவதாக வாக்களிக்கின்றான்.

8. ஆகவே, அல்லாஹ்வை ஆதரவு வைப்பவர் அல்லாஹ்விற்கு ஷிர்க் செய்யாமல் இருக்க வேண்டும். மறுமையின் வெற்றியை

69. அறிவிப்பாளர் : அபூ தர் ﷺ, நூல் : முஸ்லிம், எண் : 2687

விரும்புகின்றவர் தன்னை ஷிர்கை விட்டு முற்றிலும் பாதுகாத்து இருக்க வேண்டும்.

9. ஷிர்க் என்பது அமல்களையும் ஆதரவுகளையும் நாசமாக்கக்கூடிய காரியமாகும்.

10. அல்லாஹ்வின் கருணை இவ்வளவு விசாலமாக இருந்தும் அதை ஆதரவு வைக்காமல், அவனிடம் மன்னிப்புத் தேடாமல், நன்மையான காரியங்களை செய்யாமல் யாரும் இருந்தால் அது அவர் தனக்கு தேடிக்கொண்ட துர்பாக்கியம் ஆகும். அவர் தன்னையே இகழ்ந்துக் கொள்ளட்டும்.

عَنْ عُمَرَ بْنِ الخَطَّابِ ﷺعَنْهُ قَدِمَ عَلَى النَّبِيِّ ﷺ سَبْيٌ فَإِذَا امْرَأَةٌ مِنَ السَّبْيِ قَدْ تَحْلُبُ ثَدْيَهَا تَسْقِي إِذَا وَجَدَتْ صَبِيًّا فِي السَّبْيِ أَخَذَتْهُ فَأَلْصَقَتْهُ بِبَطْنِهَا وَأَرْضَعَتْهُ فَقَالَ لَنَا النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَتُرَوْنَ هَٰذِهِ طَارِحَةً وَلَدَهَا فِي النَّارِقُلْنَا لاَ وَهِيَ تَقْدِرُ عَلَىٰ أَنْ لاَ تَطْرَحَهُ فَقَالَ لَلَّهُ أَرْحَمُ بِعِبَادِهِ مِنْ هَٰذِهِ بِوَلَدِهَا

நபி ﷺ அவர்களிடம் கைதிகள் வந்தார்கள். அப்போது கைதிகளில் ஒரு பெண் தனது மார்பை பாலை பிதிக்கியவளாக பால் புகட்டிக்கொண்டு இருந்தாள். அவள் ஒரு குழந்தையை கண்டுவிட்டால் அதை எடுத்து தனது வயிற்றோடு அனைத்து அதற்கு பால் கொடுப்பாள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் எங்களிடம் கூறினார்கள்: இந்த பெண் தனது குழந்தையை நெருப்பில் போடுவாள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? நாங்கள் கூறினோம்: அவள் அதை நெருப்பில் போடாமல் இருக்க முடியும் என்றால் அவள் கண்டிப்பாக அதை நெருப்பில் போடமாட்டாள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள் : இவள்

தனது குழந்தையின் மீது கருணையாக இருப்பதை விட அல்லாஹ் தனது அடியார்கள் மீது மிகக் கருணையாளனாக இருக்கின்றான்.[70]

படிப்பினைகள்

1. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் அவ்வப்போது தங்கள் தோழர்களுக்கு உதாரணங்கள் மூலம் மார்க்க விஷயங்களை விளக்கிக் கொடுப்பார்கள்.

2. இந்த ஹதீஸில் ஒரு படைப்பு இன்னொரு படைப்பின் மீது காட்டும் கருணையை உதாரணம் கூறி படைத்தவனாகிய அல்லாஹ் தனது படைப்புகள் மீது காட்டும் கருணை மிகப் பெரியது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

3. அல்லாஹ்வின் கருணையையும் இரக்கத்தையும் யாரும் அளவிட்டுவிட முடியாது. அளவான கருணை உள்ள மனிதனே இந்தளவு இரக்கம் உள்ளவனாக இருக்கும்போது அளவற்ற கருணையுள்ள அல்லாஹ் எந்தளவு இரக்கம் உள்ளவனாக இருப்பான் என்பதை நாம் உணர்வதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் இங்கு விளக்கம் தருகிறார்கள்.

4. ஈமான் உடைய மதிப்பு எவ்வளவு உயர்ந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஈமான் உள்ளவர் கண்டிப்பாக அல்லாஹ்வின் மன்னிப்பை அடையப் பெறுவார். அவர் அல்லாஹ்வின் மீது ஆதரவு வைப்பதற்கு மிகத் தகுதியானவர் ஆவார். ஈமான் இல்லாமல் ஆதரவு வைப்பவருக்கு உதாரணம் கானல் நீரை தண்ணீர் என்று எண்ணி தனது தாகத்தை தீர்க்க அதை நோக்கி ஓடுபவனைப் போலாகும்.

கருத்து :

நாம் இதுவரை ஆதரவு தொடர்பான பல வசனங்களையும்

70. அறிவிப்பாளர் : உமர் இப்னுல் கத்தாப் ؓ, நூல் : புகாரி, எண் : 5999

நபிமொழிகளையும் படித்தோம். அடியார்களாகிய நாம் மிகவும் பலவீனமானவர்கள் என்பதை நாம் புரிய வேண்டும். நமக்கு என்ன ஆற்றல் இருக்கிறது? நமது அறிவு எந்தளவு இருக்கிறது? கடந்த காலம் நமக்கு நினைவில் இருக்கிறதா? வருங்காலத்தைப் பற்றி அறிவு நமக்கு இருக்கிறதா? எது நன்மை, எது தீமை என்பதை நாம் அறிய முடிகிறதா? நல்லதை கெட்டதாகவும் கெட்டதை நல்லதாகவும் உண்மையை பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் போலியை அசலாகவும் அசலை போலியாகவும் புரிந்துகொண்டு அன்றாடம் பல அவதிகள் பட்டுக்கொண்டு இருக்கின்றோம். எப்போது எந்த நோய் நம்மை தாக்கி நமது ஆற்றல் பறிபோகுமோ? வீட்டை விட்டு வெளியில் சென்றால் மீண்டும் வீட்டுக்குள் வருவோமா என்பதற்கு நமக்கு உறுதி இல்லை. நம்மை சுற்றி பின்னப்படும் சதி வலைகளை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. நம்மை புகழ்பவரின் புகழ்ச்சியில் மயங்கி விடுகிறோம். நல்லோர் கூறும் உபதேசம் நமக்கு கோபத்தை தருகிறது. நம்மை பார்க்கும் கண்களின் பார்வையில் உள்ள அர்த்தத்தை நம்மால் புரிய முடியவில்லை. அப்படி இருக்க பிறர் உள்ளத்தில் உள்ளதை எப்படி அறிய முடியும்? நமது மனமே எப்போது எப்படி மாறும் என்பதை நம்மால் அறிய முடியவில்லை. முன்பு பிடித்தது இப்போது வெறுப்பாக இருக்கிறது. இப்போது பிடிப்பது முன்பு வெறுப்பாக இருந்தது. பல இனிப்பானவர்கள் கசந்து விட்டார்கள். கசந்தவர்கள் இனித்து விட்டார்கள். நேசித்து கட்டிய மனைவியை சிறிது காலம் கழித்து அவள் எனக்கு பிடிக்கவில்லை என்று கூறுபவர்கள் கொஞ்ச நஞ்சமல்ல. தனது காதல் கணவனை கொன்ற பெண்களின் எண்ணிக்கை வரலாற்றில் ஏராளம். இப்படி மாறும் உலகில் நாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரை ஆதரவு வைக்க முடியும்? எது தேவை என்றாலும் நாம் அவனையே ஆதரவு வைக்க வேண்டும். எப்போதும் நல்லாதரவு அவன் மீது இருக்க வேண்டும். அழகிய எண்ணம் அவன் மீது நமக்கு இருக்க வேண்டும். தனது ரப்பை ஹகீம், அலீம், கரீம், அஸீஸ், ஜலீல், கதீர், ரஹீம், ரஹ்மான், வஹ்ஹாப் என்று அறிந்தவன் அவன் மீது

ஆதரவுவைக்காமல் எப்படி இருப்பான்?

நமது உள்ளத்தின் காயங்களுக்கு மருந்துகளுக்கெல்லாம் பெரிய மருந்து அல்லாஹ்வின் மீது ஆதரவு வைப்பதும் அவன் மீது நல்லெண்ணம் வைப்பதும் ஆகும்.

அல்லாஹ்வே! உன்னை ஆதரவு வைக்கிறோம். உன் கருணையை, உன் மன்னிப்பை, உனது சொர்க்கத்தை ஆதரவு வைக்கிறோம். உன் மீது நல்லெண்ணம் வைக்கின்றோம். உனது மன்னிப்பும் கருணையும் எங்களுக்கு வேண்டும். நாங்கள் ஆதரவு வைப்பதை எங்களுக்குத் தா! நாங்கள் பயப்படும் உனது கோபத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் எங்களை பாதுகாத்துக் கொள்! ஆமீன்.

****

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْـحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَـمِينَ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللّٰهِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

அமர்வு 22

பொறுமை

இந்த பொறுமை மனிதனுக்கு மிக அவசியமானதும் குணங்களில் மிக போற்றத்தக்கதும் சொல்வதற்கு மிக எளிதானதும் கடைப்பிடிப்பதற்கு மிக கடினமானதும் ஆகும்.

இந்த உலகத்தில் சாதித்த எல்லோரும் பொறுமையைக் கொண்டுதான் சாதித்துள்ளனர்.

வெற்றிக்கு பொறுமை தேவை.

நல்ல பெயர் எடுப்பதற்கு பொறுமை தேவை.

வாழ்க்கையில் முன்னேற பொறுமை தேவை.

பிறர் மனதில் இடம்பிடிக்க பொறுமை தேவை.

குடும்பம் நிம்மதியாக இருக்க குடும்ப உறுப்பினர்கள் எல்லோருக்கும் பொறுமை தேவை.

நாட்டில் எல்லோரும் நிம்மதியாக இருக்க, நாட்டை ஆளுகின்ற அரசனும் நாட்டில் வாழுகின்ற மக்களும் பொறுமையோடு இருக்க வேண்டும்.

தேர்வில் வெற்றி பெற மாணவனுக்கு பொறுமை தேவை.

போரில் வெற்றி பெற அரசனுக்கும் படையினருக்கும் பொறுமை தேவை.

பொறுமையைக் கொண்டுதான் வாழ்க்கையை இன்பமாக, இனிமையாக, இதமாக, சுவையாக ஆக்க முடியும்.

கணவன் மனைவியிடம் பொறுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் மனைவியின் தொந்தரவுகளை தாங்க முடியும்.

மனைவியும் கணவனிடம் பொறுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் கனவனின் கோப தாபங்களையும் கடின சுபாவங்களையும் தாங்க முடிவதோடு கணவனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். குடும்பத்தையும் பிள்ளைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

பெற்றோர் பிள்ளைகளிடம் பொறுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளை முறையாக வளர்க்க முடியும். அவர்களின் தவறுகளை திருத்தி, நல்லொழுக்கத்தை போதிக்க முடியும்.

பிள்ளைகள் பெற்றோரிடம் பொறுமையாக இருக்க வேண்டும். அதன் மூலம்தான் பெற்றோரின் மனதை குளிர வைக்க முடியும். அது மட்டுமல்ல பெற்றோரின் துஆவையும் அன்பையும் அடைய முடியும்.

உறவுகளுக்குள் நல்லிணக்கம் ஏற்பட பொறுமை மிக முக்கியம்.

ஆசிரியர் மாணவர்களிடம் பொறுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு தனது கல்வியை சிறப்பாக கற்றுத் தர முடியும். மேலும், மாணவர்களின் உள்ளத்தை கவர முடியும். மாணவர்கள் ஆசிரியரிடம் பொறுமையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் தங்கள் ஆசிரியரிடமிருந்து கல்வியையும் அதிகமாக கற்க முடியும். அவரின் அனுபவத்தைக்

கொண்டு அதிக பாடங்கள் பெற முடியும்.

மருத்துவம் செய்யும் மருத்துவருக்கு நோயாளியிடம் பொறுமையாக இருக்க வேண்டும். சிறந்த மருத்துவர் என்ற பெயர் பெறுவதற்கும் நல்லனுபம் கிடைப்பதற்கும் ஒரு மருத்துவருக்கு பொறுமை மிக அவசியம். அவ்வாறே சிகிச்சை பெறுகின்ற நோயாளிக்கு பொறுமை அதிகம் தேவை. மருந்துகளை சாப்பிடுவது, காயத்திற்கு மருந்திடுவது, அறுவை சிகிச்சையின் வலிகளை தாங்கிக் கொள்வது, தேவையான அளவிற்கு தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்வது இப்படி பல கட்டங்களில் நோயாளிக்கு பொறுமை மிக அவசியமாக தேவைப்படுகின்றது. அப்போதுதான் அவர் பூரணகுணத்தை பெற முடியும்.

வாகனம் ஓட்டும்போது பொறுமை தேவை. பொறுமை இல்லாமல் வாகனம் ஓட்டுபவன் அவசரமாக மய்யவாடிக்கு செல்கிறான் என்று புரிந்து கொள்ளுங்கள். இன்னும் பொறுமை இல்லாமல் வாகனம் ஓட்டுபவன் சக வாகன ஓட்டிகளிடம் சதா சண்டை செய்து கொண்டே இருப்பான். வாகன சண்டையின் இறுதியல் பலர் படு மோசமாக தாக்கப்பட்டதையும் பலரின் உயிர் பறிக்கப்பட்டதையும் நாம் பார்க்கிறோம்.

சமுதாயங்களுக்குள் பரஸ்பர அன்பும் புரிந்துணர்வும் நிலவ பொறுமை மிக மிக முக்கியம். இரு நாடுகளுக்குள் நல்லுறவும் நட்பும் மலர நாட்டின் தலைவர்களிடம் பொறுமை இருக்க வேண்டும். பொறுமை இல்லை என்றால் குழப்பமும் சண்டை சச்சரவுகளும் பதட்டமும் கலவரங்களும் இரு தரப்பு மோதல்களும் பெருகிவிடும்.

பொறுமை மிக விசாலமான பொருளுடைய வார்த்தையாகும். பொறுமைக்கு விளக்கம் அதிகமாக இருக்கின்றது. அதை விவரிப்பதற்கு வார்த்தைகள் குறைவுதான். பொறுமையின் அளவுக்கும் எல்லை இல்லை. ஒவ்வொரு நாளும் பொறுமையின் பாடங்களை நாம் வாழ்நாளில் படித்துக் கொண்டே இருக்கிறோம். இருந்தாலும்

அடுத்தக் கட்டத்தில் பொறுமையை மறந்து விடுகிறோம். அழகிய பொறுமையை இழந்துவிடுகிறோம். பதட்டப்பட்டு, அவசரப்பட்டு, இறுதியில் அளவில்லாமல் அல்லல் படுகிறோம்.

பொறுமை அல்லாஹ் நேசிக்கின்ற மிக முக்கியமான குணமாகவும் இஸ்லாம் மிகவும் வலியுறுத்துகின்ற குணமாகவும் இருப்பதே நாம் சொல்கின்ற கருத்துக்கு போதுமான ஆதாரமாகும். நபிமார்களுக்கு அல்லாஹ் கூறிய மிக முக்கியமான அறிவுரை பொறுமையாக இருக்க வேண்டும் என்பதுதான். நபிமார்கள் உம்மத்துக்கு கூறிய அறிவுரையும் பொறுமையாக இருக்கும்படிதான்.

பொறுமை இல்லாததால் உலகில் பிரச்சனைகள் ஒன்றா, இரண்டா? எத்தனை கோடி குழப்பங்கள் பொறுமையை மனிதன் கைவிடுவதால் அன்றாடம் நிகழ்கின்றன.

பொறுமையின்மையால் நாடுகளுக்குள் சண்டைகள் மூண்டுவிடுகின்றன. குடும்பங்களுக்குள் பிளவுகள் ஏற்பட்டு விடுகின்றன. சமுதாயங்களுக்குள் சச்சரவுகள் தோன்றிவிடுகின்றன. உறவுகளுக்குள் முறிவுகளும் விரிசல்களும் பரவி விடுகின்றன. நண்பர்களுக்குள் மனஸ்தாபங்கள் தீயாய் மூண்டுவிடுகின்றன.

மனிதனுக்கு எல்லாக் காலங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் எல்லா இடங்களிலும் எல்லா மனிதர்களுடனும் இந்த பொறுமை இருக்க வேண்டும்.

பொறுமைக்கு எதிராக கோபத்தை இங்கு நாம் குறிப்பிடுகிறோம். கோபம் ஒரு தீயைப் போல. தீ அளவோடு இருக்க வேண்டும். இன்னும் அது இருக்க வேண்டிய இடத்தில் மட்டும் இருக்க வேண்டும். இல்லையேல் அது மிகப்பெரிய ஆபத்தை உண்டாக்கி விடும். அது பரவும் இடங்களை எல்லாம் எரித்து சாம்பலாக்கி விடும். சில வினாடிகளில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை காவு வாங்கிவிடும். பல்லாயிரக்கணக்கான உயிர்களை தனது பசிக்கு

இரையாக்கி விடும்.

அதுபோன்று பொறுமையை விட்டுக்கொடுத்தல் என்ற பொருளிலும் நாம் எடுத்துக் கொள்ளலாம். சகித்துக் கொள்ளுதல், இறைவிதியை ஏற்றுக் கொள்ளுதல் என்ற கருத்திலும் நாம் எடுத்துக் கொள்ளலாம். தன்னை அடக்கிக் கொள்ளுதல், கோபத்தை கட்டுப்படுத்துதல், பிறர் பிழைகளை மன்னித்தல் என்ற பொருள்களையும் பொறுமைக்கு நாம் கூறலாம். ரப்பை வணங்கும்போது ஏற்படும் சிரமங்களை தாங்கிக் கொண்டு மன உறுதியோடு மறுமையின் நன்மையை ஆதரவு வைத்து வணக்க வழிபாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது என்ற கருத்தும் பொறுமைக்கு உண்டு.

பொறுமையை நற்குணங்களின் தாய் என்றும் அவற்றின் மகுடம் என்றும் கூறலாம்.

பொறுமை தீயோரை நல்லோராக மாற்றிவிடும். நல்லோருக்கு மேலும் நற்பெயரை வாங்கித் தரும். கல்விமானுக்கு கண்ணியத்தைக் கூட்டிவிடும். சமுதாயத் தலைவருக்கு மேலும் அந்தஸ்த்தை அதிகப்படுத்தி விடுகிறது. ஒரு பெண்ணுக்கு குடும்பத்தில் கவுரவத்தை கொடுத்து சங்கைப் படுத்துகிறது.

தலைமைக்கும் தொண்டனுக்கும் பொறுமை அவசியம். மொத்தத்தில் ஒரு காரியம் உருப்பட வேண்டுமென்றால் அல்லது ஒருவர் உருப்பட வேண்டுமென்றால் கண்டிப்பாக பொறுமை தேவை.

இனி பொறுமையைப் பற்றி குர்ஆன், ஹதீஸ் கூறும் வழிகாட்டல்களை கவனிப்போம்.

முதலாவது வசனம் :

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَاللَّهُ يُحِبُّ الصَّابِرِينَ﴾

(இவ்வாறு சிரமங்களைச்) சகித்துக் கொள்பவர்களைத்தான் அல்லாஹ் நேசிக்கிறான். (அல்குர்ஆன் 3 : 146)

இரண்டாவது வசனம் :

﴿وَلَمَنْ صَبَرَ وَغَفَرَ إِنَّ ذَٰلِكَ لَمِنْ عَزْمِ الْأُمُورِ﴾

திட்டமாக யார் பொறுமையாக இருப்பாரோ இன்னும் மன்னிப்பாரோ நிச்சயமாக அது மிக வீரமிக்க காரியங்களில் உள்ளதாகும். (அல்குர்ஆன் 42 : 43)

மூன்றாவது வசனம் :

﴿فَاصْبِرْ كَمَا صَبَرَ أُولُو الْعَزْمِ مِنَ الرُّسُلِ وَلَا تَسْتَعْجِلْ لَهُمْ﴾

உறுதிமிக்க தூதர்கள் பொறுமையாக இருந்ததைப் போன்று நீரும் பொறுமையாக இருப்பீராக! அவர்கள் விஷயத்தில் அவசரப்படாதீர். (அல்குர்ஆன் 46 : 35)

நான்காவது வசனம் :

﴿وَالصَّابِرِينَ فِي الْبَأْسَاءِ وَالضَّرَّاءِ وَحِينَ الْبَأْسِ أُولَٰئِكَ الَّذِينَ صَدَقُوا وَأُولَٰئِكَ هُمُ الْمُتَّقُونَ﴾

வறுமையிலும் நோயிலும் பொறுமையாக இருப்பவர்கள் - (இவர்கள்தான் நன்மை செய்பவர்கள்). இவர்கள்தான் உண்மையாளர்கள், இன்னும் இவர்கள்தான் இறையச்சமுள்ள்வர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 2 : 177)

ஐந்தவாது வசனம் :

﴿وَبَشِّرِ الْمُخْبِتِينَ (٣٤) الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَالصَّابِرِينَ

﴿عَلَىٰ مَا أَصَابَهُمْ وَالْمُقِيمِي الصَّلَاةِ وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ﴾

உள்ளச்சம் உடையவர்களுக்கு (நபியே!) நற்செய்தி கூறுவீராக. அவர்கள் எத்தகையவர்கள் என்றால், அல்லாஹ்வுடைய திருப்பெயர் கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும். அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள். தொழுகையையும் கடைப்பிடிப்பார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றில் தானமும் செய்வார்கள். (அல்குர்ஆன் 22 : 34,35)

ஆறாவது வசனம் :

﴿وَلَنَبْلُوَنَّكُمْ حَتَّىٰ نَعْلَمَ الْمُجَاهِدِينَ مِنْكُمْ وَالصَّابِرِينَ وَنَبْلُوَ أَخْبَارَكُمْ﴾

(நம்பிக்கையாளர்களே!) உங்களில் (மனமொப்பி) போர் புரிபவர்கள் எவர்கள் என்பதையும், (போரில் ஏற்படும்) சிரமங்களை (உறுதியாக) சகித்திருப்பவர்கள் எவர்கள் என்பதையும் நாம் அறிந்து வெளிப்படுத்தும் வரை, உங்களையும் உங்களைப் பற்றிய விஷயங்களையும் நாம் சோதனைக்குள்ளாக்கியே வருவோம். (அல்குர்ஆன் 47 : 31)

ஏழாவது வசனம் :

﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ إِنَّ اللَّهَ مَعَ الصَّابِرِينَ﴾

நம்பிக்கையாளர்களே! (நீங்கள் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவதற்காக) பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான். (அல்குர்ஆன் 2 : 153)

எட்டாவது வசனம் :

﴿وَبَشِّرِ الصَّابِرِينَ (١٥٥) الَّذِينَ إِذَا أَصَابَتْهُمْ مُصِيبَةٌ قَالُوا إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ (١٥٦) أُولَٰئِكَ عَلَيْهِمْ صَلَوَاتٌ مِنْ رَبِّهِمْ وَرَحْمَةٌ وَأُولَٰئِكَ هُمُ الْمُهْتَدُونَ﴾

(நம்பிக்கையாளர்களே!) பயம், பசி மேலும், பொருள்கள், உயிர்கள், கனிவர்க்கங்கள் ஆகியவற்றில் நஷ்டத்தைக் கொண்டு நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக. (சோதனைக்குள்ளாகும்) அவர்கள் தங்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்பட்ட போதிலும் "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கிறோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்" எனக் கூறுவார்கள். அவர்கள் மீதுதான் அவர்களுடைய இறைவனிடமிருந்து (மன்னிப்பும்) புகழுரைகளும் கருணையும் ஏற்படுகின்றன. மேலும், அவர்கள்தான் நேரான வழியையும் அடைந்தவர்கள்.

(அல்குர்ஆன் 2 : 155 - 2 : 157)

ஒன்பதாவது வசனம் :

﴿الصَّابِرِينَ وَالصَّادِقِينَ وَالْقَانِتِينَ وَالْمُنْفِقِينَ وَالْمُسْتَغْفِرِينَ بِالْأَسْحَارِ﴾

(அவர்கள்) பொறுமையாளர்களாகவும், உண்மை பேசுகிறவர்களாகவும், (இறைவனுக்கு) முற்றிலும் வழிப்பட்டு நடப்பவர்களாகவும், தானம் செய்கிறவர்களாகவும், 'ஸஹர்' நேரங்களில் (வைகறைப் பொழுதில் அல்லாஹ்விடம்) மன்னிப்புக் கோருகிறவர்களாகவும் இருக்கின்றனர்.

(அல்குர்ஆன் 3 : 17)

இங்கு ஒன்பது வசனங்களை நாம் படித்தோம் அவற்றின் படிப்பினைகளை இப்போது பார்ப்போம்.

முதல் வசனத்தின் படிப்பினைகள்

1. பொறுமை அல்லாஹ்விற்கு பிடித்த குணமாகும்.

2. அல்லாஹ்வின் விருப்பத்தை பெற ஆசைப்படுபவர்கள் பொறுமையை கடைப்பிடிக்கவும்.

3. நல்லமல்கள் அல்லாஹ்விற்கு விருப்பமாக இருப்பதைப் போல் நற்குணங்களும் அல்லாஹ்விற்கு விருப்பமானவை ஆகும்.

4. நாம் அல்லாஹ்வை நேசிக்கின்றோம். அதற்காக நாம் பல நல்லமல்களை செய்கிறோம். அந்த நல்லமல்களை நாம் செய்வதன் மூலம் அல்லாஹ் நமது நேசத்தை ஏற்றுக் கொண்டு அவன் நம்மை நேசிக்க வேண்டும், நம்மை மன்னிக்க வேண்டும் என்பதாகும். அல்லாஹ்வின் நேசம் பொறுமையாளர்களுக்கு கணடிப்பாக உண்டு என்று வாக்களிக்கின்றான்.

இரண்டாவது வசனத்தின் படிப்பினைகள்

1. பொறுமை என்பது மன்னிப்போடு சேர்ந்து இருக்க வேண்டும்.

2. பொறுமை மன்னிப்போடு சேரும்போதுதான் முழுமைப் பெறுகிறது.

3. வீரம் என்பது பழி வாங்குவதில் மட்டுமல்ல. உண்மையான வீரம் பழிதீர்க்க ஆற்றல் இருந்தும் பெருந்தன்மையோடு மன்னிப்பதாகும்.

4. மாறாக, விசாலமான உள்ளத்தோடு தனக்கு தவறிழைத்தவர்களை மன்னிக்கவும் வேண்டும்.

5. மன்னிக்காமல் இருக்கும்போது பொறுமை தற்காலிகமாகத்தான் இருக்கும். பிறகு ஒரு நேரத்தில் மனிதன் பொறுமை இழந்து தனது தீய குணத்தால் உந்தப்பட்டு வரம்பு மீறி நடக்க துணிந்துவிடுவான்.

மூன்றாவது வசனத்தின் படிப்பினைகள்

1. பொறுமையாக இருக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும்.

2. பொறுமையாக இருப்பது சிறப்பிற்குரிய மிக உயர்ந்த நபிமார்களின் குணமாகும்.

3. அவசரப்படுவதை அல்லாஹ் தடுத்துள்ளான்.

4. பொறுமையாக இருப்பது அல்லாஹ் விரும்புகின்ற குணமாகவும் அவசரப்படுவது அல்லாஹ் வெறுக்கின்ற குணமாகவும் இருக்கின்றது.

5. நல்லோரும் சான்றோரும் இவ்வுலகில் சாதித்தது பொறுமையைக் கொண்டுதான்.

6. பொறுமையாக இருப்பதால் நன்மையும் அவசரப்படுவதால் நஷ்டமும் கைசேதமும் ஏற்படுகிறது.

7. அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று கட்டுப்பட்டு எல்லா விஷயங்களிலும் மார்க்க வழிகாட்டலுக்கு ஏற்ப பொறுமையாக இருக்க வேண்டும். பொறுமைக்கு பொருள் கோழையாக இருப்பதல்ல. மார்க்கம் நிர்ணயித்த எல்லை அளவு நாம் பொறுமையாகவும் சமாதானமாகவும் இருக்க வேண்டும்.

8. இன்று நமக்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்புகளுக்கு அடிப்படை காரணம் நமது பொறுமை இன்மையும் அவசர குணமும் ஆகும்.

நான்காவது வசனத்தின் படிப்பினைகள்

1. எல்லா நிலைகளிலும் பொறுமையாக இருக்க வேண்டும். குறிப்பாக, வறுமை, பஞ்சம், யுத்தம், நோய் காலங்களில் மிகுந்த பொறுமையோடு மன உறுதியோடு இருக்க வேண்டும்.

2. நல்லவர்களின் குணங்களையும் பண்புகளையும் அமல்களையும் அல்லாஹ் பட்டியலிட்டு கூறும்போது இறுதியாக பொறுமையை

கூறுவதிலிருந்து அதன் முக்கியத்துவம் தெளிவாகிறது.

3. பொறுமை எங்கெல்லாம் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு அல்லாஹ் கூறியதிலிருந்து நோயிலும் வறுமையிலும் போர் காலத்திலும் பொறுமையாக இருப்பதன் அவசியம் தெரியவருகிறது.

4. பொறுமையை கடைப்பிடிப்பவர்கள் உண்மையான ஈமானையும் தக்வாவையும் பெறுவார்கள்.

5. பொறுமையாக இருப்பதில் மன உறுதியோடு இருப்பதும் வணக்க வழிபாடுகளை சிரமம் எடுத்து செய்வதும் பாவங்களை விட்டு விலகுவதில் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பதும் அடங்கும்.

6. உண்மையாக இருப்பதற்கு பொறுமை மிக அவசியம். உண்மை சொல்வதால் பல சோதனைகள் வரலாம். பலர் நம்மை பகைக்கலாம். பலர் நமது நட்பை விட்டு விலகலாம். பலர் நம்மை நகைக்கலாம். தொழில் துறையில் நஷ்டம் ஏற்படலாம். பிழைக்கத் தெரியாதவன் என்று பலர் கேலி செய்யலாம். இவற்றை எல்லாம் தாங்கி அல்லாஹ்வை பயந்து ஹலாலைப் பேணுவதற்கும் உண்மையில் நீடித்திருந்து இறுதியில் நிரந்தர வெற்றிப் பெறுவதற்கு பொறுமை மிக அவசியம் தேவைப்படுகிறது.

ஐந்தாவது வசனத்தின் படிப்பினைகள்

உள்ளச்சம் உடையவர்களுக்கு (நபியே!) நற்செய்தி கூறுவீராக. அவர்கள் எத்தகையவர்கள் என்றால், அல்லாஹ்வுடைய திருப்பெயர் கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும். அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள். தொழுகையையும் கடைப்பிடிப்பார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றில் தானமும் செய்வார்கள். (அல்குர்ஆன் 22 : 34,35)

1. மிக உயர்வான அமல்களுடனும் சிறப்பான பண்புகளுடனும்

பொறுமை கூறப்பட்டிருப்பது அதன் மேன்மையையும் அவசியத்தையும் உணர்த்துகிறது.

2. மா அஸாபஹூம் என்று அல்லாஹ் கூறியதிலிருந்து இவ்வுலகில் நமக்கு விதியின்படி எது நேர்ந்தாலும் அதில் பொறுமையாக இருக்க வேண்டும் என்று புரிய முடிகிறது.

3. சில விஷயங்கள் நமது விதியுடன் நேரடியாக தொடர்புள்ளதாக இருக்கின்றது. நமது பிறப்பை, பெற்றோரை, மொழியை, நிறத்தை, வசதி வாய்ப்பை, உடல் உறுப்புகளை தேர்ந்தெடுத்து பிறப்பது நமது கையில் இல்லை. ஆகவே, அல்லாஹ் நம்மை எப்படி படைத்தானோ அதை ஏற்றுக் கொண்டு பெருமையாக இருக்க வேண்டும். சிலர் நெட்டையாக, சிலர் குட்டையாக, சிலர் குண்டாக, சிலர் ஒல்லியாக, சிலர் கருப்பாக, சிலர் வெள்ளையாக பிறக்கின்றனர். சிலர் பணக்கார பெற்றோருக்கு, சிலர் ஏழையான பெற்றோருக்கு, சிலர் வசதியான குடும்பத்தில், சிலர் முழு உடல் ஆரோக்கியத்தோடு, சிலர் உடல் ஊனமாக பிறக்கின்றனர். சிலர் பெரிய அறிவாளிகளாக இருக்கின்றனர். சிலருக்கு சுட்டுப்போட்டாலும் படிப்பு வருவதில்லை. சிலருக்கு அதிகம் உழைக்காமலே காசா கொட்டுகிறது. சிலர் கழுதையாக உழைத்தாலும் உண்ண உணவே சரியாக கிடைப்பதில்லை. இப்படித்தான் உலக வாழ்க்கை. இதுபோக, வாழ்க்கையில் இடையில் ஏற்படும் சோதனைகள் ஏராளம். சிலர் நோயினால் அவதிப்பட, சிலர் கொடுங்கோல் அரசால் துன்பப்பட, சிலர் பஞ்சத்தால் அல்லல்பட, சிலர் பேரழிவுகளால் சிரமப்பட வாழ்க்கை இப்படித்தான் மாறி மாறி கடந்து கொண்டே இருக்கும். நாம் அல்லாஹ்வை சந்திக்கின்ற வரை பொறுமையாக இருந்து, சகிப்போடு இருந்து செய்யவேண்டிய அமல்களை கவனத்தில் வைத்து மறுமை வெற்றியை மறக்காமல் சொர்க்கத்திற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டே இருக்க வேண்டும். உலகத்தில் என்னத்தான் வாழ்ந்தாலும் எவ்வளவு காலம் வாழ்ந்துவிட முடியும்!? உலகில் எப்படி வாழ்ந்தாலும் ஒருநாள் வாழ்க்கை முடியத்தான் போகிறது. ஆகவே, நம்மை நோக்கி

வரும் சோதனைப் புயல்களால் நாம் சாய்ந்தாலும் அல்லாஹ்வின் நாட்டம்தான் அது. அல்லது நாம் எழுந்து நின்றாலும் அதுவும் அல்லாஹ்வின் நாட்டமே. நாம் நமது அமல்களைத்தான் கவனிக்க வேண்டும். ஆகவேதான் திக்ருக்கும் தொழுகைக்கும் சகாத்துக்கும் இடையில் பொறுமையை அல்லாஹ் குறிப்பிடுகின்றான். புரிபவர்கள் புரிந்துகொள்வார்கள்.

4. பொறுமையாக இருப்பதற்கு அதனுடன் சேர்ந்து சில குணங்களும் பண்புகளும் நல்லமல்களும் தேவைப்படுகின்றன. அவை பொறுமையை நினைவூட்டுவதோடு அதை அதிகப்படுத்துகின்றன. பொறுமையை பலப்படுத்தி பொறுமை தடுமாறாமல் இருக்க உதவுகின்றன. அவை, அல்லாஹ்வை நினைவு கூர்வது, தொழுகையை நிலை நிறுத்துவது, கடமையான மற்றும் உபரியான தர்மங்களை செய்வதாகும். ஆம். அல்லாஹ்வை அதிகம் நினைப்பதும் அவனுடைய திக்ரில் மூழ்குவதும் மனதை சாந்தப்படுத்துகிறது. மறுமையை நினைவூட்டி மன்னிக்கும் மனப்பான்மையை நமக்குள் தூண்டுகிறது. அல்லாஹ்வின் பண்பாகிய சகித்தல், பெருந்தன்மையாக இருத்தல், பொறுத்தல் ஆகியவற்றை நமக்கு நினைவூட்டி அந்த பண்புகளை நாமும் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வை நமக்கு கொடுக்கிறது. அல்லாஹ்வை திக்ரு செய்வது நமது இறுகிய மனதை விசாலப்படுத்துகிறது. கோப நெருப்பால் கொதிக்கும் உள்ளத்தை மன்னித்தல் என்ற பண்பால் குளுமைப்படுத்துகிறது. மனம் வலிமை பெற்றவர்கள் குறைவாக கோபம் கொள்பவர்களாகவும் விரைவாக சமாதானம் ஆகுபவர்களாகவும் இருப்பார்கள். திக்ரு மனதுக்கு வலிமையை கொடுக்கிறது. உள்ளம் பலவீனமானவர்கள் விரைவாக கோபப்பட்டு மிகத் தாமதமாக சமாதானம் ஆகுவார்கள். இது மிக கெட்ட நிலையாகும். தொழுகை நமக்கும் அல்லாஹ்விற்கும் இடையில் உள்ள சந்திப்பாகும். அடியான் தொழுகையின் மூலம் அல்லாஹ்வின் சந்திப்பை ஒவ்வொரு நாளும் பல முறைப் பெறுகிறான். அல்லாஹ்விற்கு முன் நின்று குனிந்து, சிரம்

பணிந்து, பணிவாக அமர்ந்து அல்லாஹ்வை வணங்கி தான் ஓர் அடிமை என்பதையும் அல்லாஹ்தான் தனது ரப்பு என்பதையும் அடியான் தொழுகையின் மூலம் உறுதிப்படுத்துகிறான். தனது அடிமைத்தனத்தை தனக்குத்தானே நினைவூட்டக்கூடிய ஒரு வாய்ப்பு தொழுகையில் இருக்கிறது. ஆகவே, அடிமையின் குணங்களில் ஒன்று பொறுமையாகவும் சகிப்போடும் இருப்பது. உண்மையான அடிமை பணிவோடும் சகிப்போடும், பொறுமையோடும் இருந்து கோபத்தால் விளையும் வீண் சண்டை சச்சரவுகளை விட்டு விலகி இருப்பார். அவ்வாறே உண்மை முஃமின் தன்னை அல்லாஹ்வின் அடிமை என்று உணர்ந்து அல்லாஹ்வின் அடிமைகளாகிய சக மனிதர்களிடம் பொறுமையாக சாந்தமாக இருந்து தனது ராப்பின் பொருத்தத்தை தேடுவார். அல்லாஹ்வின் அடியார்களோடு அல்லாஹ் எப்படி பொறுமையை கடைப்பிடிக்கிறானோ அவ்வாறே இவரும் பொறுமையோடு நடந்துகொள்வார். தேவைப்பட்ட இடங்களில் மன்னிப்பார், தேவைப்பட்ட இடங்களில் விட்டுக்கொடுப்பார், தேவைப்பட்ட இடங்களில் சாந்தமாக இருப்பார், தேவைப்பட்ட இடங்களில் அமைதியாக இருப்பார். தேவைப்பட்ட இடங்களில் தன்னை அடக்கிக் கொள்வார். இப்படியாக அவரின் பொறுமையின் வெளிப்பாடு இடங்களுக்கும் அவற்றின் தேவைகளுக்கும் ஏற்ப விசாலமாகிக் கொண்டு போகும். இன்னும் அந்த பொறுமை பல வண்ணங்களில் வெளிப்பட்டுக் கொண்டே வரும். இறுதியாக அல்லாஹ்வை சந்திக்கின்ற வரை இந்த பொறுமை என்ற குணத்தை கைவிட்டு விடாமல் கெட்டியாக பற்றிப் பிடித்து இருப்பார்.

மேலும். அல்லாஹ் நமக்கு கொடுத்த செல்வத்தை ஏழை எளிய மக்களுக்கு கொடுத்து உதவுவது, நல்ல காரியங்களில் தர்மம் செய்வது, உறவுகளுக்கு தனது செல்வத்தால் உதவுவது இவை

எல்லாம் மனிதனுக்கு மிகப் பெரிய ஆன்மா சக்தியை தருகிறது. கஞ்சத்தனத்தால் உள்ளம் இறுகி, நெருக்கடியில் இருக்கும்போது அல்லாஹ்வின் அடியார்கள் மீது அன்பும் கருணையும் இரக்கமும்

இருக்காது. மாறாக உள்ளம் சக மக்கள் மீது கோபம் அல்லது வெறுப்பு அல்லது பகைமை கொண்டதாக இருக்கும். ஆகவே, தர்மம் செய்வதும் ஈகை குணத்தோடும் இருப்பது உள்ளத்தில் உள்ள இத்தகைய அழுக்குகளை சுத்தப்படுத்துகிறது. மேலும், மனிதனின் ஆன்மாவை மேம்படுத்தி அவனது உள்ளத்தை விசாலப்படுத்தி மக்களை மன்னிக்கும் மனப்பக்குவத்தையும் விட்டுக்கொடுக்கும் சுபாவத்தையும் பெருந்தன்மையுடன் இருக்கின்ற பண்பையும் உண்டாக்குகிறது.

ஆகவே, நாம் பொறுமையாக இருக்க நமக்கு அதைத் தூண்டுகிற, அதை நினைவூட்டுகிற, அதை நமது உள்ளத்தில் உண்டாக்குகிற இத்தகைய நல்லமல்களும் நம்மிடம் இருக்க வேண்டும்.

ஆறாவது வசனத்தின் படிப்பினைகள்

1. சோதனையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது.

2. சோதனை பலவகையாக இருக்கலாம்.

3. சோதிப்பவன் அல்லாஹ். நாமோ சோதிக்கப்படுபவர்கள்.

4. நம்மை சோதிப்பதற்கு நமது ரப்பாகிய அல்லாஹ்விற்கு முழு அதிகாரம் உண்டு.

5. எந்தளவு சோதிக்கப்படுகிறோமோ அந்தளவு நாம் பக்குவப்படுகிறோம். நமது அந்தஸ்த்து அல்லாஹ்விடம் கூடுகிறது.

6. சோதனைகள் எல்லாம் நன்மைகள்தான். நாம் சோதனையின் ஒரு பக்கத்தை மட்டுமே அறிகிறோம். அதன் வெளிரங்கத்தை மட்டுமே பார்க்கிறோம். நிகழ்கால நன்மைகள் மட்டுமே நமது கண்முன் இருக்கும். அல்லாஹ்வோ அனைத்தையும் அறிந்தவன். அவனது அறிவு விசாலமானது, அவனது ஞானம் ஆழமானது. நாம் அறியாததை அவன் அறிகிறான். நமக்கு நன்மையாக தெரிவதெல்லாம்

உண்மையில் நன்மையாக இருக்க முடியாது. நமக்கு தீமையாக தெரிவதெல்லாம் உண்மையில் நமக்கு தீமையாக இருக்காது. உண்மையில் நன்மை தீமை என்பது முடிவை கவனித்துதான் முடிவு செய்யப்படுகிறது. முடிவு அல்லாஹ்விற்கு மட்டும்தான் தெரியும். அவன் வருங்காலத்தை அறிந்தவன். நாம் வருங்காலத்தை அறிய மாட்டோம். கடந்த காலம் அல்லாஹ்வின் இல்மை விட்டு மறைந்துவிடாது. நாமோ கடந்த காலத்தில் நடந்ததை மறந்து விடுகிறோம். இப்படியாக அறிவில் ஞானத்தில் பலவீனமான நாம் அல்லாஹ்வின் சோதனைகளில் பொறுமையோடு இருக்கும்போது அல்லாஹ் நமது உள்ளத்தில் நேர்வழியில் ஒளியை ஏற்படுத்தி எங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவை நமக்கு கொடுத்து நம்மை அவன் வழிநடத்துகின்றான்.

7. நாம் அல்லாஹ்வின் அடிமைகள். அல்லாஹ் நமது எஜமான். அவன் நம்மை சோதிப்பது நல்லதற்குத்தான். சோதனையில் வெற்றி பெற நீங்கள் பொறுமையாக இருங்கள், மார்க்க கடமைமைகளில் உறுதியாக இருங்கள் என்று அல்லாஹ் நமக்கு உபதேசம் செய்கிறான். அல்லாஹ்வின் மார்க்கத்தில் உறுதியாக இருந்து, அல்லாஹ்விடம் அவனது அன்பையும் மறுமையின் சிறந்த நல்ல முடிவையும் பெறுவதற்கு பொறுமை மிக அவசியம். பொறுமை இன்றி அவை சாத்தியமாகாது.

அல்லாஹ் கூறுகின்றான் :

﴿وَاللَّهُ يُحِبُّ الصَّابِرِينَ﴾

(சிரமங்களையும் இன்னல்களையும்) சகித்துக் கொள்பவர்களைத்தான் அல்லாஹ் நேசிக்கிறான். (அல்குர்ஆன் 3 : 146)

﴿سَلَامٌ عَلَيْكُمْ بِمَا صَبَرْتُمْ فَنِعْمَ عُقْبَى الدَّارِ﴾

(இவர்களை நோக்கி) "நீங்கள் (உங்கள் வாழ்க்கையில் சிரமங்களைப்) பொறுமையுடன் சகித்துக் கொண்டதன் காரணமாக உங்களுக்கு ஈடேற்றம் (ஸலாம்) உண்டாகட்டும்! (உங்கள் இந்த) இறுதி வீடு மிக்க நல்லதாயிற்று" (என்று கூறுவார்கள்.) (அல்குர்ஆன் 13 : 24)

ஏழாவது வசனத்தின் படிப்பினைகள்

1. கோபத்தாலும் வீரத்தாலும வலிமையாலும் திறமையாலும் சாதிக்க முடியாததை தொழுகையாலும் பொறுமையாலும் சாதிக்கலாம்.

2. சோதனைகளை வெல்வது பொறுமை மற்றும் தொழுகை என்ற இரு ஆயுதங்களைக் கொண்டுதான் முடியும்.

3. அல்லாஹ்விடம் நாம் உதவி தேடுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று பொறுமையாக உறுதியாக இருப்பது. இரண்டாவது தொழுது அல்லாஹ்விடம் வேண்டுவது.

4. அவசரப்படுவதால் ஏதும் சீக்கிரம் வந்துவிடாது. பொறுமையாக இருப்பதால் ஏதும் தாமதமாகி விடாது. அல்லாஹ்வின் விதியை மீறி எதுவும் நடந்துவிடாது.

5. பொறுமையின் பழம் எப்போதும் இனிப்பாக இருக்கும். காரணம் பொறுமை அல்லாஹ்விற்கு மிகப் பிடித்தமானது. பொறுமையாளர்கள் அல்லாஹ்விற்கு மிகப் பிரியமானவர்கள். அவர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான். அல்லாஹ்வின் விசேஷமான கவனிப்பும் அருளும் பாதுகாப்பும் அக்கறையும் அவர்களை என்றும் எல்லா இடங்களிலும் சூழ்ந்து இருக்கும்..

6. பொறுமையாக இருப்பதால் நாம் நமக்கு அல்லாஹ் விதியில் எழுதியதை இழந்துவிட மாட்டோம்.

7. பொறுமை கண்ணியத்தைக் கொடுக்கிறது. தொழுகை அல்லாஹ்விடம் நமக்கு நெருக்கத்தை கொடுக்கிறது.

8. பொறுமையின் பொருளில் விடா முயற்சியும் தொடர் உழைப்பும் மன உறுதியும் வலிமையான ஆதரவும் நல்ல நம்பிக்கையும் அடங்கும். பொறுமைக்கு பொருள் நிராசையாகி விடுதல் என்பதல்ல.

9. பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான் என்ற நற்செய்தியை விட வேறு வேண்டுமோ பொறுமையை நாம் கடைப்பிடிப்பதற்கு.

10 அல்லாஹ் யாருடன் இருக்கின்றானோ அவர்கள்தான் இறுதி வெற்றி அடைவார்கள். அவர்களுக்குதான் நிரந்தரமான வெற்றி கிடைக்கும். மறுமையின் முழுமையான வெற்றியும் அவர்களுக்கே கிடைக்கும்.

எட்டாவது வசனத்தின் படிப்பினைகள்

1. பொறுமையாளர்கள் இறைவனின் நற்செய்திக்கு உரியவர்கள் ஆவார்கள்.

2. பொறுமையாளர்கள் அல்லாஹ்வையும் அவனது விதியையும் பொருந்திக் கொண்டவர்கள் ஆவார்கள்.

3. அல்லாஹ்வின் விதியில் கண்டிப்பாக பல ஞானங்களும் தத்துவங்களும் இருக்கும் என்பதை நம்பிக்கைக் கொண்டு அழகிய பொறுமையாக அவர்கள் பொறுமை காப்பார்கள்.

4. பதட்டமின்றி, தடுமாற்றமின்றி அந்த நல்ல பொறுமையாளர்கள் சோதனைகளை கடந்து செல்வார்கள்.

5. உண்மையான பொறுமையாளர்கள் எல்லா சோதனைகளிலும் எவ்விதமான துன்பங்களிலும் துயரங்களிலும் தங்கள் ரப்பை புகழ்ந்து கொண்டு இருப்பார்கள்.

6. மேலும், அவர்கள் அல்லாஹ்வின் நாட்டமும் அவனது விதியும் நமது அறிவையும் திட்டங்களையும் ஏற்பாடுகளையும் மிகைத்தவை

என்பதை நம்பிக்கைக் கொண்டு இருப்பார்கள்.

7. உண்மையான பொறுமையாளர்கள் மறுமையை நினைப்பவர்களாக இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இவ்வுலகில் வருகின்ற சோதனைகளும் துன்பங்களும் துயரங்களும் ஆபத்துகளும் சிறியதாகவே தெரியும்.

8. சோதனைகள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வருகின்றன என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள். ஆகவே, அவற்றை ஏற்றுக் கொண்டு, அதை தாங்குவதற்கு உறுதியான ஈமானை அல்லாஹ்விடம் வேண்டுவார்கள்.

9. உண்மையான பொறுமையாளர்கள் தங்கள் ரப்பாகிய அல்லாஹ்விடம் துஆ கேட்டுக் கொண்டே இருப்பார்கள். அவனை மட்டுமே முன்னோக்கி இருப்பார்கள்.

10. அல்லாஹ் கூறுகின்ற ஒழுக்கங்களை பேணி பொறுமை காப்பவர்கள் அல்லாஹ்வின் அருளுக்கும் கருணைக்கும் கிருபைகளுக்கும் உரியவர்களாக ஆகுவதுடன் ஹிதாயத் என்ற நேர் வழியும் அவர்கள் அடையப் பெறுவார்கள். ஆகவே, அவர்கள் வழி தவற மாட்டார்கள். இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதியாக இருப்பதோடு, ஈமானில் தடுமாறாமல் நிலைப்பதோடு, ஒரு போதும் நற்குணத்தை கைவிட மாட்டார்கள். உண்மையான பொறுமை சீலர்கள் அல்லாஹ்வின் ஆசீர்வாதங்களால் சூழப்பட்டு இருப்பார்கள்.

ஒன்பதாவது வசனத்தின் படிப்பினைகள்

இதற்கு முன்புள்ள இரு வசனங்களையும் சேர்த்து நாம் இந்த வசனத்தின் படிப்பினைகளை பார்க்க வேண்டும்.

1. இறையச்சமுள்ளவர்கள் குணங்களால் நிறைவானவர்கள் ஆவார்கள்.

2. அவர்களிடம் இருக்கின்ற முக்கிய குணங்கள் அல்லாஹ்வை முன்னோக்கி இருப்பது, அல்லாஹ்விடம் துஆ கேட்பது, பொறுமையாக இருப்பது, உண்மையைப் பேணுவது, பணிவாக கட்டுப்பட்டு இருப்பது, தர்மம் செய்வது, அதி காலையில் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்பது... இவ்வாறு அழகிய குணங்களும் உயர்வான அமல்களும் அவர்களிடம் இருக்கும்.

3. அல்லாஹ் ஒருவரை அவரின் அமலாலும் குணத்தாலும் மட்டுமே அங்கீகரிக்கின்றான்.

4. அல்லாஹ்விற்கு பிடித்தமான குணங்களும் அமல்களும் என்ன என்பதை நமக்கு கற்றுக்கொடுக்கும் ஞானமிக்க வேதம் அல்குர்ஆன் ஆகும்.

5. அல்குர்ஆனும் அதன் செயல்வடிவ விளக்கமான நபியவர்களும் நமக்கு இருப்பதால் நமக்கு இனி எந்த தத்துவ வாதியின் நற்குண நூல்கள் தேவை இல்லை.

6. நற்குணங்களை கற்று அதன் படி நடக்க விரும்புபவர்கள் குர்ஆனை ஓதட்டும். அதன் போதனைகளையும் உபதேசங்களையும் அதில் உள்ள நல்லோரின் வரலாறுகளையும் சிந்தித்து புரியட்டும்.

7.உலக தத்துவ ஞானிகள் கூறும் அத்தனை நற்குணங்களும் அவர்கள் கூறுவதைவிட அழகிய முறையில் குர்ஆனில் கூறப்பட்டிருக்கும்.

8. குர்ஆனை விட சிறந்த நல்லுபதேச நூலை உலகில் யாரும் கண்டிர முடியாது.

9. குர்ஆனை ஓதி, அதன் வழிகாட்டல்களை பின்பற்றுகின்றவர் சிறந்த முஸ்லிமாக மட்டுமில்லாமல் உலகிலேயே சிறந்த முன்மாதிரி மனிதராக திகழ்வார்.

இன் ஷா அல்லாஹ் இனி பொறுமை குறித்து வரும் ஹதீஸ்களையும் அவற்றின் படிப்பினைகளையும் பார்ப்போம்.

ஹதீஸ் 1.

عَنْ عِمْرَانَ أَبِي بَكْرٍ قَالَ حَدَّثَنِي عَطَاءُ بْنُ أَبِي رَبَاحٍ قَالَ قَالَ لِي ابْنُ عَبَّاسٍ أَلَا أُرِيكَ امْرَأَةً مِنْ أَهْلِ الْجَنَّةِ قُلْتُ بَلَى قَالَ هَذِهِ الْمَرْأَةُ السَّوْدَاءُ أَتَتْ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَتْ إِنِّي أُصْرَعُ وَإِنِّي أَتَكَشَّفُ فَادْعُ اللَّهَ لِي قَالَ إِنْ شِئْتِ صَبَرْتِ وَلَكِ الْجَنَّةُ وَإِنْ شِئْتِ دَعَوْتُ اللَّهَ أَنْ يُعَافِيَكِ فَقَالَتْ أَصْبِرُ فَقَالَتْ إِنِّي أَتَكَشَّفُ فَادْعُ اللَّهَ لِي أَنْ لَا أَتَكَشَّفَ فَدَعَا لَهَا

அதா இப்னு அபீ ரபாஹ் ﵀ கூறுகிறார், சொர்க்க வாசிகளில் உள்ள ஒரு பெண்ணை நான் உனக்கு காண்பிக்கட்டுமா என்று என்னிடம் இப்னு அப்பாஸ் ﵄ கூறினார்கள். கண்டிப்பாக கூறுங்கள் என்று நான் கூறினேன். அதற்கு, இந்த கருப்பு பெண்தான் அவர் என்று இப்னு அப்பாஸ் ﵄ கூறினார்கள். இவர் நபி ﷺ அவர்களிடம் வந்து எனக்கு வலிப்பு ஏற்பட்டு மயக்கம் வருகிறது. அந்த நேரத்தில் எனது ஆடைகள் விலகிவிடுகின்றன. ஆகவே, நீங்கள் எனக்காக அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள் என்று கூறினார். நீ விரும்பினால் பொறுமையாக இரு. உனக்கு சொர்க்கம் கிடைக்கும். நீ விரும்பினால் அல்லாஹ் உன்னை குணப்படுத்தும்படி நான் அல்லாஹ்விடம் துஆ கேட்கிறேன் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். நான் பொறுமையாக இருக்கிறேன் என்று அவர் கூறினார். ஆனால், எனக்கு ஆடைகள் விலகுகின்றன. ஆகவே, நான் ஆடைகள் விலகாமல் இருக்கும்படி அல்லாஹ்விடம் எனக்காக துஆ கேளுங்கள் என்று அவர் கூறினார். நபி ﷺ அவர்களும் அவருக்காக துஆ கேட்டார்கள்.[71]

படிப்பினைகள்

1. பொதுவாக நபித்தோழர்களின் சிறப்பும் குறிப்பாக இந்த ஸஹாபிய

71. அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் ﵄, நூல் : புகாரி, எண் : 5220

பெண்ணின் சிறப்பும் இந்த ஹதீஸில் இருந்து தெரிய வருகிறது.

2. ஹதீஸில் கூறப்பட்டுள்ள பெண்மணி சொர்க்கவாசி என்பதை அறிய முடிகிறது.

3. சொர்க்கத்தின் நன்மாராயத்தை அல்லாஹ்வின் வஹ்யைக் கொண்டுதான் நபி ﷺ அவர்கள் கூறுவார்கள். சுயமாக கூறமாட்டார்கள்.

4. அல்லாஹ்விடம் நபி ﷺ அவர்களின் துஆவிற்குள்ள மதிப்பை அறிகிறோம்.

5. ஸஹாபிய பெண்களின் பணிவையும் கட்டுப்படுதலையும் அறிகிறோம்.

6. ஸஹாபாக்கள் மறுமையை நாடியவர்களாக அதை தேர்ந்தெடுப்பவர்களாக இருந்தார்கள்.

7. உலக சிரமங்களை மறுமைக்காக தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ளவர்களாக ஸஹாபாக்கள் இருந்தார்கள்.

8. மறுமை வெற்றிக்கு முன், சொர்க்க பாக்கியத்திற்கு முன் உலக சிரமங்கள் ஒன்றுமில்லை.

9. பொறுமையாளர்களுக்கு மட்டுமே மறுமை வெற்றி எளிதாகும்.

10. ஒழுக்கத்தை பேணுவதில் ஸஹாபாக்களிடம் இருந்த கவனத்தை அறிய முடிகிறது.

11. ஸஹாபிய பெண்கள் ஹிஜாப் விஷயத்தில் மிக கவனமாக இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

12. சொர்க்க வாசிகள் என்று நன்மாராயம் கூறப்பட்ட தோழர்களை மற்ற தோழர்கள் மிகுந்த கண்ணியத்தோடும் மரியாதையோடும் நடத்தினார்கள், அவர்கள் தோற்றத்தால், பொருளாதாரத்தால்

குறைந்தவர்களாக இருந்தாலும் சரி.

13. வலிப்பு வருதல் மிகக் கடுமையான வலிமிக்க ஒரு நோயாகும். அப்படி இருந்தும் சொர்க்கத்தின் மீது ஆசைக் கொண்டு அந்த வலியை தாங்கும் மனப்பான்மையை அந்த பெண்மணி பெற்றிருந்தார்கள்.

14. பெண்கள் தங்கள் பிரச்சனையை சமுதாய தலைவர்கள் மற்றும் அறிஞர்களிடம் கூறி அதற்கான பரிகாரத்தை தேடுவதில் குற்றமில்லை என்பதை அறிய முடிகிறது.

15. நபி ﷺ அவர்கள் தமது தோழர்களை சொர்க்க நினைவூட்டலைக் கொண்டு எப்படி பக்குவப்படுத்தினார்கள் என்பதை அறிய முடிகிறது.

16. ஒரு மனிதனின் மார்க்கமும் தக்வாவும் குணமும் சரியாக வேண்டுமென்றால் அவர் மறுமையைப் பயப்பட வேண்டும். இன்னும் சொர்க்கத்தை ஆசைவைக்க வேண்டும்.

17. மறுமை நம்பிக்கையும் சொர்க்க ஆசையும் இல்லை என்றால் அல்லாஹ் உடைய கட்டளைகளையும் நபியின் சுன்னாவையும் பின்பற்றுவது சிரமமாக இருக்கும்.

18.முஸ்லிம் சமுதாயத்தின் தனித்தன்மையும் சிறப்பான அடையாளமும் அவர்கள் மறுமைக்காகத்தான் எதையும் செய்வார்கள்.

19. உலகம், மறுமையைவிட பெரிதாகிவிடும்போது உலகத்தின் சிறிய சோதனையும் பெரிதாக தோன்றும்.

20. மறுமை கண்ணுக்கு முன் இருக்கும்போது உலகத்தின் பெரிய சோதனைகள் எல்லாம் ஒரு பொருட்டாகவே இருக்காது.

21. இந்த உலகத்தில் தான் பட்ட சிரமங்களுக்கு மறுமையில் சிறப்பான கூலியை அல்லாஹ்விடம் முஃமின்கள் பெறுவார்கள்.

22. நிராகரிப்பாளர்களுக்கு உலகம் பெரிதாக தோன்றும். மறுமை

நம்பிக்கை அவர்களுக்கு இல்லாததால் இவ்வுலகிலேயே அவர்கள் எல்லாவிதமான இன்பத்தையும் ஆதரவு வைப்பார்கள். உலகின் சிறு சிரமங்களை அவர்கள் கண்டாலும் பதறி விடுவார்கள், தைரியம் இழந்து விடுவார்கள், விதியை குறை கூறுவார்கள்.

23. முஸ்லிம்கள் அல்லாஹ்வின் விதியை ஏற்று அழகிய முறையில் பொறுமை காத்து அல்லாஹ்விடம் மறுமையின் நன்மையையும் அல்லாஹ்வின் மன்னிப்பையும் சொர்க்கத்தையும் ஆதரவு வைப்பார்கள்.

24. சோதனைகளே வேண்டாம் என்று ஒதுங்குபவர், அல்லது சோதனைகளில் பொறுமை இழப்பவர் மறுமையின் உயர் பாக்கியங்களை அடைய முடியாது.

25. சொர்க்கம் என்பது பல தியாகங்களுக்கும் அதிகமான அர்ப்பணிப்புகளுக்கும் பின்னால் கிடைக்கப் பெரும் வெற்றியாகும்.

26. அல்லாஹ்விற்காக எதையும் தாங்கிக் கொள்ளாமல், அழகான பொறுமை இல்லாமல் சொர்க்கத்தை ஆசிப்பவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார்.

27. போரில் அடிமையாக பிடிக்கப்பட்டு, பிறகு இஸ்லாமை ஏற்று, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாவினால் சொர்க்கவாசி என்ற சான்றை அந்த பெண் பெற்றார் என்றால் அதற்கு காரணம் அவரிடம் இருந்த மறுமை ஆதரவும் அழகிய பொறுமையும்தான்.

28. சோதனைகளில் அடியான் பொறுமையாக இருப்பதால் அல்லாஹ்வின் அன்பை அடையப்பெற்று பிறகு சொர்க்கத்தை பரிசாக பெறுவார் என்பதற்கு இந்த சம்பவம் சான்றாக இருக்கிறது.

28. சோதனைகளில் அடியான் பொறுமையாக இருப்பதால் அல்லாஹ்வின் அன்பை அடையப்பெற்று பிறகு சொர்க்கத்தை

பரிசாக பெறுவார் என்பதற்கு இந்த சம்பவம் சான்றாக இருக்கிறது.

29. அமல்கள் இருந்து பொறுமை இல்லை என்றால் அவர் ஒரு கட்டத்தில் அமல்களை விட்டுவிடுவார்.

30. எனக்கு உலகமும் குறையக் கூடாது, மறுமையும் வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்ப்பது ஏமாற்றமாகும்.

ஹதீஸ் 2.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَثَلُ الْمُؤْمِنِ كَمَثَلِ الزَّرْعِ لَا تَزَالُ الرِّيحُ تُمِيلُهُ وَلَا يَزَالُ الْمُؤْمِنُ يُصِيبُهُ الْبَلَاءُ وَمَثَلُ الْمُنَافِقِ كَمَثَلِ شَجَرَةِ الْأَرْزِ لَا تَهْتَزُّ حَتَّى تَسْتَحْصِدَ

நம்பிக்கையாளர்களுக்கு உதாரணம் பயிர்களைப் போலாகும். காற்று அதை இங்கும் அங்கும் சாய்த்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறுதான் நம்பிக்கையாளர்களை சோதனை வந்தடைந்து கொண்டே இருக்கும். நயவஞ்சகர்களின் உதாரணம் பைன் கோட்டையின் மரத்தைப் போல் ஆகும். அது ஆடாது அசையாது. இறுதியாக அது அறுவடையாகிவிடும்.[72]

படிப்பினைகள்

1. நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் உலகத்தின் பலவகையான கல்விகளை கொடுத்தான்.

2. உதாரணங்கள் மூலம் ஒரு விஷயத்தை நன்கு விளக்கமாக புரியவைக்க முடியும்.

3. இவ்வுலகம் சோதனைகளால் சூழப்பட்டதாகும்.

4. எல்லோருக்கும் சோதனை உண்டு.

72. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ؓ நூல் : முஸ்லிம், எண் : 5024

5. நல்லோருக்கு சோதனை நன்மையாக முடியும்.

6. பாவிகளுக்கு சோதனை தீமையாக முடியும் அவர்கள் திருந்தவில்லை என்றால்.

7. முடிவை வைத்துதான் ஒவ்வொரு காரியமும் வெற்றியா தோல்வியா என்று உறுதி செய்யப்படும்.

8. உலகம் மரணத்தைக் கொண்டு முடிவுறும். மறுமைக்கு முடிவு இல்லை.

9. அந்த மறுமையில் சொர்க்கம் கிடைக்கப்பெற்றவர்கள் வெற்றிப்பெற்றவர்கள்.

10. பாவிகளை அல்லாஹ் விட்டுப்பிடிப்பான்.

11. அல்லாஹ் பாவிகளை சிறிது காலம் தண்டனை இன்றி விடுவது அவர்களை ஏமாற்றி விடுகிறது.

12. நம்பிக்கையாளர்கள் ஒவ்வொரு சிறிய பெரிய சோதனைகளிலும் அல்லாஹ்வை பயந்து தங்களை சரிசெய்து கொண்டிருப்பார்கள்.

13. நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் பயத்தில் இருப்பார்.

14. நயவஞ்சகன் அல்லாஹ்வின் அச்சமில்லாமல் இருப்பான்.

15. பாவிகளை அல்லாஹ் தண்டிக்க வந்திட்டால் அவர்களை யாரும் காப்பாற்ற முடியாது.

16. அல்லாஹ் தனது தண்டனையின் மூலம் பாவிகளை வேரறுத்து விடுவான்.

17. நல்லவர்கள்தான் இந்த பூமியல் நிலைத்து இருப்பார்கள். அவர்களுக்குதான் அல்லாஹ் இவ்வுலகில் நற்பெயரை கொடுப்பான். மக்களின் நாவுகளில் அவர்களைப் பற்றி நல்ல பேச்சுக்களையும் அவர்களுக்கு நல்ல பிரார்த்தனைகளையும் நிரந்தரமாக்கித்

தருவான். மக்கள் என்றும் அவர்களை அழகிய முறையில் நினைவு கூருவார்கள்.

18. சோதனைகளில் சிக்குவதும் சிரமப்படுவதும் முஃமினுக்கு நிகழ்ந்துகொண்டே இருக்கும். ஆனால், அந்த சோதனைகள் அவருக்கு ஈமானை அதிகப்படுத்திக்கொண்டே இருக்கும். அல்லாஹ்வின் பக்கம் அவரை நெருக்கமாக்கிக் கொண்டே இருக்கும்.

19. முஃமின் சோதனையில் அல்லாஹ்வை மறக்க மாட்டார். அல்லாஹ்வை விட்டு விலக மாட்டார். அல்லாஹ்வின் முந்திய அருட்கொடைகளை நினைவு கூர்ந்து அல்லாஹ்வை புகழ்ந்து இப்போதுள்ள சோதனையிலிருந்து அல்லாஹ்விடம் இறட்சிப்பை வேண்டுவார். வணக்க வழிபாடுகளையும் திக்ரையும் பாவமன்னிப்பு தேடுதலையும் அதிகப்படுத்துவார். அல்லாஹ்வைப் பற்றி குறை பேச மாட்டார். மனதால் நம்பிக்கை இழக்க மாட்டார்.

20. நயவஞ்சகன், போலியான நம்பிக்கை வாதி சிறிய சோதனையிலும் மனம் வாடி நம்பிக்கை இழந்து, அல்லாஹ்வை மறந்து எனக்கு ஏன் இந்த சோதனை வந்தது என்று புலம்புவான். அல்லது அவனது செல்வத்தால், பதவியால். செல்வாக்கால் ஆட்சி அதிகாரத்தால் எந்த சோதனையும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று இருமாப்பு பேசிக்கொண்டிருப்பான். இறுதியில் அல்லாஹ் அவனது கதையை அவன் யோசித்திருக்காத வகையில் முடித்துவிடுவான். அவனை முற்றிலும் நற்பாக்கியம் அற்றவனாக, சந்ததி அற்றவனாக, அவமானப்பட்டவனாக, கேவலமடைந்தவனாக, சிறுமைப்பட்டவனாக, மக்களால் இகழப்பட்டவனாக தனது முடிவை சந்திப்பான். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

ஹதீஸ் 3.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ﵁ إِنَّ نَاسًا مِنْ الْأَنْصَارِ سَأَلُوا رَسُولَ اللَّهِ ﷺ فَأَعْطَاهُمْ ثُمَّ سَأَلُوهُ فَأَعْطَاهُمْ ثُمَّ سَأَلُوهُ فَأَعْطَاهُمْ حَتَّىٰ نَفِدَ مَا عِنْدَهُ فَقَالَ مَا يَكُونُ عِنْدِي مِنْ خَيْرٍ فَلَنْ أَدَّخِرَهُ عَنْكُمْ وَمَنْ يَسْتَعْفِفْ يُعِفَّهُ اللَّهُ وَمَنْ يَسْتَغْنِ يُغْنِهِ اللَّهُ وَمَنْ يَتَصَبَّرْ يُصَبِّرْهُ اللَّهُ وَمَا أُعْطِيَ أَحَدٌ عَطَاءً خَيْرًا وَأَوْسَعَ مِنْ الصَّبْرِ

அன்சாரிகளில் சில மனிதர்கள் நபி ﷺ அவர்களிடம் (சில செல்வங்களைக்) கேட்டார்கள். நபி அவர்கள் அவர்களுக்கு கொடுத்தார்கள். பிறகும் அவர்கள் நபி அவர்களிடம் கேட்டார்கள். நபி அவர்கள் அவர்களுக்கு கொடுத்தார்கள். பிறகும் அவர்கள் நபி அவர்களிடம் கேட்டார்கள். நபி அவர்கள் அவர்களுக்கு கொடுத்தார்கள். இறுதியாக நபி அவர்களிடம் இருந்தவை எல்லாம் தீர்ந்துவிட்டது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : என்னிடம் என்ன செல்வம் இருந்தாலும் அதை நான் உங்களுக்கு கொடுக்காமல் சேமித்து வைக்க மாட்டேன். யார் ஒழுக்கத்தோடு இருக்க முயற்சிப்பாரோ அல்லாஹ் அவருக்கு ஒழுக்கத்தை தருவான். யார் மன நிறைவோடு இருப்பாரோ அல்லாஹ் அவருக்கு மன நிறைவைத் தருவான். யார் பொறுமை காப்பாரோ அல்லாஹ் அவருக்கு பொறுமையை தருவான். பொறுமையை விட விசாலமான சிறப்பான ஓர் கொடை யாருக்கும் கொடுக்கப்படவில்லை.[73]

படிப்பினைகள்

1. பொருளை, செல்வத்தை ஆசைப்படுவது குற்றம் என்று கூற முடியாது.

2. குற்றம் என்பது பேராசைப்படுவது, போதுமென்ற மனப்பான்மை

73. அறிவிப்பாளர் : அபூ சயீது ﵁, நூல் : புகாரி, எண் : 1376

இல்லாமல் இருப்பது, ஹராமான வழியில் செல்வத்தை பெருக்க நினைப்பது, இவைதான் குற்றமாகும்.

3. நபி ﷺ அவர்கள் மிகவும் தர்ம மனம் உள்ளவர்களாகவும் பொறுமையானவர்களாகவும் இருந்தார்கள். பல முறை மக்கள் கேட்டும் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

4. உலகத்தில் செல்வம் தானாக வராது, அதற்காக உழைக்க வேண்டும் என்று புரிந்து வைத்திருக்கும் மனிதர்கள் அவ்வாறே நல்லமலும் நற்குணமும் தானாக வராது. அவற்றை தனது வாழ்க்கையில் கொண்டுவர நாமும் முயற்சிக்க வேண்டும்.

5. ஒவ்வொருவருக்கும் அவர் எதை நோக்கி முயற்சி செய்கிறாரோ அதையே அவர் கொடுக்கப்படுவார்.

6. சிலர் இயற்கையாக சில நற்குணங்களை தமது பண்புகளாக அடைய பெற்றிருந்தாலும் குர்ஆன், ஹதீஸ் கூறும் நற்குணங்கள் வாழ்க்கையில் வர அவற்றுக்காக தனி முயற்சியும் துஆவும் வேண்டும்.

7. பொறுமை நபி ﷺ அவர்களின் நாவினால் புகழப்பட்ட குணமாக இருப்பதில் இருந்து அது மிக உயர்ந்த குணம் என்றும் அதில் அதிகமான நன்மைகள் உள்ளன என்றும் நாம் அறிய முடிகிறது.

8. உலக செல்வங்கள், பதவி, புகழ், வசதி வாய்ப்புகள் கொடுக்க பெறுவதை விட ஒருவருக்கு நற்குணங்களும் உயர்வான பண்புகளும் கிடைப்பதுதான் மிக சிறந்த நற்பாக்கியம் ஆகும்.

9. மக்கள் செல்வத்தை விரும்புவது போன்று நற்குணங்களை விரும்புவது இல்லை.

10. உண்மையில் நாம் விரும்புவதற்கும் ஆசைப்படுவதற்கும் தகுதியானது நற்குணங்கள்தான்.

11. மூன்று குணங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டு கூறியதிலிருந்து நமது அன்றாட வாழ்க்கையில் அவை எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை அறிய முடிகிறது.

12. பிறகு பொறுமையை வலியுறுத்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதிலிருந்தும் அதற்கு அவர்கள் கூறிய சிறப்பிலிருந்தும் பொறுமை பற்றி பல ஆழமான தத்துவங்களை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

13. ஒரு நற்குணத்தை பற்றி அதை என்னால் கடைப்பிடிக்க முடியாது என்று நாம் ஒதுக்கிவிடக் கூடாது. எல்லாவற்றையும் நாம் இலகுவாக சுயமாக அடைந்து கொள்வதில்லை. மாறாக அதற்காக முயற்சிக்கிறோம். அப்படித்தான் ஒவ்வொரு சிறிய, பெரிய நற்குணத்திற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் அறிய மாட்டோம், நமது எந்த நற்குணத்தால் அல்லாஹ் நம்மை மன்னித்து சொர்க்கத்தில் சேர்ப்பான் என்று.

14. முடிந்தளவு யாசகம் கேட்பதை தவிர்க்க வேண்டும். நாம் உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும்.

15. நமது தேவைகளை நாமாக நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

16. மன நிறைவு உள்ளவரும் ஒழுக்கமானவரும் பொறுமையாக இருப்பவரும் மிகவும் போற்றத்தக்கவர்கள் ஆவார்கள்.

ஹதீஸ் 4.

عَنْ أُمِّ سَلَمَةَ زَوْجِ النَّبِيِّ ﷺ تَقُولُ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ مَا مِنْ عَبْدٍ تُصِيبُهُ مُصِيبَةٌ فَيَقُولُ إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ اللهُمَّ أْجُرْنِي فِي

مُصيبَتِي وَأَخْلِفْ لِي خَيْرًا مِنْهَا إِلَّا أَجَرَهُ اللهُ فِي مُصِيبَتِهِ وَأَخْلَفَ لَهُ خَيْرًا مِنْهَا قَالَتْ فَلَمَّا تُوُفِّيَ أَبُو سَلَمَةَ قُلْتُ كَمَا أَمَرَنِي رَسُولُ اللهِ ﷺ فَأَخْلَفَ اللهُ لِي خَيْرًا مِنْهُ رَسُولَ اللهِ ﷺ

நபி ﷺ அவர்கள் கூற தான் கேட்டதாக உம்மு சலமா رضي الله عنها அவர்கள் கூறுகிறார்கள்: எந்த ஒரு அடியாருக்கு சோதனை ஏற்பட்டாலும் அவர்,

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ اَللّٰهُمَّ أْجُرْنِي فِي مُصِيبَتِي وَأَخْلِفْ لِي خَيْرًا مِنْهَا

பொருள் : நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்விற்கு உரியவர்கள் ஆவோம். இன்னும் நிச்சயமாக நாங்கள் அவன் பக்கமே திரும்பக்கூடியவர்கள் ஆவோம். அல்லாஹ்வே! எனது சோதனையில் எனக்கு நற்கூலியைத் தா! அதை விட சிறந்ததை எனக்கு பகரமாக தா!

என்று கூறினால் அல்லாஹ் அவருக்கு அவரின் சோதனையில் நற்கூலி கொடுத்து அவர் இழந்ததைவிட அவருக்கு சிறந்ததை பகரமாக கொடுப்பான்.

உம்மு சலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள் : அபூ சலமா رضي الله عنه இறந்துவிட்டபோது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எனக்கு கட்டளையிட்டபடி நான் (இந்த துஆவை) கூறினேன். அல்லாஹ் எனக்கு அவரை விட சிறந்தவரான ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை பகரமாக கொடுத்தான்.[74]

படிப்பினைகள்

1. நபி ﷺ அவர்கள் நமக்கு எல்லா விஷயங்களுக்கும் வழிகாட்டியுள்ளார்கள்.

2. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அல்லாஹ்விடம் எப்படி துஆ

74. அறிவிப்பாளர் : உம்மு சலமா رضي الله عنها, நூல் : முஸ்லிம், எண் : 1526

கேட்க வேண்டும் என்பதை நபி ﷺ அவர்கள் நமக்கு கற்றுக் கொடுத்து இருக்கின்றார்கள்.

3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிக்காட்டலை பின்பற்றும்போது நமக்கு அல்லாஹ்வின் அருளும் உதவியும் கண்டிப்பாக கிடைக்கும்.

4. சோதனைகளில் பொறுமையாக இருந்து தன்னை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்துவிட்டு, அவனின் அருளை அவனிடம் வேண்டி நின்று அமைதியாக இருப்பதுதான் உண்மையான அடியானின் பண்பாகும்.

5. தானும் தன்னிடம் இருப்பவையும் அல்லாஹ்விற்கு சொந்தமானவை என்பதை அடியான் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

6. இந்த நம்பிக்கை அடியானுக்குள் அல்லாஹ்விற்கு கட்டுப்படுகின்ற மற்றும் பணிந்து நடக்கின்ற தன்மையை உண்டாக்குகிறது.

7. அல்லாஹ்விடம் உள்ள நன்மைகளை நல்ல துஆக்களைக் கொண்டு அடைய முடியும்.

8. ஒரு பெண்ணுக்கு கணவனின் இழப்பு பெரிய சோதனையாகும்.

9. ஸஹாபிய பெண்கள் பொறுமையாளர்கள், மற்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கட்டளைக்கும் வழிகாட்டலுக்கும் பணிந்து நடப்பவர்கள்.

10. கணவன் இறந்த பின்னர் மனைவி மறுமணம் செய்வது மார்க்க சட்டம் ஆகும்.

11. என் கணவரை விட சிறந்தவர் யாரும் இருக்க முடியாது என்று தனது வாழ்க்கையை வீணடிக்க மார்க்கம் கற்றுத் தரவில்லை.

12. பெண்ணுக்கும் ஆசைகளும் தேவைகளும் இருக்கும் என்பதை அறிந்து அல்லாஹ் ஏற்படுத்திய சட்டம்தான் மறுமணம் என்பது.

அல்லாஹ் பெண்ணுக்கு ஹலாலாக்கிய இந்த மறுமணத்தை யாரும் குறை கூறினால் அவர் கண்டிப்பாக அல்லாஹ்வின் மார்க்கத்தை குறை கூறுகிறார். அவர் இப்லீஸின் சகோதரர் ஆவார்.

13. அல்லாஹ் உடைய சட்டத்தை ஏற்று மறுமணம் செய்வது பொறுமைக்கு முரணாகாது.

14. அல்லாஹ்வின் சட்டத்திற்கு உட்பட்டு தன்னையும் தனது யதீமான பிள்ளைகளையும் பாதுகாக்கக்கூடிய ஒரு துணையை தேடுவது பெண்ணின் மீது கடமையாகும். பெண்ணின் வலீ - பொறுப்பாளராக இருப்பவர் அதற்கு உதவ வேண்டும். மாறாக இன்று மறுமணத்தை விரும்பும் பெண்ணுக்கு வலீயாக இருப்பவரே தடையாக இருப்பது மிகவும் வேதனையான விஷயமாகும்.

15. பொறுமை என்பது அல்லாஹ்வின் விதியை ஏற்றுக் கொள்வதும் பிறகு அந்த விதியினால் ஏற்பட்ட சிரமத்திலிருந்து மீளுவதற்கு மார்க்கம் அனுமதித்த வழிகளை தேடுவதும் அடங்கும். வெறும் சகித்துக் கொண்டு இருப்பது மட்டும் பொறுமை அல்ல. ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் அவர் அந்த நோயின் வலியை தாங்குவதோடு அதற்கான சிகிச்சையையும் செய்ய வேண்டும். சிகிச்சை எடுக்க மறுப்பது உண்மையான பொறுமையாக ஆகாது.

16. அல்லாஹ்விடம் துஆ கேட்டுவிட்டு, அழகிய பொறுமையோடு இருந்து, நேரான வழியில் முயற்சி செய்பவர் கண்டிப்பாக அல்லாஹ்விடமிருந்து சிறப்பான பதிலை அடைவார். அல்லாஹ் தனது அருளைக் கொண்டு அவரை கண்ணியப்படுத்தி அவர் மனம் குளிரும்படி செய்வான்.

17. நம்பிக்கையும் துஆக்களும் வீணாகுவது இல்லை.

18. சோதனைகளை தாங்குவதில் துஆக்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

19. நல்ல துஆக்களை நாம் குர்ஆன், சுன்னாவிலிருந்து கற்று அவற்றின் பொருளை உணர்ந்து அல்லாஹ்விடம் நம்பிக்கை வைத்து தொடர்ந்து அந்த துஆக்களைக் கொண்டு அல்லாஹ்விடம் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

20. துஆக்கள் கேட்பது நமது கடமை ஆகும். அதை எப்படி, எந்த நேரத்தில் நிறைவேற்றி கொடுப்பது என்பது அல்லாஹ்வின் விதியோடும் ஞானத்தோடும் சம்பந்தப்பட்டதாகும். ஆகவே அடியான் அது வரை அழகிய பொறுமையோடு இருக்க வேண்டும்.

21. சோதனைகள் எல்லோருக்கும் உண்டு. அதிலும் மரணம் என்ற சோதனையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. நமக்கும் மரணம் உண்டு. நாம் நேசிப்பவர்களுக்கும் மரணம் உண்டு. நம்மை பெற்றெடுத்தவர்களுக்கும் மரணம் உண்டு. நாம் பெற்றடுத்தவர்களுக்கும் மரணம் உண்டு. யாரை முந்தி யார் மரணத்தை சந்திப்பார் என்பதை அல்லாஹ்தான் அறிந்தவன். வந்தவர்கள் எல்லாம் தங்கிவிட்டால் வருபவர்களுக்கு இடமில்லாமல் போய்விடும்.

22. கவலைகள் இருக்கலாம். ஆனால், அவை நீடித்து இருக்கக் கூடாது. துக்கப்படலாம். ஆனால், துவண்டு விடக்கூடாது. அழலாம். ஆனால் புலம்பக் கூடாது. வருந்தலாம். ஆனால், வாடிவிடக் கூடாது.

ஹதீஸ் 5.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﵁ عَنْهُ قَالَ مَرَّ النَّبِيُّ ﷺ بِامْرَأَةٍ تَبْكِي عِنْدَ قَبْرٍ فَقَالَ اتَّقِي اللَّهَ وَاصْبِرِي قَالَتْ إِلَيْكَ عَنِّي فَإِنَّكَ لَمْ تُصَبْ بِمُصِيبَتِي وَلَمْ تَعْرِفْهُ فَقِيلَ لَهَا إِنَّهُ النَّبِيُّ ﷺ فَأَتَتْ بَابَ النَّبِيِّ ﷺ فَلَمْ تَجِدْ عِنْدَهُ بَوَّابِينَ فَقَالَتْ لَمْ أَعْرِفْكَ فَقَالَ إِنَّمَا الصَّبْرُ عِنْدَ الصَّدْمَةِ الْأُولَى

ஒரு கப்ருக்கு அருகில் அழுது கொண்டிருந்த பெண்ணை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடந்து சென்றார்கள். அப்போது, அந்த பெண்ணை நோக்கி, அல்லாஹ்வை பயந்து கொள்! நீ பொறுமையாக இரு! அப்பெண் கூறினார், நீங்கள் என்னை விட்டு விலகி செல்லுங்கள்! எனக்கு ஏற்பட்ட சோதனை உமக்கு ஏற்படவில்லை. அப்பெண் நபியவர்களை அறியவில்லை. அப்போது (அங்கிருந்தவர்களால்) இவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்று அப்பெண்ணிடம் கூறப்பட்டது. அவர் உடனே நபியைத் தேடி வந்தார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் காவலாளிகள் யாரும் இல்லாததைக் கண்டாள். நான் உங்களை அறியவில்லை. (ஆதலால் அப்படி பேசிவிட்டேன்) என்று கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக பொறுமை என்பது முதல் திடுக்கத்தில் இருக்க வேண்டும்.[75]

படிப்பினைகள்

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகவும்பணிவானவர்கள்.

2. பிற மக்களோடு பழகும்போது தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ற அந்தஸ்த்தை வெளிப்படுத்திக் காட்ட விரும்ப மாட்டார்கள்.

3. அறியாமையால் மக்கள் நடந்துகொள்ளும் நடத்தைகளுக்காக அவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குற்றம் பிடிக்க மாட்டார்கள்.

4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களின் குறைகளையும் தவறுகளையும் மன்னிப்பவர்களாக இருந்தார்கள்.

75. அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் ﷺ, நூல் : புகாரி, எண் : 1203

5. மக்களின் அறியாமையை அழகிய பொறுமையைக் கொண்டு எதிர்கொண்டார்கள்.

6. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உபதேசம் எப்போதும் அழகிய முறையில், கண்ணியமான வார்த்தைகளைக் கொண்டு இருக்கும்.

7. ஒரு பெண் தனது உறவினர் இறப்புக்காக கப்ர் வரை வந்து அழுவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பவில்லை. அதை மார்க்கத்தை மீறிய செயலாக கருதியதால், நீ அல்லாஹ்வை பயந்துகொள் என்று அப்பெண்ணுக்கு உபதேசம் செய்துவிட்டு நீ பொறுமையாகவும் இரு என்று அறிவுரை கூறினார்கள்.

8. முடிந்தளவு புலம்பிவிட்டு இறுதியில் சரி, பொறுமையாக இருப்போம் என்று அமைதியாகுவது பொறுமை அல்ல.

9. சோதனையின் தொடக்கத்தில் மனதை கட்டுப்படுத்த வேண்டும். மனம் போன போக்கில் அழுவதும் கூச்சலிடுவதும் ஒப்பாரி வைப்பதும், விதியை ஏசுவதும், மார்க்கத்தை மீறிய செயல்களை செய்வதும் கூடாது.

10. ஒருவரின் நன்மை அழகிய உபதேசங்களையும் நல்ல அறிவுரைகளையும் ஏற்றுக்கொள்வதில் இருக்கிறது.

ஹதீஸ் 6.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ مَا يُصِيبُ الْمُسْلِمَ مِنْ نَصَبٍ وَلَا وَصَبٍ وَلَا هَمٍّ وَلَا حُزْنٍ وَلَا أَذًى وَلَا غَمٍّ حَتَّى الشَّوْكَةِ يُشَاكُهَا إِلَّا كَفَّرَ اللَّهُ بِهَا مِنْ خَطَايَاهُ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : முஸ்லிமுக்கு சிரமம், களைப்பு, கவலை, துக்கம், மனக் கஷ்டம்,

துயரம் எது ஏற்பட்டாலும் அவருக்கு முள் குத்தினாலும் அல்லாஹ் அதன் பொருட்டால் அவரின் பாவங்களை போக்கி விடுகிறான்.[76]

படிப்பினைகள்

1. முஸ்லிம்களுக்கு மிகப் பெரிய நற்செய்தியாகும் இந்த நபிமொழி.

2. இந்த ஹதீஸை செவியுற்ற பின்னர் நமக்கு வேறு என்ன கவலை இருக்கிறது. அல்லது வேறு என்ன நமக்கு இழப்பு?!

3. அல்லாஹ் நம்மீது மகா கருணையாளன், பெரும் இரக்கமானவன், மாபெரும் மன்னிப்பாளன்.

4. நாம் இவ்வுலகில் சந்திக்கின்ற எல்லா சிரமங்களுக்கும் அல்லாஹ்விடம் நமக்கு நன்மையும் மன்னிப்பும் உண்டு.

5. பாவங்கள் மன்னிக்கப்படுவதை விட வேறு என்ன பாக்கியம் அடியானுக்கு வேண்டும்!

6. இந்த நன்மையும் நற்செய்தியும் சிரமங்களில் அழகிய பொறுமையை பின்பற்றுபவர்களுக்கு கிடைக்கும்.

ஹதீஸ் 7.

عَنْ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللهِ أَيُّ النَّاسِ أَشَدُّ بَلَاءً قَالَ الْأَنْبِيَاءُ ثُمَّ الْأَمْثَلُ فَالْأَمْثَلُ يُبْتَلَى الْعَبْدُ عَلَىٰ حَسَبِ دِينِهِ فَإِنْ كَانَ فِي دِينِهِ صُلْبًا اشْتَدَّ بَلَاؤُهُ وَإِنْ كَانَ فِي دِينِهِ رِقَّةٌ ابْتُلِيَ عَلَىٰ حَسَبِ دِينِهِ فَمَا يَبْرَحُ الْبَلَاءُ بِالْعَبْدِ حَتَّىٰ يَتْرُكَهُ يَمْشِي عَلَى الْأَرْضِ وَمَا عَلَيْهِ مِنْ خَطِيئَةٍ

அல்லாஹ்வின் ரஸூலே! மக்களில் சோதனையால் கடுமையானவர்கள் யார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள் : நபிமார்கள், பிறகு, சிறந்தவர்கள், பிறகு சிறந்தவர்கள்.

---

76. அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ﷺ, நூல் : புகாரி, எண் : 5210

அடியான் அவனுடைய மார்க்கத்திற்கு ஏற்ப சோதிக்கப்படுகிறான். அடியான் தனது மார்க்கத்தில் உறுதியானவனாக இருந்தால் அவனது சோதனையும் கடுமையாக இருக்கும். அவனது மார்க்கத்தில் மென்மை இருந்தால் அவனது தீனுக்கு ஏற்ப அவன் சோதிக்கப்படுவான். அடியானுக்கு சோதனைகள் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். இறுதியாக அவன் மீது பாவமே இல்லாத நிலையில் அவன் பூமியில் நடமாடும்படி அவனை அந்த சோதனை விட்டுவிடுகிறது.[77]

படிபபினைகள் :

1. நல்லவர்களுக்கு சோதனைகள் அதிகம் உண்டு.

2. நல்லவர்கள் சோதனைகளை அழகிய பொறுமையைக் கொண்டுகடந்து செல்வார்கள்.

3. நல்லவர்களுக்கு சோதனைகள் மேலும் ஈமானிய பக்குவத்தைக் கொடுக்கும்.

4. சோதனைகள் நல்லவர்களின் இறை நம்பிக்கையை அதிகப்படுத்துவதுடன் அவர்களுக்கு நன்மைகளை கொடுத்து பாவங்களை விட்டு அவர்களை சுத்தப்படுத்திவிடுகிறது.

5. இவ்வுலகம் ஒரு சோதனைக் கூடம். மறுமைதான் கூலிக்குரிய நாளாகும்.

6. ஒருவர் பல சோதனைகளில் சிக்கி இருப்பதைப் பார்த்து அவர் அல்லாஹ்வின் அருள் அற்றவர் என்று கூறிவிடக் கூடாது.

7. ஒருவர் எல்லா வளங்களும் அடையப்பெற்று நிம்மதியாக இருப்பதால் அவர் அல்லாஹ்வினால் நேசிக்கப்பட்டவர் என்று கூறிவிட முடியாது.

8. அமல்களை கவனித்தே நல்லவர், கெட்டவர் என்பது முடிவு செய்யப்படும். உள்ளங்களில் உள்ள இரகசியங்களை அல்லாஹ்

77. அறிவிப்பாளர் : ஸஅது இப்னு அபீ வக்காஸ் ﵁, நூல்: இப்னு மாஜா, எண் : 4013

அறிந்தவனாக இருக்கின்றான்.

9. நாம் மரணத்தை சந்திக்கின்ற வரை சோதனைகள் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

10. ஒரு சோதனை சிறியது என்றால் மற்றொன்று பெரியதாக இருக்கும். ஒன்று பெரியதாக இருந்தால் மற்றொன்று சிறியதாக இருக்கும்.

11. அல்லாஹ் அடியார்களை அவர்களால் தாங்க முடிந்தளவு மட்டுமே சோதிப்பான்.

12. அல்லாஹ், தனது அடியானுக்கு கொடுக்கின்ற சோதனையின் அளவிற்கு அவனுக்கு நன்மைகளை கொடுத்து அவனுடைய பாவங்களை மன்னித்து விடுகிறான்.

13. சோதனைகளில் அடியான் துவண்டு விடாமல் இருக்க வேண்டும். இன்பத்தில் அடியான் பெருமைப் பிடித்து ஆடக் கூடாது.

14. சோதனைகளை இன்முகத்துடன் எதிர்கொண்டு, விசாலமான மனதுடன் இருந்து அவற்றில் நன்மைகளை ஆதரவு வைக்க வேண்டும்.

15. அடியார்கள் தங்களுக்கு முன் சென்ற நல்லோரின் வரலாறுகளை படிக்க வேண்டும். அவர்களின் பொறுமையையும் மன உறுதியையும் பார்த்து படிப்பினைப் பெற வேண்டும்.

16. நமக்கு சிறந்த முன்னுதாரணமாக நபிமார்களும் அவர்களின் வழியில் வந்த சான்றோரும் இருக்கின்றனர்.

17. நல்லோரின் வரலாறுகளை படிப்பது வாழ்க்கைக்குத் தேவையான நல்ல பாடங்களையும் கொடுப்பதுடன் நமது வாழ்க்கையின் பிரச்சனைகளுக்கு தேவையான வழிகாட்டலையும் கொடுக்கிறது.

18. சோதனைகளை நாமாக தேடக்கூடாது. அல்லாஹ் என்னை எப்படி சோதித்தாலும் நான் உறுதியாக இருப்பேன் என்று நாம்

வீராப்பு பேசக்கூடாது.

19. சோதனைகளின்போது முதலில் நமது அமல்களைப் பார்க்க வேண்டும். நம்மிடம் அல்லாஹ்விற்கு பிடிக்காத செயல்கள் இருந்தால் உடனே அவற்றை விட்டு விலகி திருந்தி தவ்பா கேட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும்.

20. நாம் அறிந்த வரை நம்மிடம் வெளிப்படையில் தவறுகள், குற்றங்கள் இல்லை என்றால் கடந்த காலத்தில் ஏதும் பாவங்கள் செய்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். அப்படி செய்து இருந்தால் அதற்காக அல்லாஹ்விடம் தவ்பா கேட்க வேண்டும். அப்படியும் நமக்கு ஞாபகம் இல்லை என்றால் அல்லாஹ் என்னை எனது ஈமானிலும் அமலிலும் சோதிக்கிறான் என்று புரிய வேண்டும். ஆகவே, மேலும் அல்லாஹ்வை நெருங்குவதற்கு உரிய வழிகளை தேட வேண்டும். நல்லமல்களை அதிகப்படுத்த வேண்டும். தடுமாறி விடுவதிலிருந்தும் திசை மாறி போவதிலிருந்தும் ஈமானில் சந்தேகமும் பலவீனமும் நுழைந்துவிடுவதிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேட வேண்டும். அல்லாஹ்வை அதிகம் அஞ்ச வேண்டும். யா அல்லாஹ் இந்த சோதனையை என் ஈமான் பலவீனமாகுவதற்கு காரணமாக ஆக்கிவிடாதே! நான் தாங்க முடியாத சோதனைகளை என் மீது சுமத்தி விடாதே என்று அல்லாஹ்விடம் மன்றாட வேண்டும்.

இது வரை நாம் படித்த வசனங்கள், மற்றும் ஹதீஸ்களில் இருந்து நாம் பெற வேண்டிய கருத்துக்களை சுருக்கமாக பார்ப்போம்.

கருத்து : நமது ரப்பு அழகிய திட்டங்களை உடையவன். அவனது ஞானம் எல்லைகளற்றது. அவனது அறிவு ஆழம் அறியப்படாதது. இன்று பிறந்து நாளை மரணிக்கும் மனிதன் அறிவாலும் ஆற்றலாலும் மிகவும் பலவீனமானவன். அவனது அறிவால் அவன் எத்தனை கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தாலும் பல அற்புதங்களை நிகழ்த்தினாலும் அல்லாஹ் நாடாமல் அவனால் ஒன்றும் சாதிக்க

முடியாது. நோயும் பலவீனமும் வயோதிகமும் வறுமையும் மரணமும் உலகத்தில் யாரையும் விட்டுவைக்காது. ஒன்று விட்டால் இன்னொன்று கவ்விக்கொள்ளும். வேட்டை வலையிலிருந்து இன்று தப்பித்துவிட்டாலும் மறுநாள் அது வலையில் சிக்கத்தான் போகிறது. மதி விதியை வெல்ல முடியாது. விதி உலகில் உள்ள எல்லா சக்திகளையும் வெல்லுகின்ற அதீத ஆற்றல் கொண்டது.

கண் பார்க்கும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

காது கேட்கும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

கை பிடிக்கும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

கால் நடக்கும் ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

அறிவு சிந்திக்கும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

உழைத்தால் செல்வம் வரும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

வானம் இருட்டினால் மழை பெய்யும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

நெருப்பு எரிக்கும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

நீர் மூழ்கடிக்கும். ஆனால், அல்லாஹ் நாடினால்தான்.

இவ்வுலகில் எதுவும் அல்லாஹ் நாடாமல் நடக்காது என்பதை உறுதியாக நம்பிக்கை கொண்டால்தான் அவன் முஃமினாக ஆக முடியும்.

இவ்வாறு நம்பிக்கை கொண்டதன் பின்னர் அடியான் என்ன செய்ய வேண்டும்?

சோதனைகள் வரும்போது அமைதியாக இருக்க வேண்டும்தானே! பதறாமல், புலம்பாமல், குறைக் கூறித் திரியாமல், ரப்பின் முன் சரணடைந்து, மண்டியிட்டு, கை தூக்கி, கண் கலங்கி, உள்ளம் இளகி,

மன்றாடி கெஞ்சி கேட்க வேண்டியதுதானே! நீ ஏன் செய்யவில்லை?

அடியானே! அவன் உன்னை மறந்துவிட்டானா? அல்லது உனக்கு கொடுக்க மாட்டேன் என்று கூறிவிட்டானா? உன்னை அவன் என்ன புறக்கணித்து விட்டானா? என்னிடம் வராதே என்று உன்னை அவன் துரத்தி விட்டானா? உனது கஷ்டத்தை நான் நீக்க மாட்டேன், வேறு ஒருவரை நீ தேடு என்று அவன் உன்னை நிராசை அடையச் செய்தானா? உனக்காக வேதத்தை இறக்கி அவன் உன்னிடம் பேசவில்லையா? அவன் உன்னை தன் பக்கம் அழைக்கவில்லையா? அவன் உனக்கு கொடுப்பேன் என்று உனக்கு வாக்களிக்கவில்லையா? உன் சிரமத்திற்கு பின்னர் உனக்கு இலகுவான வாழ்கை உண்டு என்று அவன் உனக்கு ஆறுதல் அளிக்க வில்லையா? அவன் உனக்கு நம்பிக்கை அளிக்க வில்லையா? என்னைத் தவிர யாரும் உனக்கு அருளை கொடுக்கவும் முடியாது, என்னைத்தவிர யாரும் உன்னை விட்டு தீங்கை தடுக்கவும் முடியாது என்று அவன் உனக்கு உண்மையை உணர்த்தவில்லையா? என்னை நம்பிக்கையோடு அழை என்று உனக்கு அவன் கட்டளையிட வில்லையா?

﴿أَمَّنْ يُجِيبُ الْمُضْطَرَّ إِذَا دَعَاهُ وَيَكْشِفُ السُّوءَ﴾

பொருள் : (சிரமத்தில் சிக்கித்) துடிதுடித்துக் கொண்டிருப்பவர்கள் அபயமிட்டழைத்தால் அவர்களுக்குப் பதில் கூறி, அவர்களுடைய சிரமங்களை நீக்குபவன் யார்? (அல்குர்ஆன் 27 : 62)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿وَقَالَ رَبُّكُمُ ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ﴾

உங்கள் இறைவன் கூறுகிறான்: “நீங்கள் (உங்களுக்கு வேண்டியவை அனைத்தையும்) என்னிடமே கேளுங்கள். நான் உங்கள் பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொள்வேன்.

(அல்குர்ஆன் 40 : 60)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ﴾

(நபியே!) உம்மிடம் என் அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் (அதற்கு நீர் கூறுவீராக:) “நிச்சயமாக நான் உங்களுக்கு சமீபமானவன். (எவரும்) என்னை அழைத்தால் அந்த அழைப்பாளரின் அழைப்புக்கு விடையளிப்பேன். (அல்குர்ஆன் 2 : 186)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿مَا يَفْتَحِ اللَّهُ لِلنَّاسِ مِنْ رَحْمَةٍ فَلَا مُمْسِكَ لَهَا وَمَا يُمْسِكْ فَلَا مُرْسِلَ لَهُ مِنْ بَعْدِهِ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ (٢) يَاأَيُّهَا النَّاسُ اذْكُرُوا نِعْمَتَ اللَّهِ عَلَيْكُمْ هَلْ مِنْ خَالِقٍ غَيْرُ اللَّهِ يَرْزُقُكُمْ مِنَ السَّمَاءِ وَالْأَرْضِ لَا إِلَٰهَ إِلَّا هُوَ فَأَنَّىٰ تُؤْفَكُونَ﴾

அல்லாஹ் தன் அருளை மனிதர்களுக்குத் திறந்து விட்டால் அதைத் தடுத்து விடக்கூடியவன் ஒருவனுமில்லை. அவன் (தன் அருளைத்) தடுத்துக் கொண்டால் அதை அனுப்பக்கூடியவனும் ஒருவனுமில்லை. அவன் (அனைவரையும்) மிகைத்தவன், ஞானமுடையவன் ஆவான். மனிதர்களே! உங்கள் மீதுள்ள அல்லாஹ்வுடைய அருட்கொடையை நினைத்துப் பாருங்கள். அல்லாஹ்வையன்றி வேறொரு படைப்பவன் இருக்கிறானா? வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் அவனே உங்களுக்கு உணவளிக்கிறான். அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறொரு இறைவன் இல்லவே இல்லை. ஆகவே, (அவனை விட்டு) நீங்கள் எங்கு வெருண்டோடுகிறீர்கள்? (அல்குர்ஆன் 35 : 2,3)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿وَلَا تَيْأَسُوا مِنْ رَوْحِ اللّٰهِ إِنَّهُ لَا يَيْأَسُ مِنْ رَوْحِ اللّٰهِ إِلَّا الْقَوْمُ الْكَافِرُونَ﴾

அல்லாஹ்வின் அருளைப்பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்து விடாதீர்கள்; நிச்சயமாக (நன்றிகெட்ட) நம்பிக்கையற்றவர்களைத் தவிர (மற்றெவரும்) அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிட மாட்டார்கள். (அல்குர்ஆன் 12 : 87)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿وَإِنْ يَمْسَسْكَ اللّٰهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهُ إِلَّا هُوَ وَإِنْ يُرِدْكَ بِخَيْرٍ فَلَا رَادَّ لِفَضْلِهِ يُصِيبُ بِهِ مَنْ يَشَاءُ مِنْ عِبَادِهِ وَهُوَ الْغَفُورُ الرَّحِيمُ﴾

அல்லாஹ் உங்களுக்கு ஒரு தீங்கிழைக்கும் பட்சத்தில் அதை நீக்க அவனைத் தவிர மற்றெவராலும் முடியாது. அவன் உங்களுக்கு ஒரு நன்மையை நாடினால் அவனுடைய அக்கருணையைத் தடைசெய்ய எவராலும் முடியாது. அவன் அடியார்களில் அவன் விரும்பியவர்களுக்கே அதை அளிக்கிறான். அவன் மிக்க மன்னிப்பவன், மிகக் கருணையுடையவன் ஆவான்.

(அல்குர்ஆன் 10 : 107)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا إِلَّا مَا آتَاهَا سَيَجْعَلُ اللّٰهُ بَعْدَ عُسْرٍ يُسْرًا﴾

எம்மனிதனையும் அல்லாஹ் அவனுக்குக் கொடுத்ததற்கு அதிகமாக(ச் செலவு செய்யும்படி) நிர்ப்பந்திப்பதில்லை. சிரமத்திற்குப் பின்னர், அல்லாஹ் அதிசீக்கிரத்தில் இலகுவை கொடுத்துவிடுவான். (அல்குர்ஆன் 65 : 7)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

﴿فَإِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا (٥) إِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا﴾

நிச்சயமாக சிரமத்துடன் சௌகரியம் இருக்கிறது. மெய்யாகவே சிரமத்துடன் சௌகரியம் இருக்கிறது. (அல்குர்ஆன் 94 : 5,6)

இந்த வசனத்தை நீ ஓதியதில்லையா?

மக்காவில் பதிமூன்று ஆண்டுகளும் மதீனாவில் பத்து ஆண்டுகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவ்வளவு பொறுமையாக இருந்தார்கள் என்பதை நீ படிக்கவில்லையா?

மக்காவின் வீதிகளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நகைக்கப்பட்டபோதும் தாயிபின் வீதிகளில் கல்லால் அடிக்கப்பட்டபோதும் உஹுது போரில் கடுமையான காயங்கள் ஏற்பட்டபோதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பொறுமையாக இருந்ததை நீ மறந்துவிட்டாயா?

தனது பரிசுத்தமான மனைவியை பாவிகள் இட்டுக்கட்டி பழிசுமத்தி அசிங்கப்படுத்தியபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பொறுமையாக இருந்ததை நீ படிக்க வில்லையா?

மரண நேரத்தில் காய்ச்சலாலும் தலைவலியாலும் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வேதனைப்பட்டதை நீ படிக்கவில்லையா?

தனது மகள் சைனப் ஹிஜ்ரத்தின் பாதையில் தாக்கப்பட்டபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பொறுமையாக இருந்ததை நீ படிக்க வில்லையா?

நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வின் பாதையில் பசியையும் பட்டினியையும் களைப்பையும் சகித்துக்

கொண்டு பொறுமையாக இருந்ததை நீ படிக்கவில்லையா?

அல்லாஹ் தனது நபியைப் பார்த்து பொறுமையாக இருங்கள் என்று கூறிக்கொண்டே இருந்தான். இறுதி மூச்சுவரை பொறுமையாக இருந்தார்களே. அதை நீ படிக்கவில்லையா?

அல்லாஹ்வின் வீட்டிற்கு உம்ரா செய்ய சென்றவர்களை குறைஷிகள் தடுத்து திருப்பி அனுப்பினார்களே. அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகித்து பொறுமையாக இருக்கவில்லையா?

முஹாஜிர்கள் மற்றும் அன்சாரிகளின் வாழ்க்கை வரலாறை நீ படிக்கவில்லையா? அல்லாஹ்வின் ஊராகிய மக்காவை விட்டு துரத்தப்பட்டபோது முஹாஜிர்கள் பொறுமையாக இருந்தார்கள். வந்தவர்களை உபசரித்து, பாதுகாத்து, அடைக்கலம் கொடுத்து, அதனால் ஏற்பட்ட இன்னல்களையும் பகைமைகளையும் எதிர்கொள்வதில் அன்சாரிகள் பொறுமையாக இருந்தார்கள். அன்று அவர்கள் பொறுமையாகவும் உறுதியாகவும் இருக்கவில்லை என்றால் உனக்கு மார்க்கம் கிடைத்திருக்குமா?

நூஹ் நபி 950 ஆண்டுகள் பொறுமையோடு அழைப்புபணி செய்தார்களே. அது உனக்கு தெரியாதா? அடிக்கப்பட்டு, துரத்தப்பட்டு, பல துன்பங்கள் கொடுக்கப்பட்டும் மார்க்கத்தில், அழைப்புப் பணியில் உறுதியாக இருந்தார்களே. அவர்களின் பொறுமையை நீ படிக்கவில்லையா?

நெருப்புக் குண்டத்தில் தூக்கி எறியப்பட்ட இப்ராஹீம் நபியின் பொறுமையை நீ படிக்கவில்லையா?

தந்தையை பிரிந்து, விவசாயமும் தாராலமான உணவு வசதியும் இல்லாத பாலைவனத்தில் தாயுடன் வாழ்க்கையை கழித்த இஸ்மாயீல் நபியின் பொறுமையை நீ படிக்கவில்லையா? அதுமட்டுமா? துள்ளிக்குதித்து, ஓடி ஆடி விளையாடும் பருவத்தில் தந்தை நான் உன்னை அறுக்கப்

போகிறேன், என்னுடன் வா என்று அழைத்த போது, வருகிறேன் தந்தையே! என்னை நீ பொறுமையாளர்களில் காண்பாய்! உமக்கு இடப்பட்ட கட்டளையை மகிழ்வோடு நீ நிறைவேற்று! என்று இஸ்மாயீல் நபி கூறிய வரலாறை நீ படிக்கவில்லையா?

பிரியமான மகனை பிரிந்து பல ஆண்டுகள் அழுதாலும் துஆவோடும் ஆதரவோடும் பொறுமையாக இருந்த யஅகூப் நபியின் வரலாறை நீ படிக்கவில்லையா?

கிணற்றில் எறியப்பட்டு, கடைத்தெருவில் விற்கப்பட்டு, மந்திரியின் மனைவியால் பழிசுமத்தப்பட்டு, பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டபோது பொறுமையோடு இருந்த யூஸுஃப் நபியின் வரலாறை நீ படிக்கவில்லையா?

மீன் வயிற்றில் பல நாட்கள் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தவராக பொறுமையோடு இருந்த யூனுஸ் நபியின் சரித்திரத்தை நீ படிக்கவில்லையா?

வளமாக வாழ்ந்துகொண்டிருந்த அய்யூப் நபி நோயினால் பீடிக்கப்பட்டு, சொத்து சுகம், குடும்பம், பிள்ளைகள் எல்லோரையும் இழந்தார்களே, அவர்களின் பொறுமையை நீ படிக்கவில்லையா?

ஃபிர்அவ்னாலும் இஸ்ரவேலர்களாலும் தொடர் துன்பங்களை சந்தித்து அதில் அழகிய பொறுமையுடன் இருந்த மூஸா நபியின் வரலாறை நீ படிக்கவில்லையா?

நபிமார்களின் குடும்பத்தில் பிறந்து அல்லாஹ்வால் ரசூலாக அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மக்களால் தொடர்ந்து துரத்தப்பட்டு நாடோடி வாழ்க்கை வாழ்ந்த ஈசா நபியின் பொறுமையை நீ படிக்கவில்லையா?

நபிமார்கள், ரஸூல்மார்கள் மீது அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாகட்டும்.

இன்னும் எத்தனை நபிமார்களின் வரலாறுகளை உனக்கு குர்ஆன் கூறிக்கொண்டே இருக்கிறது.

அல்லாஹ்வின் அடியானே! அவற்றைப் படி! சிந்தி! பொறு!

அல்லாஹு தஆலா கூறுகிறான் :

﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். நீங்கள் அதிகம் சகித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் உறுதியாக ஒற்றுமையாக இருங்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். நீங்கள் (இம்மையிலும் மறுமையிலும்) வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன் 3 : 200)

****